# ஒரு நிமிடம் தா..



## இந்துமதி

## ஒரு நிமிடம் தா...

'அடுத்து என்ன நடக்குமோ!' என்று படிப்பவர் நெஞ்சில் பயம் நிறைந்த ஆவலைத் தூண்டும் நிலையை நாவல் முழுவதும் பரவவிட்டு இறுதிவரை திகிலடையச் செய்து வெற்றி பெற்றுள்ளார் திருமதி இந்துமதி இந்த நாவலில்.

'குமுதம்' இதழில் தொடராக வெளிவந்து இருந்த 'ஒரு நிமிடம் தா! ஒரு கொலை செய்கிறேன் தொடர்கதையின் தலைப்பை மட்டும் குறைத்து "ஒரு நிமிடம் தா..." ஆக்கியிருக்கிறார் ஆசிரியர்.

## 'பூ மலரும்...'

வாழ்வில் மிக அரிதாக எங்கோ ஓரிரு இடங்களில் மட்டுமே நடைபெறுகிறது பணக்கார— ஏழை திருமண உறவு. அவ்வுறவின் சிக்கல்களை 'ஒரு கண்ணோட்டத்தில்' பார்த்துப் படைத்து உள்ளார்— 'பூ மலரும்' நாவலில்.

கனமான இந்த நாவலையும் 'ஒரு நிமிடம் தா...' நாவலையும் புத்தக வடிவில் வெளியிட அனுமதியளித்த ஆசிரியர் திருமதி இந்துமதி அவர்கட்கு எமது நன்றி.

**பூஞ்சோலை**

## உள்ளே


| | | |
|---|---|---|
| ஒரு நிமிடம் தா... | ... | 5 |
| பூ மலரும்... | ... | 141 |


17660

# ஒரு நிமிடம் தா...

## 1

J. J. Mental Hospital
**Dr. K. Jayakumar**

விசாலமான பித்தளை போர்டிலேயே ஆஸ்பத்திரியின் வசதி தெரிந்தது. சின்ன காம்பவுண்ட் கதவிற்குப் பின்னால் வரிசையாகப் பத்துப் பதினைந்து அசோக மரங்கள், பெரியதாய்ப் பச்சைப் புல்வெளி, நடுவில் கொத்துக் கொத்தாய் டூம் விளக்கு, அரை வட்ட நீண்ட பாதையின் முடிவில் அவுட் கேட். இவற்றையெல்லாம் விட்டுச் சற்றுத் தள்ளி, பாத்திக் கட்டிப் பிரிக்கப்பட்ட வெள்ளை கான்கிரீட் கட்டிடம். பினாயில் வாசனை. ஐந்து நட்சத்திர அந்தஸ்தோடு கூடிய வரவேற்பறை. சத்தமில்லாமல் நடக்கச் சிவப்பு ரத்தினக் கம்பளம். வரவேற்பறையின் முடிவில் ஏர்கண்டிஷன் முனகலுடன் சமர்த்தாய், நிறைய பணம் சாப்பிட்டு அமெரிக்க மூளையுடன் டாக்டர் கே. ஜெயகுமார்...

பெயருக்குப் பின்னால் டிகிரி எழுத வேண்டுமானால் ஆஸ்பத்திரியின் பெயர் எழுதின அதே அளவிற்கு இன்னொரு பித்தளை போர்டு தேவைப்படும் என்றகி

காரணத்தால் டாக்டர் தன் டிகிரியை எழுதுவதில்லை. வெறும் ஜெயகுமார். டாக்டர் கே. ஜெயகுமார்—உள்ளே டெலிபோனில் பேசிக் கொண்டிருக்கிறார். ''யா, ஷி இஸ் ஆல்ரைட். சாந்தியை நீங்க டிஸ்சார்ஜ் பண்ணி அழைச்சிட்டுப் போகலாம்னுதான் நினைக்கிறேன்.''

''........''

''யா, யா... நீங்க வரலாம். எந்த ஃபிளைட்ல வரேன்னு மட்டும் சொல்லிடுங்க...''

''......''

''ஓ. கே. அப்படின்னா ஏர்போர்ட்டுக்கு வண்டியனுப்பறேன்.''

''......''

''நோ நோ. இதுல ஒரு கஷ்டமும் இல்லை. ஒரு பேஷண்டோட அம்மாவுக்கு இந்த உதவிகூடச் செய்யலேன்னா எப்படி...? நீங்க எங்க ஆஸ்பத்திரிக்கு எவ்வளவு செய்யலை?''

''......''

''ஓ. கே. தாங்க்யூ...''

ரிஸீவரை வைத்துவிட்டுக் கொஞ்சம் நிதானித்தார். பின் கோட்பாக்கெட்டைத் துழாவி சிகரெட்டை எடுத்து உதட்டில் பொருத்தி அதற்கு உயிர் கொடுத்தார். பாக்கெட் மீதிருந்த 'சிகரெட் பிடித்தல் உடல்நலத்திற்குக் கெடுதலானது' — படித்துக் கொண்டே பத்திரமாக புகையை வெளியே விட்டார்.

யோசனை சாந்திமீது போயிற்று. சாந்தி அழகான பெண். பணக்காரப் பெண். லட்சக்கணக்கான சொத்திற்கு ஒரே வாரிசு. அப்பா இல்லை. அம்மா மட்டும்தான். பெண்ணிற்கு குணமானால் லட்ச ரூபாய் டொனேஷன் தருவதாக வாக்களித்திருக்கிறார்.



அந்த லட்ச ரூபாயில் என்ன செய்யலாம் என்பதை பண்ணியபடி சாந்தி இருக்கும் இருபத்தெட்டாம் வார்டின் மூன்றாம் எண் அறையை நோக்கி நடந்தார்.

லிஃப்டில் கால் வைக்கும் முன்பு, ''டாக்டர் ஜெயகுமார்'' என்று பின்னாலிருந்து மென்மையாய் யாரோ கூப்பிடுகிறார்கள். திரும்பினார். மெல்லிய ரோஸ் நிற ஷிஃபான் புடவையில் மிக அசத்தலாக ஒரு பெண் வராந்தாவின் கோடியில் நின்று இவரைக் கையாட்டிக் கூப்பிடுகிறாள். யாரிவள்?

தெரியவில்லை. இதற்குமுன் பார்த்ததில்லை. ஆனால் மிக அழகாக இருந்தாள். போகலாமா வேண்டாமா என்று யோசிப்பதற்குள் கால் மெல்ல நகர, அங்கிருந்து மீண்டும், ''டாக்டர் ஜெயகுமார், இங்கே வாங்க...'' அவளை நோக்கி நடக்க ஆரம்பித்தபோது...

யாரோ கூச்சலிடுவது சத்தமில்லாமல் இவருக்குப் பின்னால் கேட்க, முரட்டுத்தனமாக யாரோ இவரைப் பின்னால் பிடித்திழுப்பது தெரிய...ரிப்ளெக்ஸ் விதிகளின் படி இவர் இழுத்தவரை மீற... கால் தடுக்கிக் கீழே விழுந்து, போர்டிகோவின் படிகளில் உருண்டு, 555 சிகரெட்டின் நுனி கழுத்தோரத்தை முத்தமிட்டபோது,

ஸ்ஸ்ஸ்...

சின்னதாக ஒரு கூட்டம் கூடிப் போயிற்று.

''டாக்டர்! என்ன ஆச்சு உங்களுக்கு?''

சட்டென்று எழுந்து நின்று தூசு தட்டிக்கொண்டார்.

''நத்திங். ஒன்றும் இல்லை.''

யாரும் நம்பினதாகத் தெரியவில்லை.

நர்ஸ் ஸ்டெல்லா இன்னமும் அவரின் கைகளைப் பிடித்துக் கொண்டிருந்தாள். லேசாக டாக்டரின் உடம்பு உதறுவது அவளுக்குத் தெரிந்தது. சரியான நேரத்தில்

டாக்டரைப்பிடித்திருக்காத பட்சத்தில் டாக்டர் இன்னும் உருண்டிருக்கக் கூடும். எதிரில் வேகமாக எதாவது ஜீப் அல்லது வேன் வந்திருக்குமானால் டாக்டரின் எலும்புகளை பொறுக்கக் கம்ப்யூட்டர் வேண்டியிருக்கும். 'என்ன ஆயிற்று இவருக்கு திடீரென்று?'

கூட்டத்தைக் கலைத்து ஸ்டெல்லா சொன்னாள்.

"ரிலாக்ஸ் டாக்டர். இந்தாங்க, சிகரெட் பிடியுங்க." அவரின் பாக்கெட்டிலிருந்தே சிகரெட்டைத் துழாவி எடுத்து உதட்டில் பொருத்திப் பற்ற வைத்தாள். "லிஃப்ட்டுல எறப்போன நீங்க என் இங்கே வந்தீங்க?"

"யாரோ கூப்பிட்டாங்க...இங்க வாங்கன்னு—அதான் வந்தேன்."

இன்னும் டாக்டர் நிதானத்திற்கு வரவில்லை என்பது புரிய, ஸ்டெல்லா மீண்டும் சந்தேகத்தோடு கேட்டாள்: "யார் கூப்பிட்டது டாக்டர்?"

அவர் குழம்பிப் போனவராகச் சொன்னார். "யாரோ பிங்க் புடவை கட்டிக்கிட்டு."

"பிங்க் புடவையா! அப்படி யாரும் இங்கே இல்லவே இல்லையே டாக்டர்."

"இல்லையா?" டாக்டரின் புருவங்கள் நெரிய, ஸ்டெல்லா கேட்டாள்:

"இப்ப நீங்க எங்கே போகணும்?"

"இருபத்தெட்டாம் நம்பர் வார்டு—ரூம் நம்பர் த்ரீ."

"சாந்தியைப் பார்க்கவா? வாங்க, நான் கூட வரேன்."

ஸ்டெல்லா அவரைக் கைத்தாங்கலாகப் பற்றி மெதுவாய் மிக மெதுவாய் இருபத்தெட்டாம் வார்டிற்கு அழைத்துப்போக—



அதற்குள் டாக்டர் ஜெயகுமார் பற்றிய சின்ன பயோடேட்டா.

பெயர் : கே. ஜெயகுமார்.

தந்தை பெயர் : ஜே. கிருஷ்ணசாமி.

விலாசம் : ஜே. ஜே. மெண்ட்டல் ஆஸ்பிட்டல், 258—பூந்தமல்லி நெடுஞ்சாலை, சென்னை.

படிப்பு : எம். பி. பி. எஸ்., எம். எஸ்., எஃப். ஆர். சி. எஸ்., எக்ஸெட்ரா, எக்ஸெட்ரா.

உறவினர்கள் : மிஸஸ் கே. ஜெயகுமார் — அதாவது தேவஸேனா ஜெயகுமார், மாஸ்டர் சுரேஷ் ஜெயகுமார் (2 வயது).

முக்கியமான விஷயம் : டாக்டர் ஜெயகுமார் கொஞ்ச நேரம் முன்பு நடந்ததுபோல நினைவு தப்பி நடப்பது இது தான் முதல் தடவை.

ஸ்டெல்லா அந்த ஏர்கண்டிஷண்ட் அறையின் கதவை விரல் முட்டியில் லேசாய்த் தட்ட, உள்ளிருந்து, "கமின்" வந்தது.

"நான் போகட்டுமா டாக்டர்? கீழே கொஞ்சம் வேலை இருக்கு."

"தாங்க்யூ ஸ்டெல்லா."

ஜெயகுமார் உள்ளே போனபோது சாந்தி அறைக் கோடியில் நின்று கொண்டிருந்தாள். இவரைப்பார்த்ததும் கண்களில் பளீரென்று ஒரு பயம் படர, அவரருகில் ஓடி வந்து சொன்னாள்.

"டாக்டர், ப்ளீஸ் இன்னிக்கு முழுசும் என்கூட இருங்க டாக்டர். எனக்கென்னவோ பயமாயிருக்கு டாக்டர்."

"என்ன பயம் சாந்தி? காரணமில்லாமல் பயப்பட லாமா? உனக்கு இப்போ உடம்பு பரிபூரணமாய்க் குண

மாயிடுச்சு. கொஞ்ச முன்னாலத்தான் உங்கம்மா போன் பண்ணினாங்க. நாளைக்கு இங்கே வந்து உன்னை டிஸ்சார்ஜ் பண்ணிக் கூட்டிக்கிட்டுப் போறேன்னு சொல்லி யிருக்காங்க. இத்தனை நாள் இருந்த மாதிரி இன்னும் ஒரே நாள் நல்லபடியா இரு சாந்தி.''

''நோ டாக்டர். எனக்கு பயமாகத்தான் இருக்கு. சாயங்காலம் டாக்டர் பெஞ்சமின் இங்கே வருவாரு; அவரைப் பார்த்தாலே எனக்குப் பயமாக இருக்கு. ப்ளீஸ்... நீங்க என்கூட இருங்க டாக்டர்.''

''டாக்டர் பெஞ்சமினைப் பார்த்தா பயமா இருக்குன்னு சொல்றே? நோ. நோ. அது வெறும் பிரமையாக இருக்கும் சாந்தி. பெஞ்சமின் ரொம்ப நல்லவர், ரொம்பத் திறமைசாலி. பொறுமைக்கும் நிதானத்துக்கும் பேர் போனவர். அவர்கிட்ட பயம்னு சொல்றியே? வேணும்னா யாராவது நர்ஸை உன் கூடவே இருக்கச் சொல்றேன்.''

''வேணாம். எந்த நர்ஸும் எனக்கு வேணாம். நீங்க இருங்க.''

''நானா? எப்படிம்மா முடியும்? நான் நாள் முழுதும் உன்கூட இருந்தால் மற்றப் பேஷண்ட்ஸை யார் பார்க்கிறது?''

''மீதி எத்தனை டாக்டர்கள் இல்லே. பார்த்துக்கிறாங்க.''

''நோ நோ. அது சரியாக இருக்காது சாந்தி. நான் கவனிக்கிற மாதிரி ஆகாது. இன்னும் கொஞ்சம் நேரம் தானே. இப்போ மணி என்ன ஆறது?'' கேட்டுக் கொண்டே கைக்கடிகாரத்தைப் பார்த்தவர் திடுக்கிட்டார்.

கடிகாரம் நான்கு இருபதில் நின்று போயிருந்தது.

சட்டென்று அவருக்கு ஞாபகம் வந்தது. அந்தப் பெண்—பெயர் தெரியாத பெண்—வேறு யார் கண்ணிலும்



படாத பெண்—வராந்தா ஓரத்திலிருந்து கூப்பிடுகிற போது மணிபார்த்தது ஞாபகம் இருந்தது. பார்த்த மணியும் ஞாபகத்தில் இருந்தது. நான்கு இருபது. அதற்குப் பின்னால் இத்தனை நேரம் கழிந்தும் நாலு இருபதுதானா? முழுசாய் மூவாயித்து ஐந்நூறு ரூபாய் சாப்பிட்ட இந்த ராடோ வாட்ச் இது வரை நின்று போனதாகச் சரித்திரமில்லை. ஆடோமாடிக் ஸ்விஸ் வாட்ச் எப்படி நின்றது? தெரியவில்லை.

சாந்திக்கு தைரியம் சொல்லிவிட்டு வார்ட் கோடியிலிருந்த ட்யூட்டி நர்ஸ் எலிஸபெத்திடம் சாந்தியைத் தனியாகக் கவனிக்க ஏற்பாடு பண்ணிவிட்டு, லிஃப்ட் உதவியின்றிக் கீழே இறங்கி வந்து, தோட்டத்தில் சிறிது நேரம் நடை பயின்றார். முழுதாய் ஒரு சிகரெட்டின் புகையை உள்ளுக்கிழுத்தார். இன்னொரு முறை மனத்திற்குள் சம்பவங்களைக் கோத்தார். உத்தேசமாக நான்கு மணிக்குச் சாந்தினி அம்மாவுடன் டெலிபோனில் பேசியது, பின் அறையை விட்டு வெளியில் வந்தது, லிஃப்டில் கால் வைக்கப் போனபோது யாரோ மெலிதாக, ''டாக்டர் ஜெயகுமார்'' என்று கூப்பிட்டது,கைக கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டே, (மணி நான்குஇருபது) குரல் வந்த திசையில் திரும்பினது...

வெள்ளை வெளேரென்று உயரமாய், அழகாய், பிங்க் திறப் புடவையில்...

யார் அவள்?

அதுவும் பெயர் சொல்லிக் கூப்பிட்டு, கையசைத்து...

அந்த ஆஸ்பத்திரியில் அதுவரை யாரும் பெயர் சொல்லிக் கூப்பிட்டதில்லை. டாக்டர் என்று கூப்பிடுவார்கள். இல்லாவிட்டால் கே. ஜே. என்பார்கள். ஆஸ்பத்திரிக்குள் ஒருவர் பெயர் சொல்லிக் கூப்பிடுவது இதுதான் முதல் முறை. பின் குரல்வந்த இடத்தில் நின்ற

அந்தப் பெண். அவளின் கையசைப்பு...அதன்பின் நர்ஸ் ஸ்டெல்லா தூக்கி நிறுத்தினதுதான் தெரியும். எப்படிக் கீழே விழுந்தோம், உருண்டோம் என்று எதுவும் அவருக்குத் தெரியவில்லை.

'வாட் ஹாப்பண்ட் டு மீ? யார் கண்ணிலும் படாத அந்தப் பெண் என் கண்ணிற்கு மட்டும் எப்படித் தெரிந்தாள்? யார் அவள்?'

வாசலை விட்டுத் தன் அறைக்கு வந்து இன்ட்டர் காமில் ஸ்டெல்லாவைக் கூப்பிட்டுச் சொன்னார். ''ஸ்டெல்லா, நடந்த விஷயத்தைப் பற்றி யார் என்ன கேட்டாலும் சொல்லாதே. டாக்டருக்கு ஏதோ உடம்பு சரியில்லை என்று மட்டும் சொல்லு. ஐ மைஸெல்ப் அம் கன்ஃப்யூஸ்ட்.''

''ஓகே டாக்டர்.''

''நான் இப்போ வீட்டுக்குக் கிளம்பறேன். முடிந்தால் ஒரு தரம் போய் சாந்தியைப் பார்.''

''சரி டாக்டர்.''

அறையை விட்டு வெளியேறி, மரத்தடியிலிருந்த தன் வெள்ளை பியட்டைக் கிளப்பி, ஸிக்னலில் நின்று, அண்ணா மேம்பாலத்தைக் கடந்து, வீட்டிற்குள் நுழைந்த போது ஹால் கடிகாரம் நாலு இருபதில் நின்று போயிருப் பதைப் பார்த்து ஒரு வினாடித் திடுக்கிட்டுப் போனார் அவர்.

## 2

டாக்டர் பெஞ்சமினின் கார் ஆஸ்பத்திரி கூர்க்காவின் சலாமை அலட்சியம் செய்து இன் கேட் வழியாக உள்ளே நுழைந்து அசோக மரங்களையும் புல் தரையையும்



விழுங்கி, சரளைக்கல் பாதை வளைவில் திரும்பி, போர்டிகோவில் நின்றது. அதிலிருந்து மிகக் கம்பீரமாக இறங்கினார் பெஞ்சமின். உள்ளே நுழைந்ததும் ரிஸப்ஷனிஸ்ட் ஷீலாவின் கொஞ்சுகிற 'குட் ஈவினிங் டாக்டர்'ரைக் கவனிக்காமலே தன் அறைக்குள் நுழைந்தார். சுழலுகிற நாற்காலியில் உட்கார்ந்தபோது சாந்தியைப் பார்க்க வேண்டுமென்று தோன்றியது. ஆனால் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டார்.

'கொஞ்ச நேரம் கழித்துப் போய்ப் பார்க்கலாம்.'

அதற்கு முன்னதாக என்ன செய்யலாமென்று யோசித்தார். ரவுண்ட்ஸ் போக வேண்டிய வேலை இல்லை. எப்போதுமே அவர் இந்தச் சாதாரண வேலையெல்லாம் செய்ததில்லை. செய்வதற்காகவும் இல்லை. இந்த ஐம்பத்தைந்து வயதில் தலை முழுதும் வழுக்கையும், கத்தியால் செருகுகிற மாதிரி கூர்மையான பார்வையும், அமெரிக்க அனுபவங்களும் ஈரான் ஈராக் நாடுகளில் பெற்ற தந்திர சக்திகளும்...

வெளியில் எல்லோருக்கும் இவரை டாக்டர் பெஞ்சமினாக மட்டுமே தெரியும். மேதையாக மட்டுமே தெரியும். அவருக்குள் நிகழ்கிற மற்ற அனுபவங்கள், உணர்வுகள், சக்திகள் இவை எதுவும் யாருக்கும் தெரியாதவை. யாராலும் புரிந்துகொள்ள முடியாதவை. புரிந்து கொள்கிற அளவில் பெஞ்சமினும் தன்னை வெளிப்படுத்திக் கொண்டதில்லை.

அதாவது ஒரு வாரம் முன்பு வரை சாந்தியை அவர் சந்திக்கும் வரை.

சாந்தி...

பெஞ்சமின் உதடுகள் இறுகின. தன்னைப்பற்றி என்ன தெரியும் அந்த பெண்ணிற்கு? எத்தனை தூரம் தெரியும்? முதலில் எப்படித் தெரிந்தது? மிஞ்சிப் போனால் இருபத்து

மூன்று இருபத்து நான்கு வயதிருக்குமா அந்தப் பெண்ணிற்கு? அதற்குள் எப்படி என்னை ஊடுருவிப் பார்க்கிற சக்தி இந்தப் பெண்ணிற்கு வந்தது? யாரிவள்?

அதைக் கண்டுபிடிக்கிற முயற்சியில்தான் ஒரு வாரமாக இறங்கியுள்ளார் பெஞ்சமின். எப்படியாவது அவளை ஹிப்னடைஸ் செய்து ஆழ்ந்த ஒரு நிலைக்குக் கொண்டு போய் இந்தப் பிறவி மட்டுமின்றி இதற்கு முந்தின பிறவிக்குள்ளும் நுழைந்து பார்க்கிற முயற்சியை மனோதத்துவம் மட்டுமின்றித் தான் கற்ற தந்திர சாஸ்திர முறையையும் உபயோகித்துப் பார்த்துவிட நினைத்ததில் தோற்றுப் போனார். சாந்தியிடமிருந்து தகுந்த ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை இவர் அறைக்குள் நுழைந்ததுமே அவளுக்கு ஒரு அமானுஷ்ய சக்தி வந்து விடுவதை இவரால் உணர முடிகிறது. அந்தச் சக்தி அவளை விழிப்படையச் செய்கிறது. இவரை அருகில் நெருங்க விடாமல் தடுப்பதுடன் இவரின் எண்ணம் என்ன என்பதையும் புரியச் செய்து விடுவதால் இவர் தோற்றுப் போகிறார்.

இன்று எப்படியும் தன் முயற்சியில் வெற்றி பெற்றே தீரவேண்டும் என்கிற வெறி அவருக்குள் இன்னமும் ஏறுகிறது. நரம்புகள் முறுக்கேறி, குபீரென்று மூளைக்குள் ஊடாக ரத்தம் பாய்வதை உணருகிறார். ஆனால் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்கிறார்.

'நோ, இப்போதில்லை; ஆஸ்பத்திரி லேசாய்த் தூங்க ஆரம்பிக்கட்டும். பெரிதான விளக்குகள் அணைந்து மங்கல் விளக்குகள் எரியத் தொடங்கட்டும். அதற்கு இன்னும் இரண்டு மணி நேரத்திற்கு மேல் இருக்கிறது. அது வரை முதலில் கொஞ்சம் டீ சாப்பிடலாம்!'

பஸ்ஸரை அழுத்தினார். ரூம் பையன் வரவில்லை. எங்காவது ஒரு மூலையில் அவன் தூங்கிக் கொண்டிருப்பான். அவர் அந்த ஆஸ்பத்திரியில் சேர்ந்த இந்த ஐந்து வருட சரித்திரத்தில் ரூம் பையன் முதல் பஸ்ஸருக்கு ஓடி



வந்து அவர் பார்த்ததே கிடையாது. ஆனாலும் அந்தப் பையனை அவர் ஒன்றும் சொன்னது கிடையாது. அவனால் சில அனுகூலங்கள் இருந்ததால் அவர் பேசாமல் இருந்தார். அதே காரணத்தினாலேயே பையனும் சற்று அதிகச் சலுகை எடுத்துக் கொண்டான். பேசப்படாமலே இந்த ஒப்பந்தம் தொடர்ந்ததால் அவர் மீண்டும் மணியழுத்திப் பையனை வரவழைக்க முடியவில்லை. டீ குடிக்கிற ஆசையை விட்டு வேறு வழியில் யோசித்து எழுந்து போய் அறைக்கதவை மூடித் தாழிட்டு வந்து நாற்காலியில் நன்றாகக் கால்களை மடக்கிப் பத்மாசனமிட்டு உட்கார்ந்து கொண்டார். உட்காருமுன் மறக்காமல் இடது கைப்பக்கம் இருந்த ஸ்விட்ச் ஒன்றைத் தட்டினார். வெளியே அறை வாசலில் சிவப்பு விளக்காகி அது 'யாரும் தொந்தரவு செய்யாதீர்கள்' என்றது.

பின்பு ஒரு நிமிடம் மூச்சை நிலையாக நிறுத்திப் பிராணாயாமித்துக் கண்களை மூடிப் பார்வையைப் புருவ மத்தியில் நிறுத்தி இடது கையில் பேனாவைப் பிடித்துக் கொண்டார். (குறிப்பு—டாக்டர் பெஞ்சமின் வலதுகைப் பழக்கம் உள்ளவர்) மெதுவாக வாய்விட்டுச் சொன்னார்.

''பரலோகத்தில் இருக்கிற ஆவிகளே...உங்களில் யாராவது ஒருவர் என் இடது கையிலிருக்கும் பேனா மூலமாகப் பேசுங்கள். அது ஈரானிய மொழியாக இருக்கட்டும். வருவது ஈரானிய ஆவியாக இருக்கட்டும். தயவு செய்து சீக்கிரம் வாருங்கள். தயவுசெய்து சீக்கிரம் வாருங்கள்! தயவு செய்து சீக்...''

அடுத்த வினாடி இடது கைவிரல்களில் செங்குத்தாக நின்ற பேனா மேஜை மீதிருந்த பேப்பரில் தானாக நடனமாடத் தொடங்கியது. பெஞ்சமின் கண்களைத் திறக்கவில்லை. உதட்டோரத்தில் மட்டும் புன் சிரிப்பாக ஒன்று ஓடிற்று. பேனா நகர நகர அவரின் உதட்டுச் சிரிப்பு விரிய...

ஐந்து நிமிடங்களில் எல்லாம் நிற்க, பெஞ்சமின் உடம்பை உதறிக் கொண்டு எழுந்திருந்தார். பேனா நழுவி மேஜையடியில் விழுந்ததையும் பொருட்படுத்தாமல் மிக அவசரமாகக் காகிதத்தில் இருந்ததைப் படித்தார். முகத்தில் ஒரு திருப்தி ஒன்று படர்ந்தது. ஒரு வினாடி யோசனைக்குப் பின் இன்டர்காமை எடுத்து, ''ஷீபா'' எங்கே இருந்தாலும் என் அறைக்கு வரச் சொல்லு ஷீலா என்றார்.

''எஸ் டாக்டர்.''

அடுத்த சில நிமிடங்களில் ஷீபா என்கிற அந்த ஈரானியப் பெண் நர்ஸ் கதவைத் தட்டி உள்ளே நுழைய...

''ஷீபா, உனக்கு ஈரானிய பாஷை படிக்கத் தெரியுமல்லவா? எங்கே, இதைப் படி பார்க்கலாம்?''

''நோ டாக்டர். எனக்குப் படிக்கத் தெரியாது. பேச மட்டும்தான் வரும். ஐ வாஸ் பார்ன் அண்ட் ப்ராட் அப் இன் பெங்களூர் சார்.''

அவள் போனதும் அந்தக் காகிதத்தைக் கிழித்துத் துண்டு துண்டாக்கி அறையின் ஜன்னலைத் திறந்து வெளியே விசிறினார். பின்பு வாசலில் எரிந்த சிவப்பு விளக்கை நிறுத்தி வெளியில் வந்தபோது கிட்டத்தட்ட ஆஸ்பத்திரி தூங்குகிற நிலைமைக்கு வந்திருந்தது. ரிஸப்ஷனில் இருந்த ஷீலாவிற்குப் பதிலாக கோபால் வந்திருந்தான். ராத்திரி ட்யூட்டி இவனுடையது. பெஞ்சமினைப் பார்த்ததும் உட்கார்ந்திருந்த நாற்காலியை விட்டு அவசரமாக எழுந்து நின்றான். இவர் அவனை லட்சியம் பண்ணாமல் நடந்து போனார். ஆஸ்பத்திரியின் அமானுஷ்ய நிசப்தமும் அரை இருட்டும் அவருக்குள் ஒரு சிலிர்ப்பை உண்டு பண்ண லிஃப்டில் கால் வைத்த போது பார்வை தானாக வாந்தா கோடிக்குப் போய் மீண்டது. லிஃப்ட் பட்டனை இரண்டில் அழுத்தி ?ம? ல



போய் இருபத்தெட்டாம் வார்டு திருப்பத்தில் ஸ்டெல்லாவைச் சந்தித்தார்.

''குட் ஈவினிங் டாக்டர்.''

''குட் ஈவினிங். ஹௌ இஸ் சாந்தி?''

ஸ்டெல்லா சிறிது தயங்கிச் சொன்னாள்.

''ஷி, இஸ் லிட்டில் பிட் அஜிடேட்ட்ட்.''

''அஜிடேட்டட்? ஒய்?''

ஸ்டெல்லா உடம்பைச் சிலிர்த்துக் கொண்டாள்.

எப்போதுமே பெஞ்சமின் பார்வையைத் தவிர்ப்பவள் அவள். அவரின் கண்கள் சாதாணக் கண்கள் இல்லை என்பதைப் புரிந்து கொண்டிருப்பவள். ஒரே பார்வை அடி மனசுக்குள் பாய்ந்து எழ எதையோ தேடுவதை உணர்ந்து கொண்டிருப்பவள். அது மட்டுமில்லாமல் டாக்டர் பெஞ்சமின் மீது அவளுக்கு நிறைய சந்தேகங்கள் உண்டு. ஆதாரம் எதுவும் கிடைக்காமற் போனதால் அவள் தன் சந்தேகங்களை யாருடனும் பகிர்ந்து கொண்டதில்லை. ஆனாலும் உள்ளுணர்வு விடுத்த எச்சரிக்கையை அவள் மீறினதில்லை.

'டாக்டர் பெஞ்சமினை விட்டு விலகியே நில்.'

அதனால் இப்போதும் அதிகம் பேசிவிட்ட உணர்வுடன் ''தெரியலை டாக்டர். நீங்கள் போய்ப்பாருங்கள்,'' என்ற பதிலுடன் அவசரமாக நகர பெஞ்சமின் மூன்றாம் நம்பர் அறைவாசலில் சிறிது தயங்கி நின்றார். பின் ஒரு பாதுகாப்பு உணர்வால் உந்தப்பட்டவராகக் கதவைத் திறந்து உள்ளே நுழைந்து ஒருக்களித்து வைத்தார். கதவு மூடிக்கொள்ளுமானால் வெளியிலிருந்து திறக்கஇயலாமற் போகும்.

அவர் உள்ளே போனதும் அறையின் முழு இருட்டில் தடுமாறிப் பார்வை கட்டிலுக்குப் போக, சாந்தியின்

கண்கள் ரேடியம் டயல் மாதிரி இருட்டில் பளிச்சிட்டு இவரையேப் பார்க்க—

இவருக்கு உடம்பு ஒருதரம் சிலிர்த்து அடங்கியது. அதற்கு மேல் அந்தக் கண்களைப் பார்க்க இயலாத வராய்ச் சட்டென்று விளக்கை எரியவிட்டார்.

என்ன ஆச்சரியம்!

சாந்தி கட்டிலில் படுத்துக் கொண்டிருந்தவள் விளக்கு வெளிச்சத்தில்தான் கண்களைத் திறந்தாள்.

'அப்படியானால் சற்று முன் இருட்டில் தெரிந்த கண்கள் யாருடையவை? இவளுடையதில்லையா?"

குழப்பத்துடன் பெஞ்சமின் அவளைப் பார்க்க சாந்தி சரேலென்று கட்டிலில் எழுந்து உட்கார்ந்தது—

"உன்னை யாருடா இங்கே வரச்சொன்னது? போடா! போடா வெளியே," என்று கத்த அதைச் சிறிதும் பொருட்படுத்தாதவராக பெஞ்சமின் அவளருகில் போய்த் தோளைத் தொட்டு அதட்டலானக் குரலில் சொன்னார்.

"ரிலக்ஸ் சாந்தி. இந்தமாதிரி கத்தறதை உடனே நீ நிறுத்தனும். என்னைப் பார்க்கிறபோது என் உனக்குள்ளே இப்படி ஒரு விரோத உணர்ச்சி ஏற்படுதுன்னு புரியலை."

"ஐ ஹேட் யூ. உன்னைப் பார்க்கிற போதே எனக்கு வெறுப்பு வர்றது."

"அதான் ஏன் வர்றதுன்னு கேட்கிறேன். நான் உன் நண்பனே தவிர விரோதி இல்லை. உனக்கு உதவி செய்யத்தான் வந்திருக்கேனேத் தவிர உபத்திரவப்படுத்த இல்லை."

"பொய்."

"பொய் இல்லே டியர். நிஜம். நீ நம்பியே ஆகணும். என்னை உன் நண்பனாக எத்துக்கணும். ரிலாக்ஸ். என்



சின்னப் பெண்ணே." குரலில் மென்மை தவழ அவர் அவளின் தலையை வருடிக் கொடுக்க அவள் மெல்ல மெல்ல அவருக்குக் கீழ்ப் படியலானாள்.

"சாந்தி, எங்கே கட்டிலில் படுத்துக்கோ பார்க்கலாம்."

படுத்துக் கொண்டாள்.

"நேராக என் முகத்தையேப் பார்." பார்த்தாள்.

"இப்போ என் ஆள்காட்டி விரலைவிட்டு உன் பார்வை அசையாதிருக்கட்டும்."

அவரின் விரலின் மீது அவள் பார்வை ஒட்டிக் கொண்டது.

"நன்றாக உடம்பு நரம்புகளைத் தளர்த்திக் கொள் சாந்தி. இன்னும்; இன்னும் தளர்ச்சியாக."

இடது கையை பின் பாக்கெட்டில் கொடுத்து ஒரு பென்சிலை உருவினார் வலது கைக்கு மாற்றி மயக்க நிலையில் இருந்த அவளைப் பார்த்தார்.

சாந்தி நான் யார் தெரியுதா?"

"தெரியும்"—குரல் கிணற்றிலிருந்து வந்தது.

"யாரு?"

"பெஞ்சமின்."

"என்னை முன்பே தெரியுமா?"

"தெரியும்."

"நிஜமாகவா?"

"நிஜமாகாத்தான்."

"அப்படின்னா நான் யாருன்ற எல்லா விஷயமும் உனக்குத் தெரிஞ்சிருக்கு."

''ம்...''

பெஞ்சமின் சற்று நிதானித்தார். அவர் முகம் சடாரென்று மாறிப் போயிற்று. நாடகங்களில் சிவப்புக் காகித விளக்கைச் சுழற்றி முகத்தின் மீது அடித்தால் ஏற்படுமே அந்த பாவனைக்கு வந்திருந்தது.

''சாந்தி, இது என்ன தெரியுமா?''

''பென்ஸில்.''

''பென்ஸிலா, நல்லாப் பாரு.''

''இல்லை. பென்ஸிலில்லை.''

''இது கத்தியில்லையா சாந்தி. கூர் முனையுள்ள கத்தியில்லையா?''

''ஆமாம். கத்திதான்.''

''இதும் பேரென்ன தெரியுமா?''

''தெரியாது.''

''ஸ்டில்லெட்டோ. உடம்புல லேசாத் தடவினாலே பீறிக் கிட்டு ரத்தம் வரும். சந்தேகம்னா பாக்கறியா?''

''இல்லே வேணாம். சந்தேகமில்லை. சந்தேகமில்லை.''

''பரவாயில்லை. சும்மாப் பாரு.''

''வேணாம் வேணாம். எனக்குச் சந்தேகமில்லே.''

அவள் முடிப்பதற்குள் பெஞ்சமின் அவளின் புடவையை விலக்கி வெள்ளை வெளேரென்று பளிச்சிட்ட ஜாக்கெட்டிற்கும் புடவைக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் கீற.

கோடாகக் குபீரென்று ரத்தம்—

சாந்தியின் உதடுகள் பற்களுக்கிடையில் அழுத்தமாகக் கடிபட்டதைக் கவனிக்காதவராய் பெஞ்சமின் வயிற்றில் மின்னின ரத்தத் துளிகளை திருப்திகரமாய்ப் பார்த்துப் புன்னகைக்க...



சடாரென்று எழுந்து உட்கார்ந்து கொண்டு சாந்தி கேட்டாள்.

''அந்தக் கத்தியைக் கொஞ்சம் என்கிட்டே தர்றீங்களா பெஞ்சமின். நானும் பார்க்கிறேன்.''

''ஒ. ஷ்யூர்.'' பென்ஸிலை அலட்சியமாக சாந்தியிடம் நீட்ட அதை வாங்கிக் கொண்டு ஒரு அதிவேகத்துடன் எழுந்து நின்றாள் அவள்.

''இது என்ன தெரியுதா டாக்டர்?''

''ஒ.யெஸ். பென்ஸில்.''

''பென்ஸிலா? நல்லாப் பாருங்கள். கத்தியில்லே இது?''

''கத்தியா? இதுவா?'' டாக்டர் அலட்சியமாகச் சிரிக்க, சாந்தியின் கண்களில் கோபம் தெரிந்தது.

''டேய், இது கத்தியில்லே? ஸ்டில்லெட்டோ இல்லே? லேசாய்த் தொட்டாலே ரத்தம் வராது?''

அந்த 'டேய்'யில் முதல் தடவையாகக் கண்களில் பயம் எட்டிப் பார்க்க பெஞ்சமின் சற்றுப் பின்னால் நகர்ந்து கதவைத் திறக்க முயல ஒரே பாய்ச்சலில் சாந்தி கதவைக் காலால் தள்ளி மூட அந்த வெளிநாட்டுப் பூட்டு மிக அழகாகக் கிளிக்கிட்டுப் பூட்டிக் கொண்டதும்—

பதறிப் போனார் பெஞ்சமின்.

''சாந்தி, இது என்னம்மா விளையாட்டு? கதவைத் திற—'

திறக்கச் சொல்வதற்குள் கண்ணிமைக்கும் நேரத்தில் பென்ஸிலை டாக்டரின் அடிவயிற்றிற்குள் மிக ஆழமாகச் செலுத்தினாள் சாந்தி. சன்னமாக வலிக்க ஆரம்பித்து உடம்பு முழுதும் அதிர்ச்சி பரவுவதற்குள் சிவப்பு ஊற்று வெள்ளைக் கோட்டையும் பாண்ட்டையும் தெப்பமாக் கியது

பென்ஸிலை—ஒரு கூர் முனையுள்ள பென்ஸிலை—கத்தியாக மாற்றுகிற வித்தை இவளுக்கு எப்படி தெரிந்த...து...

யோசித்து முடிப்பதற்குள் மீண்டும் பென்ஸில் முனை தலையைத் தாக்க ரத்த ஊற்று இரண்டாம் முறையாக வெளிக்கிளம்பினபோது தன் நிலையிழந்து பின்புறமாக மெதுவாகச் சாய்ந்தார் பெஞ்சமின். கண்கள் மெல்ல இருண்டு முழு இருட்டடைப்பு வந்தபோது சிவப்புத் திரவம் கதவிடுக்கின் வழியாக அறையைக் கடந்து வராந்தாவை எட்டிப் பார்க்கலாயிற்று.

## 3

டாக்டர் ஜெயக்குமாருக்கு வியர்த்தது. தன் பயத்தை—உணர்ச்சிக் குழப்பங்களை மறைக்க முயன்று தோற்றுப் போனார். அவர் வீட்டிற்கு வருவதற்கு முன்பாக ஸ்டெல்லாவை இன்டர்காமில் கூப்பிட்டு நடந்த விஷயத்தை யாரிடமும் சொல்லாதே என்று சொல்லிவிட்டு வந்த பின்பு வீட்டிற்குள் நுழைந்தால் ஹால் கடிகாரத் தின் அதே நாலு இருபதில் நின்றுபோன முட்கள்...

என்ன நடந்தது? அல்லது நடந்து கொண்டிருக்கிறது வராந்தா ஓரத்தில் நின்று பெயர் சொல்லிக் கூப்பிட்ட பிங்க் புடவைக்காரி திடீரென்று எவ்வாறு மறைந்து போனாள்? நிஜமாக அப்படி ஒருத்தி என்னைக் கூப்பிட் டாளா, இல்லையா? அல்லது வெறும் பிரமையா? அது பிரமை என்றால் கைக்கடிகாரம் நின்ற அதே நாலு இருபதில் வீட்டின் சுவர்க் கடிகாரமும் எப்படி நின்று போகமுடியும்...?

அதற்குமேல் யோசிக்கிற வலிமையற்று மனைவியைக் கத்திக் கூப்பிட்டார். படுக்கையறையில் சுரேஷிற்கு உடை



மாற்றிக் கொண்டிருந்த தேவசேனா பதறியபடி ஓடி வந் தாள். இது வரை ஜெயகுமார் நடு ஹாலில் நின்று பெருங் குரலில் கூப்பிட்டு அவள் கேட்டதே இல்லை.

''என்னங்க என்ன ஆச்சு...?'' — அவள் குரலில் மனத்தின் பதட்டம் தெரிந்தது.

''இந்தக் கடிகாரம் எப்படி நின்னுது?''

அவரின் கேள்வி அவளுக்குள் கோபத்திற்கு பதிலாக ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

''இதுக்கா இப்படி பெரிசா சத்தம் போட்டுக் கூப்பிட்டீங்க? நான் என்னவோ ஏதோன்னு பதறிக்கிட்டு ஓடி வந்தேன். கீ கொடுத்து நாளாகியிருக்கும். நின்னு போச்சு. இது என்னங்க கேள்வி...?''

''தேவி... என் கேள்வியைப் புரிஞ்சுக்காமல் பேசாதே... இது ஆடோமாடிக் கடிகாரம். இதுக்கு எது கீ...? இது எப்படி நிக்கும் ?''

''ஆ...மா...ங்க...'' என்று அதற்கு பின்னர்தான் யோசிக்க ஆரம்பித்தாள் தேவசேனா.

''எதுக்கும் நாளைக்கு ரிப்பேருக்கு அனுப்பட்டுங் களா...?''

''வேணாம், பார்ப்போம்...'' என்று உள்ளே போனார். நீண்ட நேரம் ஷவரடியில் நின்றார். அந்த வெள்ளை வெளி நாட்டு சோப்பில் பாதியைக் கரைத்து விட்டு வந்தார். கோடுபோட்ட டெரிகாட் பைஜாமாவி லும், குர்த்தாவிலும் பத்து வயது குறைய, சிறிது நேரம் புல்தரைக் கூடை நாற்காலியில் உட்கார்ந்து சுரேஷுட னும், பாமரேனியன் குட்டியுடனும் விளையாடுவதாகப் பெயர் பண்ணி, லயிக்காமல் மனைவியிடம் பேசி, சிகரெட் ஒன்றைப் பற்றவைத்துக் கொண்டபோது—

மனசு மறுபடி நெருடிற்று. சாந்தியின் கெஞ்சல் எதிரொலித்தது.

'டாக்டர் பெஞ்சமினைக் கண்டா எனக்குப் பயமா இருக்கு... இன்னிக்கு மட்டும் என்கூட இருங்க டாக்டர் ப்ளீஸ் டாக்டர்...ப்ளீஸ்...'

சட்டென்று ஒரு முடிவுக்கு வந்தவராக, சிகரெட்டை அணைத்துப் போட்டுவிட்டு, தோட்டக்காரனைக் கூப் பிட்டு கார் சாவியை எடுத்துக் கொண்டு வரச் சொல்லி ஷெட்டை நோக்கி நடந்தபோது—பின்னால் தேவசேனா வருவதை உணர்ந்தார்.

தயங்கி நின்று திரும்பினதும் தேவசேனா கேட்டாள்.

"எங்க ஒருமாதிரியாயிருக்கீங்க...? என்ன ஆச்சு இன் னிக்கு...? என்கிட்டே சொல்லக் கூடாதா...? நானும் சாயங்காலத்துலேருந்து பாத்திட்டிருக்கேன். என்னவோ மாதிரியாயிருக்கீங்க, மனசு சரியில்லாமல் உலாத்தறீங்க, என்ன விஷயம்...?"

"ஒன்றுமில்லை தேவி...ஒரு ஸீரியசான கேஸ். போய்ப் பார்த்துட்டு வரலாம்னு தோணிச்சு. கிளம்பி னேன்..."

"சீக்கிரம் வந்துடுவீங்க இல்லையா...?"

"ம்."

காரில் ஏறி உட்கார்ந்து கிளம்பினபோது, ஸம்திங் ராங் ஸம்வேர்......என்றே தோன்றியது. ஏன் என்று காரணம் சொல்லத் தெரியவில்லை. இனம் புரியாத பயத்தில் ஆக்ஸலேட்டரை அழுத்திப் பத்தாவது நிமிடம் ஆஸ்பத்திரி வாசலை அடைந்த போது கேட் அருகில் வழக்கமாக நிற்கும் கூர்க்காவைக் காணவில்லை. ஒரு வினாடி ஹாரனை அழுத்திப் பார்த்தார். டீ குடிக்கப் போயிருந்தால் கூட ஓடிவந்து கேட்டைத் திறக்கிற அவன் இன்று வரவே இல்லை. அவராகக் கீழே இறங்கி கேட்டைத் திறந்து மீண்டும் காரைக் கிளப்பி உள்ளே போனபோது—



வழக்கமாய் இரவு நேரங்களில் இருக்கக்கூடிய அதே அமைதியும், அரை இருட்டுமாகத்தான் ஆஸ்பத்திரி இருந்ததென்றாலும் அவருக்கென்னவோ வித்தியாச மாகத் தெரிந்தது. முதலில் வாசலில் கூர்க்கா இல்லாததே என்னவோ போலிருந்தது. பெரிய பெரிய மரங்களின் வெளிச்சத் திட்டுக்கள். பயந்தார். வராந்தாவைக் கடந்து, வரவேற்பறையில்... நர்ஸ்கள் தங்குமிடத்தில், டாக்டர் பெஞ்சமினின் அறையில்... எங்கே போய்விட்டார்கள் எல்லோரும்? வாட்ச்மேன்களைக் கூடக் காணவில் லையே...கீழ்த்தளம்முழுதும் ஹோவென்று அமைதியாய்க் கிடக்க—

இதயம் வேகமாய் இயங்கத் தொடங்கிற்று. லிஃப்டின் அருகில் போனபோது மாலையில் கண்ட காட்சி ஞாபகத் திற்கு வர கண் தானாக வராந்தாவின் கோடிக்குப் போய் மீள—லிஃபட் மேலே எறினபோது, 'ஜெயகுமார் ரிலாக்ஸ்... ரிலாக்ஸ் யுவர் ஸெல்ஃப். ஒன்றும் ஆகி யிருக்காது...'

இரண்டாம் மாடியில் லிஃப்ட் நிற்க வெளியில் வந்த தும் பகல் மாதிரி பளிச்சிட்டது. இருபத்தெட்டாம் வார்டில் சாந்தியின் அறை எதிரில் நர்ஸ்களின் கூட்டம், கூர்க்கா, வாட்ச்மேன்கள், ரூம்பையன் கேசவன்... இவரைப் பார்த் ததும் ஓடிவந்தார்கள். முகத்தில் கலவரம், பயம், துக்கம்...'

"டாக்டர்! டாக்டர் பெஞ்சமினை யாரோ கத்தியால் குத்திக் கொலை பண்ணிட்டாங்க..."

'என்ன...?' — அவர் அதிர்ந்து போனார். உள் ளுணர்வு எப்போதும் பொய் சொல்வதில்லை...

"எங்கே...? எப்போ...?"

"இங்கேதான் டாக்டர். சாந்தியோட ரூம்ல...சாந்தி வந்து கத்திக் கூப்பிட்டப்புறம்தான் எங்களுக்குத் தெரியும்."

''சாந்தி எங்கே இப்போ...?''

''ரூமுக்குள்ளதான் இருக்காங்க...''

''போலீசுக்குச் சொல்லியாச்சா...?''

''அப்பவே போன் பண்ணிட்டோம்...''

''எனக்கு ஏன் பண்ணலை...?''

''பண்ணினோம். கிளம்பி இங்கே வர்றதாக வீட்லே சொன்னாங்க...''

ஜெயகுமார் இப்போது பயம் முழுதும் அடங்கிப் பதட்டத்தில் மட்டும் இருந்தார். 'அறைக்குள் நுழையலாமா, கூடாதா? இது கொலையா... அல்லது... வேறு என்னவாக இருக்க முடியும்? யார் செய்திருப்பார்கள்...? யார் செய்திருந்தாலும் இது வெளியில் தெரிந்தால் ஆஸ்பத்திரியின் பெயர் என்னவாகும்... மறுபடியும் இந்த ஆஸ்பத்திரியை நம்பி யார் வருவார்கள்...? இதை வெளியில் வரவிடாமல், செய்தித்தாளில் போடாமல் எப்படித் தடுப்பது...? அப்படியே தடுத்தாலும் அதோ இங்கே கூடியிருக்கிற அத்தனை பேரும் வெளியில் போய்ப் பேச மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்...? இவர்களை எப்படிப் பேசவிடாமல் தடுக்க முடியும்...?'

கேள்விகள், கேள்விகள், கேள்விகள்...விடை தெரியாத கேள்விகளில் குழம்பிப் போய் டெலிபோன் ரிஸீவரை எடுத்த போது போலீஸ் ஜீப் சப்தமும், தொடர்ந்து கனமான பூட்ஸ்களின் ஒலியும் இவரை நெருங்க ஆரம்பிக்க... இவர் ரிஸீவரை வைத்து விட்டு நிமிர —

ஆறடி, இரண்டங்குலத்தில், முகத்தில் சினிமா சாயல் தெரிய, நூல் கட்டி வெட்டிய சுருட்டை முடிக்குக் கீழே விசால நெற்றியும் தீர்க்கமான நாசியும் பொருத்தமான மீசையுமாக இன்ஸ்பெக்டர் சங்கர்ராம் இவரைப்பார்த்து—

''டாக்டர் ஜெயகுமார் ப்ளீஸ்...?''

''யெஸ்...ப்ளீஸ் கமின்...''



''கொலை நடந்த இடத்தை முதலில் காட்டுங்க. நான் என் வேலைகளை முடித்து விட்டு வந்து அப்புறம் கேள்வி கேட்கிறேன்...''

மீண்டும் கேள்விகளா...

ஜெயகுமார் களைத்துப் போயிருந்தார்.

''இதோ இந்த மூணாம் நம்பர் ரூம்தான்...'' என்று இருந்த இடத்திலிருந்தே கை காட்டினார்.

''மூன்னூற்றி நாற்பத்திரண்டு! கொஞ்சம் என் கூட வாங்க...'' இன்ஸ்பெக்டருடன் ஒல்லியான அந்தப் போலீஸ் கான்ஸ்டபிள் உள்ளே நுழைய, ஜெயகுமார் சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டார்.

இன்ஸ்பெக்டரும், கான்ஸ்டபிளும் உள்ளே நுழைந்த போது சாந்தி மௌனமாகக் கட்டிலின் மீது உட்கார்ந்து கொண்டிருந்தாள். கதவருகில் டாக்டர் பெஞ்சமின் குப்புற விழுந்து உறைந்து போயிருந்தார். சங்கர்ராம் சாந்தியை ஒரு வினாடி உற்று நோக்கி விட்டுப் பிணத்தைப் பார்வையிட்டார். பிணம் விழுந்து கிடந்த இடத்தைச் சுற்றிக் கோடுகள் போடச் சொன்னார். போட்டோ பிடித்து கைரேகை எடுத்து, போஸ்ட்மார்ட்டத்திற்கு அனுப்பின பின்பு —

மீண்டும் சாந்தியைப் பார்த்தார். ''நீங்கதான் கொலையை முதல்ல பார்த்தீங்களாம்மா...?''

சாந்தி சங்கர்ராமைப் பார்த்து லேசாய் விழித்து, ''கொலையா...?'' என்று கேட்டதும் சங்கர்ராம் புரிந்து கொண்டார். இந்த ஆஸ்பத்திரியில் வேறு எந்த நோயாளி இருக்க முடியும்...?

இன்னொரு கான்ஸ்டபிள் அறையை ஆராய்ந்து ஆயுதங்களைத் தேட,

''ஏம்பா, யார் முதல்ல கொலையைப் பார்த்ததுன்னு கேளேம்பா...?'' என்று சலித்துக் கொண்டதும், ஷீபா உள்ளே வந்தாள்.

''நீங்கதான் முதல்ல கொலையைப் பார்த்தீங்களா...?''

''ஆமாம் சார். பென்சிலால்தான் இந்தப் பொண்ணு அவரைக் கொலை பண்ணியிருக்கணும்.''

''நீங்க யார்...?''

''ஷீபா. நர்ஸ் ஷீபா.''

''எப்போ கொலை நடந்ததைப் பார்த்தீங்க...?''

''இப்போதான் இன்ஸ்பெக்டர், கொஞ்ச முன்னால...''

''இப்போதென்றால், சுமாராக மணி சொல்ல முடியுமா...?''

''முடியும். தினமும் நான் பத்து மணிக்கு ஒரு ரவுண்ட் வர்ற வழக்கம்...''

''இன்னிக்கும் ரவுண்ட் வந்தபோதுதான் பார்த்தீங்களா?''

''ஆமாம் டாக்டர்...''

''என்ன பார்த்தீங்க...?''

''சாந்தி ரூம் வாசல்ல வந்தபோதே கீழே ஏதோ ஓடறதைப் பார்த்தேன். அந்தச் சின்ன லைட்டின் வெளிச்சத்துல ஒண்ணும் புரியலை. ஷூவில் ஏதோ ஒட்டற மாதிரி தெரியவே ட்யூப்லைட்டைப் போட்டால் ரத்தம் வழிஞ்சு ஓடிச்சு. உடனே சத்தம் போட்டு மற்ற நர்ஸுங்க, வாட்ச்மேன் எல்லாரையும் கூப்பிட்டப்புறம்தான் உள்ளே ரூம் கதவைத் திறந்து பாத்தேன்.''

''அதுவரை ரூம் கதவு மூடியிருந்ததா...?''

''ஆமாம்.''

''மூடியிருந்ததா, இல்ல தாழ்ப்பாள் போடப்பட்டிருந்ததா...?''

''மூடித்தான் இருந்தது...?''

''நீங்க தள்ளித் திறந்ததும் திறந்துடுச்சா?''

''ஆமாம்.''



''உள்ளே நீங்க என்ன பார்த்தீங்க...?''

''கீழே டாக்டர் பெஞ்சமின் விழுந்து கிடப்பதையும், சாந்தி பென்சிலோடு கட்டிலில் உட்கார்ந்திருப்பதையும் பார்த்தேன்...''

''அதனால்தான் பென்சிலால் கொலை பண்ணியிருக்கணும்னு சொன்னீங்களா...?''

''ஆமாம்.''

''எத்தனை வருஷமா இங்கே வேலை பார்க்கிறீங்க...?''

''நாலு வருஷமா...''

''இந்தப் பொண்ணு பேரு என்னன்னு தெரியுமா?''

''சாந்தி...''

''கேஸ் என்ன...?''

''மெண்டல் கேஸ்தான்.''

''எத்தனை நாளா இங்கே இருக்கா?''

''ம்...கிட்டத்தட்ட ஒரு மாசமிருக்கும்.''

''இவதான் கொலை பண்ணினான்னு எப்படிச் சொல்றீங்க...?''

''வேற யாரும் ரூம்ல இல்லீங்களே...?''

''அதை எப்படிச் சொல்ல முடியும்...?''

ஷீபா பதில் சொல்லாமல் நின்றாள்.

''என்ன பேசாமல் நிக்கறீங்க...?''

''வேற யாரும் செய்திருக்க முடியாதுன்றது எங்க யூகம்...''

''எங்கன்னா யார் யாரு...?''

''மற்ற நர்ஸுங்க, வாட்ச்மேன், ரூம் பாய்...''

''சரி, ரூம்ல கத்தி, கூரான ஆயுதம் எதுவும் இல்லையே?''

''கிடைக்காதுங்க, மென்டல் பேஷண்ட்ஸ்கிட்டே எதுவுமே கொடுக்க மாட்டோம்...''

''அப்ப, எப்படியம்மா இந்தப் பொண்ணு கொலை பண்ணினதாகச் சொல்றீங்க...?''

''பென்ஸில் சார், கைல கூரான பென்சில் வச்சிட்டிருக்காளே...''

''நான்ஸென்ஸ்! நீங்க போய், ஒவ்வொருத்தரா உள்ளே அனுப்புங்க...''

வரிசையாக கோகிலா, க்ளாராம்மா, நீலா, விஜயா, ரும்பாய் கேசவன், வாட்ச்மேன்கள் தணிகாசலம், நாச்சியப்பன்...கடைசியில் டாக்டர் ஜெயகுமார்...

விசாரித்து, விசாரித்து, யோசித்து...

இன்ஸ்பெக்டர் இரண்டு டீ குடித்து முடிந்த பின்னரும் களைத்துப் போனார்.

''என்ன சார் எல்லாம் சேர்ந்து குழப்பறீங்க...? டாக்டர் பெஞ்சமின் என்கிற ஆசாமி செத்துப் போயிருக்காரு...என்...? தெரியலை. யாரு கொலை செஞ்சது...? சாந்தின்னு ஒரு பைத்தியக்காரப் பொண்ணைக் காட்டறீங்க...எந்த ஆயுதத்தால் கொலை பண்ணினான்னு கேட்டால் பென்ஸில்ங்கறீங்க! என்ன சார் விளையாடறீங்க...? பென்ஸிலால் கொலை பண்றது சாத்தியமான விஷயமா, என்ன பேசறீங்க...?

''நீங்களானா ஹிப்னாடிசம் அது இதுன்னு புரிஞ்சுக்க முடியாததெல்லாம் சொல்றீங்க. எப்படி வச்சுக்கிட்டாலும் இது பர்ஃபெக்ட் மர்டர். அதை யாரும் மறுக்கவோ இல்லை மறைக்கவோ முடியாது. கொலைகாரனைக் கண்டு பிடிக்கணும்கிறதுதான் ஒரே குறி. இன்னும் தான் விசாரணை பண்ணாதது ஒரே ஒரு ஆள் தான். அது அந்தப் பைத்தியகாரப்பொண்ணு சாந்தி-



தான். கேட்டால் பதில் சொல்லுமோ சொல்லாதோ? எதுக்கும் கேட்டுப் பார்த்துடறேன்...?''

அவர் மீண்டும் சாந்தியின் அறைக்குள் நுழைந்ததும், கட்டிலில் உட்கார்ந்திருந்த சாந்தி மரியாதை தவறாதவளாக எழுந்துவிட்டு உட்கார்ந்தாள்.

''அம்மா, நான் உங்ககிட்டே சில கேள்விங்க கேட்கணும்.''

சாந்தி மெலிசாய்ச் சிரித்தாள்.

''ஏம்மா, நீங்க எப்போ இந்த ஆஸ்பத்திரியில் சேர்ந்தீங்கன்றது ஞாபகம் இருக்கா...?''

''இன்ஸ்பெக்டர் சங்கர்ராம், ஏன் சுத்தி வளைச்சுக் கேள்வியை ஆரம்பிக்கறீங்க. நேரிடையாகவே கேளுங்க. இப்ப என்ன தெரியணும் உங்களுக்கு...? டாக்டர் பெஞ்சமினைக் கொலை பண்ணினது யாருன்றதுதானே...?''

சங்கர்ராம் அசந்து போய், கூட உட்கார்ந்திருந்த அஸிஸ்டெண்ட் கமிஷனர் நமச்சிவாயத்தைப் பார்க்க சாந்தி தொடர்ந்தாள்.

''என் சார், ஒரு பென்ஸிலால் எப்படிக் கொலை பண்ண முடியும் என்பதுதானே உங்க சந்தேகம்? அதுக்கு முன்னாலே செத்துப்போன டாக்டர் பெஞ்சமினைப் பற்றியும் நீங்க கொஞ்சம் தெரிஞ்சுக்கணும்...அவன் என்னெல்லாம் செய்திருக்கான்றது உங்களுக்குத் தெரியணும். கறுப்புத் துணியில் பொம்மை பண்ணி அதுக்கு ஊசிகுத்தி அதன் மூலமா ஆளைக் கொலை பண்ணியிருக்கான். இது எப்படின்னு கேட்டீங்க. அதுதான் சார் பிளாக் மேஜிக். இதைப் போலீஸ்காரங்க நீங்க நம்ப மாட்டீங்க. வக்கீல், நீதிபதி யாரும் ஒத்துக்க மாட்டீங்க. உங்களுக்குச் சாட்சி வேணும். நிருபணம் வேணும். ஆனால் அந்தக் கேஸ் என்ன ஆச்சு...பெண்டிங்ல வைச்சுக் கண்டுபிடிக்க முடியலைன்னு ஃபைலையே மூடிட்டீங்க, 1960-ல் பெங்களூர்ல திலீப் பாண்ஜின்னு ஒரு ஆளு...கொலைக்குத்

தடயமே இல்லாமல், எப்படிச் செத்தான்றது தெரியாமல்... அப்புறம் 64ல் மயிலாப்பூர் கொலை...79 டிசம்பர் மாதம் பஸவப்பா...81 எப்ரலில் அண்ணா நகரில் லீலாவதியம்மாள் கொலை வழக்கு...என்ன ஆச்சு இதெல்லாம்? ஆள் யாருன்னு கண்டுபிடிக்க முடிஞ்சதா? தடயமோ ஆயுதமோ கிடைச்சதா...கிடைக்காது. ஏன் கிடைக்காது தெரியுமோ...? கொஞ்சம் கிட்டே வாங்க, இன்ஸ்பெக்டர் ..''

சங்கர்ராம் தயங்கிக்கொண்டே எழுந்து அருகில் போக, ''பயப்படாதீங்க இன்ஸ்பெக்டர். இது என்ன பாருங்க. சாதாரணப் பென்சில்தானே...? வாங்கிப் பாருங்க...''

வாங்கிப் பார்த்தார். கறுப்பு சிகப்பு கோடு போட்ட முனை மிகக் கூராகச் சீவப்பட்ட புதுப் பென்சில்.

''இதை வச்சு ஒரு ஆளை சாகிற வரைக்கும் வயிற்றிலேயும், தலையிலும் குத்திக் கொல்ல முடியுமா இன்ஸ்பெக்டர்?''

''முடியாது...'' என்று சங்கர்ராம் அதை நமச்சிவாயத்திடம் நீட்ட முற்பட, இடையில் குறுக்கிட்டு சாந்தி கை காட்ட, எந்தவித மனித முயற்சியும் அற்றுப் பென்ஸில் சங்கர்ராம் கையிலிருந்து எகிறி உயரக் கிளம்பி நேராகச் சாந்தியின் கையில் போய்ச் சேர...

நமச்சிவாயமும், சங்கர்ராமும் முதல் முறையாகச் சிறிது நம்பிக்கையும் பயமுமாக அவளைப் பார்த்தார்கள். அவள் சிரித்துக் கொண்டே கேட்டாள்.

''இந்தப் பென்ஸிலால் கொலை செய்யமுடியாதுன்னு தானே நினைக்கறீங்க? எங்கே, உங்க கையைக் காட்டுங்க...''

ஒரு நிமிடம் தயங்கிப் பின் சட்டென்று சங்கர்ராம் கை நீட்ட, ''இது பென்ஸிலில்லை. கத்தி. மிகக் கூர்மையான ஸ்டில்லெட்டோ. இப்போ நீங்களே நம்புவீங்க பாருங்க...''



அவள் பென்ஸிலால் அவரின் மணிக்கட்டில் கோடுகள் இழுக்க, சுரீர் என்ற வலியுடன் முத்து முத்தாகச் சிவப்புத் திராவகம் வெளிக் கிளம்ப...

சங்கர்ராம் பயத்திலும், திகைப்பிலும் வலியிலுமாகத் திரும்பி அஸிஸ்டெண்ட் கமிஷனர் நமச்சிவாயத்தைப் பார்க்க—

அவர் உறைந்து போயிருந்தார்...

## 4

''டாக்டர் ஜெயகுமார், என்ன செய்யலாம் சொல்லுங்க...?''—உதவிக் கமிஷனர் நமச்சிவாயம் கேட்க,ஜெயகுமார் மெல்ல அவரை நிமிர்ந்து பார்த்தார். ராத்திரி முழுதும் தூக்கமற்றுப் போனதால் கண்கள் சிவந்து கிடந்தன. தலை பாரமாகத் தெரிந்தது. களைப்பும்,அயர்ச்சியும் சேர்ந்து பேசவிடாமல் தடுக்க, மிகுந்த சலிப்புடன் சொன்னார்:

''எனக்கு ஒண்ணும் புரியல. எதையும் யோசிக்கிற நிலைமையில்கூட நான் இல்லே. ரொம்பக் குழம்பிப் போயிருக்கேன். நீங்க எனக்கு ஒரு உதவி பண்ணணும்... பேப்பர்ல என் ஆஸ்பத்திரி பேர் வராமல் பார்த்துக்கணும். எங்க ரெபுடேஷன் கெடாமல் இருக்கணும். இந்த உதவியை நீங்க எனக்குச் செய்வீங்களா...சார்?''

ஏ. ஸி. அவரின் கேள்வியைப் புறக்கணித்துத் தன் விஷயத்திலேயே கவனமாக இருந்தார்.

''டாக்டர் பெஞ்சமின் வீடு எங்கேயிருக்கு...?''

''இங்கேதான்...தாஸப்பிரகாஷ் எதிர்ல...''

''அவருக்கு போன் இருக்கு இல்லே? சங்கர்ராம், போன் நம்பரைக் கேட்டு வீட்டுல கூப்பிட்டு விஷயத்தைச் சொல்லிடுங்க... கமிஷனருக்குத் தெரியப்படுத்திட்டீங்களா...?''

''தெரியப்படுத்தியாச்சு சார். எந்த நிமிஷத்திலேயும் இங்கே வருவாரு...''—சங்கர்ராம் சற்று யோசித்துக் கேட்டார்.

''ஏன் சார், நீங்க பேய், பிசாசு, ஆவி, ஆவியோட பேசற விவகாரங்களையெல்லாம் நம்பறீங்களா...?''

''நான்ஸென்ஸ்! என்ன கேள்வி இது?''

சங்கர்ராம்... ஒரு வினாடி சங்கடப்பட்டு, திடமான குரலில் சொன்னார்!

''இல்லே சார், எப்படிப் பார்த்தாலும் இந்தக் கேஸ்ல ஒரு விவரமும் புரிய மாட்டேங்குது, அந்தப் பொண்ணு பென்சிலைக் காட்டி, கத்தின்னு சொல்லிக் கையைக் கீறி ரத்தம் வரவழைக்குது... எனக்கென்னவோ இந்தக் கேஸ் விஷயமா நாம பிளான்ஷெட்டை உபயோகிச்சுக்கலாம்னு தோணுது...''

''பிளான்ஷெட்டா...? என்ன அது? வாட்ஸ் இட் ஆல் எபௌட்?''

''சார்... கமிஷனர் வர்றதுக்கு முன்னால, அதைப் போட்டுக் காட்டிடட்டுமா? if you Permit...''

நமச்சிவாயம் பேசாமல் இருந்தார். வேண்டாம் என்று சொல்லவில்லை. சரி என்றும் தலையசைக்கவில்லை. அந்த மௌனத்தைச் சம்மதமாக எடுத்துக் கொண்ட சங்கர்ராம் சுறுசுறுப்பாகச் செயல்பட்டார்.

''டாக்டர் ஜெயகுமார், ஒரு மெழுகுவர்த்தி, டம்ளர், சாக்பீஸ் கொண்டுவரச் சொல்லுங்க, சீக்கிரம்...''

அடுத்த நிமிடம் மூன்றும் வர, சங்கர்ராம் கார்பெட்டை விலக்கி, தரையில் பெரிதாகச் சதுரம் வரைந்து அதைத் தாயக்கட்டம் மாதிரி நிறைய பாகங்களாகப் பிரித்து ஏ.பி.



ஸி.டி.—இஸட் வரை எழுதி, 1,2,3-10 வரை போட்டு இரு மூலைகளிலும் எஸ், நோ—ஆரம்பம் என்கிற இடத்தில் மெழுகுவர்த்தியைக் கொளுத்தி, கண்ணாடி டம்ளரை அதன்மீது கவிழ்த்து வைத்து தன் ஆள் காட்டி விரலை லேசாக அதன்மீது தொட்டு,

''டாக்டர் ஜெயகுமார், நீங்களும் தரையில் உட்கார்ந்து உங்க விரலையும் இதன்மீது லேசாக வையுங்களேன். ப்ளீஸ்...''

டாக்டர் ஜெயகுமார் தயங்க சங்கர்ராம் அவசரப்படுத்தினார்.

''ம்...சீக்கிரம் சார், கமிஷனர் வர்றதுக்குள்ள முடிச்சாகணும்...''

ஜெயகுமார் கீழே உட்கார்ந்து ஆள்காட்டி விரலை வைத்ததும், சங்கர்ராம் கண்களை மூடி ஏதோ சொல்ல டம்ளர் நகர்ந்து நமஸ்காரம் என்றதும்...

ஏ. சி. ஆச்சரியமாகப் பார்த்தார். ''நீ விரலால் நகர்த்தறேய்யா?'' என்றார்.

''இல்லை சார். ப்ராமிஸாக இல்லை.'' சங்கர்ராம். நிஜமாகச் சொல்ல — ''டாக்டர் ஸார். நீங்க?'' என்று சந்தேகம் மாறாமல் கேட்டார்.


''நோ. நான் நகர்த்தலை,'' என்று ஜெயகுமார் சொன்னதும், சற்றே நம்பிக்கையும், சுவாரஸ்யமும் வர, ஏ.சி.யும் கீழே சிரமப்பட்டு உட்கார்ந்தார். பிளான்ஷெட்டை ஒரு வினாடி உற்றுப் பார்த்தார். ஒவ்வொரு கட்டமாகப் பார்த்துக் கொண்டேவர,

சங்கர்ராம் கேள்விகளைத் தொடர, டம்ளர் நகர்ந்து விடையளித்தது:

'இங்கு நடந்திருப்பது கொலையா...?''

''வொய்...இ...எஸ்...யெஸ்.' (Yes).

'யார் செய்தது?




'மிஸ்டர் பானர்ஜி...'

'இங்கு மிஸ்டர் பானர்ஜின்று யாரும் இல்லையே.?'

'இருக்கிறார். சாந்தியின் உடம்பிற்குள்.'

அந்தப் பதில் சற்று நிதானித்து மீண்டும் கேட்டார் சங்கர்ராம்:

'சாந்தியினுள் பானர்ஜியின் ஆவி புகுந்து கொண்டு டாக்டர் பெஞ்சமினைக் கொலை செய்திருக்கிறா...?'

'ஆம்.'

'இதை எங்களால் எப்படி நிரூபிக்க முடியும்...?'

'முடியாது.'

'அப்படியானால் நாங்கள் சாந்தியைத்தானே கைது பண்ண வேண்டி வரும்...?'

'உங்களால் சாந்தியைக் கைது செய்ய முடியாது.'



'ஏன் முடியாது?'

'அவள் மன்நோயாளி. இதைக் காரணம் காட்டிக் கேஸை விட்டு விடுங்கள்.'

'நோ...எனக்கு இன்னும் சாந்தி பற்றியும், அவளுக்குள் புகுந்துகொண்டிருப்பதாகச் சொன்ன அந்த பானர்ஜியின் ஆவி பற்றியும் நிறையத் தெரிந்து கொள்ள வேண்டும்...'

'இதற்கு மேல் சொல்ல அனுமதியில்லை.'

'வேறு யாரிடம் கேட்டால் விவரம் தெரியும்?'

'ஸ்ரீதரன் நம்பியாரைக் கேட்டால் தெரியும்.'

'எங்கே இருக்கிறார் அவர்?'

''தாம்பரம் தாண்டி, பொன்னகரம் என்றொரு ஊர் இருக்கிறது. அங்கே இருக்கிறார்.'

'யார் அவர்?'

'மாந்த்ரீகர். தந்திர சக்தி உள்ளவர்.'

'அவருக்கு மட்டும் எப்படி எல்லா விவரமும் தெரிய வரும்?'

டம்ளர் சற்று வேகமாகக் கோபத்துடன் நகர்ந்து பதில் சொல்லிற்று:

'உங்கள் கேள்வியில் தெரிந்து கொள்ளும் ஆர்வம் இல்லை. அதிகாரம்தான் இருக்கிறது. பதில் சொல்ல முடியாது.'

'ஸாரி, இந்த உத்தியோகத்தில் உரத்த குரலில் அதிகாரப்படுத்திப் பேசியே பழக்கமாகி விட்டது. விவரம் சொல்லுங்கள்.'

'மன்னிக்கவும். தகவல் தர இயலாமைக்கு வருந்துகிறேன்.'

'என்ன இது. டி.வி. ஒளிபரப்பு மாதிரி சொல்லி முடித்தால் எப்படி?'

பதிலுக்கு, 'உங்கள் பேச்சு எனக்குப் பிடிக்கவில்லை' என்பதற்குமேல் டம்ளர் நகர மறுத்தது. முயற்சித்தபோது 'ஸாரி' சொல்லிற்று.

'ஓ.கே. தாங்க்யூ தென்' என்று சங்கர்ராம் எழுந்து கைகால்களை உதறிக் கொண்டார்.

நமச்சிவாயம் புதியதாய் அவரைப் பார்த்தார். அந்தப் பார்வையைப் புரிந்து கொள்ள முடியாதவராக சங்கர்ராம் கேட்டார்.

''என்ன?''

''இன்னும் டம்ளர் நகருவது பற்றி எனக்குச் சந்தேகம் இருக்கிறது. எப்படிய்யா டம்ளர் பதில் சொல்லும்? இப்போ கமிஷனர் வந்து கேட்டால் அவர்கிட்டே இந்தப் பிளான்செட் விஷயத்தைச் சொல்ல முடியுமா?''

அவர் கேட்டுக் கொண்டிருந்தபோதே போர்ட்டிகோவில் கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டது. தொடர்ந்து விறைப்பான ஸல்யூட்கள். தோல் ஷூவின் கம்பீர ஒலி சட்டென்று ஏற்பட்ட நிசப்தத்தில் பெரிதாய்க் கேட்க—

விறைப்பான காக்கி உடையில், முகத்தில் அபரிமிதமான திறமை தெரிய கமிஷனர் இவர்களை நெருங்கினார்.

''குட் ஈவினிங் சார்.''

''குடீவினிங். சங்கர்ராம் இப்படி வந்து உட்காருங்க. ஸ்பாட்டுக்குப் போறதுக்கு முன்னாடி உங்களை விசாரிச்சுடறேன். நீங்கதானே இதை அட்டெண்ட் பண்ணினது?''

''யெஸ் சார்.''



''இதுல நிறைய லூப்ஹோல்ஸ் விழற மாதிரித் தோணுதே. போன்ல நமச்சிவாயம் வேற இது 'அக்கல்ட் விவகாரம் போல தெரியுது'ன்னு சொல்றார். முதல்ல சிஸ்டமெடிக் அப்ரோச். அப்புறம் லாட்டரல் அப்ரோச். கேஸோட நுனியைச் சுலபமாகப் பிடிச்சுடலாம். நான் கேட்கிற கேள்விகளுக்கு உங்களுக்குத் தெரிஞ்ச பதிலை டக்டக்குனு சொல்லிக் கிட்டு வாங்க.''

''ஓ. கே. சார்.''

''இது கொலையா, அல்லது விபத்தா?''

''கொலைதான் சார்.''

''முதல்ல பார்த்தது யாரு?''

''ஷீபான்ற ஸ்டாஃப் நர்ஸ்.''

''ஐ விட்நெஸ் உண்டா?''

''கிடையாது சார்.''

''கொலையாக இருக்கிற பட்சத்தில் யார் செய்திருப்பான்ற சந்தேகம் வருது?''

''சாந்தின்னு அதே ரூம்ல அட்மிட் ஆகியிருக்கற பெண்?''

''மெண்ட்டல் கேஸா?''

''எஸ் சார்.''

''வெல். கொலை செய்ய உபயோகிக்கப்பட்ட ஆயுதம்?''

இந்த இடத்தில் சற்றுத் தயங்கிப் பதில் சொன்னார் சங்கர்ராம்.

''பென்சில் சார். மிகக் கூராகச் சீவப்பட்ட பென்சில்.''

''வாட் தி ஹெல் யு ஆர் டாக்கிங்!'' என்று கோபப்பட்டார் கமிஷனர். ''என்ன பேசறீங்க? பென்சில்ல

எப்படிக் கொலை செய்ய முடியும்...? எத்தனை வருஷ சர்வீஸ் உங்களுக்கு, கொஞ்சமாவது ரெஸ்பான்சிபிலிடி வேணாம்?"

"ஐம் சாரி டு ஸே திஸ் சார். கொலை செய்யப் பயன் படுத்தப்பட்ட ஆயுதம் பென்சில்தான். அந்தப் பெண் சாந்தியே டெமான்ஸ்ட்ரேட் பண்ணிக் காமிச்சா. இது பென்சில் இல்லை கத்தி—ஸ்டில்லெட்டோன்னு சொல்லி என் கைல கீறினா ...ரத்தம் கொப்பளிச்சுக்கிட்டு வருது... இதோ இன்னும்கூட என் கைல அந்த ரத்தம் காயலை. வேணும்னால் அசிஸ்டெண்ட் கமிஷனர்கிட்டே ரெஃபர் பண்ணிப் பாருங்க."

"ஓ. நோ... ஐ ஸ்டில் கெனாட் அக்ஸெப்ட் இட்... உத்தேசமாய் எத்தனை மணிக்குச் சம்பவம் நடந்திருக்கு?"

"போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட் வந்தால்தான் சார் தெரியும்..."

"F. I. R. ரெடி பண்ணிட்டீங்களா?"

"இல்லை சார். ஃபாரத்தை எப்படி நிரப்பறதுன்னு தான் யோசிச்சிட்டிருக்கோம். எல்லாக் காலத்தையும் காலியாகத்தான் விடணும் போல இருக்கு. உங்களைக் கன்ஸல்ட் பண்ணிட்டு எழுதலாம்னு பேசாமல் இருக்கோம்."

"என்ன விளையாட்டா இருக்கு? பவுடர் அடிச்சவங் களைக் கூப்பிட்டு விசாரிச்சீங்களா?"

"விசாரிச்சேன் சார். ரூம்ல எந்த இடத்திலேயும், கை ரேகை சமாசாரமே தென்படலையாம். எதற்கும் இருக்கட் டும்னு எல்லாத்தையும் பிரிண்ட் போடச்சொல்லிட்டேன்."

"ரேகை எதுவும் அகப்படலியா? என்ன சார், எல்லாம் ஒண்ணா சேர்ந்து சதி பண்றீங்களா? இருபது வருஷமா காக்கிச் சட்டைல கொட்டை போட்ட ஆசாமிங்கள்ளாம் ஒரு சாதாரண எழுதற பென்சில்தான் கொலைக்கான



ஆயுதம்கறீங்க. பவுடர் அடிச்சா ரேகை தெரியலேங் கறீங்க. அந்தப் பொண்ணு பேர் என்ன, சாந்தி— அவளையாவது விசாரிச்சீங்களா?"

"விசாரிச்சோம். இதப் பாருங்க ஸ்டேட்மெண்ட்—"

பிரித்துப் படித்துக் கோபத்துடன் கசக்கி மூலையில் விசிறினார்.

"என்ன ஸ்டேட்மெண்ட் இது...? என்னப்பா, எல்லோ ரும் சேர்ந்து காதுல பூ சுத்தறீங்க? பென்சில்தான் ஆயுதம்; ஒரு சாதாரணப் பென்சில் கையில் கோடு போட்டா கீறி ரத்தம் வருதுன்னு சொன்னா யாராவது நம்புவாங்களா? என்னப்பா இது. இன்னும் பிரஸ்ஸுக்கு நியூஸ் போகலே இல்ல?"

"இல்ல சார்."

"அப்படியே அந்தப் பக்கத்தை ப்ளாக் பண்ணிடுங்க. கொலைக் கேஸை இந்த மாதிரியெல்லாம் ரிக்கார்ட் பண்ண முடியாது. ஆஃப் தி ரெக்கார்டுக்கு நீங்களும் மிஸ்டர் நமச்சிவாயமும் சேர்ந்து ஸ்டேட்மெண்ட் ஒண்ணு தயார் பண்ணிக்கையெழுத்துப் போட்டுக் கொடுங்க. நான் மேலே சொல்ல வேண்டியவங்ககிட்டே பெர்ஸனலா சொல்லிடறேன். முழுசா இந்தக் கேஸைப் பொறுத்த வரைக்கும் நானே இறங்கப் போறேன். இது பற்றின ஃபைல் F. I. R. இரண்டையும் என் பர்ஸனல் மேற் பார்வைக்கு டேபிளுக்கு அனுப்பிடுங்க. என்ன?"

"எஸ் சார்."

அவர் பார்வை சுழன்றபோது தரையில் கார்பெட் விலகின இடமும் பிளான்ஷெட் கட்டமும் கண்ணில்பட, "என்னய்யா இது?" என்று கேட்டார்.

பிளான்ஷெட் விவகாரம் முழுவதையும் சங்கர்ராம் சொல்லி, ஸ்ரீதரன் நம்பியாரின் விலாசத்தைக் குறித்துக் கொடுக்க—

"இதுவேற என்னய்யா வெட்டித்தனம்?" என்று எரிந்துவிழுந்தாரே தவிர கமிஷனர் அந்தக் காகிதத்தை வாங்கிப் பாக்கெட்டில் போட்டுக் கொண்டு நெற்றியைச் சுருக்கியபடி எழுந்து வெளியே போனார்.

## 5

ஜெயிலுக்கு இரண்டு சட்டக் கதவு வெய்யிலுடன் திறந்தது. குனிந்து முதலில் தலையை நுழைத்து வலது காலை எடுத்து வெளியே வைத்தான்.

"போய்ட்டு வாங்க."

"போறேன். வரமாட்டேன்."

காந்திப் படத்தின் கீழே பெரிய மேஜையில் மக்கிப் போன கைக்குத்தல் காகிதத்தின் ஓரத்தில் சூப்ரெண்ட் கையெழுத்துப் போட்டு இவன் பக்கம் திருப்பினார். இவனும் கையெழுத்துப் போட்டான். சரிபார்த்துக் கை நிறைய ரூபாய் நோட்டுக்களைத் திணித்து...

"எது இவ்வளவு பணம்?"

"டாக்டர் பெஞ்சமின்னு ஒருத்தர் மாசா மாசம் அனுப்பிச்சது."

"இவ்வளவுமா?"

"ஆமாம்."

சின்னக் கதவிற்குப் பிறகு பெரிய புதிய உலகம். புதிய வெய்யில். புதிய காற்று. காக்கி உடையைத் தவிர்த்த மனிதர்கள் ரம்மியமாகத் தெரிந்தார்கள். பல்லவனின் மென்மையான இரைச்சல் இனிமையாகக் கேட்டது. சுறுசுறுப்பாய் மக்கள். வாசலில் போலீஸ் வண்டி கைதிகளுக்காகக் காத்துக் கொண்டு எக்கத்துடன் நின்றது கோர்ட்டுக்குப் போக.



கூடவே அவனுக்குள் சிறைச்சாலை ஞாபகம் வந்தது. அதற்குள்ளும் ஓரளவு சுதந்திரம் கிடைத்தது. 'சத்திய சோதனை,' 'அரவிந்தரின் அருள்வாக்கு,' 'ஆன்ம நெறிகள்' அவ்வப்போது கிடைத்தன. சின்னத் திரையில் பி. யு. சின்னப்பா எம்.ஜி.ஆர். கத்திச் சண்டை பார்க்க முடிந்தது. தலையில் முக்காடு போட்டுக் கொண்டு டன் கணக்கு டயர்களில் இந்தி பேசும் பெண்கள் கையில் கயிறு கட்டி 'ஸ்வீட்' கொடுத்தார்கள்.

ஆனாலும் இன்னொரு முறை சிறை கூடாது. தரை மட்டத்தில் லஞ்சமும் ஊழலும் வஞ்சகமும் வக்கிரமும் எக்கச்சக்கமாக சந்தித்தாகிவிட்டது. இனிமேல் இல்லை. இப்படிப்பட்ட மனசுகளைச் சந்திக்கப் போவதில்லை. டாக்டர் பெஞ்சமினுக்காக வாழ்நாளைக் கெடுத்துக் கொண்டது போதும்.

மனசு பெஞ்சமினிடம் போயிற்று. எங்கு முதன் முதலாகச் சந்தித்தோம் என்று யோசித்துப் பார்த்தான். பத்து வருடங்களுக்கு முன்பாக, பாரீஸ் கார்னரின் கோடியில் நடைபாதையில் கடை விரித்து ஈஸிச்சேரில் கறுப்புத் துணி போட்டு மூடி ஜோசியம் சொல்லிக் கொண்டிருந்த போது. முதல் தடவையாகப் போர்வைக்குள் முடங்கியிருந்த இவன் திணறினான். டாக்டர் பெஞ்சமின் காரிலிருந்து இறங்கி பத்து ரூபாயை இவனிடம் நீட்டி, "எனக்கு ஜோசியம் சொல். நான் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல் பார்க்கலாம்," என்று சவால் விட்டபோது இவன் ஏற்றுக் கொண்டான்.

மலையாள மண்ணில் நம்பூதிரிகளோடு சுற்றிக் கொண்டு திரிந்ததில் நிறைய விஷயம் கற்றுக் கொண்டிருந்தான். வசிய மந்திரம் தெரிந்து வைத்திருந்தான். எதிராளிக்குத் தெரியாமல் அவர்களின் கண்களை ஊடுருவி அடி மனசின் விஷயங்களைத் தெரிந்து கொண்டு திருப்பி அவர்களுக்கே சொல்வது. இதற்குத் திடசிந்தை

தேவையாக இருந்தது. நூறு சதவிகிதக் கவனம் தேவையாகஇருந்தது.சாதாரணமாக இவன் வாங்கும் ஒருரூபாய் காசுக்காகத் தன் சக்திகளை அதிகம் செலவழிப்பதில்லை. போர்வைக்குள் புகுந்து மிக உத்தேசமாக அலட்டிக் கொள்ளாமல் குறி சொல்வதோடு சரி. அவனும் அவனின் நண்பனுமாக இந்த உத்தேசக் குறியிலேயே பணம் பண்ணினார்கள்.

அந்தச் சமயத்தில்தான் டாக்டர் பெஞ்சமின் வந்து பத்து ரூபாய் நோட்டை நீட்டித் தொழிலுக்கே உலை வைக்கிற விதமாகச் சவால் விட்டதும் சிலிர்த்துக் கொண்டு எழுந்தான். தன் சக்தி முழுவதையும் பெஞ்சமின் மீது செலுத்தி அவரின் கடந்த காலத்தை முழுதுமாய் ஒரு விஷயம் விடாமல் சொன்னபோது அவரே ஆடிப்போனார். தனக்குச் சமமான சக்தி இவனிடம் இருப்பதைத் தெரிந்து கொண்டு இவனைத் தம் பக்கம் இழுத்துக் கொண்டார். பணம் அவருக்குப் பெரும் சாதகமாக இருக்க இவன் தான் கற்ற வித்தையை மிகச் சுலபமாக அவருக்குப் போதிக்க—

அதற்கு மேல் இரண்டு பேரும் நிறைய விஷயங்களில் ஈடுபட்டார்கள். காசு கொடுத்து இது சம்பந்தமாகப் புத்தகங்கள் அத்தனையும் வாங்கினார்கள். மலையாள மண்ணிற்குப் போய்த் தங்கி பாஷை கற்றுக் கொண்டார்கள். நிறைய நம்பூதிரிகளுடன் பழகி மாந்த்ரீகம் பயின்றார்கள். பால் அலெக்ஸாண்டர் அன்றிலிருந்துதான் பெஞ்சமினின் எடுபிடி ஆளானான்.

ஊர் ஊராகச் சுற்றிச் சுடுகாட்டில் இரவு பன்னிரண்டு மணிக்குப் பிணம் எரியும் பொழுது எதிரில் உடலில் துணியில்லாமல் உட்கார்ந்து ஜெபம் செய்து கஷ்டப்பட்டுத் தேடிப்பிடித்த மண்டையோட்டில் மை தயாரித்து, தயாரித்த மையைப் பரிசோதனை செய்து பார்த்து அவனின் தேவைகளை பெஞ்சமின் கவனித்துக் கொண்



டார். எண்ணிக் கூடப் பார்க்காமல் சலவை நோட்டுக்களை அள்ளிக் கொடுத்துத் தயாரித்த மையைப் பிரயோகப்படுத்திப் பார்க்கச் சொன்னார்.

இவனும் ஸ்ரீராமபுரத்திற்கு அருகில் இருந்த பாழடைந்த வீடு ஒன்றிற்குக் குழந்தைகளைக் கடத்திக் கொண்டு வந்து மைப் பிரயோகம் செய்ததில் அந்த மூன்று குழந்தைகளும் இறந்து போயின. இறந்து போன குழந்தைகளை வீணாக்காமல் வீட்டின் பின் பக்கமே எரித்து எதிரில் உட்கார்ந்து பெஞ்சமின் ஜெபிக்க ஆரம்பித்த போதுதான்...

இவனுக்குள் லேசாகப் பொறி மாதிரி சந்தேகம் தட்டிற்று. ஏதோ ஒரு முடிவை நோக்கியே பெஞ்சமின் தன்னுடன் ஊர்ந்து வருவதாகப் பட அவருக்குத் தெரியாமலே அவரைச் சோதனை செய்து பார்க்க ஆரம்பித்த போதுதான்...

அவரின் நிஜமான சக்தி அவனுக்குத் தெரியவர இவன் அயர்ந்து போனான். அன்று பாரீஸ் கார்னரில் பத்து ரூபாய்த் தாளை நீட்டித் தன்னைப் பற்றிக் கேட்டுத் தான் சொன்னதைக் கண்டு பிரமித்துப் போன மாதிரி நின்றதெல்லாம்கூட நடிப்புத்தான் என்பதைப் புரிந்து கொண்டான்.

ஆனால் கடைசியாக பெஞ்சமினுக்காகக் கொலைக் கேசில் மாட்டிக் கொண்டு சீரழிந்த போது இவனிடம் இத்தனை நாளாக பெஞ்சமின் கொடுத்தது,சேர்த்து வைத்திருந்தது அத்தனை பணமும் வக்கீல்களுக்குக் கொடுத்துக் காலாவதியான சமயத்தில் பெஞ்சமினும் காலை வாரி விட்டு விட்டதுதான் இவனை அதிகம் கோபப்படுத்திற்று; உலகத்தைப் புரிந்து கொள்ள வைத்தது.

இவனும் தன் பிரெஸ்டீஜ் பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை. ஆனால் தண்டனைக்குப் பயந்து போனான். எப்படியாவது தூக்குக் கயிற்றிலிருந்து தப்பி

னால் போதும் என்ற நினைப்பில்தான் வக்கீல் வைத்து வாதாடினானே தவிர விடுதலைக்காக இல்லை. வக்கீல் களும் இவனைப் புரிந்து கொண்டவர்களாக அட்டை மாதிரி உறிஞ்சினார்கள்.

சரியாக இரண்டு வருடங்கள் ஜாமீனில் வெளிவர முடியாமல், சரியாகச் சாப்பிட முடியாமல் வேறு எதுவும் செய்ய இயலாத நிலைமையில் இருபத்து நான்கு மணி நேரமும் தவிப்பில் நின்று வழக்குப் போகும் போக்கை வேடிக்கை பார்த்துக் கடைசியாகச் சரியான சாட்சியமில் லாமல் எழு வருடம் கடுங்காவல் தண்டனை தெரிவித் தார்கள்.

எழு வருடங்கள் எட்டடி அறைக்குள்! ஆனாலும் வேறு வழி இருக்கவில்லை. இந்த எழு வருடங்களும் மாதம் தவறாமல் பெஞ்சமின் பணம் அனுப்பிக்கொண்டுதான் இருந்தார். கிட்டதட்ட இருபத்து நாலாயிரம் ரூபாய் சேர்ந்து போயிருக்கிறது. இதில் ஒரு பெட்டிக் கடை வைத்தால்கூடப் பிழைத்துக் கொள்ளலாம்.

அதனால் இனிமேல் இந்த மந்திர தந்திர செப்பிடு வித்தைகள் வேண்டாம். நிம்மதியாய் நேர்மையாகப் பிழைப்பு நடத்த வேண்டும். தனியொருவனின் வாழ்க் கைக்குப் பெரிதாக ஒன்றும் தேவைப்படாது. கிடைப்பதில் சந்தோஷமும் திருப்தியும் பட முடியுமானால் எவ்வளவு கூட மாளிகைதான். அந்தத் திருப்தியும் சந்தோஷமும் எற்படாது போனால்தான் பெஞ்சமின் போன்றவர்களின் தயவு தேவையாக இருக்கிறது. அதன் காரணமாக இப் படி இத்தனை வருடங்கள் கம்பிக் கதவின் பின்னால் கஷ்டப்பட வேண்டி நேர்ந்தது.

குட் பை மிஸ்டர் பெஞ்சமின்.

கம்பிக் கதவின் பின்னால் நின்று நிறையத் தட வைகள் சொன்னதை வெளியில் வந்தபின் நேரில் போய்ச் சொல்லி விட்டு உடனே கழன்றுகொள்ள நினைத்து, அப்



படியே போகக் கூடாது என்ற முடிவில் ஆட்டோ பிடித்து ரஞ்சித் ஒட்டலில் இறங்கினான். நன்றாய் மசால் தோசையும் வடையும் பூரியும் ஸ்பெஷல் காபியும் சாப்பிட் டான். முடி வெட்டிக் கொள்கிற பார்லருக்குப் போய்க் கமலஹாசனை நினைத்துக் கொண்டே முடி வெட்டிக் கொண்டான். மவுண்ட் ரோட் போய் மகாராஜாவில் புது பாண்ட் சட்டையோடு (ரெடிமேட்) வெளியில் வந்தபின் எதிரில் இருந்த பானர்கள் சினிமா ஆசையைத் தூண்டி விட்டன. தியேட்டரில் உட்கார்ந்து சினிமா பார்த்து எத்தனை வருஷங்களாகி விட்டன! சிறிது தூரம் நடந்து ரஜனி படம் பார்த்தான். வெளியில் வரும்போது 'பொது வாக என்மனசுத் தங்கம்' என்று மெலிசாய் விசிலடித்துக் கொண்டே வந்தான்.

எதிரில் வந்தவரை மணி கேட்டான்.

7 30.

நேராகப் போய் பெஞ்சமினைப் பார்க்கலாமா அல்லது டெலிபோன் செய்துவிட்டுப் போகலாமா என்று யோசித்து நேராகப் போக முடிவு செய்து பாக்கெட்டிலிருந்து டைரி யைப் புரட்டி விலாசத்தைப் பார்த்துக் கொண்டான்.

கே. ஜே. மெண்டல் ஹாஸ்பிடல். பஸ், ஆட்டோ டாக்சி எதுவும் இவனின் பணத்திற்கு மயங்க மறுக்க, காலை எட்டிப் போட்டு நடக்க ஆரம்பித்தபோது நன்றாக இருட்டி விட்டது. அவ்வப்போது துணைக்குத் தூரத்தில் சின்னப் பொட்டுப்போல ஆரம்பித்துப் பின் கண்களைக் கூசச் செய்து இரைச்சலோடு போகும் லாரிகள். பெயர் தெரியாத மரங்களின் காற்றுக் கீரல்கள். தெருவின் இருட் டடிப்பு. லேசாய்த் தூறத் தொடங்கிக் கொஞ்சம் கொஞ்ச மாக வலுக்க ஆரம்பித்த மழை. ஜன நடமாட்டமற்றுப் போன தனிமை. முதல் தடவையாக அஞ்ஞானமாக மனத் திற்குப்படப் பளிச்சென்று மழையில் நனைந்திருந்த ரோடி லேயே முட்டி போட்டு மனத்திற்குள் முனகி 'ஆமென்'

போட்டு உரக்கச் சொல்லிச் சிலுவைக் குறியிட்டுக் கொண்டு எழுந்து இன்னும் நடையை வேகமாக்கி ஆஸ்பத்திரி வாசலை அடைந்தபோது நிச்சயமாக மணி பத்து இருக்கும்.

ஆஸ்பத்திரி வாசலில் கூர்க்கா, போலீஸ் இரண்டு பேருமே இவனை உள்ளேவிட மறுத்தனர். முதலில் கெஞ்சிப் பேசி அப்புறமாகப் பணம் காட்டியும் மசியாததால் ஆஸ்பத்திரியைச் சுற்றி வந்து பின் பக்கக் காம்பவுண்ட் வழியாகச் சுலபமாக எகிறிக் குதித்தான்.

மறுவினாடி பளிச்சென்று வட்ட வடிவமாக நெற்றியில் ஏதோ ஒட்டிக்கொண்ட உணர்வு ஏற்பட என்ன என்று நெற்றியில் கைவைத்துப் பார்த்தபோது ஒன்றுமேயில்லை. எப்படி ஒன்றுமில்லாமற் போகும் என்று யோசிப்பதற்குள் யாரோ காதருகில் கூப்பிட்டார்கள்.

"மிஸ்டர் பால், என்கூடக் கொஞ்சம் வர்றீங்களா?"

நிமிர்த்து பார்த்தால் பிங்க் நிற ஷிபான் சேலையில் அசத்தலாய் வெள்ளை வெளேரென்ற மேனியுடன் கூந்தலை விரித்துக்கொண்டு ஒரு பெண் இவனைக் கையசைத்து அழைக்க...

இவனுக்குள் சிலிர்ப்பு ஓடிற்று. அதையும் மீறிக் கேட்டான் "யார் நீ?"

"வாங்க சார்...உங்களுக்கு டாக்டர் பெஞ்சமினைத் தானே பார்க்கணும்?"

"அது உனக்கு எப்படித் தெரியும்?"

"எனக்கு எல்லாம் தெரியும். நீங்க வாங்க..."

இவன் நடக்கிற சிரமம்கூட இல்லாமல் அவள் பின்னால் தானாகப் போவதை உணர்ந்து கட்டுப்படுத்திக் கொள்ள முயற்சித்து முடியாமற் போக...

அவள் சட்டென்று நின்று இரண்டு கைகளையும் நீட்டினாள்.



"என் ஆருயிர்க் காதலனே அருகில் வா..."

இவன் இச்சையின்றியே அவளின் நீட்டின கைக்குள் சரண் புக அவளின் கரங்கள் இவனை ஒரே அழுத்தலாக அழுத்தி விசிற...

ஆஸ்பத்திரியின் பின்னால் நிறுத்தப்பட்டிருந்த ஆம்புலன்ஸ் வண்டியின் உடம்பில் பெருத்த சத்தத்துடன் மோதி மறுபடி எகிறித் தரையில் விழுந்தபோது சின்ன தாய் சிவப்புக் குளம் வெட்டியதுபோல் அலெக்ஸாண்டரின் உடல்.

"ஹலோ, போலீஸ் கமிஷனரின் வீடுதானே?"

"ஆமாம்; நீங்க யார் பேசறது?"

"டாக்டர் ஜெயகுமார்..."

"ஒன் செகண்ட் ப்ளீஸ்—"

'க்ளிக்' சத்தம் கேட்க எக்ஸ்டென்ஷன் ரிஸீவரில் கமிஷனரின் கட்டைக் குரல்.

"சொல்லுங்க, என்ன விஷயம்?"

விஷயத்தைச் சொல்லி, "இது தற்கொலையாக இருக்கலாம். கொலையாகவும் இருக்கலாம்" என்று முடித்தார் ஜெயகுமார்.

## 6

"குட்மார்னிங்! ஜே.ஜே. ஹாஸ்பிடல்."

"டாக்டர் ஜெயகுமார் ப்ளீஸ்?"

"ஹூஸ் காலிங்?"

"ஐ'ம் மிஸஸ் ஜெயகுமார் ஹியர்."

"ஒன் மினிட் மேடம், டீன் ரூம்ல இருக்காரா பார்க்கிறேன். இருந்தால் உடனே லயன் தரேன். இல்லைன்

னால் எங்கே இருக்கார்னு தேடிப் பிடிச்சுக் கனெக்ட் பண்றேன். கொஞ்சம் லயனில் வெயிட் பண்ணுங்க மேடம், ப்ளீஸ்."

"ஓ.கே. தாங்க்யூ."

ஒரு வினாடிக்குப் பின் சின்னக் க்ளிக் சத்தத்தில் ஜெயகுமார் காதருகில் "எஸ்..." சொல்ல, தேவசேனா படபடப்புடன் பேச ஆரம்பித்தாள்.

"நான் தேவி பேசறேங்க. என்ன ஏதுன்னு தெரியல. வீட்டு வாசல்ல ராத்திரி யாரோ குப்பை செத்தையெல்லாம் கொண்டு வந்து கொட்டியிருக்காங்க. கொஞ்சமாய் இருந்தா வேலைக்காரனையோ தோட்டக்காரனையோ விட்டு அப்புறப்படுத்தச் சொல்லலாம். ஆனால் இது இரண்டு லாரி குப்பைக்கு மேல் இருக்கும் போல் தெரியுதுங்க. வீடெல்லாம் ஒரே நாத்தம். புழங்க முடியல. பக்கத்து வீட்டுக்காரங்க எனக்கு டெலிபோன் பண்ணித்திட்டறாங்க இன்னும் கொஞ்ச நேரத்துல அத்தனை குப்பையையும் அப்புறப்படுத்தலேன்னா கம்ப்ளெயிண்ட் கொடுப்பாங்களாம். எனக்குப் பயமாய் இருக்குதுங்க. யார் பண்ணின வேலைங்க இதெல்லாம்? நேற்று ராத்திரி படுக்கப் போற வரைக்கும் ஒண்ணுமில்லே. காலைல திடீர்னு எப்படியுங்க இவ்வளவு குப்பை வர முடியும்? இத்தனை நாளா ரெண்டாம் பேருக்குத் தெரியாமல் குடித்தனம் பண்ணியாச்சு. இன்னிக்குத் திடீர்னு ஆளுக்கு ஆளு என்னைத் திட்டினா நான் என்னங்க பண்ண முடியும்? நீங்களும் நாலைஞ்சு நாளா வீட்டுக்கே வரலை. எனக்கு எல்லாம் சேர்த்துப் பயமா இருக்குங்க."

நிதானமாக எல்லாவற்றையும் கேட்டுக் கொண்ட ஜெயகுமார் ஒரு வினாடி யோசித்துப் பின் மெதுவாகச் சொன்னார். "என்ன தேவி இது? இந்தச் சந்தர்ப்பத்திலே நீயும் குழந்தை மாதிரி பேசினா நான் ஒருத்தன்



என்ன செய்ய முடியும் சொல்லு? பக்கத்து வீட்டிலே திட்டினால் உனக்குச் சமாளிக்கத் தெரிய வேணாம்? 'எனக்கும் தான்யா தெரியல, யார் குப்பையைக் கொண்டுவந்து கொட்டினாங்கன்னு? தோட்டத்து எருவிற்காக வீட்டு வாசல்லே வண்டி வண்டியா குப்பையைக் கொட்டிக்கிற புத்திசாலித்தனம் எங்களுக்கில்லை. ஒருவேளை உங்களுக்கு இருக்கலாம். நான்கூட உங்க மேலே தான் சந்தேகப்படறேன். எங்களைப் பிடிக்காததால் காசு செலவழிச்சு வீட்டு வாசல்லே குப்பையைக் கொட்டச் சொல்லி அசிங்கம் பண்ணிட்டீங்க'ன்னு திருப்பிச் சத்தம் போட வேண்டியது தானே? இதுக்கெல்லாமா பயப்படுவாங்க? அழுதுகிட்டு எனக்குப் போன் பண்ணுவாங்க? இப்போ நான் இருக்கிற நிலைமை உனக்குத் தெரியாது. தேவி. ஆஸ்பத்திரியைவிட்டு ஒரு நிமிஷம்கூட நகர முடியாது இல்லேன்னா நான் வீட்டுக்கு வராமல் இருப்பேனா? இதைப் புரிஞ்சுக்க உன்னால முடியாதா தேவி? பீ சியர்ஃபுல். குப்பையை அப்புறப்படுத்தறதுக்கு நானே கார்ப்பரேஷன் டிபார்ட்மெண்டுக்குப் போன் பண்ணிச் சொல்றேன். சரியா? என்ன? போனை வச்சுடட்டுமா?"

"இருங்க, வச்சிடாதீங்க. குப்பை மட்டுமில்லீங்க. சொல்றதுக்கு நிறைய இருக்குங்க. நேத்திக்கு ராத்திரி பன்னிரண்டு மணியிருக்கும். திடீர்னு நானும் குழந்தையும் படுத்துட்டிருந்த கட்டில் தூக்கித் தூக்கிப் போட ஆரம்பிச்சது. ஒருவேளை பிரமையா இருக்கும்னு லைட் போட்டுப் பார்த்தேன். நிஜமாகவே கட்டில் தரையை விட்டு அரை இஞ்ச் எழும்பி எழும்பிக் குதித்தது. பயந்து போய்த் தோட்டக்கார முனுசாமியை எழுப்பிட்டு வந்து பார்க்கச் சொன்னேன். எனக்கு மட்டும்தான் அப்படித் தெரியறதா. இல்லே அவனுக்கும் தெரியறதான்னு பார்த்தால், அவன் அதிர்ச்சியடைஞ்சு அப்படியே நின்னுட்டாங்க. 'அம்மா, நம்ம வீட்டுக்கு யாரோ சூனியம் வச்சுட்டாங்க. அப்பதான் இப்படியெல்லாம்

17660

நடக்கும்'னு சொன்னான். உடனே உங்களுக்குப் போன் பண்ணினேன். அரை மணி நேரத்திற்கு மேல் ட்ரை பண்ணியும் உங்க லயன் கிடைக்கலே. ரொம்பப் பயந்து போய், பூஜை ரூம் வாசலில் படுத்துக்கலாம்னு குழந்தையைத் தூக்கினால் உடம்பு கொதிக்குதுங்க. 105 டிகிரி ஜுரம் இருக்கும். படுக்கப் போறவரைக்கும் நல்லா விளையாடிட்டிருந்த பிள்ளைக்குத் திடீர்னு எப்படி ஜுரம் வரும்னு தெரியலே? பயம் அதிகமாயிருச்சுங்க. மறுபடியும் நானும் முனுசாமியுமா சேர்ந்து உங்க லயன் ட்ரை பண்ணிச் சோர்ந்து போய் டைரக்டரியைப் பார்த்து டாக்டர் ஸ்ரீனிவாசன்னு பீடியாட்ரீஷியன் ஒருத்தருக்கு போன் பண்ணினேன். அவரை உங்களுக்குத் தெரிஞ்சிருக்கலாம். கண்ணாடி போட்டுக்கிட்டு, சின்னவரா இருக்காருங்க."

''அவர் எங்கே இருக்காரு தெரியுமா?"

"இங்கேதாங்க ராயப்பேட்டையிலே இருக்காராம். அஜந்தா ஓட்டல் பக்கமாம். வந்து பார்த்து, 'தர்மா மீட்டர்ல நார்மல் டெம்பரேச்சர்தான் காட்டுது. ஆனா உடம்பு இப்படிக் கொதிக்குதே குழந்தைக்கு?'ன்னு ஆச்சரியப்பட்டுப் போயிட்டாருங்க. எதுக்கும் ரெண்டு டீஸ்பூன் கொடுங்கன்னு சொல்லி அவரே மருந்து கொடுத்தாருங்க. 'ஜுரம் குறையலேன்னால் நாளைக்குக் காலையிலே நான் திரும்பி வந்து பார்க்கறேன். எங்க ஸீனியர் கிட்டே வேணும்னா காட்டிடலாம்'னார்.''

''அவரோட ஸீனியர் யாராம்? பேர் கேட்டியா?"

''எங்க, ஸீனியரோட பெயரெல்லாம் கேட்கிற நிலைமையிலா நான் இருந்தேன்? அந்த நேரம் எதுவும் புரியலீங்க. டாக்டரை அனுப்பிச்சுட்டுத் திரும்பி வந்து பார்த்தால் குழந்தையின் உடம்பு சில்லுனு ஐஸ் மாதிரி குளிர்ந்து போயிருக்குது. நான் சுரேஷ் சுரேஷ்னு எத்தனை தரம் கூப்பிட்டுப் புரட்டிப் பார்த்தாலும்



கண்ணைத் திறக்கவேயில்லை. எனக்கு வேற எதுவும் முக்கியமில்லீங்க. ஆஸ்பத்திரி, இந்த வீடு எல்லாம் எக்கேடும் கெட்டுப் போகட்டும். நமக்கு நம்ம குழந்தை முக்கியங்க. அதனால் அவனை முதல்ல கவனிக்கணுங்க. நீங்க உடனே கிளம்பி இங்கே வாங்க."

அவளது கெஞ்சலில் தவித்துப் போனார் ஜெயகுமார். அவளின் நிலைமை அவருக்கு நன்றாகப் புரிந்தது. அந்தத் துடிப்புத் தெரிந்தது. ஆனாலும் அவரால் ஆஸ்பத்திரியை விட்டு நகர முடியாது. நகர விடவும் மாட்டார்கள். இரண்டு கொலைகள் நடந்திருக்கின்றது. ஆஸ்பத்திரி முழுவதும் அல்லோலப்படுகிறது. எல்லார் முகத்திலும் பயமும் குழப்பமும் தெரிகிறது. அப்படி இருக்கிறபோது ஒரு பியூன்கூட ஆஸ்பத்திரியைவிட்டு நகராமல் கண்காணிக்கப்படுகிறபோது தான் மட்டும் வீட்டிற்குப் போய் வருவது என்பது சரிப்படாது. கேட்கவும் அவரால் இயலாது. இதை எப்படிச் சொல்லி தேவசேனாவிற்குப் புரிய வைக்க முடியும்?

கொஞ்சலும் கெஞ்சலுமாக ஆரம்பித்தார் அவர். ''உன் நிலைமை எனக்குப் புரியுது தேவி. அதே மாதிரி நீயும் என் நிலைமையைப் புரிஞ்சுக்கணும். உன்கிட்டே நான் சொல்லலை; நம்ம ஆஸ்பத்திரியில் ரெண்டு கொலை நடந்திருக்கு."

''ரெண்டு கொலையா? நம்ம ஆஸ்பத்திரியிலா?''

''ஆமாம் தேவி. ஒருத்தர் உனக்குத் தெரிஞ்சவர். டாக்டர் பெஞ்சமின்.''

''பெஞ்சமினா! மை காட்!" அவளின் வலது கை தானாகக் கழுத்தில் பதிய, கண்கள் பயத்தால் அகன்றன. ''இன்னொருத்தர் யாரு?"

''யாரோ பால் அலெக்ஸாண்டராம். எனக்கு அறிமுகமில்லை. ஆனால் டாக்டர் பெஞ்சமினுக்கு அறிமுகமான ஆள்னு போலீஸ் இன்ஸ்பெக்டர் சொல்றாரு. விஷயம்

வெளியில் போகாமல் காப்பாற்ற நான் பாடுபட்டிட்டிருக்கேன். இல்லேன்னா பேப்பரில் ஒரு வரி நியூஸ் வந்தால் கூடப் போதும் தேவி. இத்தனை நாளாகப் பாடுபட்டுச் சேர்த்த அத்தனை நல்ல பேரும் காத்துல அடிச்சுக்கிட்டுப் போன மாதிரி போயிடும். ஒரு ஈ, காக்கா கூட ஆஸ்பத்திரி பக்கம் அண்டாது. இங்கே அத்தனை ஸ்டாஃபும் பேஷண்ட்ஸும் பயந்து போயிருக்காங்க. என்னை நம்பி இங்கே நூற்றுப் பத்து நோயாளிங்க, அவங்களோட கார்டியன்ஸ், ஸ்டாஃப் அத்தனை பேரும் இருக்கிறபோது ஒரு வினாடி நான் இந்த இடத்தைவிட்டு அசைந்தால் கூடப் போதும். இது தவிர போலீஸ்காரங்க, இன்ஸ்பெக்டருங்க விசாரணைன்னு இருபத்து நான்கு மணி நேரமும் உயிரை எடுக்கறாங்க. இந்த நிலைமையிலே நான் எப்படி வர முடியும் சொல்லு தேவி. ஸாரிம்மா; எப்படியாவது கொஞ்சம் தைரியமா இருந்து சமாளிச்சுக்கம்மா. வேணும்னா உங்கப்பாவுக்கு டிரங்கால் போட்டு வரச்சொல்லு டாக்டர் சீனுவாசனுக்கு நானும் போன் பண்ணிச் சொல்றேன். இன்னி ராத்திரியும் சுரேஷுக்கு அப்படி இருந்தால் அவரை வந்து கவனிக்கச் சொல்லி ரிக்வெஸ்ட் பண்ணிக்கறேன். ப்ளீஸ்மா, கொஞ்சம் அட்ஜெஸ்ட் பண்ணிக்கம்மா. ஓ. கே? போனை வச்சிடட்டுமா?" பதிலுக்குக் காத்திராமல் ரிஸீவரை வைத்தார். இன்னும் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தால் நெகிழ்ந்து போய் எல்லாவற்றையும் போட்டு விட்டு வீட்டிற்கு ஓடிப்போய் விடுவோம் என்கிற பயத்தில் மனைவியின் பதிலுக்குக் காத்துக் கொண்டிருக்கவில்லை.

ஆனாலும் அவரால் உடனே எழுந்து வேலையை கவனிக்க முடியவில்லை. சுரேஷின் நினைவு பாரமாக நெஞ்சை அழுத்தியது. திடீரென்று ஒரு குழந்தைக்கு ஜுரம் வருவது சகஜம்தான். ஆனால் தெர்மாமீட்டர் எப்படி நார்மல் காட்டும்? வீட்டு வாசலில் அவ்வளவு குப்பையும் எங்கிருந்து வந்து சேரும்? அவருக்கு ஒன்றும் புரியவில்லை. அன்றே வருவதாகச் சொல்லியிருந்த சாந்தியின்



அம்மா இன்னமும் வரவில்லை. இவர் டிரங்க்கால் போட்டுப் பார்த்ததில் பதிலில்லை. 'நோ ரெஸ்பான்ஸ்' என்கிற ஆபரேட்டரின் குரல்தான் கிடைத்தது. அவள் வருவதற்குள் இன்னொரு கொலை. யாரோ பால் அலெக்ஸாண்டராம்! எங்கேயோ இருப்பவனெல்லாம் இந்தக் காம்பவுண்டிற்குள் வந்துதானா சாகவேண்டும்?

யார் இந்த பால் அலெக்ஸாண்டர்? டாக்டர் பெஞ்சமினின் உதவியாளனாகக் கொஞ்சநாள் இருந்திருக்கிறான். அவரின் உதவியாளனாக இருந்த காரணத்தினாலேயே கொல்லப்பட்டிருக்கிறான் போலிருக்கிறது. எதற்காக இங்கே வந்தான்? பெஞ்சமினைப் பார்க்கவா? பெஞ்சமின் கொலை செய்யப்பட்டது அவனுக்குத் தெரிந்திருக்குமா? ஒருவேளை அவரது கொலைக்கும் இவனுக்கும் சம்பந்தம் இருக்குமோ? அப்படியானால் இவனது கொலைக்கும் யார் சம்பந்தப்பட்டிருப்பார்கள்? அவனது பாக்கட்டில் நிறையப் பணமும் ஒரு டைரியும் இருந்ததே. டைரியில் ஆஸ்பத்திரி அட்ரஸ் எழுதப்பட்டிருக்கிறதே? அத்தனை பணமும் அவனுக்கு யார் கொடுத்திருப்பார்கள்? பெஞ்சமினா? எதற்காக?

யோசித்து யோசித்து மூளை மரத்துப் போயிற்று. என்ன செய்வது, எப்படி இதற்குத் தீர்வு காண்பதென்று தெரியவில்லை. சாந்தியின் அம்மா வந்தால் சாந்தியை அனுப்புவார்களா என்பது சந்தேகமாக இருக்கிறது. இரண்டு கொலைகளுக்குப் பின் மூன்றாவதாக எதும் நிகழுமானால் ஆஸ்பத்திரியை நடத்த விடுவார்களோ? மாட்டார்களோ? இன்னும் சொல்லப்போனால் ஆஸ்பத்திரியே இருக்குமோ இருக்காதோ?

அந்த நினைவை அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. ஆஸ்பத்திரியை, அந்தக் கட்டிடத்தை, அதன் ஒவ்வொரு செங்கல்லையும் நேசிப்பவர் அவர். ஒரு நடு ராத்திரி இருட்டில் கண்ணைக் கட்டிவிட்டால்கூட இன்ன

இடத்தில் இன்னது இருக்கிறது என்று சரியாகச்சொல்லக் கூடியவர். அப்படி ஒவ்வொரு மூலையும் பழக்கமுள்ளவர். தானே ஆஸ்பத்திரியாகவும் ஆஸ்பத்திரியே தானாகவும் நினைத்துக் கொண்டிருப்பவர். அந்த அளவிற்கு அதனுடன் ஒன்றிப்போனவர். இப்படிப்பட்ட ஆஸ்பத்திரியை மூட நேரிடும் என்கிற எண்ணம் சொல்ல இயலாத துக்கத்தையும் சங்கடத்தையும் தர அவர், 'ஓ காட்!' என்று வாய் விட்டு அரற்றினார். 'ப்ளீஸ் ஹெல்ப் மீ. இந்தக் கஷ்டத்திலிருந்து விடுபட ஒரு வழிகாட்டு. ஐ காண்ட் பேர் திஸ் எனிமோர்.'

கைக்கடிகாரம் இனிமையான சங்கீதத்தில் மணி எட்டரை என்பதை ஞாபகப்படுத்த அவசரமாக எழுந்து சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டார். நிறையச் சிகரெட் பிடித்துப் பிடித்து நாக்கு மரத்துப் போயிருந்தது. இருந்தாலும் வேறு வழி இல்லை. இந்த நிலைமையில் சிகரெட்தான் உற்ற நண்பன். ஆத்ம சிநேகிதன்.

அறையை விட்டு வெளிவரும் சமயம் பார்த்து இன்டர்காம் கூப்பிட்டது. இவர் சலிப்புடன் வந்து ரிஸீவரைத் தொட்டார்.

''என்ன ஷீலா?''

''சார், பத்தரை மணி ஃப்ளைட்டில் சாந்தியோட அம்மா வராங்களாம். உங்களுக்குத் தெரியப்படுத்தச் சொன்னாங்க.''

''யார் போன் பண்ணினது?''

''யாரோ மிஸ்டர் கைலாசநாதன்னு ஒருத்தர் கூப்பிட்டு விஷயத்தைச் சொன்னார்.

''எங்கிருந்து பேசினார்?''

''சார்?''

''அவர் எங்கேயிருந்து பேசினார்னு கேட்டேன்.''



''தெரியாது சார்.''

''கேட்டுத் தெரிஞ்சுக்க வேணாமா? ஆல் ரைட், ஐ'ல் மீட் ஹர் அட் தி ஏர்போர்ட்.''

மெதுவாக அறையைவிட்டு வெளியே வந்து எதிரில் தெரிந்த ஸ்டெல்லாவிடம், ''ஏர்போர்ட் வரை போய் வருகிறேன்.'' என்றார்.

அவரைப் பார்த்த ஸ்டெல்லாவின் பார்வையில் கவலை இருந்தது. நீங்கள்தான் போகவேண்டுமா என்ற கேள்வி தொனித்தது. ஆனாலும் அவள் மௌனமாகத் தலையை ஆட்டினாள். ''பத்திரமாகப் போய் வாருங்கள் டாக்டர்,'' என்றாள்.

அவர் கவனமாக போலீஸ் அதிகாரிகளிடம் சொல்லிக் கொண்டு நகர்ந்தார். எடுத்து வைக்கிற ஒவ்வோர் அடியையும் ஜாக்கிரதையாக வைத்தார். காரில் பெட்ரோல் இருக்கிறதா, நான்கு டயர்களிலும் காற்று இருக்கிறதா என்று சரிபார்த்துக் கொண்டார். க்ளச், பிரேக் என்று ஒவ்வொன்றாகப் பார்த்த பின்னரே காரைக் கிளப்பினார். பார்வை, காது இரண்டையும் என்றுமில்லாமல் கூர்மையாக்கி, ஸ்பீடாமீட்டரின் முள் நாற்பதைத் தாண்ட விடாமல் ஒரே நிதானத்தில் வண்டியை ஓட்டினார். விமான நிலைய வாசலுக்கு வந்த பின்பே கூட்டத்தைக் கவனித்தார். வண்டி நுழைய விடாமல் ஏகக் கும்பல். கதாநாயகனாகத் தீயணைப்பு வண்டிகள். இரும்புத் தொப்பி போட்ட தீயணைக்கும் வீரர்கள். போலீஸ் ஏர்போர்ட் அதிகாரிகள். விமான நிலைய கட்டிடத்திற்குப் பின்னால் வானத்தை முட்டும் கறுப்புப் புகை.

''என்ன ஆயிற்று?'' இவர் காரை வெளியிலேயே ஓர் ஓரமாக நிறுத்திவிட்டு உள்ளே இறங்கி ஓடினார்.

''என்ன சார் ஆச்சு? ஏன் இவ்வளவு கூட்டம்?''

''பத்தரை மணிக்குக் கீழே இறங்கின விமானம் ஒன்று லாண்டிங்போது தீப்பிடிச்சுக்கிச்சு சார். ஆள்

உயரத்துக்கு எரியுது. யாரையும் காப்பாற்ற முடியலைன்னு பேசி...''

''மை காட்! சாந்தியின் அம்மா?''

கூட்டத்தைத் தள்ளிக்கொண்டு மூர்க்கமாக உள்ளே பாய்ந்தார் ஜெயகுமார். விமான நிலையக் கட்டிடத்திற்குள் நுழைய விடாமல் போலீஸ்காரர்கள் பின்னுக்குத் தள்ளிவிட கதவை, போலீஸ்காரர் கையில் அகப்பட்ட மனிதர்களை குத்தி விலக்கி முன்னால் நகர்ந்து தெரிந்த கொஞ்சம் இடைவெளியில் சிவப்பும் கறுப்பும் கலந்த பயங்கரப் பின்னணியில் ரப்பர் குழாய் வழியாகப் பாய்ச்சப்பட்ட தண்ணீர், வெள்ளை ஆம்புலன்ஸ் வண்டிகளின் அணிவகுப்பு, ஓயாத அதன் கூக்குரல், கூச்சல், குழப்பம், முனகல், ஒவ்வொருவராகத் தங்களின் நெருங்கின உறவுக்காரர்களுக்காகத் தவிக்கிற தவிப்பு, அழுகை,என்ன செய்வதென்று புரியாமல் ஓடுகிற ஓட்டம்.

சட்டென்று நிதானமானார் ஜெயகுமார். எதுவானாலும் அவர் சாதிக்கப் போவது ஒன்றுமில்லை. எல்லாம் மனிதர்களை மீறின செயல். ஏதோ ஒரு வலிமை வாய்ந்த சக்தியின் செயல். அதை எதிர்க்கிற வலிமை யாருக்கும் இல்லை. அதனால் அமைதியாகப் பொறுத்திருந்து பார்ப்பதைத் தவிர வேறு வழி இல்லை.

அவர் ஓர் ஓரமாகப் போய் ஒதுங்கி நின்று மிக நிதானமாக சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டார். ஒன்று, இரண்டு, மூன்று.

ஒரு பாக்கெட் சிகரெட்டை முழுதாக முடிப்பதற்குள்—

''ஹலோ டாக்டர்,'' என்ற குரல் கேட்டுத் திரும்ப...

எதிரில் தெரிந்த களைப்பையும் சலிப்பையும் தவிர மிக முழுதாக நின்று கொண்டிருந்தாள் கல்பனாமகாதேவன்—சாந்தியின் அம்மா.

# 7

நடு ராத்திரி.

வெள்ளைப் பிரியதர்ஷினி செல்லமாகத்தான் சிணுங்கிற்று. அதுகூட ஜெயகுமாரை அலற வைத்தது. இப்போதெல்லாம் காற்றில் கதவு அடித்துக் கொண்டால் கூடப் பதறிப் போகிறார். அவர் உடம்பு தூக்கிப் போடுகிறது. மார்புத் துடிப்பு அதிகமாகிறது. தன் நிதானத்திற்கு வர, பிரபல மனோதத்துவ டாக்டர் கே. ஜெயகுமாருக்கே சில நிமிடங்கள் பிடிக்கின்றன.

அப்போதும் பிரியதர்ஷினியின் சிணுங்கலுக்கு அலறி, பின்பு நிதானித்து, ரிஸீவரை எடுத்துத் தூக்கம் கலையாமல் ஹலோ சொல்ல—

எதிர்ப்பக்கம் தேவஸேனாவின் குரல் அழுகையும், புலம்பலுமாகக் கேட்டது.

''என்னங்க, சீக்கிரம் வாங்க, திடீர்னு குழந்தைக்கு வலிப்பு மாதிரி வந்து வாயிலிருந்து நுரையாகத் தள்ளுதுங்க. கண் செருகி, பார்க்கவே பயமாக இருக்குங்க. சீக்கிரம் வாங்க. என் குழந்தையை காப்பாத்துங்க.''

சட்டென்று ரிஸீவரைப் போட்டுவிட்டு எழுந்து ஓடினார் ஜெயகுமார். எதிரில் வந்த போலீஸ் இன்ஸ்பெக்டரோ நர்ஸ் ஷீபாவோ கண்ணில் படவில்லை. மனசு முழுதும் சுரேஷ்...சுரேஷ்...சுரேஷ்...

இப்போதுதான் போலிருக்கிறது. அவனை ஏர்கண்டிஷண்ட் அறையின் சின்னத் தொட்டிலில் பார்த்தது. இரண்டு கை விரல்களையும் மூடி, கண் இரப்பை கரிக்கோடாகத் தெரிய—

''என் தேவி, என்ன பேர் வைக்கப் போறே?''

''என்ன வைக்கலாம் சொல்லுங்க?''

''ம். முத்துக்குமார்.''

''எங்க, முனுசாமின்னு வைக்கக்கூடாதுங்களா? தோட்டக்காரனைக் கூப்பிடறபோது இவனும் திரும்பிப் பார்ப்பான் இல்லிங்களா?''

''இல்லே, அது என் தாத்தா பேராச்சேன்னு சொன்னேன்.''

கடைசியில் அவள்தான் வீட்டில் தொட்டில் போட்டு பலூன் தோரணம் கட்டி சுரேஷ்குமாரைத் தேர்ந்தெடுத்தாள்.

சுரேஷ் குட்டி வந்துதாம்—

சுரேஷ்குட்டி முத்து தந்துதாம்—

சுரேஷுக்கு யாரை ரொம்பப் பிடிக்கும்? மம்மியா, பப்பாவா?

மம்மி பப்பா ரெண்டு பேரும்!

அந்த வாயிலா நுரை தள்ளுகிறது? அந்தப் பிஞ்சுக் கை கால்களா கோணல் மாணலாக இழுக்கிறது.

ஜெயகுமாரின் கால் ஆக்ஸலேட்டரை வெறித்தனமாக மிதித்து ஏழே நிமிடங்களில் பூந்தமல்லியிலிருந்து போயஸ் கார்டனை அடைந்ததும் பலனில்லாமல் போக—

உள்ளேயிருந்து தேவஸேனாவின் அழுகைக் குரல் பெரிதாய்க் கேட்க, ஜெயகுமார் கால்கள் துவளப் போர்ட்டிகோவின் படிகளிலே உட்கார்ந்து விட்டார். கண்களில் கண்ணீர் உறைந்து போய் நெஞ்சை அழுத்திற்று.

இரண்டு நாட்களுக்குப்பின் சுரேஷ் தங்க பிரேம் போட்ட கண்ணாடிக்குப் பின் ப்ளோ அப்பாகச் சிரித்துக் கொண்டு...

டிராயிங் அறையின் சுவரில் தொங்கி—

''பப்பா...கதே சொல்லு பப்பா...''



''என்ன கதே வேணும் சுரேஷ் குட்டிக்கு?''

''காக்கா கதே...குருவிக் கதே...''

''ஒரே ஒரு ஊர்ல ஒரு காக்கா இருந்துதாம். ஆமா காக்கா எப்படிக் கத்தும் சுரேஷ்?''

''கா...கா...''

''குருவி?''

''கூக்கூ...''

''குட்...நம்ம ஜிம்மி எப்படி கத்தும்?''

''வவ் வவ்...''

எல்லாமே இனி நினைவுகள், வெறும் நினைவுகள்.

'ஸன் தே, மன் தே...ஆயா. பப்பா, மம்மி...'

கேஸட்டில் மட்டுமே கேட்கும் குரல். சின்ன வரவேற்பறையில், பெரிய ஹாலில், 'பெட்ரூமில்', சாப்பிடுமிடத்தில், சமையற்கட்டில் எதிரொலித்தது. எல்லார் கண்ணிலும் குடம் குடமாகக் கண்ணீரை வரவழைத்தது.

'தேவஸேனா...என் ப்ரிய மனைவி. பஸ் ஸ்டாண்ட் பஸ் ஸ்டாண்டாகத் துரத்தி, மெரினா பீச் இருட்டில், கிண்டி பார்க் மரத்தடியில், சினிமா தியேட்டரின் குளிர்ச்சியில் காதலிக்கக் கற்றுக் கொண்டு, பின் அம்மி மிதித்து, அருந்ததி பார்த்து, தடித்த மாலையில் ரெடிமேட் சிரிப்பில் கை குலுக்கி...கட்டிலில் எனக்கு சுடுகொடுத்து...என் அணைப்பில் துவண்டு...'

அந்த மனைவி இரண்டு நாளாய்ச் சாப்பிடவில்லை. தூங்கவில்லை. சோகத்தின் உச்ச நிலையில் கண் சிவந்து, முகம் வீங்க, தலை கலைந்து...ஜெயகுமார் அவளைத் தேற்றுகிற வழி தெரியாமல் தவித்துப் போனார்.

''தேவி...எழுந்திரும்மா...''

''சுரேஷுங்க...என் சுரேஷ்...''

இவர் அவளின் தலையை, முதுகை வருடிக் கொடுத்தார். ''வாம்மா, வந்து சாப்பிடும்மா...ரெண்டு நாளாச் சாப்பிடலை...''

''சுரேஷ் வேணுங்க. என் சுரேஷ் எனக்கு வேணுங்க.''

''சுரேஷ் வருவான். நீ எழுந்து வாம்மா.''

''அவன் வரட்டுங்க. மம்மின்னு என் கழுத்தைக் கட்டிக்கட்டுங்க...அப்புறம் எழுந்து வரேங்க. என்ன வேணும்னாலும் செய்யறேங்க.''

ஜெயகுமார் அதற்குமேல் என்ன சொல்வது, என்ன செய்வதென்று தெரியாமல் ஒரு வினாடி தவித்துக்கொண்டு நின்றபோது ஹால் டெலிபோன் அலற, அவர் போய் எடுத்தார்.

''டாக்டர்?''

''யெஸ்!''

''நான் கல்பனா மகாதேவன். சாந்தியோட அம்மா பேசறேன்.''

''சொல்லுங்க.''

''ஸாரி டாக்டர். வெரி ஸாரி டு ஹியர் தி நியூஸ்!''

''ப்ளீஸ், பெட்டர் நாட் டு ரி மைண்ட் மீ.''

''ஸாரி!''

''இட்ஸ் ஆல்ரைட். சொல்லுங்க...''

''உங்களுக்குத் தெரிஞ்ச வக்கீல் யாராவது இருக்காங்களா?''

''என்ன விஷயம்?''

''இல்லை. உயில் எழுதச் சொல்லணும்.''

''உயிலா? அதுக்கு இப்ப என்ன அவசியம் வந்தது?''

கல்பனா மகாதேவன் தயங்கி தயங்கிச் சொன்னாள்: ''ரெண்டு மூணு நாள்ள நான் போயிடுவேன்னு நினைக்கிறேன்.''

''எங்கே?''



''இந்த உலகத்தை விட்டுத்தான்.''

''என்ன?''

''நிஜமாகத்தான் டாக்டர்! என் மனசுல ஒண்ணு சொல்லிக்கிட்டே இருக்கு அதுக்கு முன்னாடி உங்ககிட்டே கொஞ்சம் மனம் விட்டுப் பேசணும். தயவு செய்து எனக்காக ஒரு அரைமணி நேரம் ஒதுக்க முடியுமா டாக்டர்? இந்தச் சமயத்துலே இப்படிக் கேட்கறேன்னு தப்பா நினைச்சுக்கக் கூடாது. நான் சொல்ற விஷயத்தோட சீரியஸ்நெஸ்ஸைப் புரிஞ்சுக்கணும். நான் விளையாட்டாகப் பேசறதா நினைச்சிடக்கூடாது. எனக்காக ஒரு அரைமணி நேரம் ஓட்டல் சோழாவிற்கு வர முடியுமா டாக்டர்? ப்ளீஸ்...''

''ஓ.கே. வரேன். நான் மட்டும்தான் வரணுமா? என் மனைவியையும் கூட்டிட்டு வரலாமா?''

''ஓ. ப்ளீஸ் அவங்களையும் கூட்டிக்கிட்டே வாங்களேன்.''

''சரி இன்னும் பதினைந்து இருபது நிமிடத்திலே அங்கே இருக்கேன்.''

''நீங்க லௌவுஞ்சுல காத்துக்கிட்டு இருக்கீங்களா?''

''ஓ. கே. தாங்க்யூ டாக்டர்! தாங்க்ஸ் ஸோ லாட்...''

ரிசீவரை வைத்து விட்டு மீண்டும் உள்ளே வந்து தேவஸேனாவிடம் கெஞ்சினார்.

''ப்ளீஸ் தேவி. தயவு செய்து இப்படி உட்கார்ந்துகிட்டே இருக்கிறதால் நம்ம குழந்தை திருப்பி வந்துடவா போறான்? இதெல்லாம் விதி தேவி. நமக்கு மேல இருக்கிற ஒருத்தர் எழுதி வச்சிருக்கிறது. அதை மீறுகிற சக்தி மனுஷனுக்கு இருக்க முடியுமா? சொல்லு தேவி? எழுதி வச்சிருக்கிறபடி நடக்கிறதைத் தவிர நம்மாலே வேற என்ன செய்ய முடியும்? எழுந்திரும்மா. இப்படி

உட்கார்ந்துகிட்டிருந்தா உன்னையும் ஆஸ்பத்திரியிலே அட்மிட் பண்ணும்படி இருக்கும்."

"பண்ணுங்க, நானும் என் சுரேஷ் போன இடத்துக்கேப் போயிடறேன்."

"டோன்ட் பி ஸ்டுப்பிட். என்னை நீயும் சேர்ந்து இப்படிக் கஷ்டப்படுத்தினால் எப்படி தேவி? நான் என்ன பண்ணுவேன்? கடைசியில் பைத்தியம் பிடிச்சு அலைவேன். அதான் நடக்கப் போறது."

அதைக் கேட்டதும் சடாரென்று எழுந்தாள் தேவஸேனா. உள்ளே போய் முகம் கழுவித் தலையை வாரி, உடை மாற்றிக் கொண்டு வந்து ஜெயகுமார் எதிரில் நின்று "வாங்க," என்றதும் அவர் நெகிழ்ந்து போனார்.

அவளின் தோளில் கை போட்டுத் தன்னோடு சேர்த்து அணைத்து மிக மெதுவாக அவளின் காதருகில் குனிந்து, "ஸாரி தேவி. வெரி ஸாரி," என்றார். காரில் ஏறினதும், "நேரா சோழா ஓட்டலுக்குப் போகலாமடா?" என்று மனைவியைத் திரும்பிப் பார்த்தார்.

"எங்கே வேணும்னாலும் போங்க..." அவள் குரலில் தொனித்த சோகமும் வேதனையும் புரிந்ததாலும் அவர் பேசாமல் இருந்தார்.

காரைப் பார்க் பண்ணிட்டுச் சோழா லாபிக்குள் நுழைந்தவுடனே கல்பனா மகாதேவன் கண்ணில் பட்டாள். பாப் தலை, லிப்ஸ்டிக் உதடுகள், ஸ்லீவ்லெஸ் ஜாக்கெட். அளவான பருமன்...இந்த வயதிலும் அழகாகவே இருந்தாள்.

"மை ஒய்ஃப் தேவஸேனா. இவங்க கல்பனா மகாதேவன், தேவி, நம்ம ஆஸ்பிடல் பேஷண்ட் ஒருத்தங்களுடைய அம்மா."

அறிமுகத்திற்குப் பின் ரெஸ்டாரெண்டில் போய் உட்கார்ந்ததும் கல்பனா மகாதேவன் கேட்டாள், "வக்கீலைக் கூட்டிட்டு வரலையா டாக்டர்?"



"வருவார். போன் பண்ணிச் சொல்லிட்டுத்தான் வந்திருக்கேன். இன்னும் பத்து நிமிஷத்திலே இங்கே இருப்பார்."

கல்பனா மகாதேவன் சிறிது நேரம் தூரத்தில் எங்கோ வெறித்து, பின் சொன்னாள் : "இன்னிக்குக் காலைல விஜய் பாணியைப் பார்த்தேன். சாந்தி ஷாம்பு கேட்டுச் சேன்னு பர்மா பஸார்லே வாங்கலாம்னு போனா, அங்கே அவன் நின்னுக்கிட்டிருந்தான். எனக்கு உடனே பகீர்னிச்சு. நல்லவேளையா நான் கூலிங்கிளாஸ் போட்டுட்டிருந்தேன். காரை விட்டும் இறங்கலை. அதனால் அவன் என்னைப் பார்க்கலை, பார்த்திருந்தால் ஒரே வழியாக அனுப்பியிருப்பான்."

சொல்கிற போதே அவளின் முகம் பயத்தால் வெளிறிக் குரல் நடுங்குவதைக் கவனித்த ஜெயகுமார் கேட்டார்:

"யார் அந்த விஜய்பாணி?"

சொல்ல ஆரம்பித்தாள்.

# 8

தொட்டால் ஒட்டிக் கொள்ளும் இருட்டு. மருந்துக்குக் கூட வெளிச்சத் திட்டுகள் இல்லை. பின்னால் யாரோ தொடர்ந்து வருகிறாற்போல் சப்தம். பிரமை. வெறும் பிரமைதான். சற்றுத் தயக்கத்தோடு திரும்பிப் பார்த்தார் மகாதேவன். யாருமில்லை. ஆனால் கனமான கால்களின் கீழ்க் காய்ந்த சருகுகள் நொறுங்கும் ஒலி. தேவைக்கு அதிகமாக இதயம் தன்னிச்சைப்படி துடித்து இன்னும் பயத்துக்குப் பயம் சேர்த்தது. இந்த அதீத அருவ சக்தி களுக்கு நடுவில் ஒரே ஒரு துணை, சாமியாரின் செப்புத் யந்திரத் தகடு. குறுக்கும் நெடுக்குமாகத் தங்க ஆணியில்

கோடு போட்டு, கடஸ்தாபனம் செய்து ஹோமம் வளர்த்து அந்தரங்கச் சுத்தியோடு இவரின் பாதுகாப்பிற்காக மூன்று நாள் ராத்தூக்கம் விழித்துச் செய்து கொடுத்தது. கோட்டுப் பாக்கெட்டுக்குள் கை நுழைத்து யந்திரத்தைத் தடவிப் பார்த்துக் கொண்டார். பிளக்கப்பட்ட இடங்களின் மெலிதான ஈரவுணர்ச்சி தெம்பைக் கொடுத்தது. நம்பிக்கை கொடுத்தது. ஆனாலும் வலது புற சாலை வரி வரியாகச் சரியாக உருவம் புலப்படாத நெடிய மரங்களின் காற்றுச் சங்கீதம் சில்லென்று இதயத்தைச் சிலுப்பிவிட்டது. மெதுவாக நின்ற இடத்தைவிட்டு மீண்டும் நடக்க ஆரம்பித்தார்.

ஏதோ ஒரு மூலையில் காலம் தப்பிய சேவலின் ஓலம் சூழ்நிலையின் இறுக்கத்தை இன்னும் அதிகப்படுத்தியது. மகாதேவனுக்கு எல்லாவற்றையும்மீறி எல்லாமும் பயமாக இருந்தது. ஒரு கணத்தில் இவ்வளவு துணிச்சலாகக் காரியம் செய்வது தேவையா என்றுகூட யோசித்தார். சே! தவறு. காரியத்தை முடித்தாக வேண்டும். பாவம் சாமியார். அவரால் இவ்வளவு தூரம் நடந்துவர முடியாது. யாராவது எதிர்த்தால் திரும்பத் தாக்குகிற உடல் வலிமையும் அவருக்குக் கிடையாது. அதுவும் இந்த இருட்டில் முடியவே முடியாது. நண்பனின் குழந்தையைக் காப்பாற்ற வேண்டும் என்கிற அவசியம் அவருக்கு இல்லை. தனக்குத்தான் இருக்கிறது. குழந்தை முக்கியம். இந்த விஷயத்தில் போலீஸ் உதவாது. ஏற்கெனவே கம்ப்ளெயின்ட் இல்லாமல் டெபுடி டிடெக்டிவ் இன்ஸ்பெக்டர் ராஜேஷ்குமார் ஸக்ஸேனாவுடன் பேசியதில் நேரம் செலவானதுதான் மிச்சம். கண்ணெதிரில் 'ஐ விட்நெஸ்' இருக்கும் வழக்குகளிலேயே சட்டத்தின் ஓட்டைகளைச் சாமானியமாகத் நுழைக்கின்ற காலகட்டத்தில் சாட்சியம் இல்லாத எந்தச் சமாசாரமும் போலீஸ் ஸ்டேஷனின் வாசற்படியை மிதிக்கக்கூட முடியாது.

போலீஸாம் இவர் எழுதிக்கொடுக்கிற கம்ப்ளெயின்ட் மூலத்தை மட்டும் வைத்துக் கொண்டு புலன் விசாரிக்க



முடியாது. நேரடியாகவும் நுழைய முடியாது. இதற்கு மேலும் போலீஸ் வருவது தெரிந்தால் இன்னும் ஏதேனும் செய்து விடுவான். நண்பனின் குழந்தையை உயிரோடு, உடல் நிலையோ, மனோநிலையோ கடுகளவும் பாதிக்கப் படாமல் காப்பாற்ற வேண்டும்.

அது ஒன்றே குறியாக முன்னேறினபோது காலில் இருந்த கனத்த ரப்பர் ஷூவையும் மீறி நெருஞ்சி முள் தைத்தது. இடது காலை ஸ்திரப்படுத்தி வலது காலை மடித்து ஷூவைக் கழற்றிப் பாதத்தைத் தடவி முள்ளை வெளியே எடுக்கப் பிரயத்தனம் செய்தபோது கை நடுங்குவது தெரிந்தும் தடுத்துக் கொள்ள அவரால் முடியவில்லை. பல்லைக் கடித்து நடுக்கத்தைக் குறைக்க முயற்சி செய்து முள்ளைப் பிடுங்கி எறிந்தார். உராய்வில் ஆள்காட்டி விரலின் பக்கத்தில் ரத்தச் சிராய்ப்பு. திரும்ப ஷூ மாட்டி நன்றாக நிமிர்ந்து நின்று ஒரு தரம் குதித்து மனத்தையும் உடம்பையும் நோக்கிக் கொண்டார். கோட் பாக்கெட்டைத் தடவி ஒரு 35 அமெரிக்கன் பிஸ்டலை எடுத்தார். அதன் வயிற்றைத் திறந்து சோதித்துப் பார்த்தார். விரலால் தடவினதில் ஆறு ரவைகள் மிகக் கச்சிதமாக உட்கார்ந்திருந்தன.

மீண்டும் வயிற்றுப் பகுதியை உள் தள்ளினார். பிஸ்டலின் குதிரையில் ஆள்காட்டி விரலை நுழைத்துக் கழற்றிப் பார்த்தார். பார்த்துக் கொண்டிருந்தபோதே பட்டென்று யாரோ பின்னால் தலையில் அடித்தார்கள். துப்பாக்கி எகிறிக் கீழே விழ, பதறிப்போய் அவர் திரும்பி வலது இடது எதிர்திசை பின்பக்கம் எல்லாம் கவனமாகப் பார்க்க—

யாரும் இல்லை. எதுவும் கண்களில் படவில்லை. சட்டென்று குனிந்து செத்தைகளுக்கு நடுவில் மிகவும் சிரமப்பட்டுத் தேடித் துப்பாக்கியை எடுத்துக் கையில் வைத்துக் கொண்டார். கண்களை இடுக்கி இருட்டில் எதைத் தேடி

கிரோமென்று தெரியாமல் தேடினபோது மறுபடியும் தெற்றியில் பொறி பறந்தது. மண்டையுச்சியில் சிதிலமாக பெயர் தெரியாத வினோத அழுத்தம் பரவ ஆரம்பித்து உடல் முழுவதும் விரவ—

கண்கள் இருட்டிக்கொண்டு வந்தது. மகாதேவனுக்கு பயத்தால்தான் இது மாதிரியான ரசாயன மாற்றங்களுக்கு உடம்பு உள்ளாகிறது என்று தெரிந்தும் கட்டுப்படுத்திக் கொள்ளும் நிலையில் இல்லை. இந்த முறை கால் சராயிலிருந்து சைலென்ஸர் குழலை உருவிச் சிரமப்பட்டு, பிஸ்டலுடன் சேர்த்துக் கொண்டார். சேர்த்து முடித்த மறுவினாடியே பின் மண்டையில் மறுபடி ஒரு பட்— கவிழ்ந்து விழுந்தார்.

கண்கள் இருட்டிற்குப் பழக்கப்பட, தலையை நிமிர்த்தினபோது சாம்பல் நிறத்தில் ஏதோ ஒன்று காற்றில் கரைவது தெரிந்தது. விருட்டென்று எழுந்து கண்களால் தொடர்ந்து தேடினபோது கடைசியில் கிடைத்தவை கண்கள். பெரிய கண்கள். பெருமாள்கோவில் யானையின் மூன்நெற்றி நாமத்தின் அழகான பட்டைகளுக்கு நடுவே பெரிய கண்கள்... இருட்டில் பிரகாசமாக ரேடியம் டயல் மாதிரி ஒளிவிடும் ஒற்றைக் கண் ஆந்தை. இரை தேடி குறுக்கும் நெடுக்குமாக அலையும்போது பிடரியில் பட்டிருக்கிறது. அடிமனத்தில் சூழ்நிலை பற்றி முன்னதாகவே பய உணர்ச்சி, இச்சம்பவங்களுக்கு முன்னாலேயே ஸ்திரமாகப் பதிந்து போயிருந்ததால் ஆந்தையின் சின்னத்தட்டு பெரிதாகப் பிரமைப்படுத்தி வலியைக் கடப்பாரைத் தாக்குதலாக உணர வைத்திருக்கிறது.

உதட்டோரத்தில் சிரிப்புக்கீற்று லேசாய் ஓடிற்று. 'ஐம் ஆல் ரைட். பர்ஃபெக்ட்லி ஆல் ரைட்!' என்று தனக்குத் தானே உற்சாகப்படுத்திக் கொண்டார். மறுபடி வலது காலால் இலைச் சருகுகளை ஒதுக்கிச் சப்தப்படுத்தாமல் நடந்தபோது—



சிறிது தூரத்தில் முணுக்முணுக்கென்று விஜய்பாணியின் தற்கால ஆசிரமம் கண்ணுக்குப்பட்டது. அதன் பின் அவர் நடக்கவில்லை. மெல்ல ஊர்ந்தார். சின்னக் கூரைவீடு. வீடுகூட இல்லை. அறை. லேசாகத் தெரிந்த வெளிச்சத்தில் வாசலில் கிட்டத்தட்ட ஆறடி நீளத்தில் நாலடி அகலத்தில் கட்டைகள் அடுக்கப்பட்டிருப்பதும் அதன்மீது மாலை மரியாதைகளுடன் யாரோ ஒருவரின் பிணம். பக்கவாட்டில் இணையாக மேடை அமைத்து விஜய்பாணி உட்கார்த்திருந்தான். அவனுக்குப் பக்கத்தில் எங்கேயோ வெற்றுப் பார்வை பார்த்துக் கொண்டு உடலில் அசைவுகளில்லாமல் தலைமயிர் மட்டும் பிசிர் பிசிராய்க் காற்றில் அலைபாய எந்தவிதச் சலனமுமற்று மூச்சு விடும்போது மார்பு ஏறி இறங்கும் அசைவுகூட இல்லாமல் மரக்கட்டையோடு மரக்கட்டையாக நண்பன் சுவாமிநாதனின் ஐந்து வயது ஒரே மகள் மீனா.

''பாவி!'' பல்லைக் கடித்தார் மகாதேவன். ''எப்படிப்பட்ட குழந்தை அது!''

''மாமா...,எனக்கு இன்னிக்கு அபிமன்யு கதை சொல்றீங்களா?''

''மீனுக்குட்டிக்கே அபிமன்யு கதை தெரியுமே, எங்கே சொல்லு பார்க்கலாம். மாமா கேக்கறேன்.''

ஐந்து வயது மழலையில் அபிமன்யு சக்கர வியூகத்தில் மாட்டிக் கொண்டு வெளிவர முடியாமல் உள்ளே செத்துப் போகிறவரை—

இந்தக்குழந்தையும் இப்போது அபிமன்யு மாதிரிதான் மாட்டிக் கொண்டு விட்டதோ? பாவி...எப்படிடா மனசு வருகிறது இப்படிப்பட்ட குழந்தையைப் பாழாக்க? அவருக்குப் பின்னால் சருகுகள் நொறுங்கும் ஒலி. யாரோ வருகிறார்கள். யாராக இருக்கும்? ஸ்வாமிநாதன், இருக்காது. அவனுக்கு விவரம் தெரியாது. தெரிந்தாலும் அவனால்

இங்கெல்லாம்வர முடியாது. சாமியார்? இருக்காது. போலீஸ் சத்தியமாகச் சான்ஸ் இல்லை. தலையைத் திருப்பாமலே திருப்பப் பயந்தவராக இத்தனையையும் நினைத்துப் பின் சரேலென்று புல்வெளியில் பாய்ந்து குப்புறப்படுத்து, தலையை மட்டும் உயர்த்திப் பார்த்தார். வருவது யாராக இருக்கும்? சத்தம் மிக அருகில் மிகமிக அருகில் நின்றது. கண்களைக் கூர்மையாக்கிப் பார்த்தார். ஆள் யாருமில்லை. பின் சத்தம் எப்படி வந்தது? துப்பாக்கியைக் கையில் வைத்துக் கொண்டு இந்த முறை பதுங்கல் இல்லாமலேயே பார்த்தார். யாருமில்லை. யாரும் பின் தொடரவில்லை. பின் சத்தம்? தற்காலிகமாக அதை மறைக்கிற முயற்சியுடன் முன்னேறினார்.

விஜய்பாணி ஏதோ முணுமுணுத்துக் கொண்டு எழுந்து மேடையை வலம் வரத் தொடங்கினான். அப்பிரதட்சணமாக வலம் வந்தான். பக்கத்தில் செருகியிருந்த தீப்பந்தங்களில் ஒன்றை உருவி, சிதைக்குத் தீ மூட்டினான். சிதையில் மண்ணெண்ணையோ பெட்ரோலோ ஊற்றியிருக்க வேண்டும். நெருப்பு அருகில் நெருங்கியதுமே பக்கென்று பிடித்துக் கொண்டது. மகாதேவன் மெல்ல நெருங்கினார். இப்போது அவருக்கும் பாணிக்கும் இடைப்பட்ட தூரம் பத்தடி. பாணியை எப்படி அப்புறப்படுத்தலாம்? உடனே துப்பாக்கியைப் பிரயோகித்து விடலாமா? இல்லை. காத்திருந்து பாணி ஏமாறும் சமயம் பார்த்துச் சுடலாமா? யோசிக்க வேண்டும். அவகாசம் இருக்கிறது.

பாணி சிதையிலிருந்து எழும் ஜ்வாலைக்குத் தப்பி மேடையின் மீது எழுந்து நின்று கொண்டான். அலை அலையாகத் தீ நாக்குகளுக்கு நடுவில் உருவம் அலைந்து தெரிந்தது. பாணி இப்போது இரைந்து கத்தினான். கையிலிருந்து ஏதோ ஒரு தூளைச் சிதை நெருப்பில் வீசினான். தீயைச் சற்றே அணைத்து வெள்ளைப் புகை மிகத் தீவிரமாக எழுந்தது. மீண்டும் பாணி உயிர் போகிறாற் போல் கத்தினான். மறுபடி தூளை வீசினான். கத்தல். தூள், கத்தல், தூள்...ஏகாண்டமான புகை மண்டலம். பார்த்துக் கொண்டிருந்த போதே சிதையிலிருந்த பிணம் மெல்ல எழுந்து உட்கார—

மகாதேவனின் இதயம் துடிப்பதைச் சட்டென்று நிறுத்திக் கால் வினாடிக்குப் பின் மீண்டும் தொடர்ந்து உடல் முழுவதும் பயமும் நடுக்கமும் ஓடக் கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டு நின்றார்.

பாணி மயங்கின நிலையில் பேசுகிற மாதிரி பேசினான்.

''நிலாக்கால வணக்கங்கள். என் பிடாரித்தேவியே...''

புகையடங்கி, பிணத்தின் முகம் தெளிவாகத் தெரிய அதன் உதட்டில் ஓடின சிரிப்பு மகாதேவனை மீண்டும் சிலிர்க்க வைத்தது.

பாணி இப்போது இரைந்து கத்தாமல் சற்று மெதுவாகவே சொன்னான்:

''கடைசியாக இந்தப் பெண்ணை நீ கேட்ட சகல அம்சங்களுடன் கூடிய இந்தச் சிறுமியை உனக்குப் பலியிடுவதன் மூலம் நீ திருப்தியடைவாய் என எதிர்பார்க்கிறேன்.''

பாணி சற்று நிறுத்திச் சொன்னான்.

''இன்னும் ஏதாவது தேவையாக இருந்தால் கேள். உன்னைத் திருப்திப்படுத்த நான் சித்தையாக இருக்கிறேன்.''

சட்டென்று யாரோ உரக்கச் சிரிப்பது அந்தச் சின்னக் காட்டின் ஒவ்வொரு மூலைகளிலும் எதிரொலித்தது.

''பக்தா, உன் அகங்காரம் இன்னும் உன்னைவிட்டு அகலவில்லையே?''

''ஐயையோ! என்னம்மா நீ இப்படிச் சொல்கிறாய்?''

''எதற்காக நீ இதையெல்லாம் எனக்குப் படைக்கிறாய்? எனக்காகவன்றோ? காரணம் கருதித்தானே? உனக்குச் சித்திகள் வேண்டும். நீ நினைப்பதெல்லாம் நடக்க வேண்டும் என்பதற்காக இதுவரை எத்தனையோ பலி கொடுத்திருக்கிறாய்? எனக்குக் கொடுக்க வேண்டும் என்பதற்காகவா?''

''ஐயையோ. என்னம்மா இப்படிப் பேசுகிறாய்? உனக்காகத்தானம்மா எல்லாம் செய்கிறேன்.''

மீண்டும் பகபகவென்று காட்டை அதிர அடிக்கிற சிரிப்பொலி எழுந்தது.

''அப்படியா? எனக்காகத்தான் செய்கிறாயா? நன்றி மகனே. ஆனால் அதைத் தடுக்க ஒருவன் இங்கு உனக்கு அருகிலேயே காத்திருக்கிறானே, அவனை முதலில் கவனித்து அனுப்பிவிட்டு அப்புறம் என்னைக் கூப்பிடு.''

மீண்டும் புகை மண்டலம் எழுந்து அடங்க உட்கார்ந்திருந்த பிணம் சடாரென்று படுத்துக் கொண்டுவிட்டது. இது ஒன்றுமே தெரியாத முழு மயக்க நிலையில் குழந்தை மீனா உட்கார்ந்து கொண்டிருக்க—

பாணி எழுந்திருந்தான். கண்களின் கோப ஜ்வாலை தூரத்து இருட்டிலிருந்தே தெரிந்தது. ''யாரங்கே?'' என்று கத்தினான். பிண மேடையிலிருந்து ஒரு கட்டையை உருவி அதன் வெளிச்சத்தில் நகர்ந்தான். வெறி பிடித்தவனைப் போல் தேட ஆரம்பித்தான். முதலில் கிழக்குப் பக்கமாக நகர்ந்து பின் வடக்குப் பக்கமாகத் திரும்பிய பொழுது மகாதேவன் அவன் கண்களில் பட்டார். பெரிதாகக் கத்திக் கொண்டே கையிலிருந்த கட்டையை நெருப்புடன் 'சுழற்றி அவர் மீது எறிய, மகாதேவனின் கையிலிருந்த துப்பாக்கி ஒரு முறை கோணம் தவறிச் சப்தமிட்டு நெருப்புக் கட்டையால் தாக்கப்பட்டுக் கையிலிருந்து எகிறித் தூரப் போய் விழுந்ததும் மகா



தேவனுக்கு வியர்த்தது. என்ன செய்வதென்று தெரியவில்லை.

சட்டென்று குழந்தை மீனா உட்கார்ந்திருந்த இடத்தை நோக்கி ஓட ஆரம்பித்தார். குழந்தையைத் தூக்கித் தோளில் சாத்திக் கொண்டு இன்னும் வேகமாக ஓட ஆரம்பித்தார். பின்னால் பாணி அசுர வேகத்தில் துரத்துவது தெரிந்தது. பத்தடி, ஐந்தடி, இரண்டடி வித்தியாசம் வந்தபொழுது மகாதேவனுக்குப் பயம் போய், குழந்தையைக் காப்பாற்ற வேண்டும் என்கிற வெறி மட்டுமே இருந்தது.

ஓடிக்கொண்டே இருந்தவர் சடாரென்று நின்று பின்னால் வருபவன் தன் மேல் இடிப்பதற்கு வாகாக இடதுபுறம் ஒதுங்கி வலது கையால் பலம்கொண்ட மட்டும் ஓங்கி, பாணியின் முகத்தை மையமாக வைத்துக் குத்தினார். பாணி இந்தத் தாக்குதலை எதிர்பார்க்கவில்லை. மூக்கின் சில்லெலும்பு உடைந்து ரத்தம் கொட்ட மெதுவாகக் கீழே சரிந்தான். அவன் விழுந்த இடத்தையும் உடம்பு கிடக்கும் கோணத்தையும் ஊகித்துக் காலால் மிகப் பலமாக அவனின் மார்பில் ஓங்கி ஓங்கி உதைக்கக் குறைந்த பட்சம் அரை டஜன் விலா எலும்புகளாவது உடைந்து போயிருக்கும். பாணியின் முனகல் கூடக் கேட்காது அடங்கிப் போனதும் மகாதேவன் மீனாவுடன் ஓட ஆரம்பித்தார்.

அந்தக் காட்டைக் கடந்து பிரதான பெரிய சாலை வந்து கண்ணில் பட்ட போலீஸ் ஸ்டேஷனுக்குள் நுழைகிறவரை அவரது அசுரத்தனமான ஓட்டம் நிற்கவில்லை. போலீஸ் ஸ்டேஷனில் நுழைந்து மீனாவைத் தரையில் கிடத்திவிட்டுத் தானும் விழுந்ததுதான் தெரியும் அவருக்கு...

அதன் பின்னர் பாணி கைது செய்யப்பட்டுச் சிகிச்சை அளிக்கப்பட்டு உடம்பு தேறிக் கோர்ட்டின் கூண்டில் நின்ற

போது எதிர்ப்பக்கம் நின்றிருந்த மகாதேவனைப் பார்த்துக் கத்தினான்.

''டேய், அடுத்த மாதம் இருபத்தைந்தாம் தேதி நீ ரத்தம் ரத்தமாகக் கக்கிச் சாகலே, என் பேரு விஜய்பாணி இல்லே.''

## 9

''அடுத்த மாதம் இருபத்தைந்தாம் தேதி நீ இறக்கப் போகிறாய்.''

கேட்டுக் கொண்டிருந்த மகாதேவனை, நீதிபதியை வக்கீல்களை, பார்வையாளர்கள் பகுதியிலிருந்த ஸ்வாமினாதனை திருமதி கல்பனா மகாதேவனை, இன்னும் கேஸ் சம்பந்தப்பட்ட போலீஸ்காரர்களை, இன்ஸ்பெக்டர்களை இனம் தெரியாத இறுக்கம் மிகுந்த கனம் பரிபூரணமாக ஆட் கொண்டது. கோர்ட்டில் அத்தனை பேர்களுக்கெதிரில்! நேரிடையாக மகாதேவனின் உயிருக்குக் கெடு வைக்கிறான். அரசாங்கத் தரப்பு வக்கீல் (பப்ளிக் ப்ராஸிக்யூட்டர்) விஜய்பாணியின் இந்த வார்த்தைகளை நீதிபதி குறிப்பில் குறித்துக் கொள்ளச் சொன்னார். இதுவரை பாணியை முழுக் குற்றவாளியாக்கும் எந்தச் சாட்சியங்களும் பாணியின் வக்கீலான சக்ரபாணியின் முன்பாக எடுபடாமல் போய்விட்டது.

''உங்கள் பெயர்?''

''மகாதேவன்.''

''தொழில்?''

''சொந்தமாய் எஸ்டேட் இருக்கிறது. அதைச் சுயமாகப் பராமரித்து வருகிறேன்.''



''குற்றம் சாட்டப்பட்டுள்ள விஜய் பாணியை எவ்வளவு காலமாகத் தெரியும்?''

''காணாமற்போன சிறுமி மீனாவைத் தேடப் போன போதுதான் முதன் முதலாகச் சந்தித்தேன்''

''முன்பின் அறிமுகமில்லாத விஜய்பாணி என்பவரிடம் தான் காமணாற்போன சிறுமி மீனா இருக்கிறாள் என்று உங்களுக்கு எப்படித் தெரிந்தது.?''

''நான் தெய்வமாக வழிபடும் சாமியார் மூலமாக.''

''அவருக்கு எப்படித் தெரியும்?''

''அவர் மகான். எதிர்காலம், நிகழ்காலம், கடந்த காலம் மூன்றையும் தீர்க்கமாகச் சொல்லக் கூடியவர்.''

''அவர் பெயர் என்ன?''

''ரெங்கனாத ஸ்வாமிகள்.''

''அப்படியானால், நாளைக் காலை பத்து மணிக்கு தான் என்ன செய்து கொண்டிருப்பேன். என் பாங்க் பாலன்ஸில் எவ்வளவு பணம் இருக்கிறது. நாளை இரவு பதினோரு மணி தூக்கத்தில் எனக்கு என்ன கனவு வரும்? இதெல்லாம் கூட அவரால் சொல்ல முடியுமா?''

''நிச்சயமாக முடியும்!''

''அப்படிப்பட்டவரானால் அவருக்கு மழை பெய்விக்கும் ஆற்றல் இருக்குமே. நாளை தமிழ்நாடு முழுதும் பரவலாக மழை பெய்யச் சொல்லுங்கள் பார்க்கலாம்? என்ன பேசுகிறீர்கள் ஸார்! நீங்கள் ஏதோ சொந்தக் காரணங்களுக்காக நண்பரின் மகளைக் கடத்திப் போய்க் காரியத்தை முடிக்கும் சமயத்தில் போலீஸ் பயம் ஏற்பட்டிருக்கிறது. இல்லாவிட்டால் வேறு சங்கடம் ஏதோ வந்திருக்கிறது. அதனால் தனியான இடத்தில் சரியாக அகப்பட்ட மிஸ்டர் பாணியைத் தாக்கி நீங்கள் கடத்திப் போன மீனா

வைப் பற்றின பழியை அவர் மீது போட்டு விட்டீர்கள் என்கிறேன்."

''இல்லை, நிச்சயமாக இல்லை.''

''பாணியை முன்னதாக உங்களுக்கு அறிமுகம் கிடை யாது. சரி. பாணிதான் குழந்தையைக் கடத்தி அங்கு வைத்திருந்தார் என்கிற பட்சத்தில் ஊர் பேர் தெரியாத பாணியின் விலாசம் உங்களுக்கு எப்படிக் கிடைத்தது?''

''அதுதான் சொன்னேனே. சாமியார் மூலமாக என்று...''

''சரி. நீங்கள் சொல்கிற சாமியார் கூற்றை ஒப்புக் கொண்டாலும் எறக்குறைய மீனா காணாமற் போய்ப் பதினைந்து நாட்களான பின் தேட வேண்டிய அவசியம் இல்லை. எறக்குறைய மீனா காணாமற் போய்ப் பதி னைந்து நாட்களுக்குப் பின், சாமியார் உதவியை நாடு முன், நன்கு படித்த நீங்கள் ஏன் போலீஸின் உதவியை நாடவில்லை? சரி, பாணியின் இடத்தைத் தேடிப் போன தாகச் சொன்னீர்களே, அப்போது ஏன் துணைக்குக் கூடப் போலீஸைக் கூப்பிடவில்லை? நீங்களே ஏன் தனியாகச் சென்றீர்கள்?''

மூச்சு முட்டப் பேசினவர் பார்வையில் கிண்டல் தொனிக்க மகாதேவனைப் பார்த்தார்.

மகாதேவன் மிரண்டு போனார். இது நாள் வரை கோர்ட், போலீஸ் நடைமுறைகள் என்ற எதுவும் தெரி யாது. தெரிந்து கொள்கிற ஆர்வமும் அவரிடம் இல்லை. தெரிந்திருந்தாலாவது சட்டத்தின் நெளிவு சுளிவுகளுக் கும், வளைவுகளுக்கும் தகுந்தாற் போலத் தன்னைத் தயார் செய்து கொண்டிருப்பார். அவை எதுவும் தெரி யாததால் நண்பனின் குழந்தையைக் காப்பாற்ற வேண் டும் என்ற ஒரே வேகத்தில் தனியாகக் காட்டிற்குப் போய். பாணியிடம் சண்டை போட்டு. குழந்தையைத்



தூக்கிக் கொண்டு வந்த மறு நிமிடமே போலீசுக்குத் தகவல் கொடுத்துவிட்டு இப்போது கோர்ட், கேஸ் என்று அலைகிறார்...பாணியின் சார்பில் சக்ரபாணி என்றொரு வக்கீல் இப்படி வேட்டை நாயாகக் குதறுவார் என்பதும் அவர் எதிர் பார்க்காதது. அதனால் தடுமாறித் தலை குனிந்த போது நல்ல வேளையாக இடைவேளை வந்தது.

அதில் சாப்பிடாமல், யாரையும் சந்திக்காமல் அவசர மாகத் தன் வக்கீலைப் கலந்தாலோசித்து, சின்னக் காகி தத்தில் குறிப்புகள் எடுத்துக் கொண்டார். அதில் இன் னொரு பிரதி எடுத்துப் பப்ளிக் பிராஸிக்யூட்டரிடம் கொடுத்தார். வார்த்தைகளைக்குறுக்காகப் போட்டுப்பேசு வதற்குத் தன்னைத் தயார்ப் படுத்திக் கொண்ட போது—

மீண்டும் சக்ரபாணி இவரை நெருங்கினார்.

இந்த முறை சக்ரபாணியின் கேள்விக்குத் தயங்கா மல் தலை குனியாமல் தைரியமாகப் பதில் சொன்னார். எதிர்க் கேள்வியில் அவரை மடக்கினார்.

''மிஸ்டர் சக்ரபாணி நீங்கள் என் நெருங்கின நண்பர், இரண்டு பேரும் போகிற போது நான் சாலை விபத்தில் மாட்டிக் கொண்டு விடுகிறேன் என்று வைத்துக் கொள்ளுங்கள். தலையில் பலமான அடி. ப்ரெய்ன் ஹெமரேஜ் ஆகவும் இருக்கக் கூடும். அந்தச் சந்தர்ப்பத் தில் என் நண்பரான நீங்கள் என்ன செய்வீர்கள்?''

''ம்... உடனடியாக ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போவேன்."

''அதுதான் முடியாது மிஸ்டர் சக்கரபாணி. அப்படிச் செய்தால் போலீஸ் உங்களை ஆயிரம் கேள்விகள் கேட் கும். அப்படியே சென்றாலும் போலீஸ் கேஸ் என்று சொல்லி ஆஸ்பத்திரியிலும் அட்மிட் பண்ண மறுப்பார்கள். இது எறக்குறைய எல்லா சாதாரண மனிதனுக்கும் தெ

யும். ஆனால் அந்த நேரத்தில் என்னைக் காப்பாற்ற வேண்டும் என்ற ஒன்றுதான் உங்கள் மனதில் ஓடும். போலீஸோ, மற்ற எதுவுமோ ஞாபகத்திற்கே வராது. அதேதான் எனக்கும் நேர்ந்தது. தவிரவும் இது மந்திரம், தந்திரம் சம்பந்தப்பட்டுள்ள விஷயம் என்பதால் போலீ ஸிடம் போனாலும் அவர்கள் அப்படியே ஏற்றுக் கொள்ள வும் மாட்டார்கள். அதனால்தான் எனக்கு நானே விஷ யங்களை ஊர்ஜிதம் செய்து கொண்ட பிறகு மீனாவை மீட்டு உடனே பாணியைக் கைது செய்யப் போலீஸ் உதவியை நாடினேன். மீனா காணாமற் போன நாளி லிருந்து அவள் கிடைத்த நாள்வரை டெபுடி டிடெக்டிவ் இன்ஸ்பெக்டரோடு தினசரி தொடர்பு கொண்டிருக் கிறேன். சந்தேகமானால் டிடெக்டிவ் இன்ஸ்பெக்டரைக் கேட்டுப் பாருங்கள்... மற்றபடி நீங்கள் சொன்ன வேறு எந்தக் குற்றச் சாட்டையும் நான் செய்யவில்லை.''

தீவிர யோசனைக்குப் பிறகு மற்ற எல்லாக் கேள்வி களுக்கும் மிகச் சிரத்தையாகப் பதில் சொல்லியும், இருக் கும் சாட்சியங்களை வைத்து எதையும் சரியாக நிரூபணம் செய்ய முடியாத காரணத்தால் கடைசியில் பாணிக்கு ஏழு வருடம் கடுங்காவல் தண்டனைதான் கிடைத்தது. அதற்குப் பின்னர் பாணியைப் பற்றி எந்தவிதமான கவலையும் படாமல் அப்படியே விட்டுவிட்டார் மகாதேவன்.

பாணி விடவில்லை. சிறையில் சின்னதாக ராஜ்யம் அமைத்துக் கொண்டான். வார்டர்களின் மனக்குறை களுக்கு வைத்தியம் செய்தான். சட்டென்று எல்லோரும் அசருகிறாற்போல் வெறும் கையில் விபூதி வரவழைத்துக் கொடுத்துப் பரவசப்படுத்தினான். ஜெயிலில் இருந்த அத்தனை பேரும் இவனைச் சித்தர் என்றார்கள். திருவண்ணாமலையில் கடுமையாகத் தவம் புரிந்தவன் என்றார்கள். ஒரு சிலர் நேராக இமயமலையிலிருந்து இறங்கி வந்திருப்பதாகப் பேசிக் கொண்டார்கள். விதி



வசம் ஜெயிலில் கொண்டு வந்து தள்ளியிருக்கிறதென் றார்கள். விஜய்பாணிக்கு ஜெயிலில் உள்வட்டாரச் சலுகைகள் அதிகரித்தன. சாமி, சாமி என்று நிறையப் பேர் நமஸ்கரித்தார்கள்.

சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு மைதா மாவும் கறுப்புத் துணியும் சேகரித்தான். மகாதேவனைப் போல் அந்த மாவில் பொம்மை செய்தான். அதன் காதில் மகாதேவன், மகாதேவன், மகாதேவன் என்று மூன்று முறை சொன்னான். விடியற்காலையில் கைதிகள் தூங்கும் சமயம் சின்னதாக வரட்டி வைத்து, சுள்ளி சேர்த்து, மந்திரம் ஜெபித்து, கறுப்புத் துணியைப் பொம்மையின் வயிற்றில் சுற்றி லேசாக வயிற்றை அழுத்தி...

மகாதேவன் வலி தாங்காமல் கட்டிலிலிருந்து கீழே விழுந்து துடித்தார். திடீரென்று யாரோ வயிற்றுக்குள் கையை விட்டுப் பிசைகிற வலி. அரற்றினார். அழுதார். கல்பனாவின் கையைப் பிடித்துக் கொண்டு சின்னக் குழந்தை மாதிரி தேம்பினார். கல்பனாவிற்கு என்ன செய்வதென்று புரியவில்லை. அந்த ராத்திரியில் எந்த டாக்டரிடம் போவதென்று தெரியாமல், டைரக்டரியில் தேடி டாக்டர் டாக்டராகப் போன் செய்து, ஏதேதோ ஊசிகள், மருந்துகள், கிட்டத்தட்ட ஒருமணி நேரம் அரற்றின பின்னர் மகாதேவன் மெல்லத் தூங்கினார்.

பில்லி சூனியத்தில் பாணி கைதேர்ந்தான். சூனிய பொம்மை வேலை செய்வது சுத்தமாக அவனுக்குத் தெரிந் தது. இருபத்து நான்காம் தேதி இரவுக்காகக் காத்திருந்து தூங்காமல் ஜெபம் செய்தான். அதிகாலை ஐந்துமணிக்கு பொம்மையின் தலையை ஜெயிலின் சுவரில் அடித்து நசுக்கினபோது—

மகாதேவன் அப்போது பாத்ரூமில் இருந்தார். அமெரிக்கக் கக்கூஸில் உட்கார்ந்திருந்தபோது காலடியில் பூமி உருவிப் பக்கத்துப் பீங்கான் சதுரங்கள் பதித்த

சுவரில் உடம்பின் கனம் முழுதும் தலைக்கு ஏறித் தலை கனத்து அரைபட்டுக் கீழே சரிந்து, எழுந்து கொள்கிற அவசியத்திற்கு இடமே இல்லாமல் விழுந்தார்.

பாணிதான் இவரின் மரணத்திற்குக் காரணம் என்று போலீசுக்கும், கோர்ட்டுக்கும் கொடுத்த மனுவைப் படித்துக்கூடப் பார்க்காமல் கசக்கிக் குப்பைத் தொட்டியில் போட்டு விட்டார்கள். கமிஷனரிடம் இதுபற்றிப் பேசி, கோர்ட்டிற்கு விசேஷமாக மனுக்கொடுத்து, அனுமதி பெற்று பாணியின் அறையை இஞ்ச்விடாமல் அலசின போது கறுப்புச் சட்டை போட்ட, மண்டை நசுங்கின மகாதேவனின் மாவு பொம்மையைக் கண்டுபிடித்தார்கள். கண்டுபிடித்தும் பிரயோஜனமற்றுப் போயிற்று. கேஸ் போட முடியாதே!

கதை கேட்ட மாதிரிதான் இருந்தது ஜெயகுமாருக்கும், தேவசேனாவிற்கும். ஆடிப்போய் உட்கார்ந்திருந்தார்கள். கல்பனாவிற்கு எந்தவித ஆறுதல் வார்த்தையை சொல்ல முடியும் என்பது புரியவில்லை.

''ஆமாம், இப்போ திடீர்னு ஏன் எனக்கு போன் பண்ணி வக்கீலோட வரச்சொன்னீங்க?'' என்று கேட்டார் ஜெயக்குமார்.

''அதுக்கும் காரணமிருக்கு. போன வருஷம் ஊட்டியில் இருக்கிறபோது சாந்தியும் நானும் விஜய்பாணியோட கண்ணில் பட்டுவிட்டோம். விடுதலை ஆகிவந்துட்டான் போல இருக்கு. எங்களைப் பார்த்ததும் அடையாளம் புரிஞ்சு பக்கத்தில் வந்து பழைய வன்மத்தை மறக்காதவனாகச் சொன்னான்.''

''மகாதேவனுக்கு நேர்ந்த கதியைப் பார்த்தீங்களா, என்னை யார் என்ன பண்ண முடிஞ்சுது? சட்டமும், போலீசும் எனக்கு எதிர்ல சுண்டு விரலைக்கூட அசைக்க முடியாது. பெரிசா ப்ளான் போட்டேன். எல்லாத்தையும் கெடுத்தான் உன் வீட்டுக்காரன். அதுக்குப் பதிலா அவனுடைய குடும்பமே கெட்டால்தான் எனக்கு மனசு ஆறும்... பத்தே நாள்ல பானர்ஜியை உங்க வீட்டுக்கு அனுப்பறேன். அப்புறம் பாருங்க...'' என்றான்.

''எண்ணிப் பத்தே நாளில் சாந்திக்கு நேர்ந்ததெல்லாம் தான் உங்களுக்குத் தெரியுமே. நேற்று மறுபடியும் விஜய்பாணியைப் பார்த்தேன். அவன் என்னைப் பின் தொடர்ந்து வருகிறானோ என்று சந்தேகமாக இருக்கு. குரூரமாக என்னைப் பார்த்துச் சிரிச்சவன், 'லிஸ்டுல அடுத்தபேர் உன்னுடையது'ன்னு... சொல்லிட்டுப் போனான். அதைக் கேட்டதிலிருந்து பயமாக இருக்கு...''

கண்ணீரை மறைக்க கல்பனா எழுந்து பாத்ரூமைத் தேடிக் கொண்டு ஓடி நகர்ந்தபோது—

அவளின் தலைக்கு நேராக ஓடிக்கொண்டிருந்த மின் விசிறி சரியாக அவள் உட்கார்ந்திருந்த நாற்காலியில் பெருத்த சத்தத்துடன் விழுந்தது. மயிரிழையில் உயிர் தப்பினாள் அவள். இது இரண்டாவது முறை என்று நினைத்தபோது கல்பனா மகாதேவனின் முகத்தில் மரண பயம் அப்பிக் கிடந்தது.

## 10

''நியாயமா?''

எதிர்த் தரப்பில் மௌனம்.

''நீங்களே யோசிச்சுப் பாருங்க, இது நியாயமான்னு? ஒண்ணு ரெண்டுன்னு கொலைகளை மறைச்சாலும் மறைச்சீங்க, விஷயம் எப்படியோ வெளியில் பரவி இப்போ அசெம்பிளியில் பிடிச்சுக் கிழிச்சுட்டாங்க. நான்

என்ன எக்ஸ்ப்ளானேஷன் கொடுக்க முடியும்? கொடுத்தாத் தான் ஒப்புக்கு வாங்களா? ஆஸ்பத்திரியில் லஞ்சம் வாங்கிட்டு விவகாரத்தை வெளியில் விடலேன்னு பேச்சு கிளம்பிட்டது. பேப்பர்க் காரனுங்கள்லாம் மூக்கை நீட்டிட்டுக் கேள்வி கேக்கிறாங்க. எத்தனை நாளைக்கு அவங்களைச் சமாளிக்க முடியும்னு நினைக்கிறீங்க? நீங்க கேட்கிற வரைக்கும் நான் புழுவனதோட உங்க சிரமம் தெரிஞ்சு எல்லாம் புரிஞ்ச உங்ககூட ஒத்துழைச்சேன். அதே மாதிரி நீங்க எனக்கு ஒத்துழைப்புத் தர வேணாமா? முதல்ல யாரையாவது வளைச்சு உள்ள போடுங்க. அப்பத்தான் சிக்கலோட எதாவது ஒரு நுனியாவது கிடைக்கும். அண்டர்ஸ்டாண்ட்? வச்சுடட்டுமா?"

ரிஸீவரை வைத்தார் கமிஷனர் ஜோஸப் மெக்ஸி. கண்கள் இரண்டும் தூக்கமில்லாததால் ஜிவுஜிவுவென்று எரிந்தது. சாப்பாடற்று வெறும் காப்பி சிகரெட் என்று இருந்ததால் தொண்டையில் கசப்புத்திரவம் சுரந்து வாய் முழுவதையும் கசக்க வைத்தது. ஆனாலும் இன்னொரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டார். இதுவரை தங்களின் தரப்பில் என்னெல்லாம் தவறுகள் நிகழ்ந்திருக்கின்றன என்பதை யோசித்துப் பார்த்தார்.

1. எப். ஐ. ஆரை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஏற்றுக் கொண்டால் இண்டியன் எக்ஸ்பிரஸ் அதிகக் காப்பிகள் விற்பனையாகும். சம்பந்தப்பட்டவர்களை—சந்தேகப்படுபவர்களை பேப்பரில் அறிவிக்க வேண்டும். சீரார்டில்லாமல் இதுவரை இருந்ததே பெரிய தவறு.

2. அந்த சாந்தியை எப்படியாவது அந்த இடத்தை விட்டுப் பெயர்த்தாக வேண்டும்.

3. தீயாகப் பரவுகிற வதந்திகளை நிறுத்த வேண்டும்.

4. இனிமேல் எந்தக் கொலையும் நிகழாமல் தடுக்க வேண்டும்.



ஆனால் எப்படிச் செய்வது இத்தனையையும்?

எப்படி, எப்படி, எப்படி?

முதலில் அந்தச் சாந்தி...

திடீர் திடீரென்று கண்ணில் தெரிகிற குரூரம். பென்ஸிலை ஸ்டில்லெட்டோ கத்தியாக இருக்குகிற வித்தை. நிற்கிற அல்லது உட்கார்ந்திருக்கிற இடத்தை விட்டுப் பெயர்க்கவே முடியாத சக்தி. நூறாளாகச் சேர்ந்து கட்டி இழுத்தால்கூட ஒரு இஞ்ச்கூட அசையாத திடம். எப்படி இதெல்லாம் ஓர் இளம் பெண்ணிற்குச் சாத்தியமாகின்றன? என்ன நிகழ்கிறது அவளுக்குள்? இதை யார் கண்டுபிடிப்பார்கள்? யாரால் சொல்ல முடியும்?

சட்டென்று ஃபாதர் மர்பியின் ஞாபகம் வந்தது அவருக்கு. மர்ஃபி ஒரு அசாதாரணச் சக்தி வாய்ந்த மனிதர் என்பதை ஒப்புக் கொண்டே ஆகவேண்டும் என்று நினைத்தார். இவர் பார்த்தே இவரின் கண்களுக்கெதிரிலேயே கோஸ்பல் கட்டடங்களில் லட்சக்கணக்கான மக்களின் ஆலேலூயா ஆலேலூயா பாடல்களுக்கிடையில் முடமானவனை, கண்ணிழந்தவனை, காது கேளாதவனை, கர்த்தரின் அருளால் குணப்படுத்தியிருக்கிறார். இதை ஜோசப் மெக்ஸி பார்த்தும் இருக்கிறார். எப்படி வருகிறது அந்த அருள்? அதாவது ஃபிசிகல் ஹீலிங்? தெரியவில்லை. ஜோசப் மெக்ஸி அந்த ஆராய்ச்சியில் இந்த நாள் வரை இறங்கவில்லை.

மெக்ஸிக்கு ஃபாதர் மர்ஃபியிடம் அபரிமிதமான மரியாதை உண்டு. அந்தக் கம்பீரமான உருவமும் கனிவான கண்களும் அவருக்குள் சொல்ல இயலாத ஒரு சாந்தத்தை—அமைதியை உண்டாக்குவது நிஜம்.

ஒருவேளை ஃபாதரால் சாந்தியைப் பற்றி ஏதேனும் சொல்ல முடியுமோ?

அடுத்த பத்தாவது நிமிடம் அவரின் வெள்ளை அம்பாஸ்டர் கோட்டூர்புரத்தை விட்டு டிராபிக் விதிகளுக்கு மயிரிழையில் கட்டுப்பட்டு, கதீட்ரல் சர்ச்சின் வாசலில் வந்து நின்றது. உள்ளே மைக் முன்னால் நின்று கர்த்தரின் செய்திகளைத் தைரியமாக, தெளிவாக எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தார் ஃபாதர் மர்ஃபி. நல்ல குரல், வளமான ஏற்ற இறக்கம். ஸெர்மன் முடிகிறவரை பொறுமையாகக் காத்திருந்து, பின் தனியாக ஃபாதரைச் சந்தித்தார் மெக்ஸி. சாந்தியைப் பற்றின தனது சந்தேகங்களையும் சொல்ல முடிந்த மற்ற நிகழ்ச்சிகளையும் சொல்லி விட்டுக் கேட்டார்.

''நான் இப்போ என்ன செய்யணும்னு புரியலை ஃபாதர்.''

''கவலைப்படாதே மகனே! நான் ஜெபம் பண்ணி ஒரு தண்ணீர் தருகிறேன். அதை அவளின் முகத்தில் தெளி. அதன்பின் பார், அவளுக்குள் ஒளிந்து கொண்டிருக்கிற அந்தச் சாத்தான் ஓடிப் போகிறதா இல்லையா என்று.''

ஜபித்துக் கொடுக்கப்பட்ட குவளைத் தண்ணீருடன் ஜே. ஜே. ஆஸ்பிடலை அடைந்தார் ஜோஸப் மெக்ஸி.

கட்டில் நடுவில் கொஞ்சம் அசைவுகூட இல்லாமல் கால்களைச் சப்பணமிட்டு உட்கார்ந்து ஜோஸப் மெக்ஸியைப் பார்த்தாள் சாந்தி, அவருக்கு இரண்டு தீப்பந்தங்கள் நேராகத் தன்னை நோக்கி நெருங்கி வந்து கண்களில் செருகுகிற மாதிரி இருந்தது. உடம்பு சிலிர்த்தது. ஆனாலும் கட்டுப்பாட்டிலும் போலீஸ் அதிகாரியின் திடத்திலும் பேசாமல் நிற்க, சாந்தி பேச ஆரம்பித்தாள்.

''மிஸ்டர் ஜோசப் மெக்ஸி, கொஞ்சம் என் பக்கத்தில் வாங்க, பேசணும்.'' எழரைக் கட்டையில் தெளிவான ஆண் குரல்.

அவருக்குள் மெலிதாக ஒரு நடுக்கம் எட்டிப் பார்த்து மறைய, ''சொல்லு,'' என்றார்.



''மரியாதை, போலீஸ் கமிஷனர் மரியாதை. நான் உங்க கீழே வேலை செய்யற கான்ஸ்டபிள் இல்லை. சொல்லுங்க. மிஸ்டர் பானர்ஜின்னு சொல்லுங்க.'' அந்தக் குரலின் மேலோட்டமான கோபமும் கிண்டலும் அடித்தளத்தில் மிக ஆழமாக ஓடிய அதிகாரமும் ஜோஸப் மெக்ஸியை எரிச்சல்படுத்த, அவர் தன் குரலிலும் கிண்டலை வரவழைத்துக் கொண்டு சொன்னார்:

''யெஸ்... சொல்லுங்க மிஸ் சாந்தி.''

''என்கூட விளையாடாதீங்க கமிஷனர். என்னை நீங்க இன்னும் சரியாப் புரிஞ்சுக்கலை. யாருன்னு தெரிஞ்சுக்கலை. அதனால் ஆபத்தோட விளையாட்டை ஆரம்பிப்பேன். அப்புறம் உங்களால் தாங்க முடியாது. வரிசையாக கேட்கப் போற கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாது. தலையைப் பிச்சுக்கிட்டு வேலையை ரிஸைன் பண்ணிட்டு ஓடிப் போயிடுவீங்க...''

கமிஷனர் அசந்து போய் மௌனமாய் நின்றிருந்தார்.

''என்ன பேசாமல் இருக்கீங்க? அமெரிக்கையா, பவ்யமா தலையைக் குனிஞ்சு பணிவாய்க் கேட்டீங்கன்னா நான் உங்களோட ஒத்துழைப்பேன். இன்னும் யாரையெல்லாம் ஒவ்வொருத்தரா மேலே அனுப்பப் போறேன்னு லிஸ்ட் கொடுப்பேன். எப்படின்னும் சொல்லுவேன். உங்களை நீங்களே காப்பாத்திக்கிற வழியையும் சொல்லுவேன். அதனால் பணிவு மிஸ்டர் மெக்ஸி, பணிவு.''

மெக்ஸியின் உடல் நரம்புகள் மிக வேகமாகத் தூண்டப்பட அவர் இடது கையின் பின்பக்கமாக மறைத்து வைத்திருந்த குவளையைச் சடாரென்று முன்னுக்குக் கொண்டு வந்து புனித நீரைப் பளீரென்று அவளின் முகத்தில் விசிறினார். முகத்திலும் கழுத்திலும் தலையிலும் நீர் வழிந்தோட, சிலிர்த்துக் கொண்டு கட்டிலை விட்டு இறங்கிக் கீழே நின்ற சாந்தி ஆஸ்பத்திரிக் கட்டிடம் அதிருகிற வகையில் சிரித்து முடித்தாள்...

''என்ன கமிஷனர், இங்கிலீஷ் சினிமா பார்த்தீங்களா, தண்ணி தெளிக்கிறதைப் பத்தியெல்லாம் தெரிஞ்சு வச்சிருக்கீங்க? யாரு கொடுத்தது இந்தச் சாக்கடைத் தண்ணியை? இல்லே நீயும், பாதிரியாரும் மூத்திரம் போனதைப் பிடிச்சிட்டு வந்தியா? டேய், என்கிட்டே பலிக்காதுடா இந்த விஷயமெல்லாம். போய் உனக்கு இந்த மூத்திரத்தைப் பிடிச்சுக் கொடுத்தானே வெள்ளை உடைக் கிழவன், அவன் கிட்டேயும் சொல்லு. நான் யாருன்னு நினைச்சு தண்ணி தெளிக்கிறீங்க? நாய்களா! அப்படியே கிழிச்சு உங்க ரெண்டு பேர் ரத்தத்தையும் வாரி அறை முழுசும் தெளிச்சுடுவேன் தெரியுமா?ஆர் யு ப்ளேயிங் வித் மீ? வாடா இங்கே. கிட்டே வாடா. ஏண்டா ஓடறே? ராஸ்கல் நீயாடா போலீஸ் கமிஷனர். ஹா ஹா ஹா...''

ஜோசப் மெக்ஸி லிஃப்டிற்குக்கூடக் காத்திருக்கவில்லை. ஓடுகிற விரைவில் படியிறங்கின போது கால் சற்றே இடறிற்று. முதுகுத் தண்டிற்குள் சிலிர்ப்பு ஓடிற்று. ''ஜீஸஸ்,'' என்று முணுமுணுத்துக் கொண்டே அத்தனை படிகளையும் கடந்து கீழே வந்து ரிஸப்ஷன் சோபாவில் சரிந்து பாக்கெட்டில் தேடி சிகரெட்டை உதட்டில் பொருத்திப் பற்ற வைத்துக் கொண்டபோது கூடக் கைகளின் நடுக்கம் குறையவில்லை. தன் இடத்திலிருந்தே அவரின் நிலைமையை ஓரளவு ஊகித்த ஷீலா கான்டீனுக்குச் சொல்லி காப்பி வரவழைத்தாள்.

''சார், காப்பி...''

''தாங்க்யூ! தாங்க்யூ ஸோ மச்...''

காப்பியை அவர் உறிஞ்சின வேகத்தில் அதன் அத்தியாவசியத் தேவை புரிந்தது. காலிக் கோப்பையை டீபாயில் வைத்து விட்டு சிகரெட் அணைகிற வரை யோசித்தார்.



ஃபாதர் மார்ஃபியின் சக்தி பிடிபடாத மாதிரியே அவருக்கு இந்த பானர்ஜியின் சக்தியும் பிடிபடவில்லை.

அறிவுபூர்வமோ விஞ்ஞானமோ அவருக்கு இந்த இடத்தில் கைகொடுக்க மறுத்தன. முதன் முதலாக, 'மிஸ்டிக் லயன்ஸ்' என்கிற பதத்தில் மெல்லிய நம்பிக்கை ஏற்படத் தொடங்க சட்டென்று சங்கர்ராமும், நமச்சிவாயமும் சொன்ன 'பிளான்செட்' விவகாரம் ஞாபகத்திற்கு வந்தது. கூடவே ஸ்ரீதரன் நம்பியாரின் பெயரும் நினைவிற்கு வர ...சாந்தி இல்லை. அவனுக்குள்ளிருக்கும் அந்த பானர்ஜி சிரித்த சிரிப்பு...

'இன்னும் யாரையெல்லாம் ஒவ்வொருத்தரா மேலே அனுப்பப் போறேன்ற லிஸ்ட் கொடுப்பேன்.'

'நோ! இதை எப்படியும் தடுத்தாக வேண்டும். இனிமேல் எந்த வகையிலும் உயிர்ச்சேதம் நேரிடாமல் காப்பாற்ற வேண்டும். அதற்கு எதைச் செய்தாலும் பரவாயில்லை. யாரைப் பார்த்தாலும் பரவாயில்லை.'

ஆஷ்ட்ரேயை நோக்கி சிகரெட்டை வீசிவிட்டு வாசலுக்கு ஓடி, டிரைவரை விலக்கித் தானே ஜீப்பை இயக்க, ஆஸ்பத்திரியை விட்டு வெளியில் வந்த மெயின் ரோடைப் பிடிக்கையில் சடாரென்று ஜீப்பின் டயர்களில் ஒன்று வெடித்து உடைந்து போன ஆக்ஸில் கறுப்பு ரோட்டை வெள்ளையாகக் கீறி...ஜீப் தவளை மாதிரி குதித்துத் தவ்வி...ஒன்றரை பர்லாங் தள்ளித் தானாக நின்றதும்...

ஒரே ஒரு கீறல்கூட இல்லாமல் ஜீப்பை விட்டுக் கீழே குதித்த ஜோசப் மெக்ஸி ஒரு நிமிடம் நிதானித்து அது நடுரோடு என்பதையும் பாராமல் முட்டிபோட்டு சிலுவை இட்டுக் கொண்டார்.

''Our FATHER, Which art in heaven......for ever and ever. AMEN''

# 11

காரணமற்று ஜீப் அந்த நிலைமைக்கு உள்ளானதும் நிஜமாகவே ஆடிப்போனார் ஜோசப் மெக்ஸி. அவருக்குள் ஓர் அதீதப் பய உணர்வு தோன்ற இனி வினாடி நேரத்தைக் கூட வீணாக்கக்கூடாது என்ற முடிவில் வயர்லெஸ் ரிஸீவரை எடுத்தார். பத்துநிமிடங்கள் பேசின பின்பு தான் இன்ஸ்பெக்டர் சங்கர்ராம் அவருக்குக் கிடைத்தார்.

''சங்கர்ராம், உடனே இங்கே வாருங்கள்.''

''எஸ் ஸார்.''

அடுத்து பத்தாவது நிமிடம் புல்லட் சப்திக்க வந்து சேர்ந்தார் சங்கர்ராம். விறைப்பாக சல்யூட் அடித்துப் பணிவாக நின்றார். உடனே நேராக விஷயத்தை ஆரம்பித்தார் ஜோஸப் மெக்ஸி.

''திடீர்னு ஜீப் எப்படி இப்படி ஆகும்னு நினைக்கிறீங்க மிஸ்டர் சங்கர்ராம்.''

''சார் ஜீப்லே முன்னாலேயே கோளாறு ஏதாவது இருந்திருக்கும் ஸார்.''

''நான்ஸென்ஸ், என்ன சார் பேசறீங்க. புது ஜீப் சார், ரெண்டு நாளைக்கு முன்னாலதான் டெலிவரி எடுத்தது. வேணும்னால் ஹஸேனைக் கேளுங்க. அவன் தான் நாலு சக்கரத்துக்கும் அடியில் எலுமிச்சம்பழம் வச்சு வண்டியை எடுத்துப் பழத்தை நசுக்கிக்கொண்டு வந்தான். பார்த்துப் பார்த்து எடுத்த வண்டிய்யா. அதுல போய்க் கோளாறு எப்படிய்யா வரும்?''

''ஸாரி ஸார். வண்டியைப் பற்றின விவரமெல்லாம் எனக்குத் தெரியாது.''



''இந்தக் கேஸைப் பொறுத்த வரை எதுதான்யா தெரிஞ்சிருக்கு?''

''ஆமாம் சார். எல்லாமே மாயாஜாலம் மாதிரிதான் நடக்குது.''

''அதனாலதான் சொல்றேன். நாம இன்னும் ஜாக்கிரதையா இருக்கணும்னு. எந்த நிமிஷமும் எதுவும் நடக்கலாம். அதனால நீங்க அந்த ஆஸ்பத்திரியை விட்டு நகராதீங்க. நீங்க ஸ்பாட்ல இருக்க வேண்டியது ரொம்ப அவசியம். எந்தக் காரணத்தைக் கொண்டும் அந்த இடத்தை விட்டு நகராதீங்க. நான் அந்த ஸ்ரீதரன் நம்பியாரைப் பார்த்துட்டு வந்துடறேன்.''

''ஸ்ரீதரன் நம்பியார்?''

''அதான்யா நீங்கப் போட்டுப் பார்த்த போன் ஷெட்ல வந்த பேர்; எங்கே இருக்கான் அந்த ஆளு?''

''ஸார் நீங்களா? ஸ்ரீதரன் நம்பியாரைத் தேடிக் கிட்டா?'' ஆச்சரியமும் அதிர்ச்சியுமாகப் பார்த்தார் சங்கர்ராம்.

''என்னய்யா பண்றது,'' என்று சலித்துக் கொண்டார் ஜோசப் மெக்ஸி. ''நமக்கு எதுவும் பிடிபடலே. நடக்கிற விஷயங்களையெல்லாம் பார்த்தால் நம்பத்தான் வேண்டியிருக்கு. வேற எதையும் நம்பலேன்னாலும் என்னுடைய ஜீப்பின் டயர் வெடிச்சதையும் ஆக்ஸில் உடைஞ்சதையும் நம்பித்தானேய்யா ஆகணும். பார்க் கலாம். அந்த ஸ்ரீதரன் நம்பியார் மீது கல்லெறியலாம். மாங்காய் விழறதா, இல்லே கல்லே திருப்பி வந்து விழற தான்னுப் பொறுத்திருந்து பார்க்கலாம். இப்போ அட்ரஸ் என்னான்றதைச் சொல்லுங்க!''

''தாம்பரம் தாண்டி வானகரம் சார்.''

''ஓ.கே. நான் கிளம்பறேன்.''

''ஒரு நிமிஷம் சார்.''

''என்ன, சொல்லுங்க?''

''இஃப் யூ டோண்ட் மைண்ட், நீங்க எனக்காக ஒண்ணு செய்யணும் சார்.''

''என்ன?''

''ஒரு சின்ன மந்திரம் சொல்லித் தரேன். பதினோரு தரம் உச்சரித்துவிட்டுப் பிறகு கிளம்புங்க சார்.''

''என்ன சங்கர்ராம் இது. நீங்ககூட மந்திரம், தந்திரம் எல்லாம் ஆரம்பிச்சுட்டீங்க. ஏற்கெனவே நாம் அதுல மாட்டிக்கிட்டுத் தவிக்கிறது போறாதா?''

''ஐயையோ. இது அந்த மாதிரி மந்திரமெல்லாம் இல்லே சார். வெறும் காரியசித்திக்குச் சொல்றது.''

''சொல்லுங்க பார்க்கலாம்.''

''இன்னஹுமின் சுலைமான்.''

''ஜோசப் மெக்சி ஆச்சரியமும் சிறிது அதிர்ச்சியும் கலந்து பார்த்தார். ''உங்க பேரு என்ன?'' என்று சம்பந்தமில்லாமல் கேட்டதும் சங்கர்ராம் விழித்தார்.

''சார்?''

''உங்க பேரு என்னய்யா?''

''சங்கர்ராம் சார்.''

''அய்யருதானே?''

''யூனிபாரத்துக்குள்ள பூணூல் இருக்கு சார்.''

''தான் யாரு?''

''கமிஷனர் ஆஃப் போலீஸ்.''

''அதைக் கேக்கலே. எந்த மதத்தைச் சேர்ந்தவன்?''



''கிறிஸ்துவ மதம்.''

''பின்னே என்னய்யா. ஒன்று உங்க ஜபம் சொல்லணும். இல்லேன்னா எங்க ஜபம் சொல்லணும். ரெண்டையும் விட்டு என்யா மூணாவது மதத்தின் ஜெபம்?''

''எனக்கு ஒரு முஸ்லீம் பெரியவர் சொல்லிக் கொடுத்தார் சார். இதுக்கு நிஜமாகவே சக்தியிருக்கு. சொல்லி விட்டுப் போனால் காரியம் நடக்குது.''

''ஜே. ஜே. ஆஸ்பிடல் போறதுக்கு முன்னாடி இதைச் சொல்லிட்டுப் போகலியா?''

அவரின் கேள்வி புரியாமல் ஒரு வினாடி தடுமாறிப் பின் அசட்டுச் சிரிப்பாகச் சிரித்தார் சங்கர்ராம். ஜோஸப் மெக்ஸி எழுந்து வந்து அவரின் தோளைத் தட்டிக்கொடுத்தார். அதில் தெரிந்த தோழமை சங்கர்ராமைப் பரவசப் படுத்தியது. கமிஷனர் போவதற்குள் பதினொரு முறை சொல்லிவிடவேண்டுமென்று மிக அவசரமாக 'இன்னஹுமின் சுலைமான்' சொல்ல—

ஏழாவது முறை வரும்போது ஜோசப் மெக்ஸியின் வண்டியின் பின்புற சிவப்பு விளக்கு தெருக்கோடியில் புள்ளியாக மாறி மறைந்து போயிற்று.

பன்னிரண்டு வாட் சீரான வெளிச்சத்தில் கருப்புப் பாம்பாக ரோடு பின்னால் மறைந்துக் கொண்டே போய்ச் செம்மண் எதிரில் இரண்டாய் விரிய முயற்சித்த இடத்தில் 'வானகரம் ஊராட்சி நல்வரவு,' என்று மஞ்சளும் கறுப்பும் கலந்த சிமெண்ட் போர்டு தெரிவித்தது. ஸ்ரீதரன் தம்பியாரின் வீட்டைக் கண்டுபிடிப்பதில் சிரமம் அவ்வளவாக இருக்கவில்லை. எங்கோ கோடியில் மிகத் தனியாக அம்போ என்று சின்ன வீடு. பத்தடிக்கு முன்னாலேயே வண்டியை நிறுத்திவிட்டுக் கீழே இறங்கித் தள்ளிக் கொண்டு போனார் ஜோசப் மெக்ஸி. வாசலில் நிறுத்திச் சத்தப்படுத்தாமல் ஸ்டாண்ட் போட்டு அழைப்பு மணியை

அழுத்தக் கையை உயர்த்தின போது அதற்கு அவசியமே இல்லாமல் கதவு தானாகத் திறந்து கொண்டது. ஒருக்களித்த இடுக்கில் பரட்டைத் தலையுடன் உத்தேசமாக வயது சொல்ல முடியாத ஒரு இளைஞன் முகத்தை மட்டும் வெளியில் நீட்டிக் கேட்டான்.

''யாரு, கமிஷனர் ஜோசப்மெக்ஸியா வந்திருப்பது?''

அசந்து போனார் 'மெக்ஸி'. எப்படித் தெரியும் இவனுக்கு! 'லப்டப்'பில் லேசாய் பயம் எட்டிப் பார்க்க ''ஆமாம்,'' என்று தலையாட்டினார்.

''உள்ளே வாங்க.''

இருட்டான நீண்ட தாழ்வாரத்து மூலை மூன்றாகப் பிரிந்து நடுவழியில் சின்ன அறை. குத்துவிளக்கின் மெல்லிய ஒளி, உள்ளே ஒரு மூலையில் கயிற்றுக் கட்டிலில் கறுப்புத் துப்பட்டியால் மூடிக்கொண்டிருந்த தாடி நரைத்த பெரியவர், ''வாங்க தம்பீ,'' என்றார்.

மெக்ஸி பதில் சொல்லவில்லை.

''உட்காருங்க. என் நிக்கறீங்க?''

இளைஞன் நகர்த்திப் போட்ட முக்காலியில் உட்கார்ந்தார் மெக்ஸி. கால் வினாடி பேசாமலிருந்து மெதுவாக ஆரம்பித்தார்.

''எனக்கு முக்கியமா உங்க...''

இடைமறித்தார் பெரியவர்.

''நீங்க போலீஸ் கமிஷனர் ஜோசப் மெக்ஸி. ரெண்டு கொலை சம்பந்தமா உங்க தரப்பில் எதுவும் பிடிபடாமல் இங்கே வந்திருக்கீங்க. சாந்திங்கிற பெண்ணோட உடம்பில் ஒளிஞ்சிட்டிருக்கிற பானர்ஜிங்கிறவனுடைய ஆவியைப் பற்றி விசாரிக்க வந்திருக்கீங்க. சரியா?''



ஜோசப் மெக்ஸி பேச்சடைத்து நிற்க ஸ்ரீதரன் நம்பியார் தொடர்ந்தார்.

''உங்க இன்ஸ்பெக்டர்லே ஒருத்தர் பிளான்செட் போட்டுப் பார்த்ததில் அதுல வந்த ஆவி என் பெயரைச் சொல்லி என் விலாசமும் தந்தது. அதை வச்சுகிட்டுத்தான் இப்போ என்னைக் கண்டுபிடிச்சீங்க. சரியா?''

வாழ்க்கையிலேயே முதல் தடவையாக இதிலெல்லாம் ஓர் ஆழமான நம்பிக்கை ஏற்பட ஆண்டு போனார் ஜோசப் மெக்ஸி. ஸ்ரீதரன் நம்பியாரின் திறமையில் தன் ஈகோவை விட்டுக்கொடுத்து மனசளவில் அடிமையாகிக் கேட்டார்.

''உங்களுக்கெப்படி இதெல்லாம் தெரியும்?''

''இதுவும் தெரியும். இன்னமும் கூடத் தெரியும். தெரியும்ன்றதைக் கூட நான் வேற யார்கிட்டேயும் சொல்றதில்லை. நீங்க கேட்காமலே சொன்னேன். ஆமா எல்லாத்தையும் நிச்சயமா தெரிஞ்சுக்க விரும்பறீங்களா?''

''ஆமாம்.''

''இதனால் எது நேர்ந்தாலும் சங்கடம் கூடாது.''

''இல்லை.''

''நல்லது. முதல்ல நான் சில கேள்விகள் கேட்கிறேன். நீங்க பதில் சொல்லுங்க. கொஞ்சம் கொஞ்சமாக அதிலிருந்து உங்களுக்கே விவரம் புரியும். என்ன?''

''சரி.''

''முதல் கேள்வி. உங்க பேரு?''

''ஜோசப் மெக்ஸி. அதைத்தான் நீங்களே சொன்னீங்...''

''உஷ். குறுக்குக் கேள்விகள் கூடாது. பதில் மட்டும் தேவை. அதுக்கு இஷ்டமிருந்தால் உட்காரலாம். இல்லேன்னா எழுந்து போயிடலாம்.''

''உட்கார்றேன்.''

''நல்லது. என்னிக்காவது ஒரு நாள் நீங்களும் இந்த உலக வாழ்க்கையை முடிக்க நேரிடும் இல்லையா? அதாவது நீங்க செத்துப் போன அப்புறம் உங்க உடம்பு வீட்டிலே இருக்கு. எல்லோரும் அழுதுகிட்டிருக்காங்க. உங்களுக்கு ரொம்ப வேண்டியவங்க, அதாவது அப்பா, அம்மா, மனைவி இதில் யாராவது உங்க உடம்பை எடுத்துப் புதைக்க வந்தால் அதை எப்படிச் சொல்றது?''

''பிணத்தைப் புதைக்க ஏற்பாடு பண்றதாகச் சொல்லுங்க.''

''நல்லது. சரியா விஷயத்துக்கு வரீங்க. அப்போ ஜோஸப் மெக்ஸின்ற பேரு உங்க உடம்புக்கா, இல்லை வேற எதுக்காவதா? உயிர் போனப்புறம் அதை யாரும் ஜோஸப் மெக்ஸியைப் புதைக்கிறதா சொல்றாங்களா, இல்லை பிணத்தைப் புதைக்கிறதா சொல்றாங்களா?''

''வாவ்! வெரிகுட் தியரி.''

''என்ன சொன்னீங்க?''

''ரொம்ப அருமையான தத்துவம்னு சொன்னேன்.''

''நல்லது. இப்போது எதாவது குற்றம் செஞ்ச ஒருத்தனுக்குத் தண்டனை வாங்கித் தரீங்க. அதாவது மூணு வருஷம் சிறைத் தண்டனைன்னு ஒரு பேச்சுக்கு வச்சுக்குங்க. ஆனா கைதி இரண்டு வருஷத்திலேயே எதாவது செஞ்சு தப்பிச்சிட்டு ஓடிப் போயிடறான். மறுபடி புடிச்சால் எப்படித் தண்டனை கொடுப்பீங்க?''

''இன்னும் அதிகமா தண்டனை கொடுப்போம். சிறையிலிருந்து தப்பி ஓடறது தப்பு இல்லீங்களா?''



''அது மாதிரித்தான் மனுஷ வாழ்க்கையும். அவனவனுக்கு இவ்வளவு நாள் இந்த உலகத்தில் மாட்டிட்டு உழலணும்னு இருக்கு. அதை மீறித் தற்கொலை பண்ணிக் கொண்டவங்க, கொலை செய்யப்பட்டவங்களெல்லாம் உடம்பு இல்லாமல் சுத்திக்கிட்டு இருப்பாங்க. விதிக்கப்பட்ட காலம் வரைக்கும் இருக்கிற உடம்பை அவங்களே கெடுத்துக்கிட்டதனால் கடவுள் அவங்களுக்கு வேற உடம்பு எந்த உருவத்திலேயும் கொடுக்க மாட்டாரு. கடவுளின் கருணை கிடைச்சால்தான் பன்றியாகவாவது பிறக்க முடியும். ஆக, மனுஷனாகப் பொறந்து அல்பாயுசிலே நேர்மையாக விதிக்கப்பட்ட காலம் முடியாமல் துர்மரணத்தில் செத்துப் போனவர்களுக்கு மனுஷனுக்குள்ள அத்தனை குணங்களும் இருக்கும். நிறைவேறாத ஆசைகளெல்லாம் இருக்கும். அதையெல்லாம் பலவீனமாக இருக்கிறவர்களுடைய உடம்புக்குள் புகுந்து நிறைவேத்திப்பாங்க. இப்போ சாந்தியோட உடம்புக்குள்ள புகுந்திருக்கிற பானர்ஜியும் அதைத்தான் பண்ணிக்கிட்டிருக்கான். ஆனால் இதுல சாதாரணத்தை விட ஒரு சிக்கல் அதிகமா இருக்கு. பானர்ஜி பானர்ஜியாக சாந்தியோட உடம்புக்குள் போகலே. விஜய் பாணின்னு ஒரு சாத்தான் பானர்ஜியை வசியம் பண்ணிச் சாந்தியோட உடம்புக்குள் ஏத்தியிருக்கான்.''

''சாத்தான்னு சொல்றீங்க. ஆவின்னு சொல்றீங்க. என்ன வித்தியாசம்?''

''ஜூன் மாதம் ஆறாம் தேதி ஆறு மணிக்கு விடியற் காலையில் கெட்ட நினைப்புள்ள பெண்களுக்குப் பிறக்கும் குழந்தை சாத்தானாகப் பிறக்கும். இதுவும் கடவுளின் ஏற்பாடுதான். நல்லது கெட்டதுன்னு இரண்டு இருந்தால் தானே உலகம் சுற்றும். மலைன்னு ஒன்று இருந்தா மடுன்னும் ஒன்று இருக்கணும் இல்லே. இதைத்தான் உங்க மதத்துலே 666ன்னு சொல்லுவாங்க. இந்த 666இல்

பிறக்கிறவங்க விதிக்கப்பட்ட ஆயுசுலேயே இருக்கிற அத்தனை பாவச் செயல்களையும் தானாகப் பண்ண ஆரம்பிச்சுடுவாங்க. இவங்க கடவுளின் சந்நிதியை அடையற நிலையை நினைச்சுப் பார்க்க மாட்டாங்க. இப்படிப் பட்ட நிலையை இவங்களாகவேதான் வளர்த்துக்கிறாங்களே தவிரக் கடவுள் வளர்க்கல்லே. இன்னும் சொல்லப் போனால் சிறப்பான நிலையை அடைந்து வாழ்க்கையை வெல்றது அவங்கவங்க கையிலேதான் இருக்கு. ஆனால் சோம்பேறித்தனமா எல்லோரும் கடவுள் மேலே பாரத்தைப் போடறாங்க.

''உதாரணத்துக்கு நல்ல ரேடியோவாக ஒண்ணை வாங்கி உங்க கையிலே தரேன்னு வச்சுக்குங்க. ரேடியோவை தரத்தான் என்னாலே முடியும். அதை உபயோகப்படுத்தற விதம் உங்க கையிலேதான் இருக்கு. இல்லையா? கடவுளால் முடிஞ்சது நல்ல மனித உருவங்களைப் படைக்கிறதுதான். செயல், சிந்தனையெல்லாம் நாம்தான் வளர்த்துக்கணும் இல்லையா?''

நிஷேரென்று அதிகம் களைத்துப் போனார். ஜோஸப் மெக்ஸி இந்தப் பிரசங்கத்தைக் கேட்கவா இங்கே ஓடி வந்தோம் என்று தோன்றிற்று. ஆனாலும்—

''நீங்க சொன்ன 666 பற்றிக் கதைகளிலே படிக்கலாம். இங்கிலீஷ் சினிமாவில் பாக்கலாம். ஆனால் நிஜத்திலே நம்ப முடியலையே?''

''நம்ப முடியலையா? உங்களை நம்ப வைக்க ஒண்ணு சொல்றேன். செய்யறீங்களா?''

''சொல்லுங்க.''

''இங்கிருந்து அரை மைல் தள்ளி இடுகாடு ஒன்று இருக்கு. கூடவே உங்க கல்லறையும் பக்கத்திலே இருக்கு. அங்கே போய், கோடியில் பிரான்சிஸ்னு ஒருத்தன்



கல்லறை இருக்கும். சிரமத்தைப் பார்க்காமல் நேரா போய்ப் பார்த்துட்டு வாங்க...''

வாழ்க்கையில் முதல் தடவையாக யாரும் சொல்லாமல் பெரியவர்களின் வற்புறுத்தல் இல்லாமல் தன் ஈகோவை முழுவதுமாக அழித்து விட்டுப் பெரியவரின் காலில் விழுந்து வணங்கி வெளியில் வந்து சற்றுத் தள்ளி ஓர் ஓரமாக நிறுத்தியிருந்த புல்லட்டைக் கிளப்பினார். முதலில் கிளம்ப மறுத்துச் சிணுங்கி, பின் மெல்ல நகர்ந்தது.

ஸ்ரீமதி கல்பனா மகாதேவன் அசைவற்று அப்படியே உட்கார்ந்திருந்தார். முகம் வெளிறிக் கிடந்தது. நீண்ட நாட்களாகத் தூங்காத கண்களில் சட்டென்று ஒரு சோகம் அப்பிக் கொண்டது தெரிந்தது. டாக்டர் ஜெயகுமாரும், தேவசேனாவும் தங்கள் கவலையைக்கூட மறந்து அவளுக்கு ஆறுதல் சொன்னார்கள். அவளைச் சிரிக்க வைக்க, குறைந்த பட்சம் முகத்தில் டன் கணக்கில் தேங்கிக் கிடக்கும் பயத்தையும் வருத்தத்தையும் குறைத்து மெலிசாகப் புன்னகை புரிய வைக்க முயன்றார்கள்.

''மிஸஸ் மகாதேவன், நான் ஏன் சிகரெட் பிடிக்கிறேன் சொல்லுங்க?''

அவரது கேள்வியின் அர்த்தத்தைப் புரிந்து கொள்ள முடியாதவளாக கல்பனா மெலிசான குரலில் சொன்னாள்:

''தெரியவில்லையே? மனசுல இருக்கிற வருத்தத்தை மறக்கவா?''

''சேச்சே! நான் பிடிக்காட்டி அது கீழே விழுந்துடாதா, அதனால்தான்.''

அந்த அறுவை ஜோக்கிற்கு அவள் சிரிக்காமல் பாக்கவே அதற்கு மேல் என்ன செய்வதென்று புரியாதவர்

களாக ஜெயகுமாரும் தேவசேனாவும் எழுந்து கொண் டார்கள்.

''போகலாமா மிஸஸ் மகாதேவன்?''

''ம். ஆனால் இன்னும் வரலியே?''

''அவரை நேராக நீங்க தங்கியிருக்கிற இடத்துக்குத் தான் வரச் சொல்லியிருக்கேன். நீங்க போறதுக்கும் அவர் வர்றதுக்கும் சரியாக இருக்கும்.''

''அவர் பேரு என்ன சொன்னீங்க?''

''பரசுராமன்.''

## 12

பரசுராம் வந்து ப்ரெஷ்லைம் குடித்து உயிலை எழுத கொண்டு வந்து கோடிட்ட இடங்களை மட்டும் கண்ணெதிரில் நிரப்பிக் கிட்டத்தட்ட அரைநாளுக்கு மேல் செலவழித்து விட்டுப் போன பின்பு மீண்டும் தனிமை. கண் களை கொஞ்சம் மூடினால் காட்டுத்தனமான கத்தலில் சாந்தி. பின்னாலேயே விஜய்பாணி. திடுக்கிட்டு அலறி எழுந்து கொள்வாள் கல்பனா மகாதேவன். உடம்பு வியர்வையில் தெப்பமாக நனைந்து போயிருக்கும். அதன் பின் தூக்கம் வராது.

''தெய்வமே, என்னை ஏன் இப்படி வதைக்கிறாய்?''

ஒவ்வொன்றாக நினைத்துப் பார்த்தாள். மனம் அறிந்து பின்தூங்கி முன் எழுந்து பத்தினி சேவை செய்யவில்லையா? ஊரிலுள்ள வசதியற்ற குழந்தைகளையெல்லாம் ஐந்து பைசா செலவில்லாமல் பட்டப்படிப்பு படிக்க வைக்க உதவவில்லையா? அனாதை ஆசிரமம் கட்டித்



தொண்டு செய்யவில்லையா? எங்கெல்லாம் வெள்ளமும் பஞ்சமும் தட்டுப்பாடும் ஏற்படுகிறதோ அங்கெல்லாம் போய் முந்தானையை இழுத்துச் செருகிக் கொண்டு கொஞ்சம்கூடச் சிரமம் பார்க்காமல் வேலையில் இறங்கவில்லையா? அப்படிப்பட்டவளுக்கு ஏன் இந்தத் தண்டனை!

நினைக்க நினைக்க கல்பனா மகாதேவனின் மனக் குழப்பம்தான் அதிகமாயிற்று. வயிற்றைப் புரட்டிச் சிறிது நேரத்திற்கெல்லாம் வாஷ் பேஸினருகில் ஓடிப் போய்ப் பித்தமாக வாந்தி எடுத்தாள். அப்படியே ஷவரடியில் உடையுடன் நின்று நீண்ட நேரம் நனைந்தாள். வெள்ளி ஊசிகள் தலையிலும் உடம்பிலும் சில்லென்று இறங்கி மெல்ல மெல்ல அவளை அமைதிப்படுத்த—

குளியலறையை விட்டு வெளியில் வந்தபோது கல் பனா மகாதேவன் முந்தின மனநிலையிலிருந்து முற்றிலும் மாறிப் போயிருந்தாள். பயமும், குழப்பங்களும் அகல ஓரளவு உற்சாகமாகக்கூட இருந்தாள். உதடுகள் லேசாய் ஓர் இந்திப் பாடலை உச்சரிக்க உடை மாற்றினாள். நனைந்து போன தலையைத் துவட்டி ட்ரையரால் காய வைத்துக் கண்ணாடியில் பார்த்துக் கொண்ட போது நாற்பத்தி இரண்டு வயதில் இளமை இன்னும் அபாரமாய் மீதமிருப்பது தெரிய மகாதேவனின் ஞாபகம் வந்தது. இப்படிக் குளித்துவிட்டு வந்து கண்ணாடி எதிரில் நின் றால் அவர் நிச்சயம் சும்மா இருக்க மாட்டார். பின்பக்க மாக வந்து இறுகத் தழுவிக் கொள்வார்.

அதெல்லாம் ஞாபகத்திற்கு வந்து கண்ணோரத்தில் பொட்டாக நீர் துளிர்த்தபோது மேற்கொண்டு துயரப் படாதவாறு டெலிபோன் மணி ஒலிக்க, கல்பனா ரிஸீவரை எடுத்தாள்.

''ஹலோ, நான் தேவசேனா பேசறேன். இப்போ கிளம்பி அங்கே வரேன். நீங்க ரெடியா இருங்க. உங்களை ஒரு இடத்துக்கு அழைச்சிட்டுப் போகப் போறேன்.''

''எங்கே?''

''நேர்ல வந்து சொல்றேன்.''

நேரில் பார்த்தபோது தேவசேனாவிற்கு கல்பனா மிகவும் தெளிவடைந்திருப்பது போலத் தோன்றிற்று. மீண்டும் பழைய விஷயங்கள் எதையும் ஞாபகப்படுத்தாத வகையில் பேச வேண்டுமென்ற ஜாக்கிரதை உணர்வுடன் மெதுவாகக் கேட்டாள்.

''எனக்குத்தான் காத்திட்டிருக்கீங்களா?'' இல்லே வேற எங்கேயாவது போகக் கிளம்பினீங்களா?''

''எங்கே போறது தேவசேனா? அறைக்குள் தனியாக இருக்கவே பயமா இருக்கிறபோது வெளியில் எங்கே தனியாய்ப் போக முடியும்? சரி, இப்போ எங்கேயோ அழைச்சிட்டுப் போறேன்னீங்களே, எங்கே?''

''எக்மோரில் கெங்கு ரெட்டித் தெருவில் ஒருத்தர் ரொம்ப நல்லாக் குறி சொல்றாராம். எவல், சூனியம் அத்தனையையும் எடுத்துடறாராம். அவர்கிட்டே போய் குறிகேட்டு நம்ம பிரச்னைக்கு முடிவு காணலாமென்று தோணிந்து. நீங்க என்ன சொல்றீங்க?''

''எத்தனையோ பார்த்தும் பலனில்லாமல் போயாச்சு. இதை மட்டும் விட்டு வைப்பானேன். வாங்க போகலாம்.''

இரண்டு பேரும் போனபோது கெங்குரெட்டித் தெருவே கூட்டத்தால் நிரம்பிப் போயிருந்தது.

இவர்கள் குறி கேட்பவரை நெருங்கினபோது மணி கிட்டத்தட்ட ஆறரையாகி இருட்டிப் போயிருந்தது. இவர்கள் பக்தியாய் அவரின் எதிரில் சப்பணமிட்டு உட்கார அவர் காசு பணம் வாங்காமல் தட்டிலிருந்து ஓர் எலுமிச்சம் பழத்தை மட்டும் கையில் எடுத்து வைத்துக் கொண்டார். சட்டென்று தலையை உயர்த்தி மிகவும்



வருத்தப்படுபவராக கல்பனா மகாதேவனைப் பார்த்தார். ஒருவினாடி அதே மாதிரி பார்த்துக் கொண்டிருந்துவிட்டுப் பின் பேசினார்.

''உங்களுக்காக நான் வருத்தமும் வேதனையும் படுகிறேன். தற்போது கிரக நிலைகள் தங்களுக்கு அதிகத் தோதாக இல்லை. எந்த நிமிடமும் எது வேண்டுமானாலும் நடக்கலாம். நீங்கள் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். நான் ஒரு எலுமிச்சம் பழத்தை மந்திரித்துத் தருகிறேன். அதை எப்போதும் உங்களுடனேயே வைத்துக் கொண்டிருங்கள். எங்கே போனாலும் கூடவே எடுத்துக் கொண்டு போங்கள். வீட்டில் இருக்கிறபோது கூடக் கையிலோ இடுப்பிலோ இருக்கட்டும். இந்தப் பழம் கையில் இருக்கிறவரை உங்களை எந்த ஆபத்தும் நெருங்காது. தேவி துர்க்கா பரமேஸ்வரி உங்களிடமே இருப்பாள். அதனால் கவலைப்படாமல், சென்று வாருங்கள். நல்லதே நடக்கும்.''

கல்பனா மகாதேவன் கை நீட்டிப் பழத்தை வாங்கிய போது அவர் அவளின்மேல் கைப்பட்டுவிடாத ஜாக்கிரதை உணர்வுடன் மேலிருந்து போட்டதும் அந்த எலுமிச்சம் பழம் கல்பனா மகாதேவனின் கையில் விழுந்து உருண்டு உடனே கீழே விழுந்து போயிற்று. அதைப் பார்த்து அவர், ''தேவி!'' என்று முனகினார். கண்களை மூடி ஒரு வினாடி பிரார்த்தனை செய்தார். பின்னர் கல்பனா மகாதேவனைப் பார்த்து, ''எதை வாங்குகிற போதும் இரண்டு கைகளாலும் வாங்க வேண்டும் அம்மா'' என்றார்.

''ஸ்வாமி, பயமாக இருக்கிறது. எனக்கு ஒன்றும் ஆகாதே?''

''தேவி அனுக்கிரம். அவள் என்ன நினைக்கிறாளோ அதுதான் நடக்கும். அதனால் பாரம் முழுவதையும் அவள்மீது போட்டுவிட்டு நீ தைரியமாகப் போ.''

கல்பனா மகாதேவன் நமஸ்கரித்து எழுந்திருக்க தேவசேனா பேச ஆரம்பித்தபோது அவர் தடுத்தார்.

''உனக்கு அப்புறம் சொல்கிறேன் தாயே. இப்போது வேண்டாம் விட்டுவிடு.''

தேவசேனா மறுத்து ஒருவார்த்தை பேசாமல் வணங்கி எழுந்து கொண்டாள். இரண்டு பேரும் தேவசேனாவின் வீட்டை அடைகிறவரை மௌனமாகவே வந்தார்கள். சமையற்காரரை இரண்டு கப் காப்பி கொண்டுவரச் சொல்லி அதே மௌனத்தில் பருகினார்கள். அதன்பின் கல்பனா கேட்டாள்.

''அப்போ, நான் வரட்டுமா?''

''நீங்க ஒட்டல் ரூமுக்குப் போய்த்தான் ஆகணுமா?'' இங்கேயே இருக்கக் கூடாதா?"

''இல்லே. போய் எல்லாச் சாமான்களையும் எடுத்திட்டு ஸெட்டில் பண்ணிட்டு வந்துடறேன்.''

''எப்போ வர்றீங்க?''

''இன்னும் ஒரு மணி நேரத்திலே."

''நானும் வேணும்னால் கூட வரட்டுமா?''

''வேணாம். எதுக்கு? நானே இதோ வந்துடப் போறேன். அதுவுமில்லாமல் இப்போ டாக்டர் வர்ற நேரமாயிட்டுது இல்லையா?"

டாக்ஸி பிடித்து ஒட்டல்வாசலில் இறங்கி அறைக்குள் நுழைந்தபோது அறை முழுவதும் துர்வாசனை வீசிற்று. எங்கிருந்து வருகிறதென்று தெரியாத பிணம் எரிகிற வாடை அடித்தது. ரூம் சர்வீசைப் போனில் கூப்பிட்டுச் சொல்லிப் பாத்ரூம் போவதற்காகக் கையிலிருந்த எலுமிச்சம் பழத்தை மேஜைமீது வைத்துவிட்டுக் குளியலறைக்குள் நுழைந்த மறுவினாடி அது நிகழ்ந்தது.



படுக்கை அறைக்குள்ளிருந்த பீரோ அவளை நோக்கி மெதுவாக நகர ஆரம்பிக்க ஏதோ ஓர் உந்துதலினால் தூண்டப்பட்ட கல்பனாமகாதேவன் சடாரென்று திரும்பிப் பார்த்து இனம்புரியாத கலவரத்தோடு எலுமிச்சம்பழத்தை எடுக்க அறைக்குள் ஓடினபோது அறை நடுவிலிருந்த பெரிய தேக்குமரக் கட்டில் அவளைத் தடுக்கிற பாவனையில் குறுக்கில் நகர்ந்துவர, என்ன செய்வதென்று புரியாமல் அவள் கீழே உட்கார்ந்து, ''என்னை யாராவது காப்பாற்றுங்களேன்,'' என்று உரத்த குரல் கொடுக்க முயல—குரல் உள்ளுக்குள் அடங்கி அடிவயிற்றுக்குக் கீழே போய் முடங்கிக் கிடக்க, கத்துகிற சக்தியற்று அவள் முழங்காலில் முகத்தை பதித்துக் கொண்டு அழ ஆரம்பித்த மறுவினாடி அந்தப் பெரிய பீரோ துளிகூடச் சத்தமின்றி அவள்மீது சரிய—

அதனடியில் உடலின் ரத்த ஓட்டம் தாறுமாறான வேகத்தில் ஓட, இருதயம் அந்த வேகத்தைக் கட்டுப் படுத்தத் திணறித் திணறி, முக்கி, முனகி...

பின், மெதுவாக நின்று போயிற்று.

ஊர் கடைசியில் கிறிஸ்துவ இடுகாடிருந்தது. மிகுதியான இருட்டில் நுழைவாயில் சுத்தமாகத் தெரியவில்லை. கையிலிருந்த சின்ன பென் டார்ச் கொஞ்சமாக இடம் காண்பித்தது. சின்ன—ரொம்பவும் சின்னதாக மதில் சுவரைத் தாண்டி லாகவமாக உள்ளே குதித்தார் ஜோசப் மெக்ஸி.

இதயம் நிமிடத்துக்கு எழுபத்திரண்டு தடவைகளுக்கு மேலும் துடிக்கலாமாமென யோசித்ததில், கைகால்கள் இவரையும்மீறி மிகவேகமாக உதறின. கையிலிருந்தசிறிய பென் டார்ச் கல்லறைப் பெயர்களைப் படிக்க உதவியது. ஜான், பீட்டர், க்யூரி, எலிஸபெத், மாக்ஸ்வெல், வின்ஸென்ட், மெரிட்டா, கான்ஸ்டன் டைன், ஆரோக்கிய

மேரி...கடைசியாக அவர் தேடி வந்த கல்லறை. பிரான்ஸிஸ்—ஜான் பிரான்ஸிஸ் ஸேவியர்...உடைந்து சிதிலமாகிப் போன ஸ்ரீதான் நம்பியார் சொன்ன கல்லறை...

மெக்சிக்கு மயிர்க்கால்கள் குத்திட்டு நின்றன. முதுகுத் தண்டு சிலிர்த்தது. ஜான் பிரான்சிஸ் ஸேவியர். பிறப்பு 1923 ஜுன் '6'ம் தேதி காலை 6 மணி. இறப்பு 1977 ஜுன் 6ம் தேதி மாலை 6 மணி. இவர் பார்த்துக்கொண்டிருந்த போதே கல்லறையின் முகப்பில் சின்ன விரிசல் ஏற்பட்டு ரத்தம் வழிய ஆரம்பித்தது. அதைப் பார்த்ததும் முன் நெற்றியின் இரு பொட்டுக்களிலும் நரம்புகள் பட்பட்டென்று துடிக்க மெக்சி கண்களை கசக்கி மீண்டும் பார்த்தார். 1977ல் புதைக்கப்பட்ட கல்லறையில் புதிதாக ரத்தம்! இது எப்படி சாத்தியம்?

பீடத்தைக் காலால் பலம் கொண்ட மட்டும் உதைத்தார். அந்த காத்திரமான ஷூவின உதையை வாங்கிக்கொண்டு பீடத்தின் மேற்கல் மெதுவாக அசைந்து கொடுத்தது. சாவிக்கொத்திலிருந்த ஸ்வீடன் பேனாக்கத்தியை உயிர்பெறச் செய்து மூடியிருந்த காடு முரடான தரை சிராய்ப்பை ஏற்படுத்தி எரிய வைத்தது. எங்கோ தூரத்தில் நாய் ஊளையிடுகிற சத்தம், அத்தனை தைரியசாலியான அவரையே பயமுறுத்தியது. தன்னுடைய முழுச் சக்தியையும் சேர்த்து மூச்சுப் பிடித்து மேலே மூடியிருந்த கல்லைப் பெயர்த்த மறு வினாடி...

கன்னத்தைச் சின்னதாக மின்னல் தாக்க எகிறிப்போய் நாலடி தள்ளி விழுந்தார். மிகவும் வலுவான பிரயோகம். மெல்ல எழுந்து உட்கார்ந்து கன்னத்தைத் தடவியபடி யாராவது தென்படுகிறார்களா என்று பார்த்தார். ஒருவரும் தெரியவில்லை. உடம்பின் நடுக்கத்தையும், மனத்தின் நடுக்கத்தையும் தவிர்க்க எழுந்து நின்று கை கால்களை உதறிவிட்டுக் கொண்டார் இரண்டு தீக்குச்சிகளை ஒன்றாக உரசி, கிடைத்த வெளிச்சத்தில் பார்த்தபோது



உள்ளே சிதைந்த நிலையில் மகா கோரமாக எலும்புக்கூடு இருந்தது. எலும்புக் கூட்டின் மண்டை யோட்டைப் பிடித்துக் கல்லறையைவிட்டு வெளியில் எடுக்க முயன்றதில் சிதிலமடைந்த சில எலும்புகள் மளமளவென்று முறிந்து எலும்புக்கூடு கல்லறைக்குள்ளேயே விழுந்தது. தனியாய் நின்ற மண்டையோட்டைத் தடவித் தடவிப் பார்த்தார். கையில் கபாலத்தில் கிறுக்கினாற்போல் ஏதோ இருந்தது. எழுத்து மாதிரி தெரிந்தது. படிக்க இயலவில்லை. சமயத்தில் பென்டார்ச் வேலை செய்ய மறுத்தது.

சலித்துப் போய் மீண்டும் மண்டையோட்டை எடுத்து விரல்களால் நெருடினார். இந்த முறை தீக்குச்சி உதவியதில் அந்தச் சின்ன வெளிச்சத்தில் தலையின் பின்பக்கத்தில் 666 என்று ஏதோ கிறுக்கியிருந்தது. என்ன மொழி அது? அவசரமாக இன்னொரு தீக்குச்சியைப் பற்ற வைத்தார். மீண்டும் அதே 666. என்ன அது? ஒருவேளை ஆறு ஆறு ஆறாக இருக்குமோ? அப்படி இருக்கிற பட்சத்தில் அதற்கு என்ன அர்த்தம்? சட்டென்று அவருக்கு ஏதேதோ நினைவிற்கு வந்து கிலி நெஞ்சைக் கவ்விக்கொண்டது. இப்போது நாயின் ஊளை மிக அருகில் கேட்கவே மீண்டும் ஒரு முறை தான் பார்த்ததை நிச்சயப் படுத்திக் கொள்ளத் தீக்குச்சியை உரசினபோது அவரின் இதயம் வேலை செய்வதை நிறுத்தி உடம்பின் ரத்தம் முழுவதும் உறைந்தது போலாயிற்று.

சற்றுமுன் கல்லறைக்குள் விழுந்த எலும்புக்கூட்டிற்குப் பதிலாக இப்போது ஒரு மனிதன் பலத்த காயங்களோடு நெஞ்சில் செருகின கத்தியினால் ரத்தம் சொட்டச் சொட்டத் துடித்துக் கொண்டிருந்தான். தான் பார்ப்பது பிரமையா? நிஜமா? எலும்புக்கூடு எப்படி மனிதனாக மாற முடியும்? கீழே உட்கார்ந்து கல்லறைக்குள் கைவிட்டுத் தூக்கி அந்த மனிதனைக் காப்பாற்ற முயன்ற போது அவரது மார்பில் பலமாக அடி விழுந்தது. பொறி கலங்கிப்

போனார். எழுந்திருப்பதற்குள் காலால் விலாப்புறத்தில் யாரோ உதைத்தார்கள். இடறிக் கீழே விழ மறுபடி அதே காலால் வயிற்றில் உதை...

இனிமேல் அசட்டுத் தைரியமாகச் சமாளிக்க முயற்சி செய்யக் கூடாது. உயிருக்கு ஆபத்து. அடுத்த உதையை எதிர்பார்த்து மிக லாவகமாக நகர்ந்து எழுந்து கண்மண் தெரியாத வேகத்தில் ஓட ஆரம்பித்தார். ஓடுகிற வேகத்தில் எதிரில் யார் மீதோ மோதிக் கீழே விழ, காதருகில் பளிச்சென்று 'கேடுகெட்டவனே!' என்கிற மனிதக் குரல்—

மெக்சி தன் மூச்சத்தனையையும் திரட்டி எதிரில் தெரிந்த சின்ன மதில் சுவரில் கைவைத்து ஊன்றி அப்படியே ஒரே தாவலில் தாண்ட முயற்சித்ததில் கால் இடறி நல்ல வேளையாக இடுகாட்டின் வெளிப்பக்கத்தில் விழுந்தார். அதே வேகத்தில் புரண்டு எழுந்து அருகில் நின்ற புல்லட் வாகனத்தை உதைத்துக் கிளப்பி எறி உட்கார்ந்த போது—

அது எஜமான விஸ்வாசத்தை மறக்காமல் சமர்த்தாய்க் கிளம்ப, வேகத்தைக் குறைக்காமல் நேராக ஸ்ரீதரன் நம்பியாரின் வீட்டு வாசலில் நிறுத்தி ஸ்டாண்ட் போட்டு விட்டு உள்ளே ஓடினார். தாகம், பயம், அதிகரித்த இதயத் துடிப்பு. தெப்பமாக வியர்வையில் நனைந்த உடம்பு. சந்தேகம், கோபம், வெறி எல்லாம் ஒன்று சேர்ந்து அவரைப் பைத்தியமாக அடித்திருந்தது.

உள் அறையில் ஸ்ரீதரன் நம்பியார் உட்கார்ந்திருப்பது தெரிய அங்கு ஓடிச் சென்ற மெக்சி அடுத்த வினாடி கால்கள் தரையிலிருந்து நழுவிச் செல்ல நம்பியாரின் எதிரில் அப்படியே கீழே சாய்ந்தார்...

இன்னும் அந்த ஒற்றைச் சிவப்புப் புள்ளியும் காற்றில் கரையும் வரை காத்திருந்தார். பின்பு உத்தேசமாக ஆக்சில் எங்கு முறிந்து விழுந்திருக்கும் என்று சாலையின் இரண்டு பக்கமும் பார்த்துக் கொண்டே நடந்தார் சங்கர்ராம்.



ரோடிலிருந்து சற்றுத் தள்ளி முட்செடியில் பக்கவாட்டில் டயர் உருண்டு சரிந்திருப்பது தெரிந்தது. அருகில் போய் எடுத்துப் பார்த்தார். ஜீப் டயர்தான். எந்த விதமான சேதாரமும் இல்லை. பின் எப்படி ஜீப்பிலிருந்து கழன்று விழுந்தது.

அவருக்குப் புரியவில்லை. யோசிப்பதைக் கைவிட்டு டயரை உருட்டிக் கொண்டே ஜீப் வரை வந்து வயர்லெஸ்சில் ஆஸ்பத்திரி நிலவரம் பற்றிக் கேட்டார். சாந்தியினால் புதிதாக வேறு பிரச்னைகள் எதுவும் இல்லை என்றார்கள். நல்ல வேளையாக இன்னொரு கொலை நிகழவில்லை. நிம்மதித்தார். தனியாகப் பின்பக்கத்தில் மாட்டியிருக்கும் ஸ்பேர் டயரை ஸ்பானரின் உதவியோடு பொருத்தினார்.

சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டபோது கண் லேசாகச் செருகிற்று. தூங்கிக் கிட்டத்தட்ட நான்கு நாட்களாகி விட்டன. இனிமேல் கண்களை மூடாமல் இழுத்து நிறுத்துகிற திராணி இல்லாமற் போகவே பாதி புகைத்த சிகரெட்டை மனசில்லாமல் விசிறிப் போட்டு ஜீப்பில் எறிப் பின்பக்கம் படுத்து நிச்சிந்தையாய் கண் மூடின பத்து நிமிடத்திற்கெல்லாம் ஈஸ்ட்மேன் கலரில் கனவு வந்தது. பச்சைப் புல்வெளியில் வெள்ளைக் கவுனுடன் சாந்தி ஸ்லோமோஷனில் ஓடி வருகிறாள். கனவிலேயே மனசுக்குள் பாரதிராஜாவுக்கு நன்றி சொன்னார்.

அவரருகில் வந்து கை கோர்த்துக் கொண்டு,

''சங்கர்ராம், வர்றீங்களா. அந்த நீர்வீழ்ச்சி பக்கம் போகலாம்...'' என்றாள் சாந்தி.

''நீ கூப்பிட்டால் எங்கேயும் வருவேன் சாந்தி.''

நீர் வீழ்ச்சியை நெருங்கினதும், ''எங்கே, இதுல குதிங்க பார்க்கலாம்?''

அவன் சரேலென்று அவரின் முதுகுப் பக்கம் கை வைத்துத் தள்ள, பிரளயமாகப் புரளும் வெள்ளை நுரைகளுக்கு மத்தியில் விழுந்து உயிருக்குப் போராடிக் குடம் குடமாக நீர் குடித்து...

"சார்... சார்..."

யாரோ தோள் பட்டையைப் பிடித்து குலுக்கினார்கள். சடாரென்று விழித்துக் கொண்டார். நுரை வெள்ளமோ நீர்வீழ்ச்சியோ சாந்தியோ இல்லை. மாறாக எதிரில் ஓர் ஆள் நின்று கொண்டிருப்பது முதலில் மங்கலாக அவுட் ஆஃப் போகசில் ஆரம்பித்துப் பிறகு முழுசாகத் தெரிந்தான்.

யார் இவன்? எங்கேயோ பார்த்திருக்கிறேனே, எங்கே?

அந்த மனிதன் சங்கர்ராமைப் புரிந்து கொண்டவனாகப் பேசத் தொடங்கினான்.

"வானகரத்துலேருந்து நடந்தே வரேன், மூணு மணி நேரம் முன்னால்தான் விபத்துல கால் எலும்பு உடைஞ்சு போச்சு. வானகரம் ரொம்பத் தள்ளி இருக்கிறதால் அங்க ஆட்டோ, டாக்சி, பஸ் எதுவும் கிடைக்காது சார். சிரமப்பட்டு இவ்வளவு தூரம் நடந்தே வந்துட்டேன். இந்தச் சமயத்துல நீங்க கொஞ்சம் ஹெல்ப் பண்ணினீங்கன்னா வாழ்க்கை முழுதும் மறக்க மாட்டேன் சார்."

சங்கர்ராம் சந்தேகக் கண்களோடு அவனின் காலைப் பார்த்தார். வலது முட்டிக்குக் கீழே நசுங்கி உருத்தெரியாமல் இருந்தது. ரத்தம் வழிந்து பாதம் வரை சிவப்புக் கோடுகளை ஓட விட்டிருந்தது.

உடனே தயங்காமல் அவன் தோளில் கைபோட்டு, "வாங்க" என்று ஜீப்பில் ஏற உதவி செய்து தன் பக்கத்தில் இருத்திக் கொண்டார்.



இவனை எங்கே பார்த்திருக்கிறோம்? ஆக்ஸிலேட்டரில் இருந்து காலை எடுக்காமலே திரும்பிப் பார்த்தார்.

ஆம் இதே முகம், இப்போதுதான், இந்த ஒரு வாரத்திற்குள்ளாகத்தான் யாரோ அறிமுகப்படுத்தினார்கள். யார்?

ஜே. ஜே. ஆஸ்பத்திரி நெருங்குகையில் எதிரில் பளீரிட்ட இரண்டு ஹெட் லைட்டுகள் இவரை நோக்கி அசுர வேகத்தில் திரும்ப, இவரும் முழு சக்தியோடு ஜீப்பை ஒடித்து அப்படியே திருப்பி எந்தவித விபத்தும் நிகழாமல் சமாளித்து மண் தரையை விட்டு மறுபடியும் தார் ரோடிற்கு வந்து பார்த்தபோது—

பக்கத்தில் உட்கார்ந்திருந்த அந்த ஆளைக் காணவில்லை.

அவருக்குப் பகீரென்றது. இவ்வளவு வேகமாக ஒடித்துத் திரும்பின ஜீப்பிலிருந்து குதிக்கக்கூட முடியாதே. பின் எப்படி மறைந்தான்? லாரியின் மீது மோதுவதைத் தவிர்க்க யத்தனித்த சமயத்தில் குதித்திருப்பானோ?

சட்டென்று நினைவுக்கு வர அடிவயிற்றைப் புரட்டியது. பால் அலெக்ஸாண்டர் சிறையிலிருந்து விடுதலை பெற்று, விதி ஜே. ஜே. ஆஸ்பத்திரி காம்பவுண்ட் சுவரை எகிறிக் குதிக்கச் சொல்ல ஆம்புலன்ஸ் வானில் அரைபட்டு உயிரை விட்டவன்.

அவன் எப்படி உருவமாக வந்தான்? எப்படிப் போனான்? அவனின் கால் பூமியில் பதிந்ததா? எதற்காகத் தூங்கிக் கொண்டிருந்தவனைத் தட்டி எழுப்பி, கால் உடைந்த கதை சொல்லி ஜீப்பை வேகமாக ஓட்ட வைத்து எதிரில் ராட்சஸத்தனமாக லாரியை வரவழைத்து...

இவர்களின் அடுத்த இலக்கு நானா?

குப்பென்று வியர்த்தது சங்கர்ராமிற்கு. ஸ்டியரிங்கைப் பிடித்திருந்த கரங்கள் நடுங்கின. சட்டென்று பிரேக் போட்டு இடது பக்க ஓரமாக ஒரு மரத்தடியில் நிறுத்தினார்.

''இன்னஹுமின் கலைமான்,''

''இன்னஹுமின் கலைமான் இன்னஹு...''

மூன்று சொன்னபோதே பாவாவின் குரல் காதருகில் கேட்டது.

''போப்பா. நான் இருக்கேன்.''

உடம்பு சிலிர்க்க வாய்விட்டுக் கேட்டார். ''என்ன பாவா சொன்னீங்க?''

''நீ போ. நான் இருக்கேன்.''

பாவாவிற்கு மனதிற்குள் நன்றி சொன்ன போது கூடவே இன்னொரு விஷயமும் இடறிற்று.

'இது சாத்தியம் என்கிறபோது நடந்துபோன மற்ற விஷயங்கள் எல்லாம் ஏன் சாத்தியமாக முடியாது? சற்று முன் பக்கத்தில் உட்கார்ந்து எதிரில் வந்த லாரியில் மோத வைக்க இருந்த அந்த பால் அலெக்ஸாண்டர்...பென்சிலைக் கத்தியாக மாற்றி டாக்டர் பெஞ்சமினைக் கொலை செய்த சாந்தி...'

உடனே மிக அவசரமாக ஜீப்பை கிளப்பினபோது ஒயர்லெஸ் உயிர் பெற்று அவரை ஆஸ்பத்திரிக்கு வரச் சொல்ல, போனார்...

ஜீப் டிரைவர் வாசலில் பதட்டத்தோடு நின்று கேட்டான்:

''எங்கே சார் போயிட்டீங்க?''

''இங்கதான், இந்த ஏரியாவில்தான் சுற்றிக்கிட்டிருந்தேன்.''



''சார், உங்களைத்தான் இத்தனை நேரமா தேடித் தேடி வரேன். என் நெற்றியில் என்ன இது பாருங்க சார். கறுப்பா சாந்து மாதிரி ஏதோ ஒட்டிக்கிட்டிருக்குது தண்ணி போட்டுக் கழுவினாக் கூடப் போக மாட்டேங்குது. இத்தனை நாளா இல்லாம இன்னிக்கு மட்டும் எப்படி சார் இது வந்தது?''

சங்கர்ராம் அவனை ஓரமாக அழைத்துப் போய் நெற்றியைத் தொட்டுப் பார்த்தார். வட்டமாய்ச் சாந்து போல் ஏதோ ஒன்று...இந்த டிரைவர் ஐந்து வருடங்களுக்கு மேல் வேலை செய்கிறார். தினமும் சங்கர்ராம் அவனைப் பார்த்திருக்கிறார். இத்தனை நாளாக நெற்றியில் எதும் இருந்ததில்லை. இன்று இது எப்படி வந்தது? இதன் அர்த்தம் என்ன?

சங்கர்ராம் யோசித்தபோது டிரைவர் பச்சையப்பன் குரல் கொடுத்து அழ ஆரம்பித்தான்.

''சார், நான் பிள்ளை குட்டிக்காரன் சார். என்னை நம்பி ஆறு ஜீவன் வீட்ல இருக்கு சார். இது நெற்றியில் வந்தால் கொஞ்ச நேரத்தில அவங்க செத்துடுவாங்களாம் ஆஸ்பத்திரியில் சொல்றாங்க. எனக்குப் பயமாக இருக்கு சார். என்னைக் காப்பாத்துங்க சார்.''

குழந்தையாய்க் கேவின அவன் தோளில் ஆறுதலாகக் கைபோட்டுத் தட்டிக் கொடுத்தார் சங்கர்ராம்.

''என்னய்யா இது, பொம்பளை மாதிரி அழுதுகிட்டு! நான் இருக்கேன். கவலைப்படாதே. உனக்கு எதுவும் ஆகாமல் பார்த்துக்கறேன். எங்கே யார் கூப்பிட்டாலும் இந்த இடத்தை விட்டு நகராதே. மீறி அவசியம் போக வேண்டிய கட்டாயச் சூழ்நிலை ஏற்பட்டால் கண்ணில் தெரியறவங்க பெயரையெல்லாம் சொல்லி உரக்கக் கூப்பிடு. இனி வீட்டுக்குப் போக வர, என் கூடவே இரு—என்ன?''

இருந்தான். சங்கர்ராமை நிழல் மாதிரித் தொடர்ந்தான். சாயந்திரம் எழு மணி வாக்கில் ஜல உபாதையை நிறுத்தும் பொருட்டு சங்கர்ராம் ஆஸ்பத்திரியின்கோடியில் இருந்த 'ஆண்கள்' அறையை நோக்கி நடக்க ஆரம்பித்த போது—

ஸ்ட்ரெச்சரை ஏற்றுவதற்கு வசதியாக சரிவின் ஆரம்பத்தில் நிறுத்தப்பட்டிருந்த ஆம்புலன்ஸ் வண்டி டிரைவர் இல்லாமல் சடாரென்று பிடியைத் தளர்த்தி மிக மிக வேகமாகக் கீழே இறங்கிவர—

அதைக் கவனிக்காமல் சரிவின் முடிவில் ஆம்புலன்ஸ் வண்டியின் பக்கம் முதுகைக் காட்டிக் கொண்டு சங்கர்ராம் போவதைப் பார்த்தபடி பச்சையப்பன் நிற்க—

ஒரே வினாடி. கண்மூடித் திறக்கிற நேரத்தில் ஓர் அசாதாரண சக்தியில் உந்தப்பட்ட சங்கர்ராம் திரும்பிப் பார்த்து, தேர்ச்சி பெற்ற ஸ்டண்ட் நடிகரின் திறமையுடன் பச்சையப்பனின்மீது பாய்ந்து அவனைப் பாதையிலிருந்து அப்புறப்படுத்திப் புரண்டு புல் தரையில் சிறிது தூரம் உருண்டு எழுந்தபோது—

பச்சையப்பனின் நெற்றியிலிருந்து கறுப்புப் பொட்டு காணாமற் போய் இவர் நெற்றியில் முளைத்திருக்க, காலில் விழுந்து நன்றி சொன்ன பச்சையப்பன் நிமிர்ந்து இவரின் முகத்தைப் பார்த்துக் கலவரப்பட—

எந்தவித பயமோ கலவரமோ அற்று ஒரு முடிவுக்கு வந்தவராக சங்கர்ராம் சாந்தியின் அறையை நோக்கி நடக்க ஆரம்பித்தார்.

# 13

விஜய்பாணி கொங்கணக் கடற்கரையோரத்தில் பிறந்தவன்... ஆனால் மலையாள மண்ணில் வளர்ந்தவன். அந்தத் தேசத்தில் கழித்த இளமைப் பிராயத்துப் புழுதி இன்னமும் அவன் உடம்பில் ஒட்டிக் கொண்டிருந்தது. சின்ன வயதில் பாம்பிற்கும் கீரிக்கும் கூட்டம் சேர்த்து உடுக்கு அடித்துப் பிழைத்தவன்.

எந்தவிதத்திலும் சமூகம் இவனை ஓர் அங்கமாக எற்றுக் கொள்ளாமல் சீரழிய வைத்தது. ஒருவேளை அரிசிச் சோற்றிற்கு நாயாக அலைய வைத்தது. சுத்தமாகப் புறக்கணித்து காலால் நசுக்கித் தலைதூக்க விடாமல் அடித்து...

அதன் பின்னர்தான் சீறிக்கொண்டு எழுந்தான் விஜய்பாணி. தன்னை நசுக்கி அழித்த சமூகத்தைத் திருப்பி அழிக்கிற வழியைத் தேடத் தொடங்கினான்.

சிறிது சிறிதாகக் கற்ற ஏவல் சூனிய வித்தைகளில் நிறையத் தேர்ச்சி பெற்று, பின் ஆவிகளின் தொடர்பைப் பெறுகிற வழியறிந்து அவைகளை வசியப்படுத்தும் முறை அறிந்து கடைசியில் அடக்கி ஆள்கிற கலையில் கைதேர்ந்தான்.

அந்த ஒரு சூழ்நிலையின்போதுதான் இடையில்குறுக்கிட்டார் மகாதேவன். அவனைத் தாக்கிப் போலீசில் ஒப்படைத்தார். சிறையில் இருந்தபோது மகாதேவனும் போலீசும் பரம எதிரிகளாக, மகாதேவனை ஒழித்துக் கட்டினான். சிறையிலிருந்து வெளிவந்து அவரின் ரத்த சம்பந்தமான உறவுகளைத் தேடி, சாந்தியையும் கல்பனாவையும் கண்டுபிடித்து அவர்களை வித்தியாசமான முறையில் அழிக்க ஆரம்பித்தான். அவர்கள் மட்டுமின்றி

அவர்களோடு தொடர்பு கொள்கிற அனைவரையும் தண்டிக்க நினைத்தான்.

போலீஸ் டிபார்ட்மெண்டிற்கே இது ஒரு சவால். அதிகாரிகளுக்குத் தண்டனை. பதில் சொல்ல முடியாமல் தவிக்கப் போகிறார்கள். தவிக்கட்டும்! ஏழு வருடங்கள் தான் சிறையில் தவிக்கவில்லை?

அவனுக்குப் பணம் தேவையில்லை. தேவையானதெல்லாம் சித்தி ஒன்றுதான். அஷ்டமா சித்திகளில் தற்போது ஒன்றே ஒன்றுதான் குறைகிறது. விரைவில் அதையும் அடைய வேண்டும். அதற்கு நிறைய பேர்களின் உயிர் தேவைப்படுகிறது. அவனாக எடுத்தால் மீண்டும் சிறை செல்ல நேரிடும். அதைவிட பானர்ஜியின் ஆவி மூலம் அம்பலமாகாமற் செய்யலாம். அதைத்தான் செய்து கொண்டிருக்கிறான். ஏழு வருடங்கள் இடையில் வீணாய்ப் போயின. மகாதேவனால் வந்த வினை...

மகாதேவனின் ஞாபகம் வந்த உடனே பற்களை நெறித்து, கால்கள் இரண்டையும் வீசிப் போட்டு அதிவேகமாக நடக்கலானான். சீக்கிரம் வானகரம் செல்ல வேண்டும். அந்த பிரான்ஸிஸின் ரத்தம் வேண்டும். உலர்ந்து காய்ந்து போனதாக இருந்தால்கூடப் பரவாயில்லை. வறண்டிருக்கிற தொண்டைக்கு இதம் அளிக்கும். ஆ... அது தேவை. அத்தியாவசியத் தேவை... பிரான்சிஸ், எங்கே இருக்கிறாய் நீ?

கரடு முரடான மந்திரங்கள் சொல்லி, பெண்ணை நிர்வாணமாக்கிய யந்தாத்தில் உட்கார வைத்து, இரண்டு பகல் இரண்டு ராத்திரிகள் இடைவிடாமல் உரக்க ஜெபித்ததில் உடம்பு சூடுகண்டு தொண்டை மிக அதிகமாக வறண்டு போயிருந்தது. தாக சாந்திக்குத் தண்ணீர் தோதுப்படாது. ரத்தம் வேண்டும். சாதாரண ரத்தமில்லை. ஜூன் மாதம் ஆறாம் தேதி காலை ஆறு மணிக்குப் பிறந்தவனின் ரத்தம்தான் வேண்டும்.



சென்னையின் சுற்றுப்புறம் முழுதும் தேடினபோது பிரான்சிஸ்தான் அகப்பட்டான்.

பாணி இடுகாட்டிற்குள் அடர்த்தியான மரங்கள் போர்வையாய்ப் போர்த்தியிருந்த தெற்குப்புற மதில் சுவரைத் தாண்டி உள்ளே நுழைந்தான். தூங்கிக் கொண்டிருந்த நாய் இவனைப் பார்த்து உள்ளுணர்வால் புரிந்து கொண்டு ஓலமிட்டு அழுதது. பிரான்ஸிஸின் கல்லறையைக் குறிபார்த்து நடந்தான்.

கல்லறைக்குப் பக்கத்தில் யாரோ இருப்பது தெரிய பாணி நிதானித்தான். நாபியில் விரல் வைத்து பானர்ஜியின் ஆவியை அழைத்தான்.

''பிரான்ஸிஸின் கல்லறைக்கு முன் நின்று சோதிப்பவன் யார்?'' என்று கேட்டான்.

''போலீஸ் கமிஷனர் ஜோஸப் மெக்ஸி பிரபு...''

''அவன் இங்கே என்ன செய்கிறான்?''

''யாரோ இவனை இங்கு அனுப்பியிருக்கிறார்கள். பிரான்சிசின் கல்லறைக்குச் சென்று பார்த்துவிட்டு வா என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகையால் வந்திருக்கிறான். சக்தி வாய்ந்த ஒரு மனிதர் இவனை இங்கே அனுப்பியிருக்க வேண்டும். அவர் யார் என்பதை அறிய என் டெலிபதி சக்தியைப் பிரயோகித்தால் வேலை செய்யவில்லை. இந்த ஜோசப் மெக்ஸியிடம் பிரயோகித்ததில்... சாந்தியின் கேஸை இவனே கவனிக்கிறான். டாக்டர் பெஞ்சமினும், பால் அலெக்ஸாண்டரும் இறந்ததற்கான காரணங்களைத் துருவித் துருவி ஆராய்கிறான். இன்னும் இவனுக்கு சாந்தியின் அம்மா செத்துப் போனது தெரியாது. டாக்டரின் குழந்தை செத்துப் போனது இப்படித்தான் என்று தெரியாது...''

''சரி, இப்போது அந்த ஜோசப் மெக்ஸி எதைப் பார்த்து இப்படிப் பிரமித்து நிற்கிறானென்று சொல்.''

''பிரான்சிசின் உடம்பு அடிபட்டுத் துடித்து அதிலிருந்து ரத்தம் கசிவதைப் பார்த்து அவன் படுகிற மரண அவஸ்தையைக் கண்டு பயந்தும் பதறிப் போயும் நிற்கிறான். நீங்கள் பிரான்சிஸ் மீதான உங்கள் பிரயோகத்தை நிறுத்தி விடுகிற போது அவனின் உடம்பு மறைந்து வெறும் எலும்புக் கூடே கிடைப்பது அவனுக்குள் சந்தேகத்தை ஏற்படுத்தி, சற்றுமுன் தான் பார்த்ததில் ஏற்பட்ட நம்பிக்கையின்மையின் காரணமாக அவன் கல்லறையைக் குடைகிறான்...''

அதைக் கேட்டு விஜய்பாணி ஒரு வினாடி யோசித்துப் பின் சொன்னான். ''நண்பா, அவனருகில் சென்று லேசாக விசாரித்து விட்டு வா பார்க்கலாம்.''

அதன் பின்னரே பானர்ஜி அருவ உருவில்மெக்ஸியின் அருகில் போய் அவரின் தலையில் அடித்து அவரை நெம்பிக் கீழே தள்ளிச் சற்று நேரம் பேசாமல் இருந்து மீண்டும் அவரைத் தாக்கிவிட்டு விஜய்பாணியிடம் திரும்பியது.

''நண்பரே, அந்த மெக்ஸியை இந்த இடத்தைவிட்டு விரட்டிவிட்டுப் போ. எனக்கு மிக அவசரமாகப் பிரான்சிஸ் இப்போது தேவைப்படுகிறான்.''

''நல்லது, அப்படியே செய்கிறேன் பிரபு.''

பானர்ஜி மீண்டும் அருகில் போய்த் தாக்கவே ஜோசப் மெக்ஸி பிரான்சிசின் எலும்புக் கூட்டைப் போட்டு விட்டு ஓட, பானர்ஜி அருவ உருவத்தில் துரத்த, நாய் ஊளையிட்டுக் கொண்டே அருகில் வர—

மெக்ஸி சுவரேறிக் குதித்து மோட்டார் சைக்கிளைக் கிளப்பிப் பறக்க—

பானர்ஜி தன் பணியைச் செவ்வனே முடித்து விஜய்பாணியிடம் திரும்பினான்.



''பிரபு, நான் யார் என்பது தங்களுக்குத் தெரியும். தங்களைப் போல் அத்தனை சித்திகளும் கைவரப் பெற்றவன் அல்ல என்றாலும் நானும் மந்திரம், மாந்திரீகம் கற்றவன் தானே? அதில் ஓரளவு தேர்ச்சி பெற்றவன் தானே?''

''சரி, அதற்கென்ன இப்போது?''

''நீங்கள் கோபித்துக் கொள்ளக் கூடாது. என் போன்ற திறமைசாலியான ஆவியை இந்த மாதிரி சின்னச் சின்ன வேலைகளுக்கு ஏவுவது எனக்குப் பிடிக்கவில்லை...'

''என்ன?'' விஜய்பாணியின் முகம் மீண்டும் சுறுசுறுவென்று சிவந்தது. கண்கள் தீப்பிடித்தன. ''போனால் போகட்டும் என்று மரியாதை கொடுத்தால் எதிர்த்தா பேசுகிறாய்? இரு. உன்னை என்ன செய்கிறேன் பார்.''

பானர்ஜி நடுங்க, விஜய்பாணி நகத்தால் தன் உடம்பைக் கீறி ரத்தம் வரவழைத்து அந்த ரத்தத்தைத் தொட்டு மண்ணில் பானர்ஜி' என்று எழுதி அந்த எழுத்தின் மீது தன் காலால் அழுத்தி மிதிக்க...

காதருகில் பானர்ஜியின் குரல் கெஞ்சுகிறது. ''பிரபு, மன்னித்துக் கொள்ளுங்கள். என்னைச் சித்திரவதை செய்யாதீர்கள். ஏற்கெனவே நான் இம்சைப்பட்டுக் கொண்டிருக்கிறேன். தயவு செய்து என்னை விட்டு விடுங்கள்...''

பாணி விடவில்லை. தன் ஆத்திரம் தீரும் வரை காலால் துவைத்த பின்னரே நிறுத்தினான். ''ஒடிப்போ அடிமையே! ஜோஸப் மெக்சியைக் கொல்லாமல் லேசாய் அடித்துப் பயமுறுத்தி விரட்டச் சொன்னேனே, ஏன் தெரியுமா?''

''தெரியாது பிரபு.''

''முட்டாள்! இதைத் தெரிந்து கொள்ளாமல் ஏதேதோ பேசிவிட்டாயே. அந்த மெக்சியை இங்கே அனுப்பினவன்

—தம்மைவிடச் சக்தி வாய்ந்த அந்த மனிதன்—யார் என்பதை நாளைக்கே நீ கண்டுபிடித்துச் சொல்ல வேண்டும். அதைச் சொன்ன மறு நிமிடமே ஜோஸப் மெக்ஸி கொல்லப்பட வேண்டும்.

பானர்ஜியின் குரல் தீர்மானமாய், ''சரி பிரபு,'' என்று சொல்ல, விஜய்பாணி மண்ணில் எழுதின ரத்த எழுத்திலிருந்து தன் காலை எடுக்க பானர்ஜி போய்விட்டான்.

அதன் பின்பு விஜய்பாணி பிரான்ஸிஸின் கல்லறையை நெருங்கினான். தரையிலிருந்து ஒரு பிடி மண் எடுத்து மந்திரம் சொல்லி காற்றில் விட்டான்.

திடீரென்று காற்று வேகமாக, மிக மிக வேகமாக வீசிற்று. மரங்களை தலை விரித்தாடச் செய்து பூமியின் பொருட்களை அடித்துக் கொண்டு போக, இடுகாட்டின் சின்ன மரங்கள் வேரோடு சாய்ந்து விழுந்தபோது—

விஜய்பாணி மட்டும் சமாதியைவிட்டு ஓரங்குலம்கூட நகராமல் கண்களை மூடி மழையில் நனைந்தபடி 'இந்தச் சுற்றுப்புற சூழ்நிலைகளுக்கும் தனக்கும் எந்தவித சம்பந்தமுமில்லை' என்கிற மாதிரி அசையாமல் பொம்மை மாதிரி நின்று கொண்டிருந்தான்.

வாய் மட்டும் முணுமுணுத்துக் கொண்டே இருந்தது.

ஒன்று...இரண்டு...மூன்று...நான்கு...ஐந்து... எட்டு... பத்து...மறுபடியும் பத்து...ஒன்பது...எட்டு...எழு...ஆறு... நடை பயின்றார் ஜெயகுமார். கடந்த பத்து நாட்களாக அவர் ஒரு நிலையில் இல்லை.

திடீரென்று கட்டில் தூக்கிப்போட்டுப்பயமுறுத்தியதும், வீட்டு வாசலில் குப்பை வண்டி தெரு முழுவதும் துர்நாற்றம் வீசியதும், எதனால் ஜுரம் என்று எந்த டாக்டர்



களுக்கும் பிடிபடாத வகையில் கொஞ்சங்கூட எதிர்பார்க்காத வகையில் சுரேஷ் இந்த உலகைவிட்டுப் போனதும்...

அவரால் அதற்கு மேல் உலாவவும் யோசிக்கவும் முடியவில்லை, சரேலென்று உள்ளே வந்து ஹாலில் வெறித்தபடி உட்கார்ந்திருந்த தேவசேனாவைப் பார்த்துச் சொன்னார்.

''தேவி, நான் கொஞ்சம் வெளியில் போயிட்டு வரேன். லஞ்சுக்கு எதிர்பார்க்காதே.'' —சொல்லிவிட்டுத் திரும்பியவருக்கு அவளின் முகம் இனம் தெரியாத வருத்தத்தைக் கொடுத்தது. ஒரு வினாடி நின்று திரும்பிப் போய்ப் பளிச்சென்று இறுகத் தனனோடு சேர்த்து அணைத்துக் கொண்டார். அவள் அவரின் பரந்த மார்பில் சாய்ந்து அழத் துவங்க இவரும் கஷ்டப்பட்டுக் கண்ணீரை அடக்கிக் கொண்டு சரேலென்று வெளியேறினார்.

தேவசேனாவிற்கு ஜெயகுமாரை நகத்தின் நுனியிலிருந்து தெரியும். இப்போது நேராக அவர் மதுபான பாருக்குத் தான் போவார் என்பதை ஊகித்தாள். சாதாரணமாகத் தாங்க முடியாத வருத்தம் வருகிறபோது விஸ்கிதான் வடிகால். இப்போது ஏற்பட்டிருக்கிற இந்த வருத்தம் விஸ்கியால் மறையக்கூடியதா என்கிற நினைவில் கீழ் உதட்டைக் கடித்துக் கேவலை அடக்கி எழுந்து கொண்ட போது—பாத்ருமில் ஏதோ சத்தம் கேட்டது. ஷவரில் யாரோ குளிக்கிற சத்தம். யார் குளிப்பது?

பயம் அதிகமாயிற்று. எழுந்து அருகில் போய்க் கதவைத் திறந்து பார்ப்பதற்கும் தைரியம் வரவில்லை. என்ன செய்வது என்று யோசித்தபோது ஒரு யோசனை தோன்ற அருகில் இருந்த டேப்ரெக்கார்டரைப் பதிவு செய்ய அழுத்தினாள். சத்தம் தொடர்ந்து கேட்டுக்கொண்டிருந்தது. பதிவாகியிருக்கிறதா என்பதைக் கவனிக்க டேப்பைப் பின்னுக்குச் சுழற்றி மறுபடி கேட்டாள்.

டேப்பில் ஷவரின் சத்தம் துல்லியமாகக் கேட்டது. பிரமையில்லை, நிஜமாத்தான்-யாரோ குளித்துக் கொண்டிருக்கிறார்கள். குழாய்த் தண்ணீர் சத்தம்—ஷவர் சத்தம்.

மீண்டும் டேப் ரெக்கார்டரின் பட்டனைப் பதிவு செய்வதற்காக அழுத்திவிட்டு, தைரியத்தை வரவழைத்துக் கொண்டு பாத்ரூம் அருகில் போய்க் கதவைத் தட்டினாள்.

''யாரது உள்ளே குளிக்கிறது?''

''நான்தான்.பானர்ஜி. திடீர்னு குளிக்கணும் போல இருந்தது. அதான் உன்னைத் தொந்தரவு பண்ண வேணான்னு பின் பக்க ஜன்னல் வழியாகவே நுழைஞ்சு வந்துட்டேன். ஸாரி.''

''பானர்ஜியா? யார்?''

பாத்ரூமிலிருந்து குரல் தெளிவாக ஸ்பஷ்டமாக வந்தது. ''என்னைத் தெரியலையா தேவி? ஞாபகமில்லை. நான்தான் பானர்ஜி.''

டேப் பதிவு செய்து கொண்டிருந்தது.

''அதான் எந்த பானர்ஜி என்று கேட்டேன்?''

''உங்கள் நண்பன் பானர்ஜி.''

திகைப்புடன் திரும்பினாள். சுவரில் மாட்டியிருந்த சுரேஷின் படத்தில் ஒரு மாற்றம் நிகழ்ந்தது. சுரேஷ் காணாமற் போய், மாமனார் கிருஷ்ணசாமி தோன்றினார். சாந்தமான கண்களுடன் இவளிடம் பேசினார். ''தேவசேனா, பானர்ஜிகிட்டே பேசாதேம்மா...''

இவள் பதில் சொல்ல முடியாமல் மௌனமாய் நிற்க...

அவரே தொடர்ந்தார்.



''பானர்ஜிகிட்டே பேசாதேம்மா. அவன் நல்லவனில்லை. ஆவியாக அலைபவன். குழந்தை சுரேஷைக் கொன்றவன். இப்போ உன்னைக் கொல்லத்தான் இங்கே வந்திருக்கிறான். ஓடிப்போய் பூஜையறையில விளக்கேற்றி வைத்துவிட்டு உட்கார்ந்துவிடு. நான் சொல்ற போது வெளியில் வா, அதுவரையில் அங்கேயே இரு. போம்மா.''

இவள் அதைக் காதில் வாங்கிக் கொள்ளாதவளாக அருகில் போய்க் கேட்டாள்.

''மாமா, எப்ப மாமா வந்தீங்க? இருங்க, காப்பி கலந்து கொண்டுவரேன். காப்பி சாப்பிட்டுவிட்டுப் பேப்பர் படிங்க. அப்புறம் குளிச்சிட்டு சாப்பிடலாம். உங்க பிள்ளைக்கும் போன் பண்ணி வரச்சொல்றேன். இன்னிக்கு எல்லாமே உங்களுக்குப் பிடிச்ச ஐட்டமா பண்ணச் சொல்றேன். ஏன் மாமா, நீங்க மட்டும் தனியா வந்திருக்கீங்களா? அத்தையைக் கூட்டிட்டு வந்திருக்கக்கூடாது?'' மூச்சு விடாமல் பேசினாள்.

டேப் பதிவு செய்து கொண்டிருந்தது.

பாத்ரூம் கதவு திறக்கிற ஒலி. தொடர்ந்து பானர்ஜியின் குரல்.

''தேவி, நல்ல கயிறு இருக்கா? ஒரு நாற்பது ஐம்பது கிலோ தாங்கற மாதிரி?''

''இருக்கே, இதோ நொடியில் கொண்டுவரேன். ஸ்டோர் ரூமில் இருக்கு.''

புகைப்படத்திலிருந்து கிருஷ்ணசாமி கூப்பிட்டார். ''வேண்டாம்மா, குழந்தை. போகாதேம்மா. பானர்ஜி சொல்றதைக் கேக்காதே...பூஜை ரூமில் போய் உட்கார்ந்து விடு. கொஞ்சம் நான் சொல்றதைக் கேளும்மா...''

''தேவசேனா, நான் சொல்வதைக் கேள்...''பானர்ஜி யின் அதிகாரக் குரல்.

தேவசேனா அடிபணிந்தாள். ''வெறும் கயிறுதானே கேட்கிறார்? எடுத்துத் தந்துவிட்டு வந்துடறேன். கொஞ்சம் இருங்க.''

டேப் பதிவு செய்து கொண்டிருந்தது.

''இந்தாங்க கயிறு.''

''எனக்கு வேணாம். நீயே அதை மேலே இருக்கிற கொக்கியிலே மாட்டிச் சரிபார்த்துத் தொங்கவிட்டுச் சுருக்குப் போடு.''

''தேவசேனா, வேணாம்மா... கயிற்றைப்போட்டுட்டு ஓடிப் போயிடும்மா. பூஜை அறைக்குப் போ.''

மாமாவின் குரலை அலட்சியம் செய்து, அழகாய்ச் சுருக்குப் போட்டு அடுத்த கட்டளையாக ஸ்டூல்மீது ஏறி நின்று, கழுத்தில் மாட்டி....

## 14

''ஸ்டூலை உதைத்துத் தள்ளு...'' என்றது பானர்ஜி யின் குரல்.

''வேணாம்மா, வேணாம்மா! தள்ளாதே'' என்றார் படத்திலிருந்த மாமனார்.

தேவசேனா தள்ளினதும் தடிமனான அந்த நைலான் கயிறு கழுத்தை இறுக்க, கைகால்கள் உதைத்துக்கொள்ள கண்கள் பிதுங்க...



''மாமா, காப்பாத்துங்க மாமா!''

புகைப்படம் கண்களைவிட்டு நழுவுகிற சந்தர்ப்பத்தில் கிருஷ்ணசாமியின் உருவம் இல்லை. மீண்டும் சுரேஷ். சுரேஷ் மட்டுமே போட்டோவிலிருந்து வருத்தமாக இவளைப் பார்க்க—

''மிஸ்டர் பானர்ஜி! ப்ளீஸ்! என்னைக் காப்பாத் துங்க!''

இப்போது பானர்ஜியின் குரல் கேட்கவில்லை.

மறுவினாடி கயிறு நன்றாக இறுகி, கண்கள் முற்றி லும் பிதுங்கி உடல் விலுக் விலுக்கென்று உதறி உதறிப் பின் அடங்கிக் கொண்டே வந்து...

நின்றது...

கண்களுக்குள் சிகப்பு, நீலநிற வளையங்கள், சின்ன வளையம் பெரிதாகிப் பெரிதாகி விரிந்து பரந்து ஜ்வாலை யாய் மாறிச் சுழன்றடித்தது.

ஜில்லென்ற தண்ணீர் சிரசில் விழ ஜோசப் மெக்ஸி ஆசுவாசமடைந்தார். தண்ணீர் தொடர்ந்து ஊற்றப் பட்டதும் குளிர்ந்து போனார். கண்களின் மேலிருந்த பாரம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைய மெல்லக் கண் விழித்தார். ''எங்கிருக்கிறேன்? இது யார் வீடு? எனக்கு என்ன ஆயிற்று?''

குத்துவிளக்கின் ஜோதி கண்களில் பட்டது. ஜோதி தரும் வெளிச்சத்தில் போர்வை போர்த்துக் கொண்டு எதிரில் ஸ்ரீதரன் நம்பியார். அருகில் இளைஞன் இன்ன மும் தண்ணீர் தெளித்துக் கொண்டிருந்தான். கண்களைச் சுருக்கி விரித்து மெக்ஸி 'போதும் தாங்க்ஸ்' என்று சொன்னார். கர்சீப் எடுத்து அழுந்தி முகத்தைத் துடைத்

துக் கொண்டார். பின் தயக்கத்துடன் ஸ்ரீதரன் நம்பியாரைப் பார்த்தார்.

"என்னப்பா, இதற்கே இப்படியாகிவிட்டாய்? உனக்கெதிரே நிற்கும் பெரும் பலத்தை எப்படிச் சமாளிக்கப் போகிறாய்?"

"இல்லை சுவாமி, நிஜ வாழ்க்கையில் இவ்வளவு வித்தியாசமான சூழ்நிலைகளைச் சந்தித்ததில்லை. அருவங்களோடு மோதியதில்லை. இதெல்லாம் எப்படி என்பதை விளக்குவீர்களானால் உபயோகமாக இருக்கும் சுவாமி..."

"சொல்றேன் கேள் மெக்ஸி. ஜூன் மாதம் ஆறாம் தேதி. வருஷம் என்ன என்பது தெரியவில்லை. ஆனால் வருஷத்தின் கூட்டுத் தொகையும் ஆறுதான். இந்த மூன்று ஆறுகளில் பிரான்சிஸ் பிறந்த காரணத்தினாலும் தன்னை அடக்கிக் கொள்ளும் சுயக்கட்டுப்பாடு இல்லாததனாலும் அவன் நிறையப் பாவங்களைச் செய்திருக்கிறான். சக்திகளைப் பெறுவதற்காக நிறையச் சிறுவர் சிறுமிகளைப் பலி கொடுத்திருக்கிறான். சுதந்திரமாகத் திரிந்து கொண்டிருந்த ஆவிகளை வசியப்படுத்தித் தன் காரியங்களைச் சாதித்துக் கொண்டிருக்கிறான். சித்திகள் அவன் நினைத்தபடி கிடைத்தன. ஆனால் அவனால் உடம்பை விடாமல் இருக்க முடியவில்லை. உடலை விட்டபின்பு பிரான்ஸிஸ்க்கு அடங்கி இருந்த ஆவிகள் அவனை வதைக்கின்றன. இது மரணத்திற்குப் பின்பு செய்த பாவங்களுக்காக அனுபவிக்கும் சித்திரவதை நிகழ்ச்சி. அதில் குளிர்காய நினைக்கிறான் 'விஜய்பாணி' என்கிற இன்னொரு பாவி. இவன்தான் உங்களின் எதிரி. நடந்த அத்தனை நிகழ்ச்சிகளுக்கும் காரணமானவன் பாணி. தன் முடிவிற்குப் பிறகு இதைப்போல சித்திரவதைப்பட நேரிடும் என்பதை ஏனோ உணரவில்லை."

நீங்கள் சொல்வது ஓரளவு புரிகிறது...ஆனாலும்..."

"கேள். சித்திகள் கொஞ்சம் சிரமப்பட்டால் எல்லா மனிதனுக்கும் கைகூடும். உணர்வுகளை, உந்து சக்திகளை மனிதன் அடக்கினால் பஞ்ச பூதங்களையும் ஆட்டுவிக்க முடியும் வெறும் கண்ணின் சக்தியை மட்டும் வைத்துக் கொண்டு எவ்வளவு பெரிய மலையையும் தூள் தூளாக நொறுங்கச் செய்ய முடியும். ஆனால் அதற்கு மனசு சுத்தமாக கல்மிஷமற்று இருக்கவேண்டும். உனக்கு உதாரணம் வேண்டுமென்றால் என் கண் எதிரே கையைக் காட்டு மெக்ஸி..."

காட்டினார்.

சில வினாடிகளுக்குப் பிறகு சூடு தாக்குப் பிடிக்கமுடியவில்லை. அக்னி தகித்தது. மறுபடி ஸ்ரீதரன் நம்பியார் கை காட்டச் சொல்ல, காட்டி, தாங்கமுடியாத அளவு குளிர்ந்து கை மரத்துப் போக, மெக்ஸி—

"போதும் சுவாமி, எல்லாவற்றையும் புரிந்து கொண்டேன்" என்று உணர்ச்சிவசப்பட்டுச் சொல்ல ஸ்ரீதரன் நம்பியார் மெலிதாய்ப் புன்னகை செய்தார். "மெக்ஸி...உலகத்தின் அத்தனை விஷயங்களும் வெளியில் எங்கேயும் இல்லை. ஒவ்வொருவர் மனசுக்குள்ளேயே தான் இருக்கிறது. தியானம் செய். யாரும் சொல்லாமலே உனக்கு நிறைய விஷயங்கள் விளங்கும். இப்போதைக்கு இது போதும். நீ கிளம்பலாம். எனக்கும் பூஜை நேரம் வந்து விட்டது."

அவர் சரேலென்று எழுந்து போனார். தயங்கி ஒரு நிமிடம் நின்று நகர்ந்த மெக்ஸி வாசலுக்கு வந்து தன் புல்லட்டைக் கிளப்பிப் பறந்தார். பூந்தமல்லி வருவதற்கு முன் யாரோ ரோடின் குறுக்காக ஓடினாற்போல் தெரிய, பிரேக் போட்டுச் சமாளிக்க முயல—காதருகில் ஒரு குரல் கேட்டது...

''ஜோஸப் மெக்ஸி...இடது கைப் பக்கம் திருப்பு...''
திருப்பினதும் எதிரில் வேகமாக வந்த லாரிக்கு புல்லட் முத்தம் கொடுக்க...

உயரப் பறந்த ஜோசப் மெக்ஸி பத்தடி தள்ளிப் பாறையில் மோதி நினைவிழந்தார்...

அரை மணி நேரத்திற்குப்பின் கொஞ்சம் கொஞ்சமாய் நினைவு திரும்பியது. தலையில் யாரோ உலகத்தை வைத்து அழுத்தியிருந்தார்கள். நகர்த்த முடியவில்லை.

''என் உயிர் உடலை விட்டுப் போகப்போவது எனக்கே தெளிவாகத் தெரிகிறது. மரணத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறேன். கடைசி... கடைசியாக... என் சகா சங்கர்ராமுக்கு இதுபற்றின விவரங்களைத் தெரிவிக்க வேண்டும். சாந்தியிடமிருந்து இன்னமும் தேவையில்லாமல் சாகப்போகிற உயிர்களைக் காப்பாற்ற வேண்டும்... எனக்காக இல்லை. என் குடும்பத்திற்காக இல்லை. நான் போட்டுக்கொண்டிருந்த காக்கிச் சட்டைக்காக..."

மோட்டார் சைக்கிளில் வயர்லெஸ் ரேடியோ கதறிக் கொண்டிருப்பது சன்னமாகக் காதில் விழுந்தது. இருபதடி தூரம் லாரியில் மோதியவன் மனிதாபிமானம் இல்லாமல் சென்றுவிட்டான். பாஸ்டர்ட். இடது காலால் தரையை உந்தி உடம்பைச் சற்று முன்நோக்கித் தள்ளினார். இடது கையால் துழாவினார். ஒரு முள்செடியின் அடிப்பாகம் முட்களோடு அகப்பட்டது. தாங்க்ஸ்... இடது கையால் இறுகப்பிடித்து உடலை கையில் சக்தி சேர்த்து இழுத்தார். உள்ளங்கையில் முட்கள் தைத்துக் கணிசமான அளவு ரத்தம் கசிய ஆரம்பித்தது. ஆனால் வலியில்லை. உடலில் பிரதான வலிகளில் வலி மரத்துப் போயிற்று. மறுபடி கையால் துழாவி இன்னொரு செடி... பிறகு முடியின் ஆரம்பத்தில் சப்பாத்திக்கள்ளி... இதயம் வேகமாகத் துடிக்க ஆரம்பித்தது. மெக்ஸி, சீக்கிரம்...



சற்றுத் தூரத்தில் கிடந்த மோட்டார் சைக்கிள் கண்ணில்பட இன்னும் பிரயாசைப்பட முழங்காலை மடித்து உந்தி உந்தி மார்பால் இழுத்து அருகே, இன்னும் அருகே, கை நீட்டும் தூரத்தில், டாக்கி முனகிக் கொண்டு இருக்க மெக்ஸி இடது கையை வீசி, டாக்கி கைக்கு அகப் பட்ட போது சொல்ல இயலாத சந்தோஷப்பட்டார்...

''ஹலோ கண்ட்ரோல் ரூம். அர்ஜண்ட் கால்..."

''யெஸ் ஸார்.

''கமிஷனர் ஜோசப் மெக்ஸி ஹியர். இன்ஸ்பெக்டர் சங்கர்ராம் இருந்தா உடனே கூப்பிடுங்க. எங்கே இருந்தாலும் உடனே லைன்ல பிடிங்க மேட்டர் இஸ் வெரி சீரியஸ்...

''யெஸ் ஸார்.''

''இன்ஸ்பெக்டர் சங்கர்ராம்...

''சானல் 124...

''சானல் 125...

''ஈ த்ரி அவுட் போஸ்ட் எமர்ஜென்ஸி கால் டு சங்கர்ராம்."

மைக்ரோ போனில் என்னென்னமோ வழிந்து கொண்டிருந்தது. மெக்ஸி காத்துக்கொண்டிருந்தார். கண்களின் இமைகளில் யாரோ கயிறு கட்டி உள்ளுக்கு இழுத்தார்கள். தொண்டையில் எச்சில் முழுங்கி முடிந்தவரை சுதாரித்துக் கொண்டார்.

''சங்கர்ராம் பேசறேன், கமிஷனர் சார்... சங்கர்ராம் பேசறேன். என்ன விஷயம். எங்க இருக்கீங்க... சார், சங்கர்ராம் பேசறேன்.''

மெக்ஸி மறுபடி எச்சில் கூட்டி விழுங்கிக்கொண்டார். ''சங்கர், லிஸன். கேள்வி கேக்காதே. ஐம் கோயிங் டு டை...

நான் சாகப் போறேன். ஸ்ரீதரன் நம்பியாரை உடனே பாரு. அவரால்தான் சாந்தியைக் கட்டுப்படுத்த முடியும்... இன்னும் நிறைய பேர் சாகாம காப்பாத்த முடியும்... எனக்காக... இந்தக் கேஸைப் பர்ஸனலா நீ எடுத்து...'' மெக்ஸியின் உடல் வலித்து அடங்கியது.

''சார், சார், சார்...''

பதிலில்லை. தொடர்பு அற்றுப் போயிருந்தது.

பற்களைக் கடித்தார் சங்கர்ராம். இத்தனைக்கும் காரணமான சாந்தியை எப்படி அடக்குவது?

முன் பக்கமிருந்த நீளமான செவ்வகக் கண்ணாடிக்குக் கீழே தாறுமாறான வேகத்தில் கறுப்புத் தார் ரோடு வழுக்கிக் கொண்டிருந்தது. இரு பக்கங்களும் ஜன்னல் வழியாகச் சகட்டு மேனிக்கு ஊதல் காற்று ஊடுருவி, சங்கர்ராமை ஜீப்பிலிருந்து பிரிக்க முயற்சி எடுத்தது.

வலது கால் பாதம் ஆக்ஸிலேட்டரின் மூச்சை இறுக்கிப் பிடிக்க, சினிமாத்தனமாக எதிர்ப்படும் கம்பங்களும் லாரிகளும் எப்போதோ ஒருமுறை வரும் கார்களும் பயந்தன. வானகரத்துக்குத் திரும்பும் புழுதிசாலைக்கு வலதுபுறம் ஓலமிட்டுக் கொண்டு மூன்று நான்கு போலீஸ் வண்டிகளும் ஆம்புலன்ஸும் இறக்குமதி செய்யப்பட்ட மக்களும் அனாவசியமாக இரவின் அமைதியைச் சேதப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

பார்த்த முதல் பார்வையிலேயே யாரையும் விசாரிக்காமலேயே இவ்வளவு தடபுடல்கள் ஜோசப் மெக்ஸியின் உயிரற்ற உடலுக்காக என்று சங்கர்ராமுக்குத் தெரிந்து போயிற்று. ஆனாலும் பார்க்க இஷ்டப்படவில்லை. வேகத்தைக் கொஞ்சம்கூட மட்டுப்படுத்தாமல் அப்படியே புழுதிச்



சாலையில் திருப்பினார். இரண்டு பர்லாங் தள்ளி ஆசிரம பாணியில் வீடு தென்பட விசாரிக்க நிறுத்தினார்.

''ஸ்ரீதரன் நம்பியாரை உடனடியாகப் பார்க்க வேண்டும். இது அவர் வீடுதானே?''

''ஆமாம். இப்பொழுது அவரைப் பார்க்க முடியாது; சமாதியிலிருக்கிறார். காலையில் வாருங்கள்.''

''நான் இப்பவே. இந்த நிமிஷமே அவரைப் பார்க்கணும். ஏற்பாடு பண்ணுங்க.''

''இப்ப அவரைப் பார்க்க முடியாது. காலையில வாங்க...''

அதற்கு மேல் சங்கர்ராமுக்குப் பொறுமையில்லை. இளைஞனை மீறி உள்ளே நுழைந்தார். குத்துவிளக்கிற்கு எதிரில் அசையாமல் அமர்ந்திருக்கும் அவரைப் பார்த்தார். பேசவில்லை. எதிரில் அமர்ந்து கொண்டார். கண்களை இறுக மூடிக் கொண்டார். மனதிற்குள் மந்திரம் மாதிரி திரும்பத் திரும்ப, 'நம்பியார், கண்களைத் திறவுங்கள்... நம்பியார், கண்களைத் திறவுங்கள்...' என்று சொல்லிக் கொண்டேயிருந்தார். சங்கர்ராமின் டெலிபதி முயற்சி பலனளித்தது. நம்பியார் சகஜமாக சமாதியிலிருந்து உயிர்த்தெழுந்து, ''சங்கர்ராம், சொல்லு'' என்றார்.

சங்கர்ராம் பேசவில்லை. மௌனமாக அவரைப் பார்த்தார். பிறகு நமஸ்கரித்தார். அவரையும் மீறித் தொண்டைக்குள்ளிருந்து சப்தம் வார்த்தைகளாக வெளி வந்தது. ''எங்களைக் காப்பாற்றுங்கள்... எங்களைக் காப்பாற்றுங்கள்.''

''சாலை விபத்தில் போலீஸ் கமிஷனர் சாவு!''

கடை கடையாகப் போஸ்டர்கள் தொங்கி சிகரெட் பிடிப்பவர்களையும் வெற்றிலை பாக்கு வாங்க வந்தவர்களையும் ஈர்த்துக் கொண்டிருக்கும் சமயம்...

ஸ்ரீதரன் நம்பியார் குளித்துவிட்டுத் தலையைத் துவட்டாமல், ஈர வேஷ்டியைக் களையாமல் மறுபடி குத்து விளக்கின் முன் வந்து அமர்ந்தார். சங்கர்ராம் சுவரில் சரிந்து உட்கார்ந்து நடப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தார். ஸ்ரீதரன் நம்பியாரின் சிஷ்யன் எங்கிருந்தோ தாலைந்து இளம் தென்னங்கீற்றுகளைப் பறித்து வந்து தரையில் படாமல் கையில் வைத்திருக்கச் சொல்லி சங்கர்ராமிடம் கொடுத்தான். சங்கர்ராம் எழுந்து நின்று அவற்றை பவ்யமாக வாங்கிக் கொண்டார். சிஷ்யப் பிள்ளை மீண்டும் கிளம்பிப் போய்ப் பெரிய தலைவாழை இலையும், நெல், பொரி, அவல், கற்கண்டு, அரிசி, வெல்லம் கொண்டுவந்து பரப்பினான். குறுக்காக எட்டு செங்கற்களை வைத்து உட்புறமாக வரட்டி கொடுத்து நெருப்பூட்டினான். நெருப்பின் தாகத்திற்கு அவ்வப்போது நெய் காட்டினான்.

வெளியில்போய், சூரியன் பளிச்சென்று வந்துவிட்டதா என்று பார்த்துவிட்டு வந்த ஸ்ரீதரன் நம்பியார் ஜ்வாலையின் அருகில் வந்து ஏதோ சொல்லிக் கொண்டே இரு கைகளையும் ஒரு சேரத் தட்டினார். வெறும் கைகளிலிருந்து பரபரவென்று விபூதி கொட்டி அறையின் கனம் மிகுந்த சூழலை இன்னும் அதிகப்படுத்திற்று இளைஞன் இப்போது ஹோமகுண்டத்திற்கு எதிரில் மணல் பரப்பி, பரிச்சயம் இல்லாத மொழியில் ஏதோ விரல்களால் எழுதினான். சங்கர்ராமிடமிருந்து தென்னங்கீற்றுகளை வாங்கி மேலே போட்டான். எந்தவித ஆதாரமும் இல்லாதபோது இயல்பாய் வளையும் கீற்றுகள் மண்பரப்பில் தரையில் விழுந்த மாத்திரத்தில் சுதாரித்துக் கொண்டு செங்குத்தாக நின்றன. வரட்டியும், நெய்யும் இணைந்து உற்பத்தியாகும் ஜ்வாலையில் நரை இழையோடி அடர்ந்த கருப்புக் கூந்தல் ஈரத்தினால் மின்னின.

ஸ்ரீதரன் நம்பியார் காலியான இலையைச் சுருட்டி அணைந்து கொண்டிருக்கும் ஹோம குண்டத்தில் வைக்க



அந்தப் பச்சை இலை எரிந்து நரம்புகள் மட்டும் நார் நாராகத் தெரிய இலையோடின இடத்தில் இப்போது உருவங்கள் நிழலாய் ஆடின. பின் நிழல் கரைந்து நிஜம் தெரிந்தது. சங்கர்ராம் எழுந்து ஸ்ரீதரன் நம்பியாரின் அருகில்போய் எட்டிப் பார்த்தார்.

யாரோ மோட்டார் சைக்கிளில் வேகமாகப் போவது தெரிந்தது. கூர்ந்து பார்த்தார் சங்கர்ராம். கமிஷனர் ஜோசப் மெக்ஸி தாம்பரம் சாலையை ஒழுங்காகப் பிடிக்க வேண்டியவர் யாரோ இயக்கினாற்போல சட்டென்று பாதை மாறி இடது பக்கம் முழுச்சக்தியையும் பிரயோகித்துத் திரும்பி எதிரில் பலத்த ஹாரன் சப்தத்துடன் வரும் லாரியை அசட்டை செய்து முன்புற சேஸிஸின்கீழ் மோட்டார் சைக்கிளோடு சரணடைந்து கிடைத்த அதிர்ச்சியில் உயர எகிறிப் பறந்து தூரத்திலிருந்த பாறாங்கல்லில் மோதி விழுந்து...

சங்கர்ராம் கண்களை மூடித் திறக்க...மெக்ஸி ரத்தம் வழியும் உடம்புடன் மண்தரையில் மெதுவாக ஊர்ந்து ஊர்ந்து...

''ஓ சார்!'' சங்கர்ராம் மீண்டும் கண்களை மூடிக் கொள்ள—

ஸ்ரீதரன் நம்பியார் இவர் கத்தலை அலட்சியம் செய்து இலையைப் பார்க்க, சன்னமான வெளிச்சத்தில் இதுவரை நடந்த அத்தனையும் தெரிந்தது. பிறகு மெதுவாக சாந்தி தெரிந்தாள். பானர்ஜியின் ஆவியற்ற சாதாரண சாந்தி... ''என்னைக் காப்பாற்றுங்கள்...என்னைக் காப்பாற்றுங்கள்...'' அழுதாள்.

உடனே மறுபடி பானர்ஜி புகுந்து கொண்ட சாந்தி பேசினாள்... ''என்னடா கிழவா... இலையில் பிடிச்சு என்னைப் பார்க்கற. மரியாதையா என்னை விட்டுடு... இல்லை, உன்னையும் உன் சிஷ்யப் பிள்ளையையும்கூட

நான் அழிச்சிடுவேன்... உயிர்மேல் ஆசையிருந்தால் என்னை விட்டுடு. விடுடா என்னைவிடுடா அயோக்யா..."

ஸ்ரீதான் நம்பியார் விடாமல் பார்த்துக் கொண்டிருக்க பானர்ஜியும் அலறிக் கொண்டே இருந்தான்.

"என்னை என்டா எல்லாரும் ஒண்ணு சேர்ந்து தொந்தரவு பண்றீங்க... அந்த விஜய்பாணிதான் என்னை அடக்கி வதைச்சு சித்ரவதை பண்றான்னா நீகூட ஏன்யா என்னை இம்சைப் படுத்தறே? நான் உனக்கு என்ன கெடுதல் பண்ணினேன்? என்னை விட்டுடு!"

ஸ்ரீதான் நம்பியார் யோசித்து நடுவிரலால் தலையைத் துழாவி, கட்டை விரலின் துணை கொண்டு சட்டென்று நீளமான முடியைப் பிடுங்கினார். அதன் நீளத்தைக் கையால் அளந்து வாழையிலையில் தெரிந்த சாந்தியின் கைகளில் கட்டுப் போட்டார். அடுத்த கணம் வாழை இலையின் நரம்புகள் முழுதுமாய்ப் பெரிய வெளிச்சத்துடன் எரிந்து கரைந்து போயின. பின் மணல் பரப்பிய தளத்திற்கு வந்து இளைஞன் கொடுத்த முட்டைகளை உடைத்து ஊற்றினார். மண்ணில் விழுவதற்கு முன்பே திரவம் காற்றில் கரைந்தது. மண் தரையில் இளைஞன் கிறுக்கியிருந்த வாசகங்கள் அழிந்து போயின.

ஸ்ரீதான் நம்பியார் இரண்டு கைவிரல்களையும் மூடி மணிக்கட்டுகளின் துடிப்புப் பிரதேசத்தைச் சப்பணமிட்டு மடங்கியிருந்த கால் முட்டியில் அழுந்துமாறு வைத்து நெஞ்சை நிமிர்த்திக் கண்களை மூடிக்கொண்டு பேசலானார்.

# 15

"ஆவியுலக நண்பர்களே... உங்களில் யாரேனும் ஒருவர் எனக்கு உதவ வாருங்கள். நான் மேற்கொண்டிருக்கும் பணி பற்றிய பூரண அறிவு தங்கள் எல்லோருக்கும் இருக்கும் என்று எனக்குத் தெரியும். யாராவது ஒருவர்... தயவு செய்து ஒருவர்..."

ஸ்ரீதரன் நம்பியாரின் பேச்சுத் தடைப்பட்டது. கைகளிரண்டும் உயர்ந்து அந்தரத்தில் எதையோ பற்றியது. கண்களுக்குப் புலப்படாத எதையோ ஒன்றைக் காற்றிலே ஆதாரமாகப் பற்றிக் கொண்டு எழுந்தார். இறுகத் தழுவிக் கொண்டார்.

"நல்லது நண்பரே, நான் தங்களுக்கு மிகமிகக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தக் காரியத்தை எப்படி ஆற்றவேண்டுமென்று சொல்லுங்கள்?"

சங்கர்ராம் ஆச்சரியத்தின் உச்சத்தில் இருந்தார்.

ஸ்ரீதான் நம்பியார் அவரைக் கவனிக்காதவராகக் காற்றுடன் பேசினார்.

"இந்த க்ஷீன உடலால் என்ன செய்ய வேண்டும் என்பதை உடனே சொல்லுங்கள்."

காற்றுக்குக் குரல் வந்தது.

"நான் அவ்வளவு பெரியவனில்லை. சற்றுமுன் தாங்கள் நிகழ்த்திய காரியங்கள் என் ஆத்மாவைத் திருப்தி

யடையச் செய்தது. தாங்கள் என்னைவிடச் சகலமும் அறிந்தவர். பூரண சக்தி வாய்ந்தவர். நான் போய் அந்த விஜய்பாணியை சற்று குழப்பமடையச் செய்து மெதுவாக இந்தப்பக்கம் தள்ளிக் கொண்டு வருகிறேன். பின் தாங்கள் கவனித்துக் கொள்ளுங்கள் தங்களுக்கு இந்த சூட்சுமம் தெரியும் என்பது ஜெகப் பிரசித்தம். சாந்தி மூலம் பானர்ஜியின் கைகளைத்தான் கட்டி விட்டீர்களே? இனி எது நிகழவும் சந்தர்ப்பமில்லை..."

சங்கர்ராம் பிரமிப்பின் உச்சத்தைத் தொட...

விஜய்பாணி இன்னமும் நின்று கொண்டிருந்தான். தோளிலிருந்து ஜோல்னா பையைத் திறந்து சின்னப் பித்தளைச் சம்புடத்தை எடுத்தான். குடும்பத்தின் மூத்த குழந்தையின் சுபாவம் சூர்ணமாக இருந்தது அதில் பிரான்ஸிஸின் ரத்தத்தைக் குழைத்து நெற்றியில் இட்டுக் கொண்டு இடுகாட்டுக்கு நடக்கத் தொடங்கினபோது மழை இன்னமும் வலுக்க ஆரம்பித்தது.

சிறிது தூரம் நடந்திருப்பான். காதருகில் மெலிசாய் குரல் கேட்டது. "பாணி!

சுற்றிப் பார்த்து விழித்தான்.

"ஸ்ரீதரன் நம்பியார் உன்னைத் தீர்த்துக் கட்டக் கிழக்குப் பக்கமாக வந்து கொண்டிருக்கிறார். கண்ணில் பட்டால் நீ அழிந்து போவாய். ஆகவே ஓடு! வேகமாக ஓடு..."

இடுகாட்டைத் தாண்டி ஓடினான். காதருகில் அதே குரல் ஓடு, ஓடு, ஓடு என்று துரத்த, பட்டென்று பிடிபட்டது அவனுக்கு. இது பானர்ஜியின் குரல் இல்லை. அவன் குரலைப் போல் தோன்றும் வேறு ஒரு குரல். யார் குரல் இது? இந்தக் குரலின் சொந்தக்காரன் யார்? நமக்கு உதவுவது யார்?



"யார் நீ?" உரக்கக் கத்தினான்.

"யாரா? நான்தான் உங்கப்பன்." பிடரியில் பலமாக அடி விழுந்தது. சுதாரித்து எழுந்து ஓட முயன்றான். காலை ஏதோ ஒன்று தட்டிவிடக் குப்புற விழுந்தான். விழுந்த வேகத்தில் எதிரில் ஒரு வீடு தெரிய அதற்குள் அடைக்கலம் புகுகிற எண்ணத்தில் எழுந்து ஓட்டமாக ஓட...

வீட்டு மூலையில் குத்துவிளக்கு எரிந்தது. அதன் வெளிச்சம் அவன் கால்கள் இரண்டையும் ஆணியாய் அடித்து நிறுத்த சுவரோடு சுவராய் நகர முடியாமல் ஒட்டிக்கொண்டு நிற்க, வாய் திறக்க முடியாமல் ஒட்டிக் கொள்ள...

ஸ்ரீதரன் நம்பியார் அவனை இன்னமும் நெருங்கி முன் வாயைத் தன் முஷ்டியால் மிகப் பலமாகத் தாக்கினதில் முன்னிரண்டு பற்கள் உடைந்து ரத்தம் வழிந்தது.

ஸ்ரீதரன் நம்பியார் மெலிதாய்ப் புன்னகைத்தார்.

"தவறு செய்யும் குழந்தையே... உன்னை எப்படி உருப்படியாக வெளியில் விட முடியும்? ஊரை நாசம் செய்கிறாயே. இது நியாயமா? உன் சுயநலத்திற்காக ஒன்றுமறியா உயிர்களைப் பலி வாங்கலாமா? இது பாவமில்லையா? இனி நீ ஏவிய அதே ஆவிகள் உன்னை எப்படி ஏவப்போகிறதென்று நீயே வேடிக்கை பார்..."

"ஐயோ, வேண்டாம்! இனி நான் தப்புப் பண்ண மாட்டேன். என்னைக் கொன்னுடாதீங்க! விட்டுடுங்க."

"உன்னை நான் கொல்ல மாட்டேன். கொல்வது என் வேலையல்ல. இதோ எதிரில் நிற்கும் போலீஸ் அதிகாரி சங்கர்ராமும் உன்னை ஒன்றும் செய்ய மாட்டார். அவருக்கு இவை எதற்கும் சாட்சியங்கள் இல்லை; அதனால் அவராலும் உன்னை

ஒன்றும் செய்ய முடியாது. உன் முன் இரண்டு பற்களையும் நான் எடுத்து விட்டதால் இனி மந்திரங்கள் உனக்குச் சித்தியாகாது. சூட்சும நாடியையும் ஒடிந்து விட்டேன். இனி நீ சாதாரண வெற்று மனிதன். இனிமேலாவது உடலை உழைத்துப் பிழைக்கிற வழியைக் கற்றுக் கொள். ஓடு!''

பாணி முகம் கோணி, வலது கை ஊனமாகி, காலால் இழுத்து இழுத்து நடந்து மெதுவாக வாசலை நோக்கி நகர்ந்தான்...

இனம் தெரியாத சந்தோஷத்திலிருந்தார் சங்கர்ராம். இதுவரை நடந்ததை யெல்லாம் கோர்வையாய் நினைத்துப் பார்த்தார். சினிமா பார்க்கிற மாதிரி இருந்தது. ஆனால் நிஜம், எல்லாமே நிஜம். இவை அத்தனைக்கும் காரண கர்த்தாவான விஜய்பாணி இனி காரணமாகவோ கர்த்தாவாகவோ இருக்க மாட்டான். எல்லாம் முடிந்து அரங்கேறி விட்டது. இனி சுபம் போட வேண்டியதுதான். ஜெயகுமாருக்கு இதைச் சொல்லவேண்டும். பாவம் அவர் இந்தக் களேபரத்தில் சாந்தியைத் தன் நர்ஸிங்ஹோமில் சேர்த்துக் கொண்டு ஒரே காரணத்திற்காகத் தன் ஒரே பிள்ளையைப் பறி கொடுத்துவிட்டுத் தவிக்கிறார்.

ஆஸ்பத்திரிக்குப் பறந்தார்.

சங்கர்ராம் எதிர்பார்த்தாற்போல் மகிழ்ச்சியாய் ஆஸ்பத்திரி இல்லை. ஏன்?

சாந்தியைப் பார்க்க மாடிப்படிகளில் தாவி ஏறினார்.

பாதிப் படிகளில் நர்ஸ் ஸ்டெல்லா தடுத்துக் கூப்பிட்டாள். ''சார். டாக்டர் ஜெயகுமார் உங்களை அவசரமா வீட்டுக்கு வரச் சொல்லி போன் பண்ணினார்.''



அவர் அப்படியே நின்று யோசித்தார். டாக்டர் ஜெயகுமாருக்கு என்ன ஆகியிருக்கும்?

டாக்டர் ஜெயகுமார் இவரைச் சலனமற்றுப் பார்த்து அருகில் அழைத்தார். உட்காரச் சொன்னார். எதிரில் உட்கார்ந்த சங்கர்ராம் மேஜைமீதிருந்த விஸ்கி பாட்டிலைக் கவனித்தார். அதில் பாதி காலியாயிருந்தது. டாக்டரின் கண்களில் சொல்ல முடியாத சோகம் தேங்கிக் கிடந்தது. வீட்டில் யாரும் இருப்பதாகத் தெரியவில்லை.

''ஹவ் எபௌட் எ பெக்?'' என்றார் டாக்டர்.

''நோ தாங்க்ஸ்.''

''இல்லை. கொஞ்சம் சாப்பிடுங்க. மனசு அப்போதுதான் திடப்படும்.''

''ஏற்கெனவே என் மனசு திடப்பட்டுத்தான் போயிருக்கிறது.''

''இல்லை, அடுத்த அறைக்குள் போய்ப் பாருங்கள். எப்படிப்பட்ட திட மனதையும் கலக்கிவிடும்.''

சங்கர்ராம் வேகமாய் எழுந்து ஹாலை ஒட்டின படுக்கை அறைக்குள் எட்டிப் பார்த்தார்.

மெலிசான நைலான் கயிறு தாங்காமல் தேவசேனாவின் உடல்...

அப்படியே உறைந்து போனார் சங்கர்ராம். மறுபடியும் நிகழ்ந்திருக்கிறது! கடவுளே!

உடம்பைப் போஸ்ட் மார்ட்டத்திற்கு அனுப்பி ஆஸ்பத்திரியிலிருந்து திருப்பி வாங்கி, சுடுகாடு வரை சென்று திரும்பி...ஆஸ்பத்திரியை அடைந்த போது நிசப்தமாக இருந்தது.

சங்கர்ராம் யாரையும் லட்சியம் பண்ணாமல் லிஃப்டிற்குக் காத்திராமல் படியேறி, சாந்தியின் அறைக்கதவைத் தட்டினார். உடனே கதவு திறக்கப்படவில்லை. உள்ளிருந்து மெலிசாய், ''யாரது?''

''நான் தான் இன்ஸ்பெக்டர் சங்கர்ராம்.''

''என்ன வேணும்?''

''கதவைத் திற. உன் கிட்டே கொஞ்சம் பேசணும்.''

வினாடி தயக்கத்திற்குப் பின் கதவு திறக்கப்பட்டது. மிரள மிரள விழித்தபடி சாந்தி நின்று கொண்டிருந்தாள். அவளைப் பார்த்த சங்கர்ராமிற்குள் குபீரென்று தீப்பிடித்துக் கொண்ட மாதிரி இருந்தது. அவனுக்குள்ளிருந்து ஆட்டிப் படைத்த பானர்ஜியை மறந்தார். ஆட்டிப்படைக்க வைத்த விஜய்பாணி மறந்து போனான். எல்லாவற்றிற்கும் இவள் மட்டுமே காரணமாகத் தோன்றவே...

பாண்ட் பாக்கெட்டில் கைவிரலில் துப்பாக்கியை இறுகப் பற்றினார்.

''உன் வெறி தீர்ந்ததா, இல்லை இன்னும் பாக்கியிருக்கா? நானும் ஜெயகுமாரும் மீதமாய் உயிரோடு இருக்கிறோம். ஜோசப் மெக்லியின் மனைவியும் குழந்தைகளும் இருக்கிறார்கள். அப்புறம் இந்த ஆஸ்பத்திரியில் வேலை செய்கிறவர்கள் இருக்கிறார்கள். எங்கள் எல்லாரையும் கொன்று கொஞ்ச நஞ்சமிருக்கிற வெறியையும் தீர்த்துக்கொண்டு விடு...''

சாந்தி அதிகம் பயந்து இரண்டடி பின்னால் நகர்ந்து சுவரோடு ஒட்டிக் கொண்டாள். ''நீங்க... நீங்க... என்ன சொல்றீங்கன்னு...''



''புரியலே இல்லே? உன்னை இந்த ஆஸ்பத்திரியில் சேர்த்துக் கொண்ட ஒரே காரணத்துக்காக ஜெயகுமாருடைய மனைவியையும் ஒரே குழந்தையையும் பலி வாங்கிட்டே. போலீஸ் கமிஷனர் பாலம், என்னைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக எங்கெங்கோ ஓடி, பாதி ராத்திரியில் சுடுகாட்டில் துழாவி அவஸ்தைப் பட்டிருக்கிறார். அவரையும் தீர்த்துக்கட்டிட்டே. உனக்குன்னே வாழ்ந்தாங்களே உங்கம்மா — அவங்களைக் கூடவா? சீ! என்ன பொண்ணு நீ...''

குழம்பினாள் அவள். சங்கர்ராம் சொன்னதெல்லாம் புரிந்த மாதிரியும் இருந்தது. புரியாததாகவும் தோன்றியது.

''மிஸ்டர் சங்கர்ராம்...நீங்க சொன்னது எதுவும் எனக்குச் சரியாப் புரியலை... என் அம்மாவுக்கு என்ன ஆச்சு... கொஞ்சம் புரியும்படி சொல்லுங்களேன். ப்ளீஸ்...''

அவளின் கண்ணீர் சங்கர்ராமை இன்னும் வெறுப்படையச் செய்தது. ரிவால்வரை உருவி, சாந்தியிடம் வீசினார்.

''துப்பாக்கியை முழுதுமாக லோட் பண்ணியிருக்கேன். வரிசையா ஆறு குண்டுகள் இருக்கு. முதல் குண்டை என்மீது பிரயோகி. அடுத்து ஜெயகுமார் மீது. மற்ற நான்கு குண்டுகளை யார் யார் மீது தோன்றுகிறதோ அவங்க மீதெல்லாம் பிரயோகிக்க கடைசியா நீ மட்டும் இரு...''

இப்போது எல்லாம் அவளுக்குப் புரிந்தது. வரிசையாய் நிறையப் பேரைப் பலி வாங்கியிருக்கிறாள். அதாவது மனப்பூர்வமாக இல்லை. உடல் பூர்வமாக. இந்த உடம்பு அதற்கு ஒரு கருவியாக இருந்திருக்கிறது. ஆனால் இதை யார் புரிந்து கொள்ளப் போகிறார்கள்?

அவளை மீறின ஏதோ ஒரு சக்தி அவளை இயக்கியிருப்பதைத் தெரிந்து கொண்டாலும் யார் அதை உணர்ந்து கொள்ளப் போகிறார்கள்.

இனி எனக்கு ஏது நிம்மதி? நிழல் மாதிரி என்னைத் தொடரப் போகிற இந்தக் குற்ற உணர்விலிருந்து எப்படித் தப்பிக்கப் போகிறேன்...

வினாடி நேர முடிவில் கீழே கிடந்த துப்பாக்கியை எடுத்து உயர்த்தி...

சரேலென்று ட்ரிகரை அழுத்தித் தன் நெற்றிப் பொட்டில் திருப்பி—

''ஓ...நோ...நோ...''

சங்கர்ராம் குறுக்கே பாய்வதற்குள் ஆஸ்பத்திரி முழுதும் துப்பாக்கிச் சத்தம் எதிரொலித்தது. கீழே சரிந்த சாந்தியின் மெலிதான நீல நிற நைட் கவுனைச் சிவப்புப் பூக்கள் அலங்கரிக்கத் தொடங்கின போது...

''ஓ காட்!'' என்ற முனகல் சங்கர்ராமிடமிருந்து வெளிப்பட்டது.

—முற்றும்—

# பூ மலரும்...

## 1

அன்று காலையில் வானம் தன் வழக்கமான பிரகாசத்தில் இல்லாமல் மங்கலாக இருந்தது. மழை மூட்டத்தோடு காணப்பட்டது. சிலுசிலுவென்று காற்று வீசியது. அந்த ரம்மியமான காலைப் பொழுதை ரசிக்கிற நோக்கத்துடன் தூங்கி எழுந்து நேராக பால்கனிக்கு வந்தாள் புவனா. பால்கனியின் கம்பிச் சுவரில் சரிந்து நின்று வானத்தைப் பார்த்தாள். சுள்ளென்று வெயில் அடிக்காத வானம் அவளுக்குள் ஒரு சந்தோஷத்தை ஏற்படுத்தியது. வெளிக் குளிர்ச்சி உள்ளுக்குள்ளும் பரவுகிற மாதிரித் தோன்றியது. முகமும் கண்களும், பெரிதாய் மலர்ந்து உதட்டோரம் புன்னகையாகத் தேங்கி நின்றது. அந்தப் புன்சிரிப்பில் குழந்தை முகமாகத் தெரிந்தது. முகம் மட்டுமில்லை, குணமும்கூடக் குழந்தைதான்.

வளர்ந்த, பெரிய குழந்தை. அழகான இருபது வயதுக் குழந்தை. வெள்ளை வெளேறென்று நீவிவிட்ட உடல் வாகும், கால் முட்டியைத் தொடுகிற கூந்தலும், அகலமாக பெரிய கண்களும், கூர்மையான நாசியும், அழுத்தமாய்

பள்ளம் வெட்டி சற்றே கூர்மையாய் முடியும் முகவாயும் கொண்ட பி.ஏ. ஆங்கில இலக்கியம் படித்த குழந்தை. முகவாயின் தோற்ற அழுத்தம் அவளுக்குள் இல்லாது போனாலும், பிடிவாதம் நிறைய உண்டு. நினைத்ததை சாதிக்கிற தன்மை, ஒளிவு மறைவற்ற வேகமான பேச்சு, எந்த உணர்வானாலும் உள்ளுக்குள் அழுத்தாமல் சடார் சடாரென்று வெளிப்பட்டுவிடுகிற அல்லது வெளிப்படுத்தி விடுகிற சுபாவம், சுலபமாக வந்து—வந்த சுவடு தெரியாமல் மறைந்துவிடுகிற கோபம், கள்ளம் கபடமற்ற வெகுளித்தனம் இவற்றோடு—சென்னை மாநகரின் மிகப் பெரிய ஆடிட்டிங் கம்பெனியின் உரிமையாளரான சூரிய நாராயணனின் ஒரே பெண். ஒரே பெண் என்கிற காரணத்தால் அளவிற்கு மீறிக் கொடுக்கப்படுகிற செல்லம். அதனாலேயே இன்னமும் அதிகமாகத் தெரிகிற குழந்தைத்தனம், பிடிவாதம், நினைத்த காரியத்தை சாதிக்கிற வேகம்—

இவைதான் புவனா இவற்றோடு தமிழ் இலக்கியங்களில் ஓரளவு ஈடுபாடும் உண்டு. கதை—கவிதைகளில் ஆர்வம், ஒரு பெரிய பவுண்ட் நோட்டுப் புத்தகத்தில் ஆறேழு சிறுகதைகளும், பத்துப் பதினைந்து புதுக்கவிதைகளும் எழுதி யாருக்கும் காட்டாமல் வைத்துக் கொண்டிருக்கிறாள். ஏதாவது பத்திரிகைகளுக்கு அனுப்புகிற ஆசை அடிக்கடி தோன்றினாலும் திரும்பி வந்தால் அந்தத் தோல்வியைத் தாங்கிக் கொள்கிற மனப்பக்குவமும், வலிமையும் அற்ற காரணத்தினால் அனுப்பாமல் இருந்தாள். அப்பாவிடம் சொன்னால் எந்தப் பத்திரிகை ஆசிரியரையும் டெலிபோனில் கூப்பிட்டு ஒரே நிமிடத்தில் பிரசுரிக்க ஏற்பாடு பண்ணி விடுவார். அப்பாவிற்குத் தெரியாத பெரிய மனிதர்களோ, பத்திரிகை, சினிமா, தொழிற்சாலை முதலாளிகளோ இருக்க முடியாது. எல்லாருமே பணத்தை எரித்துக் குளிர்காய்கிற வழியை அப்பாவிடம் கேட்டுக் கொண்டு போகிறவர்கள். அப்பா சொல்வதற்கு மறுவார்த்தை பேசாமல் தலையசைப்



பவர்கள். முக்கால்வாசி நாட்கள் வீட்டின் பின்பக்க அரை ஏக்கர் பச்சைப் புல்வெளியில் நடக்கிற விருந்துகளில் கலந்து கொண்டு காக்டெயில் சாப்பிடுகிறவர்கள். "என்னடா வெங்கடகிருஷ்ணா, வரவர உன் பத்திரிகையில் நீலமும், பச்சையும் மாறிமாறி அடிக்கிறது..."—அப்பா தன் கம்பீரமான குரலில் அதட்டலாகக் கேட்பதை புவனாவே கேட்டிருக்கிறாள். அதனால் சிறிதும் பாதிக்கப் படாத வெங்கடகிருஷ்ணன் விஸ்கியின் கடைசித் துளியைக்கூட மீதம் வைக்காமல் டம்ளரை நாக்கில் கவிழ்த்துக் கொண்டே சொல்வார் :

"என்னப்பா பண்றது; பத்திரிகை விக்கணுமே..."

"யார்கிட்ட இந்தக் காது குத்தல்? ஞாயிற்றுக்கிழமை காலையில் ஜனங்க கண் விழிக்கிறதே உன் பத்திரிகை முகத்துலதான். காபி குடிக்காமல்கூட இருப்பாங்க போல இருக்கு. ஆனால் உன் பத்திரிகை பார்க்காமல் இருக்க மாட்டாங்க. அப்படி ஒரு பழக்கம் உன் பத்திரிகையோட அவங்களுக்கு ஏற்பட்டுப் போயிருக்கு. நீ என்னடான்னா பத்திரிகை விக்கணுமேன்னு பதில் சொல்ற. ஏண்டா டேய், சம்பாதிச்சதே இன்னும் ஐந்தாறு தலைமுறைக்கு வந்தும் மீதி இருக்கும். அது போறாதாடா...? இன்னுமா ஆசை விடலை...? நல்லதா நாலு விஷயத்தை இனிமேலாவது ஜனங்களுக்குச் சொல்லக்கூடாதா?"

"ஆமாம்ப்பா...மற்றவங்களுக்குச் சொல்றது ரொம்ப சுலபம். 'நீ மட்டும் என்ன பண்றியாம்?' இருக்கிறது ஒரே பொண்ணு. அதுவும் அழகான பொண்ணு. அவளுக்கு நீ இப்ப சேர்த்திருக்கிறது ஏழெட்டு தலைமுறைக்கு வரும். இன்னமும் ஏன் தொழில் பார்க்கறே? இதெல்லாம் பணத்துக்காக இல்லைப்பா..."

"அப்படின்னா எம்ப்பா விக்கறதைப் பத்தி கவலைப் படறே..."

கிண்டலாகவும், குறும்புச் சிரிப்புடனும் அப்பா கேட்பதை இவளும் கேட்டிருக்கிறாள்.

இப்போதும் இவள் கவிதைகளும், சிறுகதைகளும் எழுதுகிற விஷயம் அப்பாவிற்குத் தெரிந்தால் போதும். முகம் கொள்ளாச் சிரிப்பும், சந்தோஷமுமாகக் குதிப்பார். "நீ கதையும் கவிதையும் எழுதறியாம்மா ...?எம்பொண்ணு எழுதறது எனக்குத் தெரியாமல் போச்சே...? இரும்மா வரேன்..." கை டெலிபோன் எண்களைச் சுழற்றும்.

"யாரு பத்மனாபனாடா ...நான்தான் சூரி பேசறேன். உனக்கு ஒரு குட் நியூஸ்டா, எம்பொண்ணு கவிதை எழுதியிருக்கா; புதுக்கவிதை, உனக்கு அனுப்பி வைக்கறேன். படிச்சுப்பாரு. அப்படியே அசந்து போயிடுவே. ஒரு ஆளை அனுப்பி கலெக்ட் பண்ணிக்கோ; அடுத்த வாரத்திலேயே பிரசுரிக்க ஏற்பாடு பண்ணிடு...படமா ...? வந்து..."

"ஏம்மா உனக்கு யார் படம் போட்டால் சரியாக இருக்கும்னு தோணறது..."

இவள் பேச வராமல் தடுமாறுவாள். சந்தோஷத்தில் வார்த்தைகள் குளறும்.

"நீங்களே சொல்லுங்களேம்ப்பா..."

"பத்மனாபா...கோபுலுவோட படம் இதுக்கு சரியா இருக்கும்னு தோணறது. அதனால் அவர்கிட்டேயே படம் அனுப்பிடு. ஒகே...?"

ஒரே வினாடிதான். கவிதைகளும், சிறுகதைகளும் பிரசுரிக்கப்பட்டு விடும். உடனே இவள் தொடர்கதை எழுதக்கூட கேட்கப்படலாம். ஆனால் அப்பாவின் சலுகையில் கதாசிரியை ஆவதை விரும்பாததால் அப்பாவிடம்கூட இன்னும் காட்டினதில்லை. மனத்திற்குத் தோன்றினதையெல்லாம் எழுதித் தன்னிடமே வைத்துக்



கொண்டிருந்தாள். அப்போதும் கருமேகச் சூழ்ந்த வானம் அவளுக்குள் கவிதை மயமான ஒரு எண்ணத்தைத் தோற்றுவித்தது. அதில் வேண்டுமென்றே வானத்தைப் பெண்ணாக்காமல் ஆணாக்க நினைத்தாள். எல்லா கவிஞர்களும் வானமெனும் மங்கை, வானத்துப் பெண் என்று பெண்பாலாக்கியிருந்ததில் சலித்துப்போய் தான் ஆண் பாலில் எழுத வேண்டுமென்று முடிவு பண்ணினாள். வானத்து இளவரசன் அழுக்கடைந்த வெள்ளை வேஷ்டியில் காட்சி தருகிறான். காரணம்; துவைக்க அவனுக்கு அன்று சூரிய சோப்புக் கிடைக்கவில்லை என்கிற கருத்தைக் கவிதை வரியாக்க மனதிற்குள் முயன்று கொண்டிருந்த போதே தெருக்கோடியில் பாஸ்கர் சைக்கிளில் வருவது கண்ணில்பட சட்டென்று கவிதை முயற்சியைக் கைவிட்டு உள்ளுக்குள் பரபரப்படைந்தாள். வெள்ளை உடையில், படிய வாரிய தலையுடன் மிகக் கம்பீரமாகத் தெரிந்தான் அவன். அந்த கம்பீரத்திற்கும், தோற்றத்திற்கும், படிப்பிற்கும் சைக்கிளில் வந்தது பொருத்தமில்லாததாகத் தெரிய அப்பாவிடம் சொல்லி உடனே ஒரு மோட்டார் சைக்கிளோ, ஸ்கூட்டரோ வாங்கித் தரவேண்டும் என்று நினைத்துக் கொண்டாள். அவன் வீட்டு வாசலை நெருங்குகிறவரை காத்திருந்து 'ஹலோ' சொன்னாள்...

## 2

நிமிர்ந்து பார்த்துப் பதில் ஹலோ சொல்ல மறந்தவனாக வெறுமனே புன்னகைத்தான் பாஸ்கர். ரோஜா நிற நைட்கவுனில் தேவதை ஒன்று பால்கனியில் நின்று கொண்டிருப்பதாக நினைத்தான். தலை லேசாய்க் கலைந்து, முகம்கூடக் கழுவாத அந்த நிலையிலும் அவளின் அழகு அவனுக்குள் பிரமிப்பை ஏற்படுத்திற்று.

இப்படிக்கூட நிர்மலமாக ஒரு அழகு இருக்க முடிகிறதே என்ற கேள்வி எழுந்தது. இருக்கிறதே அதான் கண்ணெதிரில் பார்க்கிறோமே என்று அறிவு பதில் சொல்ல வழக்கமான பாதுகாப்பு உணர்ச்சி அவனைத் தடுத்தது.

'பாஸ்கர்! அவளைப் பற்றி இப்படியெல்லாம் நினைக்கிற தகுதிகூட உனக்குக் கிடையாது. பொருளாதார மட்டத்தில் இதோ இப்போது நின்று கொண்டிருக்கிற உயரத்தில் அவள் இருக்கிறாள். இந்த உயரம்கூட குறைச்சல்தான். இன்னும் மேலே, எங்கோ வானத்தில் மிதக்கிறாள். அவளைப் பிடிக்க வேண்டுமென்று சாதாரண சைக்கிள் வாகனத்தை வைத்துக் கொண்டு ஆசைப்பட முடியுமா? அதற்கு விமானம் தேவை விமானத்திற்கு பணம் தேவை. இருக்கிறதா உன்னிடம்? அவள் அப்பாவிடம் காரியதரிசியாக வேலை பார்ப்பதில் அவர் தருகிற இரண்டாயிர ரூபாயில் அக்காக்களின் கல்யாணக் கடனைச் செலுத்துவது போக மீதி 750 ரூபாயில் அம்மாவும், நீயுமாகக் காலம் தள்ளுகிற ஒரு சராசரி குடும்பத்தைச் சேர்ந்த நீ கோடீஸ்வரியான அவளுக்கு ஆசைப்படலாமா? சாதாரண மனுஷத்தனம் கருதி அவள் ஹலோ சொல்வதைத் தப்பாக நினைக்கலாமா...? வெறும் கற்பனையில் சஞ்சாரம் செய்யாமல் சைக்கிளை விட்டு இறங்கி உடனே அவளுக்கு—உன் முதலாளியின் பெண்ணிற்கு உனக்கு மாதம் தவறாமல் படியளப்பவருக்கு ஹலோ சொல்லு...ம்...'

சடாரென்று சைக்கிளை விட்டிறங்கி சுய உணர்வு வந்தவனாக ஹலோ சொன்னான் அவன்.

''குட்மார்னிங்! இன்னிக்கு ரொம்ப சீக்கிரம் எழுந்து விட்டீர்கள் போல இருக்கிறதே...?''

''ஆமாம்...'' என்று மிகவும் சந்தோஷமாகச் சிரித்தான் அவள்.



''இந்த வெதர் எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. பெங்களூர் க்ளைமேட்டை ஞாபகப் படுத்தறது. வானத்து மேகத்தையும் குளிர்ச்சியான காற்றையும் அனுபவித்துக் கொண்டு இங்கேயே நிற்கலாம் போல இருக்கு...''

அவன் பெருமூச்சு விட்டுக் கொண்டே சொன்னான்.

''நீங்கள் கொடுத்து வைத்தவர்கள். இயற்கையை ரசித்துக் கொண்டு நிற்கிறீர்கள். எங்களால் எல்லாம் நிற்க முடியுமா? இதோ உள்ளே ஓடினால் பனிரெண்டு மணி வரை உட்கார நேரமிருக்காது. டெலிபோன் கால்களும் டைப் அடிக்க வேண்டிய பர்ஸனல் லெட்டர்களும் ஸ்டேட்மெண்ட்களும்.''

அவள் அவனுடைய ஆதங்கத்தைப் புரிந்து கொண்டவளாக இடையில் குறுக்கிட்டுச் சொன்னாள்.

''ஓ... அதெல்லாம் கிடக்கட்டும். நீங்கள் கொஞ்சம் மேலே வாங்களேன். இந்த இடத்திலிருந்து வானம் எத்தனை அழகாகத் தெரிகிறது பாருங்களேன்...''

''நீங்கள்தான் எங்கோ உயரத்தில் இருக்கிறீர்களே... என்னால் எப்படி அங்கே வரமுடியும்...?''

அவன் சொன்னதன் உட்பொருள் புரிய அவள் மென்மையாய் சிரித்துக் கொண்டே தலைகுனிந்து சொன்னாள்.

''மனமிருந்தால் மார்க்கம் இல்லாமலா போகும்... எத்தனை இடையூறுகள் உலகத்தில் இருந்தால் என்ன...? வரவேண்டும் என்று நினைத்தால் தாராளமாக வரலாம் எங்கோ இருக்கிற சந்திரனில் ஆம்ஸ்ட்ராங் போய் இறங்கவில்லையா?...''

''அது சரி. ஆம்ஸ்ட்ராங்கிடம் ராக்கெட் இருந்தது. என்னிடம் வெறும் சைக்கிள் தானே இருக்கிறது!''

''இது வேண்டுமென்றே பேசுகிற குதர்க்கம், இப்போது மேலே ஏறிவர உள்ளே படி இருக்கிறது. ஏறி வாருங்கள்..."

''வருகிறேன்; அதற்குள் அப்பா கூப்பிட்டால்...''

''நான் சொல்லிக் கொள்கிறேன். நீங்கள் முதலில் மேலே வாருங்கள்..."

அவன் கார்ஷெட்டில் சைக்கிளை வைத்துவிட்டு சிவப்பு கார்பெட் விரித்திருந்த படிகளில் ஏறி மேலே போனான்.

புவனா நின்றிருந்த பால்கனியை அடைய வேண்டுமானால் அவளுடைய படுக்கை அறையைக் கடந்தே போகவேண்டும். குளிர்சாதன வசதியை நிறுத்தியிருந்ததால் புவனா அறைக் கதவைத் திறந்துதான் வைத்திருந்தாள். ஆனால் கதவிற்குப் பதிலாக, விலையுயர்ந்த கனமான திரைச்சீலை கதவாகத் தொங்கிற்று. பாஸ்கர் அறைவாசலில் தயங்கி நின்றபோது அடுத்த அறையிலிருந்து வெளிப்பட்ட சூர்யநாராயணன் அவன் அங்கே நிற்பதை ஆச்சரியமாகப் பார்த்தார்.

பின்—

''என்ன பாஸ்கர், இங்கே என்ன செய்கிறாய்?'' தன் வழக்கமான கம்பீரத்தில் கேட்க,

அவர் தவறாக ஏதாவது நினைத்துக் கொண்டு விடப் போகிறாரே என்று வியர்த்துப் போய் உடனே பதில் சொல்லத் தடுமாறினான்.

''இல்லை சார்... வந்து .. புவனா மேலே கூப்பிட்டார்கள் சார்..." முடிப்பதற்குள் அவனுக்குள் மெலிதாய் ஒரு நடுக்கம் தோன்றி மறைந்தது. அத்தனை மயக்கத்திற்குத் தேவையே இல்லை என்கிற மாதிரி பெரிதாய் சிரித்தார் அவர்.



''ஓ... புவனா கூப்பிட்டாளா...? உள்ளே போக வேண்டியதுதானே...? இங்கே ஏன் நிற்கிறாய்...? புவன், டேய் புவன்; பாஸ்கரை வரச் சொல்லிட்டு அங்கே என்னடா பண்றே...?'' பாஸ்கரும் கூடப் போனான். அப்பாவின் குரல் கேட்டுப் பால்கனியை விட்டு வந்த புவனா,

''என்னப்பா நீங்க வந்திருக்கீங்க...?" அப்பாவை ஆச்சரியமாகப் பார்த்தவள் பின்னால் நின்ற பாஸ்கரையும் கவனித்தாள். ''எம்மா நான் வரக் கூடாதா...?"

''இல்லேப்பா... நீங்க அனாவசியமா என் ரூமுக்கெல்லாம் வரமாட்டீங்களேன்னு கேட்டேன்..."

''இப்ப கூட அனாவசியமாக வரலேம்மா... நீ பாட்டுக்கு பாஸ்கரை வரச் சொல்லிட்டு பால்கனியிலேயே இருந்தியானால் அவன் அறை வாசலிலேயே தயங்கி நின்னுட்டிருக்கான். நம்ம ஒருத்தரை வரச் சொன்னால் வந்து கூட்டிட்டுப் போகணும்கிற மரியாதை இல்லையா? ம்...?"

''இல்லேப்பா...வந்து...தான்..."

''சரி...சரி, அவனை எதுக்காக மேலே வரச் சொன்னே...?"

''அதுப்பா...வந்து... இன்னிக்கு வானம் மப்பும், மந்தாரமுமாய் அழகாயிருந்தது. அதுவும் என் பெட்ரூம் பால்கனியிலிருந்து ரொம்ப அழகாய்த் தெரிஞ்சுது. அதை அவரும் பார்த்து ரசிக்கட்டுமேன்னுதான் கூப்பிட்டேன்..."

அதைக் கேட்டுச் சிரித்தார் சூரியநாராயணன்.

''நல்ல பொண்ணும்மா நீ...? வானை ரசிக்கவா எங்களுக்கு நேரமிருக்கு...? நாங்க என்ன பாட்டெழுதறவங்களா—இல்லே கணக்கெழுதறவங்களா...?''

''எம்ப்பா, இப்போ தான் உங்களையரக் கூப்பிட்டேன்?''

''அவனுக்கு மட்டும் வேலையில்லைன்னா நினைக்கிறே...?''

''ஒரு நாளைக்கு என்கூட வந்தால் ஒண்ணும் குடி முழுகிப் போயிடாதுப்பா...''

''ஒரு நாளைக்கு உன்கூட வர்றதா...? எங்கே போகப் போறே...?''

''எம்ப்பா... நீங்கதானே என் பிறந்த நாளுக்கு மாருதி கார் வாங்கி பிரஸண்ட் பண்ணினீங்க. அதுல நான் இன்னும் மவுண்ட்ரோட்கூடப் போகலை. இன்னிக்கு வெதர் ரொம்ப ப்ளெஸண்ட்டா இருக்கு; மகாபலிபுரம் வரை ஒரு டிரைவ் போறேன். நீங்க வரணும். இல்லைன்னால் பாஸ்கரையாவது துணைக்கு அனுப்ப ணும்...''

''அம்மாடி.... என்னால முடியாது. வேணும்னா நீ பாஸ்கரைத் துணைக்கு அழைச்சுண்டு போ...''

அதைக் கேட்டு ''ஸார், ஸார்...'' என்று அலறினான் பாஸ்கர் — ''இன்னிக்கு நிறைய வேலை இருக்கு சார். டைரக்டர் சேதுராமன் வரேன்னு சொல்லியிருக்கார். ஸ்ரீலக்ஷ்மி ஷூட்டிங் போறதுக்கு முன்னால் பத்து நிமிஷம் வராங்களாம். டைம் கேட்டிருக்—''

''இருக்கட்டும்பா...'' என்று நடுவில் கத்தரித்துச் சொன்னார் சூரியநாராயணன். ''வேலை நமக்குத் தினமும் தான் இருக்கும். என்னிக்கு இல்லை சொல்லு... இன்னிக்கு சேதுராமன்னால் நாளைக்கு சபாபதி வருவார். இன்னிக்கு ஸ்ரீலக்ஷ்மி வந்தால், நாளைக்கு ஸ்ரீசரஸ்வதி வருவாள். அதனால் உனக்கு இன்னிக்கு பர்மிஷன் தரேன். குழந்தை ரொம்ப ஆசைப்படறா... கூடப் போயிட்டு வாப்பா...''

''இல்லை...சார்...வந்து...''



''வரவேணாம். நீ போனால் போறும். கிளம்பும்மா புவனா. நீ தயாராகிற வரைக்கும் பாஸ்கர் கொஞ்சம் என் கூட வந்து வேலையைக் கவனிப்பான். குளிச்சு, ரெடியாகி நீ இறங்கி வந்ததும் அவனை அனுப்பிடறேன். என்ன...?''

''ரொம்ப தாங்க்ஸ்ப்பா...''

17660

## 3

கீழே இறங்கி வந்து அலுவலக அறைக்குள் நுழைந்து ஃபைலைப் புரட்டின பாஸ்கர் மிகுந்த எரிச்சலில் இருந்தான். புவனாவுடன் போவதில் சந்தோஷப்படுவதற்குப் பதிலாக உள்ளுக்குள் கோபப்பட்டான். புவனாவின் மீதும் சூரிய நாராயணன் மீதும் அந்த வினாடியில் அவனுக்கு ஒரு வெறுப்புதான் ஏற்பட்டது. இவர்கள் சொன்னால் உடனே தான் கிளம்பிவிட வேண்டுமா என்று தோன்றிற்று.

'பெண் கேட்டாள், அப்பாவும் கூடப்போ என்கிறாரே... இதில் என் விருப்பம் என்று ஒன்றுமே கிடையாதா? போ என்றால் உடனே கிளம்பிவிட வேண்டுமா...? போகிறாயா என்று கூடக் கேட்கவில்லை. 'உன் சௌகரியம் எப்படி பாஸ்கர்...?' என்று மரியாதைக்குக் கூட ஒரு வார்த்தை இல்லை. போ என்கிற கட்டளை தான். இவர்கள் கட்டளைக்குக் கீழ்ப்படிகிற அடிமையா நான்? எனக்கென்று விருப்பு, வெறுப்பு எதுவுமே கிடையாதா...? இவர்கள் கொடுக்கிற சம்பளம் நான் பார்க்கிற ஆபீஸ் வேலைக்குத்தானே தவிர இவர் மகளுக்குக் காவலாளியாகக் கூடப்போவதற்கு இல்லை...'

மனதிற்குள் பொருமினான் அவன். கூடவே தன் கையாலாகாத தனத்திற்குத் தன்மீதே கோபப்பட்டுக்

கொண்டான். அவர் சொன்னால் போக முடியாது என்று மறுக்கிற தைரியம் தனக்கு என் வரவில்லை என்கிற சுய பரிதாபமும் மேலிட்டது. அதற்குக் காரணம் சூரியநாராயணனிடமிருந்து பெறுகிற ஊதியம்; அதை நம்பி இருக்கிற அம்மா...

அம்மா மட்டும்தானா அதை நம்பி இருக்கிறாள்... அக்கா...அவனும் கூடத்தான்... அவனுக்கு மட்டும் பசிப்பதில்லையா...? தங்குவதற்கு இடம் வேண்டாமா? உடை உடுத்துவதில்லையா? மற்ற தேவைகளில்லையா...? அவை எல்லாமே சூரியநாராயணனின் சம்பளத்தை எதிர்பார்த்தே நிறைவேறுபவை. எத்தனையோ கஷ்டங்களுக்கிடையே அம்மா அவனை சி. ஏ. படிக்க வைத்தாள். முதலில் பி. காமுடன் போதும் என்றுதான் சொன்னாள், ஏதாவது வேலை தேடிக் கொள்ளச் சொன்னாள். இவன் தான் தயங்கித் தயங்கி மெதுவாகக் கெஞ்சினான்.

''இல்லேம்மா, வெறும் பி. காமிற்கு என்ன வேலைம்மா கிடைச்சுடும்? பாங்க் வேலை கிடைக்கணும்னால் பெரிய பெரிய சிபாரிசெல்லாம் வேணும்மா, அதற்கெல்லாம் எங்கே போறது! நமக்கு யாரைத் தெரியும்? யார் உதவுவார்கள்? அப்படியே உதவினாலும் வெறுமனே உதவ மாட்டார்களேம்மா? பதிலுக்குப் பணம் கேட்பார்களே...பணம் என்றால் நூறோ, இருநூறோ இல்லைம்மா.. ஆயிரக் கணக்கில் கேட்பார்கள். ஒரு நூறு ரூபாய்க்கு நீ எப்படி உழைக்கிறாய் என்பது எனக்குத் தெரியும்மா... ஆடிட்டர் சோமசுந்தரேஸ்வரர் வீட்டில் சமையல் மட்டுமில்லாமல் எடுபிடி வேலைகளையெல்லாம்கூட நீயே செய்கிறாய் என்பதும் எனக்குத் தெரியும்மா. சோமசுந்தரேஸ்வரர் அளவிற்கு மீறி என் படிப்பிற்காக உதவி செய்கிறார் என்பதும் தெரியும். அவர் மனசிறங்கலையென்றால் நான் பி. காம் படித்திருக்க முடியாது. இப்படி முதல் வகுப்பில் பாஸாகியிருக்க முடியாது. கல்லூரிக்கே



முதலாக வந்திருக்க முடியாது. அப்படி வந்ததால்தான் சி.ஏ. சேரணும்னு நினைக்கிறேன். சி.ஏ. முடிச்சப்புறம் நிறைய சம்பாதிக்கலாம்மா...அதிர்ஷ்டம் மட்டும் இருந்தால் சோமசுந்தரேஸ்வரரையே மிஞ்சலாம்மா. பங்களா, வீடு, கார் என்று வசதியாக இருக்கலாம். என்னம்மா சொல்றே...?''

மகனின் பேச்சிற்கு மறுபேச்சுப்பேசி அறியாத சுந்தரவல்லி அம்மாள் அதற்கும் தலையாட்டினாள். சோமசுந்தரேஸ்வரரின் உதவி கேட்டு அவனை சி. ஏ. சேர்த்தாள். சி. ஏ. முடித்ததும் தன் மகனுக்கு உடனே காரும், பங்களாவும், கிடைத்துவிடும் என்றுதான் நினைத்தாள். ஆனால் அப்படியெல்லாம் ஒன்றும் நிகழவில்லை. இப்போது சுந்தரவல்லியம்மாள் சமைக்கப்போவது மட்டும் நின்றதே தவிர வேறு எந்த மாற்றமும் ஏற்படவில்லை.

அதற்கும் காரணமிருந்தது. சம்பாதிக்கிற பணத்தில் பெரும்பங்கு அக்காக்களின் கல்யாணக் கடனுக்குப் போகிறது. இரண்டு அக்காக்களின் கல்யாணத்தை அப்பா முடித்து வைத்து விட்டுப் போயிருந்தார். மூன்றாவது அக்காவின் கலியாணத்தை இவன்தான் நடத்த வேண்டி இருந்தது. அதற்கான பெரும் தொகையை இவன் கடன் வாங்கியிருந்தான். அதுவும் மார்வாடிக் கடையில். அதைத் திருப்பித் தருவதே இப்போது பிரச்சினையாக இருக்கிறது. வெறும் வட்டி மட்டுமே கட்ட முடிகிறது. சோமசுந்தரேஸ்வரரிடம் ஜூனியராக இருந்தபோது இவ்வளவு சம்பளமில்லை. அவர் செய்த உதவிகளை நினைத்து இவனாலும் கேட்க முடிந்ததில்லை.

அவருக்குப் பின் சூரியநாராயணனிடம் சேர்ந்ததில் சம்பளப் பிரச்சினை இல்லை. கிட்டத்தட்ட இரண்டாயிரம் ரூபாய் கிடைத்ததே தவிர அவன் கனவு கண்ட மாதிரி வீடு, கார் வாங்கிவிட முடியவில்லை. அந்த இரண்டாயிரம் ரூபாயும், சூரியநாராயணனின் ஜூனியர் என்கிற மதிப்பும்

தொழிலின் நெளிவு சுளிவுகளைக் கற்றுக் கொள்கிற வாய்ப்பும் போக நேர்ந்தது.

இதுவே சூரியநாராயணனாக இல்லாமல் வேறு யாராவாவது இருந்திருந்தால் அவன் மறுத்திருப்பான். 'ஸாரி சார், இன்னிக்கு நிறைய வேலை இருக்கு சார். உங்க பெண்ணை இன்னொரு நாள் கூட்டிட்டுப் போறேன். சார்...' என்று சொல்லியிருப்பான். ஆனால் இவரிடம் அப்படிச் சொல்ல முடியாது. முடியாததற்கு இன்னொரு காரணமும் இருந்தது.

புவனா...!

அவளின் அபரிமிதமான அழகும், குழந்தை சுபாவமும் அவனைக் கவர்ந்திருந்தது நிஜம். கூடவே அதற்கெல்லாம் தனக்குத் தகுதியில்லை என்கிற ஜாக்கிரதை உணர்வில் தன் மனதை அடக்கிக் கொண்டதும் நிஜம். எவ்வளவு அடக்கினாலும் சில சமயங்களில் மனது முரண்டு பிடிக்கிறது. தறிகெட்டு ஓடுகிறது. அவளுடன் மானசீகமாகக் குடும்பம் நடத்திப் பார்க்கிறது.

அவளுக்கும் அப்படி ஒரு அபிப்ராயம் இருப்பதைப் புரிந்து கொண்டே இருந்தான். அவள் பேசுவது, பார்ப்பது, பழகுவது.

''என்ன மிஸ்டர் பாஸ்கர் எப்போதும் ஆபீஸ் ரூமே கதி என்று கிடக்கறீங்க.. எனக்கும் போர் அடிக்கிறது. பொழுது போகலை, வாங்களேன்.. லானில் உட்கார்ந்து கொஞ்ச நேரம் பேசலாம்...''

''மிஸ்டர் பாஸ்கர், இந்த ஸல்வார் கமீஸ் எனக்கு எப்படி இருக்குன்னு சொல்லுங்களேன். நேற்றுதான் தைத்து வந்தது.''



''நீங்க சாப்பிட்டீங்களா...பாஸ்கர்...?''

'உங்களுக்கென்று ஸ்பெஷலா காபி கொண்டு வரச் சொல்லியிருக்கேன். சாப்பிட்டு விட்டுப் ஃபைலைப் பாருங்கள்...''

''சஃபையரில் ஒரு நல்ல ஆங்கிலப் படம் வந்திருக்கு போகலாமா...?''

ஒரு நாளைக்கு குறைந்தது பத்து முறையாவது ஆபீஸ் அறைக்குள் நுழைந்து அவனிடம் பேசியாக வேண்டும். பேசுகிற பேச்சு, அதன் பாவம், பார்வையில் தெரிகிற அபரிமிதமான அன்பு...

அவன் புரிந்து கொண்டிருந்தாலும் இடம் கொடுக்கவில்லை. பதிலுக்குப் பச்சைக்கொடி காட்டவில்லை. அவளை அப்படி நினைக்கவே பயந்தான் அவன். பிறந்தநாள் பரிசாக அப்பா வருடத்திற்கு ஒரு கார் வாங்கித் தருகிறார். தன்னால் ஒரு சாதாரண நூல் புடவைகூட வாங்கித் தர முடியுமோ முடியாதோ என்கிற பயம் வந்தது. பணத்திற்குச் செலவைத் தேடுகிற அவள் எங்கே, அத்தியாவசியத் தேவைகளுக்குப் பணம் தேடுகிற தான் எங்கே? இந்த இரண்டு பேரும் எப்படி ஒட்ட முடியும்...? அவள் நிலைக்குத் தன்னால் உயர முடியாது. அப்படி உயர வேண்டும் என்றால் தன்மானத்தை, சுயகெளரவத்தை விட்டுக் கொடுத்து சூரியநாராயணனின் வீட்டோடு வந்து சேர்ந்துவிட வேண்டும். அது முடியாது. அதற்குத் தன் மனச்சாட்சி இடம் கொடுக்காது. எது இல்லை என்றாலும் அப்பா டன்டன்னாக உடம்பில் தன்மானத்தைச் சேர்த்து வைத்து விட்டுப் போயிருந்தார். அதை அவனால் வேறு எதற்கும் அடகு வைக்க இயலாது.

இந்த நிலைமையில் என்ன செய்ய முடியும்? புவனாவை இறங்கித் தன் நிலைக்கு வரச்செய்ய முடியாது. அது பாவம். பிறந்தது முதலே பணமெத்தையில் புரண்

டவள். இல்லை என்பதே இல்லாமற் போனவள். அவளைத் தன்னோடு சேர்த்து அவஸ்தைப் படுத்த முடியாது. அதற்கு சூரிய நாராயணனோ, அவளோ சம்மதிக்க மாட்டார்கள். இப்படி இரண்டு வெவ்வேறு மட்ட உயர மாடுகளை ஒரு நுகத்தடியில் ஓட்டுவது சாத்தியமில்லாதபோது மாட்டு வண்டியில் பயணப்படுவதைப் பற்றி யோசித்து என்ன பிரயோஜனம்?

''என்ன ஆடிட்டர் சார், புறப்படலாமா...?''

சிவப்பில் பூப்போட்ட சல்வார் கம்மீஸில் நெருப்புக் கொன்றைப் பூமாதிரி கண்களை மருட்ட புவனா வந்து நின்றபோது—

சற்று முன் நினைத்த அத்தனையும் மறந்து போனவனாக அவளையே இமைக்காமல் பார்த்தான் அவன்...

## 4

''என்ன இப்படி உம்மென்று உட்கார்ந்துட்டிருக்கீங்க?''

மகாபலிபுரத்தின் மண்டபத்துப் பின்னால் கடலைப் பார்த்து உட்கார்ந்திருந்த புவனா கேட்டாள்.

''ம்... ஒன்றுமில்லை...'' — அப்போதும் தலையை உயர்த்தாமல் வலது கை மணலை இடது கைக்கு மாற்றியபடி, செய்கிற செயலில் மனதோ பார்வையோ லயிக்காமல் சொன்னான் பாஸ்கர். அந்தப் பதிலில் திருப்தி அடையாத புவனா ''என்ன ஒன்றுமில்லை. வீட்டில் கார்ல ஏறினதிலிருந்து பார்க்கறேன். இதோ இங்கே வந்து சேர்ற



வரைக்கும் நீங்களா ஒரு வார்த்தை பேசலை. நானாகப் பேசியதற்கும் ஒரு வார்த்தை பதிலாகத்தான் கிடைக்கிறது. திடீர்னு என்ன ஆச்சு...காலைல சைக்கிள்ல வந்தப்போ நல்லாத்தானே இருந்தீங்க. அதுக்குள்ளே என்ன நடந்தது...?''

''ஒண்ணும் நடக்கலை. இப்பவும் நான் நல்லாத்தான் இருக்கேன்...''

''அதை நீங்க சொன்னா போதுமா?''

''பின்னே யார் சொல்லணும்...?''

''நான் சொல்லணும்...''

''நீங்க சொல்லவே மாட்டீங்க...?''

''ஆமாம், இந்த நீங்க, வாங்க, போங்கோவை எப்போது விடப்போறீங்க...?''

''ஏன் விடணும்...?''

''எதுக்காக அனாவசியமாக மரியாதையெல்லாம்?''

''மரியாதை அவசியமாக இருக்கவேதான் தரேன்...''

''என்ன அவசியம்...?''

''என்ன அவசியமா...? நீங்க யாரு...?''

''புவனா...''

''அது தெரியும், யாருடைய பெண்...?''

''நான் புவனா என்றால் புவனாதான். யாருடைய அடையாளமும் எனக்குத் தேவை இல்லை. நான் தனிப்பட்ட ஒரு மனுஷி. சுயமாக நிற்பவள்...''

''அதுசரி, சுயமாக நிற்கிற லட்சணத்தைதான் இப்போது பார்த்தேனே...''

''என்ன பார்த்தீர்கள்...''

''பயமாக நிற்பவர்கள் ஒரு ஆளைத் துணைக்குக் கூப்பிட மாட்டார்கள்?''

''நான் கூப்பிட்டது பேச்சுத் துணைக்குத்தானே தவிர பயத்தினால் இல்லை...''

''பேசுவதை வீட்டிலேயே பேசியிருக்கலாமே...?''

''இது வீட்டில் பேசுகிற விஷயமில்லை. இதற்குத் தனியான இப்படிப்பட்ட சூழ்நிலை தேவை.''

''இது. இது என்றால் எது?...''

சடாரென்று நிமிர்ந்து அவன் கண்களுக்குள் மிக ஆழமாகப் பார்த்தாள் அவள். ஒரு வினாடி பார்த்துக் கொண்டே இருந்து பின் தழைந்த குரலில் கேட்டாள்.

''நிஜமாகவே உங்களுக்கு அந்த 'இது' என்ன வென்று தெரியாதா...?''

''தெரிந்தால் என் கேட்கப் போகிறேன்?''

''பொய். சிவாஜிகணேசனைப் போய் அருமையான நடிகர் என்று சொல்லுகிறார்களே, அவர்கள் இப்போது உங்களைப் பார்த்தால் உங்களுக்குத்தான் ஆஸ்கார் அவார்டு கொடுப்பார்கள், அத்தனை திறமையான, இயல்பான நடிப்பு...''

அதைக் கேட்டுச் சிறிது நேரம் மௌனமாகவே தலையைக் குனிந்து கொண்டிருந்தான் அவன். கை மணலில் அலைவதை நிறுத்தியது. பார்வை வெறுமனே வெறித்தது. அவனும் ஒன்றும் பேசவில்லை. அவனாக



வாயைத் திறக்கட்டுமென்று அமைதியாக இருந்த சற்று தூரத்தில் சமுத்திரத்தின் இரைச்சல் மட்டும் பின்னணியாகக் கேட்டுக் கொண்டிருக்க—

பாஸ்கர் தனக்குள் முடிவு செய்து கொண்டான். இந்தப் பிரச்சினைக்கு இன்றோடு ஒரு முடிவு காண வேண்டும். இதற்கு மேலும் இந்தக் கண்ணாம்பூச்சி விளையாட்டுக் கூடாது. புவனா ஒரு பெண். தான் இல்லை என்றால் வேறு ஒருவனோடு வாழ்க்கை நடத்தப் போகிறவள். ஒரு பெண்ணின் எண்ணங்களோடும், உணர்ச்சிகளுடனும், கனவுகளுடனும் விளையாடக் கூடாது......

அவன் அவளுடன் பேச வேண்டியதை முடிவு செய்த மாதிரி நிதானமாகத் தலையை உயர்த்தி நேராக அவள் முகத்தைப் பார்த்தான். பின் ஒரு சின்ன பெருமூச்சுடன் பேச்சைத் துவக்கினான்:

''புவனா, இப்போது நான் உங்களுடன் மனம்விட்டுப் பேசப்போகிறேன். நீங்கள் என்னதான் 'நான் தனி மனுஷி' என்று சொல்லிக் கொண்டாலும் தனி மனுஷி யாகிவிட முடியாது. உங்களின் பெயருக்கு முன்னால் என்ன போட்டுக் கொள்கிறீர்கள் என்று சற்று சொல் வீர்களா?...''

''பெயருக்கு முன்னால்...புரியவில்லை; கொஞ்சம் தெளிவாகப் புரியும்படி சொல்லுங்களேன்?...''

''உங்களின் இனிஷியலைக் கேட்கிறேன்...''

''நான் கேட்டதற்கும் இனிஷியலுக்கும் என்ன சம்பந்தம்?''

''சம்பந்தம் இருக்கவேதான் கேட்கிறேன். தயவு செய்து எதிர்க்கேள்வி கேட்காமல் கொஞ்சம் ஸீரியஸாகப் பதில் சொல்லுங்கள்... உங்கள் இனிஷியல் என்ன...?''

''எஸ். புவனா, புவனேஸ்வரி...''

''அந்த எஸ் யாரைக் குறிக்கிறது..?''

''மிஸ்டர் சூரியநாராயணனை...''

''மிஸ்டர் சூரியநாராயணன் யார் என்று சொல்ல முடியுமா?...''

''அவர் என்னுடைய அப்பா...''

''சாதாரண அப்பா இல்லை. கோடீஸ்வர அப்பா. மார்கழிக் குளிருக்குக் கரன்சி நோட்டுக்களால் நெருப்பு மூட்டிக் குளிர் காய்பவர். அப்படிப்பட்டவரின் ஒரே பெண் நீங்கள். செல்லப் பெண். பசி தெரியாதவர். தேவைகள் தேவைகளற்றுப் போனவர். அப்படிப்பட்ட நீங்கள் என்னை மாதிரி தினசரி அடுப்பெரிக்க மண்ணெண்ணைக்குத் திண்டாடுபவனுடன் இணைய நினைக்கலாமா? இது சரிப்படுமா...? ஒத்துவருமா...? மூன்றாவது மாடியில் நின்று கொண்டு வானத்தை அண்ணாந்து பார்ப்பவர், கீழே தரையில் நடந்து போகிற ஒருவனுடன் கைகோர்த்துக் கொள்வது சாத்தியப்படுமா...?இதெல்லாம் நீங்கள் படிக்கிற பொழுதுபோக்குக் கதைகளுக்குச் சரிப்படலாம். சினிமாவில் சாத்தியமாகலாம். ஆனால் நிஜ வாழ்க்கைக்கு...? வாழ்க்கை இன்னமும் உங்களுக்குப் பிடிபடவில்லை மிஸ் புவனா. வானத்தில் பறப்பவர்களுக்குக் கீழே மண், கல், சேறு இவைகளை மிதித்துச் கொண்டு நடப்பவர்களின் அவஸ்தை தெரியாது. நான் இந்த மண் கல்லுடன் பிறந்தவன். சேற்றிலேயே ஐக்கியமாகிப் போனவன். இன்னும் சொல்லப் போனால் இந்தச் சேறும், கற்களும் இல்லாமல் வாழத் தெரியாதவன். எப்படி ரயில்வே லயனுக்குப் பக்கத்தில் வசிப்பவர்களுக்கு ரயில் சத்தம் பழகிப் பழகி சத்தம் கேளாவிட்டாலும் தூக்கம் வராது என்கிறார்களோ அதேபோல் எனக்கும்



வாழ்க்கையின் கஷ்டங்கள் பழக்கப்பட்டு இனி கஷ்டமில்லாவிடில் வாழ்க்கையே இல்லை என்றாகிவிட்டது. என்னால் இப்படித்தான் வாழ்க்கை நடத்த முடியும். தினசரி சைக்கிளில் மட்டுமே போக முடியும். காலை சமைத்தால் இரவு சாப்பாட்டிற்கும் அதேதான். சில சமயம் காலை சாம்பார், ரஸம் தீர்ந்துபோய் வெறும் சாதமும், மோரும், ஊறுகாயும் மட்டுமே தட்டில் விழும்...

''உங்களால் அப்படியெல்லாம் சாப்பிட முடியாது. ஒரு வேளை பச்சைக் காய்கறி, காரட் இல்லை என்றால் சமையற்காரரை என்ன பாடு படுத்திவிடுகிறீர்கள்...? ஒரு பிறந்தநாளுக்கு அப்பா விலை உயர்ந்த பரிசு தரவில்லை என்றால் உங்கள் முகம் எப்படி வாடிவிடுகிறது? ஏ. ஸி. அறையும், குஷன் போட்ட மெத்தையும், பாதங்களுக்கு மென்மையான ரத்தினக் கம்பளத்தையும் கனவில் மட்டுமே காண முடிந்தவன் நான். அதனால் தயவு செய்து என்னோடு உங்கள் வாழ்க்கையைப் பிணைத்துக் கொள்ள நினைக்காதீர்கள். என் வீட்டில் வந்து நீங்கள் குடும்பம் நடத்துவதென்பது இயலாத காரியம்...''

அவன் சற்று நிறுத்திப் பெருமூச்சுவிட புவனா அத்தனையையும் கேட்டுக் குழந்தையாகச் சிரித்துக் கொண்டே சொன்னாள்: ''இவ்வளவுதானே...? நான் என்னவோ ஏதோ என்று பயந்து போய்விட்டேன். ஏன் பாஸ்கர், அப்பாவின் இத்தனைப் பணமும் யாருக்கு?... யாருக்காக அவர் சம்பாதிக்கிறார்? எனக்காக மட்டும் தானே...? அப்படி இருக்கிறபோது என்னைக் கஷ்டப்பட விட்டுவிடுவாரா...? என்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்டபின் உங்களை இதே நிலைமையில்தான் வைத்திருப்பாரா...? என்ன பேசுகிறீர்கள் நீங்கள்? உங்களையும், அம்மாவையும் முதலில் வீட்டிற்கு அழைத்துக் கொண்டு வந்துவிடுவார். இங்கே வந்தபின் என்ன குறை சொல்லுங்கள்...?''

அதைக் கேட்ட பாஸ்கரின் உடல் ரத்தம் முழுவதும் தலைக்கு ஏறியது. முகம் சிவப்பாயிற்று. சொல்ல முடியாத அவமானத்தில் பேச்சு வர மறுத்தது. எல்லையற்ற வெறுப்பில் அவளை ஒரு வினாடிப் பார்த்தான். 'திமிர், பணத்திமிர். இந்தப் பணக்காரர்களின் உடம்பில் ரத்தத்திற்குப் பதிலாகப் பணம்தான் ஓடுகிறது! நான் அவள் வீட்டிற்கு வருவதாம். என்னோடு மட்டுமில்லாமல் அம்மாவையும் சேர்த்து அழைத்துக் கொண்டு போவார்களாம். எங்களை என்ன விலை கொடுத்தா வாங்குகிறார்கள்...? இந்தப் பணம், பங்களா, கார் மற்ற வசதிகளைக் காட்டினால் ஓடி வந்து விடுவோம் என்று நினைக்கிறாளா...? தெவர், புவனா! இப்படிப்பட்ட ஆசைகளுக்கு அடிமையாகி என்னையும், தன்மானத்தையும் விற்பவன் நானில்லை. வீட்டோடு மாப்பிள்ளைக்கு வேறு ஆளைப் பார். நீ சொல்வதை—உன் அப்பா சொல்வதையெல்லாம் கேட்டு சலாம் போட்டுக் கொண்டிருப்பான் அவன்....?'

அவனின் எண்ண ஓட்டத்தை அறியாத புவனா இன்னமும் குழைவாகப் பார்வை முழுதும் காதலைத் தேக்கி அவனை எதிட்டுக் கேட்டாள்:

''என்ன யோசிக்கிறீர்கள்....?''

''இல்லை, எத்தனை சுலபமாக ஒரு மனிதனை உங்களால் விலைக்கு வாங்கிவிட முடிகிறது என்று யோசிக்கிறேன்....''

''விலைக்கு வாங்குவதா...? என்ன சொல்கிறீர்கள்...?''

சடாரென்று ஆக்ரோஷத்தோடு தலை நிமிர்ந்தான் அவன்.

''பின் இதற்கு என்ன பெயர்? வீட்டோடு மாப்பிள்ளை என்றால் என்ன அர்த்தம்? உங்களுடைய வீடு, கார், சொகுசான வாழ்க்கை என்கிற ரொட்டித் துண்டை விசிறி எறிந்தால் ஓடி வருகிற நாய் நானில்லை. இதற்கெல்லாம்



அடிமைப்பட்டு விடுபவனில்லை. எவ்வளவு சுலபமாக 'நீங்களும், அம்மாவும் வீட்டிற்கு வந்தால் எல்லாம் சரியாகப் போய் விடும்' என்கிறீர்கள். நாங்கள் என்ன அத்தனை சுலபமாக ஓடி வந்து விடுபவர்கள் என்றா நினைக்கிறீர்கள்? இந்த வசதியான வாழ்க்கைக்கும் பணத்திற்கும் அலைபவர்கள் என்கிற எண்ணமா? என் அம்மாவைப் பற்றி உங்களுக்குத் தெரியாது. அப்பா செத்துப்போனபின் யாரிடமும் கையேந்தி நிற்காமல் ஆடிட்டர் சோமசுந்தரேஸ்வரரின் வீட்டில் சமையல் வேலை செய்து என்னைப் படிக்க வைத்தவள். யாரிடமும் கை நீட்டி ஒரு பைசா வாங்கி அறியாதவள். அதே ரத்தம்தான் என் உடம்பிலும் ஓடுகிறது புவனா. வீட்டிற்கு அழைத்துக் கொண்டு போய் விட வேண்டுமென்று நினைத்தீர்களேத் தவிர நீங்கள் என் வீட்டிற்கு வந்து என்னோடு நான் இருக்கிற இடத்தில் குடும்பம் நடத்தலாம் என்று ஏன் நினைக்கவில்லை? அது தானே முறை, அதுதானே இயல்பு, அதுதான் நியாயம் கூட. ஆனாலும் உங்களால் அப்படி நினைக்க முடியவில்லை. காரணம்... பணம். மிதமிஞ்சிக் கிடக்கிற பணம். அது கொடுக்கிற பலம். எதையும், யாரையும் விலைக்கு வாங்கி விட முடியும் என்கிற திமிர்.''

''ப்ளீஸ் ஸ்டாப் இட்...'' என்று குறுக்கிட்ட புவனாவின் கண்களில் நீர் முட்டி கன்னங்களில் வழியத் தயாராக இருந்தன. சற்று முன்பிருந்த உற்சாகம், சந்தோஷம் அத்தனையும் வடிந்து முகம் பரிதாபமாகக் கிடந்தது. குரல் அழுகையில் கரகரவென்று வந்தது. ''கடவுள் சத்தியமாக நான் அப்படி நினைக்கவே இல்லை. பணத்திமிர் என்னிடம் ஒரு போதும் இருந்ததில்லை. உங்களையும் அம்மாவையும் அழைத்துக் கொண்டு வருவதாகச் சொன்னது சில வசதிகளின் பொருட்டுத்தானே தவிர, உங்களை விலைக்கு வாங்குகிற அர்த்தத்தில் இல்லை...''

''நான்தான் வசதிகளே வேண்டாம் என்கிறேனே... என்னுடைய ஒரு பெட்ரும் வீடு போதும் என்கிறேனே...

அதற்குள் நிம்மதியாக சந்தோஷமாக வாழ முடியும் என்கிறேனே... நான் வாழ்வது மட்டுமில்லை. அதில் என்னுடன் சந்தோஷமாகக் குடும்பம் நடத்த முடியும் என்று நினைக்கிற சாதாரண மத்தியதரக் குடும்பத்துப் பெண்தான் எனக்குத் தேவை. காலையில் எழுந்து காய்கறிக் கடைக்குப் போய் கத்தரிக்காய் பேரம் பேசி வாங்குகிற பெண்ணால்தான் என்னோடு ஒத்துப் போக முடியும்...'

அத்தனை வருத்தத்திற்கிடையிலும் பளீரென்று சிரித்தாள் புவனா... அவளை ஆச்சரியமாகப் பார்த்தான் அவன். அந்த நேரத்தில் அவளால் எப்படிச் சிரிக்க முடிகிறது என்று தோன்றிற்று; தன் ஆச்சரியத்தை உள்ளுக்குள் அடக்கி வைக்காமல் கேட்டான்:

''எதற்காக இப்போது சிரிக்கிறீர்கள்...?''

''இல்லை, நீங்கள் சொன்னதில் ஒரு சின்ன திருத்தம்....''

''என்ன....?''

''அப்படிப்பட்ட பெண்ணால்தான் உங்களோடு ஒத்துப் போக முடியும் என்பதில்லை. அப்படிப்பட்ட பெண்ணோடுதான் நீங்கள் ஒத்துப் போவீர்கள் என்று சொல்லுங்கள்....''

கோபம் அத்தனையும் அடங்கிச் சட்டென்று சிரித்து விட்டான் பாஸ்கர். அவள் சொன்னதின் நிஜம் மனதை நெருடிற்று. ஒரு வேளை தனக்குள் இருப்பது தன்மானமோ, சுயகௌரவமோ இல்லை. வெறும் தாழ்வு மனப்பான்மைதானோ என்கிற சந்தேகம் வந்தது. கூடவே அத்தனை பேச்சிற்கும் கோபப்படாமல் சிரிக்கிற புவனாவின் வெகுளித்தனம் நெஞ்சைத் தொட திடீரென்று ஏற்பட்ட சொல்ல இயலாத அன்புடன் அவளை மிக மிக மென்மையாகப் பார்த்தான். பார்வை அவளை இதமாக வருடிக் கொடுத்தது.



அவ்வளவு நாட்களாக உள்ளுக்குள் அடக்கி வைத்திருந்த காதல் கண்களின் வழியாக வெளிப்பட, அவன் இன்னும் தீவிரமாகச் சிந்திக்கலானான்.

இப்படித் தன்னை மதித்து தன்னிடம் உட்கார்ந்து பேச வேண்டும் என்கிற அவசியமில்லை. பணத்திமிர் மட்டும் இருக்கிற பட்சத்தில் தன்னை ஒரு பொருட்டா அவள் மதித்து இருக்க மாட்டாள். நிமிர்ந்துகூடப் பார்த்திருக்க மாட்டாள். மகாபலிபுரம் வரை தன்னோடு வர வேண்டும் என்கிற கட்டாயம் எதுவுமில்லை, சூரிய நாராயணன் நினைத்திருந்தால் அவளுக்குத் துணையாக எத்தனையோ பேர்களை அனுப்பியிருக்க முடியும். எத்தனையோ பேர்கள் காத்துக் கொண்டும் இருக்கிறார்கள். அப்படியிருக்க தன்னை அனுப்பியது அவள் கேட்டுக் கொண்டாள் என்பதற்காகத்தான். அவள் எதற்காகக் கேட்டுக் கொண்டாள்—தன் மீதுள்ள அன்பு, நிஜமான காதல், இதைப் புரிந்து கொள்ளாமல் அவளிடம் கோபப்பட்டுப் பேசியது தன் தவறு. தான் சொல்ல வந்ததை நிதானமாகச் சொல்லி இருக்கலாம். அவளை அணைத்து, கைவிரல்களை வருடிக் கொடுத்து மென்மையாகப் பேசியிருக்கலாம் பேசியிருக்கலாம் என்ன....? அப்படித்தான் பேசியிருக்க வேண்டும்.

''புவனா....நீ என்னை எந்த அளவிற்கு நேசிக்கிறாயோ அந்த அளவிற்கு நானும் உன்னை நேசிக்கிறேன். உன் மீது உயிரையே வைத்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் நிச்சயமாக அதற்காக என்னால் என் கொள்கையிலிருந்து தாழ முடியாது. விலகமுடியாது. உங்கள் வீட்டில் வந்து வீட்டோடு மாப்பிள்ளையாக இருக்க முடியாது. என் மதிப்பைத் தாழ்த்திக் கொள்ள முடியாது. இதில் உங்கள் மதிப்பு தாழ்ந்தா போய் விடும் என்று நீ கேட்கலாம். நிச்சயம் தாழ்ந்துதான் போகும். வெளி உலகத்தைப் பொறுத்தவரை மதிப்பு என்பது இல்லாமல் போய் விடும். 'இவனுக்கென்னய்யா, கொடுத்து வச்சவன்.

மாமனார் கோடீஸ்வரன். அங்கே போய் நிம்மதியாக உட்கார்ந்திருக்கிறான். இல்லாவிட்டால் ஒரு சமையற்காரியின் பிள்ளை இந்த ஜென்மத்தில் இந்த சுகத்தை அனுபவிக்க முடியுமா, என்று என் காதுபடப் பேசுவார்கள்.

''நிஜமாக உனக்கு என் மீது பிரியமிருக்குமானால் என்னை நீ காதலிப்பது உண்மையானால், நீதான் உன் உயரத்தை விட்டு எனக்காக இறங்கி வர வேண்டும். என்னோடு சேர்ந்து நின்று நாம் இரண்டு பேரும் உழைப்பால் உயரப் பார்க்க வேண்டுமே தவிர என்னைக் கல்யாணம் என்கிற லிஃப்ட் வைத்து ஒரு வினாடியில் உன் உயரத்திற்கு வரவழைத்து விடக் கூடாது.

''என்ன சொல்கிறாய் புவனா? எனக்கு, என் தகுதிக்கு— சராசரி குடும்பத்துப் பெண்ணைப் பார்த்திருந்தால், அவர்கள் என்ன செய்வார்களோ, அதை மட்டும் செய்து சாதாரணமாகக் கல்யாணத்தை முடித்துக் கொண்டு என்னோடு என் வீட்டிற்கு வர நீ தயாராக இருக்கிறாயா? என் கஷ்டநஷ்டங்களில் பங்கெடுக்கத் தயாரா—? வருடத்திற்கு இரண்டு வாயில் புடவையும், தீபாவளி பொங்கல் என்று பண்டிகை நாட்களில் மட்டும் நைலக்ஸோ, வேறு சில்க் புடவையோ எடுத்து சந்தோஷமாக உடுத்திக் கொள்வாயா? அம்மாவோடு ஒற்றுமையாகச் சமையற்கட்டில் உதவி செய்து குடும்பத்தை நிர்வகிப்பாயா—? எங்கு போவதானாலும் பஸ்ஸிற்குக் காத்திருந்து ஏறிவர முடியுமா ? இதெல்லாம் முடியுமானால், இத்தனைக்கும் நீ தயாராக இருப்பாயானால் சொல் புவனா—நாம் கல்யாணம் பண்ணிக் கொள்ளலாம். இல்லை என்று நீ மறுக்கும் பட்சத்தில், இறங்கி வர உன்னால் முடியாது என்று கருதினால், இத்தனைக் கஷ்டங்களையும் ஏற்றுக் கொள்ளத் தயங்குவாயானால்—

''உன்னைக் குறை சொல்ல நான் தயாராக இல்லை. அதையும் சந்தோஷமாகவே ஏற்றுக் கொள்வேன்.



ஒரு புத்திசாலிப் பெண் அப்படித்தான் செய்வாள். நீயும் புத்திசாலியாக இருக்க வேண்டுமென்றுதான் ஆசைப்படுகிறேன். காதலுக்காக கண்மூடித்தனமாக எதையும் செய்துவிடக்கூடாது என்றே நினைக்கிறேன். இத்தனைக்கும் காதல் என்று வரம்புமீறி எதையும் செய்து விடவில்லை. இன்றுதான் முதல் முதலாக நாம் இதைப் பற்றியே வாய் திறந்து பேசுகிறோம். எதேச்சையாக எப்போதாவது விரல்கள் தீண்டியதைத் தவிர ஒருவரை ஒருவர் தொட்டது கூடக் கிடையாது. அதனால் நீ இதைப் பெரிசு படுத்த வேண்டாம். மனசுக்குள் என்னை நினைத்து விட்டோமே என்று எண்ணிப் பயப்படாதே. இது ஒன்றுமே இல்லை. வெறும் சலனம்தான் என்று எண்ணி ஒதுக்கி விட்டு உனக்கேற்ற அந்தஸ்தில், உன் தகுதிக்கு ஏற்ற மாப்பிள்ளையாகப் பார்த்து சந்தோஷமாகக்—"

சடாரென்று அவளின் நீளமான விரல்கள் நீண்டு அவன் வாயைப் பொத்தி மேலே பேசவிடாமற் தடுத்தன.

''தயவு செய்து அப்படியெல்லாம் பேசாதீர்கள். உங்களைத் தவிர வேறு யாரையும் என்னால் நினைத்துக் கூடப் பார்க்க முடியாது..." என்று கலங்கின கண்களுடன் அவள் கெஞ்சினதும் அவன் அழுத்தமாய் கோபத்தை கோபமாக வெளிப்படுத்தாமல் சொன்னான் :

''முட்டாள்தனமாக எதையும் பேசாதே புவனா வெறும் உணர்ச்சி பூர்வமாகச் சிந்தித்து எந்த முடிவிற்கும் வந்துவிடாதே. கொஞ்சம் அறிவு பூர்வமாகவும் சிந்தித்துச் செயல்படு. நான் சொன்னதை யெல்லாம் நன்றாக யோசித்துப் பார். என் வேண்டுகோளெல்லாம் நடைமுறைக்கு எவ்வாறு ஒத்துவரும் என்பதை எண்ணிப் பார். தீர்க்கமாகச் சிந்தித்து ஒரு முடிவிற்கு வா. தினசரி வாழ்க்கையில் பிரச்சினைகள் அதிகம் குறுக்கிடும். தேவைகளைச் சுருக்கிக்கொண்டு எளிமையாக வாழ்வது

என் போன்றவர்களுக்கே அதாவது பொருளாதார நெருக்கடியில் திணறுபவர்களாலேயே முடியாத காரியம். அதனால் தேவைகளே அற்ற உன்னை அப்படி வாழச் சொல்வது என்பது எனக்கே சரியாகப்படவில்லை. அதனால் இப்போது எனக்கு அவசரப்பட்டு எந்தப் பதிலும் சொல்ல வேண்டாம். நிதானமாக யோசி. உன்னால் முடியவில்லை என்றால் அப்பாவையும் கலந்து ஆலோசித்துப் பின்னர் எனக்கு ஒரு பதிலைச் சொல்லு. அப்புறம் நீ சொன்ன பதிலுக்காக ஒரு போதும் வருத்தப் படக்கூடாது. ஒரு நிமிஷ பதில்-வாழ்க்கையை நரகமாக்கி விட்டதே என்று வேதனைப்படக் கூடாது. நீ சொல்கிற எந்த பதிலையும் நான் சந்தோஷமாக ஏற்றுக்கொள்வேன் என்பதை மனதில் கொண்டு நிதானமாக ஒரு முடிவிற்கு வா. ஒரு வாரமோ பத்து நாட்களோ, உனக்குத் தேவை யான அளவு அவகாசம் எடுத்துக் கொண்டு பின்பு சொல்லு...

''இதற்கு மேலும் நாம் இங்கே இருக்க வேண்டாம். தனிமை நம்மை வெகு சுலபமாக மாற்றிவிடும். அதனால் புறப்படு புவனா, வீட்டிற்குப் போகலாம்...''

வெள்ளை பாண்ட்டின் பின்பக்க மணலைத் தட்டிக் கொண்டு அவன் எழுந்ததும் வேறு வழி இன்றி புவனாவும் அவனைப் பின் தொடர்ந்தாள்.....

# 5

அன்றிரவு முழுவதும் புவனா தூங்கவில்லை. அன்று மட்டுமில்லை. அதற்கு மறுநாள், அதற்கும் அடுத்த நாள், என்று நான்கு நாட்களாகத் தூக்கமில்லை. திரும்பத் திரும்ப பாஸ்கர் சொன்னதையே நினைத்துப் பார்த்தாள். நினைக்க நினைக்க அவன் அவள் மனதில் உயர்ந்து போனான். அந்த நிலைமையில் வேறு யார் இருந்தாலும் இப்படி ஒரு பதிலைச் சொல்லியிருக்க மாட்டார்கள்.

இத்தனை சுலபமாக வருகிற வசதிகளை உதறித் தள்ளியிருக்க மாட்டார்கள். வேறு ஒரு இளைஞனாக இருந்தால் வேலைக்குச் சேருகிறபோதே தன்னைக் குறி வைத்தே சேர்ந்திருப்பான். இவளைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு விட்டால் பிரச்னையற்று இருக்கலாம் என்று கணக்குப் போட்டிருப்பான். பிரச்னையற்றுப் போவது மட்டுமில்லை; எத்தனை பெரிய வீடு. வாசல் முழுதும் அடைத்துக் கொண்டு நிற்கிற கார்கள். உள்ளே வளைய வரும் வேலையாட்கள். இரும்பு பீரோவில் அடைந்து கிடக்கும் பணம்....இவற்றை மனதில் வைத்துக் தனக்கு வலை வீசியிருப்பார்கள். சந்தர்ப்பம் மட்டும் கொஞ்சம் சாதகமாக இருக்குமென்றால் வரிய வீழ்த்தி யிருப்பார்கள். பின்பு அதை உபயோகப்படுத்தி, இந்த வீட்டின் மாப்பிள்ளையாக முடி சூட்டிக்கொண்டு....

இவை அத்தனையும் வேண்டாம் என்று ஒதுக்கு வதுடன் மட்டுமன்றி நல்லவிதமாகப் பேசித் தன்னை யோசித்துப் பதில் சொல்லச் சொல்கிற பாஸ்கர் எத்தனை

உயர்ந்தவன்! எவ்வளவு ஆண்மை நிறைந்தவன்! கம்பீரமான எண்ணங்களைக் கொண்டவன்! இவனை அடையக் கஷ்டப்பட்டுத்தான் ஆக வேண்டுமென்றால் படுவது...

கஷ்டம் என்றால் வேறுவிதமான கஷ்டங்கள் இல்லையே... வெறும் பணக்கஷ்டம் மட்டும்தானே... இங்கே இருக்கிற வசதி அங்கே இருக்காது. வேலைக்கு ஆட்கள் இருக்க மாட்டார்கள். கார் இருக்காது. இது போல் ஏர்கண்டிஷன் பண்ணப்பட்ட அறை இருக்காது. வார்ட்ரோப் நிறைய விதவிதமாகப் புடவைகள் இருக்காது. டிரஸ்ஸிங் மேஜை மீது வெளிநாட்டு ஸெண்ட்டுகள் அடுக்கி வைக்கப்பட்டிருக்காது...இவ்வளவு தானே...? இவைகள் இல்லாமல் இருக்கமுடியாதா என்ன...? எத்தனை பேர் இருக்கிறார்கள்... ஏன், பாஸ்கர் இல்லையா...? வெறும் சைக்கிளை மிதித்துக் கொண்டு வேலைக்கு வருவதில்லையா...? அவரால் முடிகிறபோது தன்னால் முடியாதா...?

பார்க்கப் போனால் அவர் அப்படிக் கஷ்டப் படுகிற போது தான் இந்தமாதிரி சுகத்தை அனுபவிப்பதே கூடத் தவறுதான். அவர் மீது நிஜமான அன்பு, காதல் இருந்தால் தன் மனது இந்த சுகங்களை அனுபவிக்கக் கூசவேண்டும். அவரைக் காதலிக்க ஆரம்பித்தோமே, அன்றே இத்தனை ஆடம்பரங்களையும் கொஞ்சம் கொஞ்சமாக ஒதுக்கியிருக்க வேண்டும். எளிமையாக வாழப்பழகியிருக்க வேண்டும்......

ஆனால் நான் செய்ததிலும் தவறு இல்லை. இந்த வாழ்க்கைக்கு பாஸ்கரை வரவழைத்து விடலாம் என்று நினைத்ததில் தப்பு இல்லை. ஆனால் இனிமேலும் இதே வாழ்க்கையைத் தொடர்ந்தால்தான் அது தப்பு. எப்போது அவர் இதற்கு வரமாட்டேன் என்று சொல்லிவிட்டாரோ, இனி நான் அதற்குத் தயார் ஆவதுதான் சரி...



இன்றைய தினத்திலிருந்து ஒவ்வொன்றாக மெல்ல மெல்லக் குறைத்து முற்றிலும் தவிர்க்கப் பழகிக்கொள்ள வேண்டும். முதலில் அதற்கு ஏ. ஸி. இல்லாமல் நிறுத்தி, பின் கட்டிலை விட்டு இறங்கிக் கீழே படுத்து, எதற்கும் வேலையாட்களைக் கூப்பிடாமல் இருந்து பின்னர் காரில் போவதைக் கொஞ்சம் கொஞ்சமாக —

புவனா மனதிற்குள் தீர்க்கமான முடிவிற்கு வந்து அதை ஒவ்வொன்றாகச் செயலாக்க முற்பட்ட ஒரு வாரத்திற்குப் பின்னரே சூரியநாராயணனின் கவனத்திற்கு அவை கொண்டு வரப்பட்டன. முதலில் அவரிடம் போய் புவனாவிற்கென்று ஏற்பாடு பண்ணப்பட்டிருந்த அந்த வயதான டிரைவர்தான் சொன்னார். அறை வாசலில் அவர் தயங்கித் தயங்கி நிற்பதைக் கவனித்த சூரியநாராயணன்,

''என்ன குருசாமி! உள்ளே வாங்களேன்...'' என்று கூப்பிட்டார்.

உள்ளே வந்த குருசாமி பவ்யமாய் கைகட்டி சிறிது நேரம் பேசாமல் நிற்க சூரியநாராயணனே மீண்டும் கேட்டார்:

''என்ன சொல்லுங்கள், அட்வான்ஸ் ஏதாவது வேண்டுமா...''

குருசாமி இன்னும் தயங்கி,

''அதில்லைங்க ஐயா... ரெண்டு மூணு நாளா நம்ம குழந்தை வெளியே போகணும்னால் காரை எடுக்கச் சொல்றதில்லீங்க. அதுவாகவும் ஓட்டிட்டுப் போறதில்லீங்க...''

''அப்படியானால் பிரெண்ட் யார் காரிலாவது போவாளாக இருக்கும்...''

''இல்லீங்க அய்யா, அப்படியும் போகலீங்க...''

''பின்னே?''

"நடந்து போய் தேற்று தெருக்கோடி பஸ் ஸ்டாப்பில் நின்னு பஸ்லே ஏறிப் போறதை என் கண்ணால பார்த்தேங்க."

உட்கார்ந்திருந்த சோபாவை விட்டுச் சடாரென்று எழுந்து விட்டார் அவர்.

"என்ன சொன்னீங்க, பஸ்ல போறாளா....?"

"ஆமாங்கய்யா...."

"நிஜமாகவாச் சொல்றீங்க?...."

"சத்தியமாச் சொல்றேங்க...."

டிரைவர் கொடுத்த தைரியத்தில் சமையற்காரர் சொன்னார்:

"மூணு நாலு நாளா அவங்க கீழே வந்து காப்பி போட கத்துக் கொடுன்னு கேட்டாங்க. சமையல் பண்ணவும் சொல்லித்தான்னு தானே காபி போட்டுக்கறாங்க. கையை சுட்டுக்கப் போறாங்களேன்னு பயமா இருக்கு. சொன்னால் கேட்க மாட்டேங்கறாங்க...."

"ஐயா.... நான்கூட எப்படிச் சொல்றதுன்னு பயந்துகிட்டிருந்தேன், ரெண்டு நாளா சின்னம்மா என்னை மார்க்கெட்டுக்கு அனுப்பறதில்லை, கூடையைத் தூக்கிட்டுத் தானே நடந்து மார்க்கெட்டுக்குப் போறாங்க."

"நடந்து மார்க்கெட்டுக்குப் போறாளா....? எந்த மார்க்கெட்டுக்கு....?"

"தண்ணித்துறை மார்க்கெட்டுக்குங்க...."

"நீ பார்த்துட்டுப் பேசாமல் இருந்தியா?...."



"ஐய்யோ, இல்லீங்க. நானும் பின்னாலேயே ஓடினேங்க. 'சின்னம்மா! வேணாங்க. அய்யா பார்த்தால் திட்டுவார்'னு கெஞ்சினேங்க. ஆனால் அவங்க கேட்கலைங்க. சிரிச்சுக்கிட்டே, 'இருக்கட்டும் மணி, எனக்கும் இதெல்லாம் பழக வேணாமா...? இதேமாதிரியே எப்பவும் இருக்க முடியுமா'ன்னு பதில் சொன்னாங்க...."

அப்புறம் அவளைக் கவனிக்கிற வயதான அம்மா வந்து புவனா குளிர்சாதன வசதியைத் தவிர்த்துத் தரையில் படுப்பதையும் சொல்லிவிட்டுப் போக—

அவர் முகவாயைத் தடவிக் கொண்டே தீவிரமாக யோசித்தார். திடீரென்று ஏன் இப்படிச் செய்கிறாள் என்ற கேள்வி நெருடிற்று. நாலைந்து நாட்களுக்கு முன் பிறந்த நாள் பரிசாகத் தான் கொடுத்த வெள்ளை மாருதியில் லாங் டிஸ்டன்ஸ் போக ஆசைப்பட்டு பாஸ்கரைத் துணைக்கு அழைத்துக் கொண்டு போனவள்!—

அதன் பின்புதான் இதையெல்லாம் ஆரம்பித்திருக்கிறாள்! அன்று சந்தோஷமாகக் குதித்துக் கொண்டு போனவள் பிறகுதான் மாறி இருக்கிறாள். என்ன காரணமாக இருக்கும்....? பாஸ்கருக்குத் தெரிந்திருக்குமா? கேட்டுப் பார்க்கலாமா—?

அதைவிட நேராக புவனாவையே கேட்டு விட்டால் என்ன... எழுந்து அவர் அவளறைக்குப் போனபோது கண்ட காட்சி இன்னமும் அதிர வைத்தது. அறையைப் பெருக்கி ஒரு வாளியில் தண்ணீர் வைத்துத் துடைத்துக் கொண்டிருக்க, இவர் உள்ளே நுழைந்தார். ஒரு வினாடி மௌனமாக நின்று பின் "புவனா... என்னம்மா இதெல்லாம்...." என்று கேட்டதும்,

திடுக்கிட்டுத் திரும்பினாள். அந்த நேரத்தில் அவளை எதிர்பாராத ஆச்சரியம் தெரிந்தது. சட்டென்று

உள்ளுக்குள் ஒரு பயம் தோன்றி அடங்கியது. எப்படி யிருந்தாலும் அப்பாவிற்குத் தெரிய வேண்டிய விஷயம் தானே.... என்று சமாதானப்படுத்திக் கொண்டவள், துடைப்பதை நிறுத்தி ஈரக் கையைப் புடவைத் தலைப்பில் துடைத்துக் கொள்வதைக் கவனித்த சூரியநாராயணன், 'என்ன ஆயிற்று, இவளுக்கு....' என்று பதறினார்.

சாப்பிட்டுக் கைகழுவ மிகவும் நாசூக்காக வெள்ளை நாப்கின்னில் துடைத்துக் கொள்கிறவளா இவள்....? புடவை தலைப்பால் வீடு துடைத்த இவள் கையை....

சுள்ளென்று கோபக்கனல் வீச ''வாட்ஸ் ராங்? என்ன புவன் இதெல்லாம்....?'' என்பதை மீண்டும் சற்றே அழுத்திக் கேட்டார்.

அதற்கும் தன் சலனத்தைக் காட்டாத புவனா, நிதானமாக ''உட்காருங்க அப்பா ..'' என்றாள்.

''உட்காருவது இருக்கட்டும். முதலில் இதெல்லாம் என்னன்னு நான் தெரிஞ்சுக்கலாமா....?

''எம்மா விளையாடறியா நீ....? காலையில் எழுந்து டிரைவர் வந்து நீ பஸ்லே போறேன்னு சொல்ல ஆரம்பிச்சான். அப்புறம் பாட்டிலைத் திறந்ததும் வெளிப்படற பூதமா ஒவ்வொன்னா வெளியில் வர்றது. வேலைக்காரப் பையன் வந்து நீயே நடந்து மார்க்கெட்டுக்குப் போறேன்னு சொல்றான். ஆயா வந்து தரையில் படுத்துக்கறேன்றாள். சமையற்காரர் நீயே காபி போட்டுக்கறே. சமைக்கறே, சமைக்கவும் கத்துக் கொடுக்கச் சொல்றேன்னு சொல்றார். சரி, அவங்க சொன்னதெல்லாம் பொய்யாக இருக்கும்னு வந்து பார்த்தால் என் கண் முன்னால நீயே உன் அறையைப் பெருக்கி துடைச்சிட்டிருக்கே....? என்னம்மா இதெல்லாம்? எதுக்காக இப்படியெல்லாம் செய்யறே....?''



அதைக் கேட்டு அமைதியாகப் புன்னகை செய்தாள் புவனா. பின் நிதானமாகப் பேச ஆரம்பித்தாள்!

''முதல்ல உட்காருங்கப்பா? அப்புறமா உங்க கேள்விக்குப் பதில் சொல்றேன்....''

சடாரென்று உட்கார்ந்தார் அவர். ''ம்...சொல்லு....?'' என்று அவளைப் பார்த்தார்.

''எம்ப்பா, என் வேலைகளை நானே கவனிச்சுக்கறது ஒரு தப்பான்ற கேள்விக்கு நீங்க முதல்ல பதில் சொல்லுங்களேன். அப்புறமா நான் சொல்றேன்....''

''நம்ம வேலைகளை நாமே செஞ்சுக்கறது தவறில்லேம்மா.... ஆனால் திடீர்னு அதைச் செய்வானேன்னுதான் கேட்கறேன்....''

''எம்ப்பா, எப்பவும் இதே நிலைமையில் இருப்போம்னு எப்படிச் சொல்றது...? திடீர்னு தாழ்ந்து இதைவிடக் குறைந்த ஒரு ஸ்டேட்டஸ்ல இருக்கிற நிலைமை ஏற்பட்டதுன்னா அப்போ என்ன பண்றது....?''

''அப்படி ஒரு நிலைமை சத்தியமா உனக்கு ஏற்படாதும்மா. உனக்கு மட்டுமில்லே- உன்னுடைய பேரக் குழந்தைகளின் குழந்தைகளுக்குக்கூட அந்த நிலைமை வராது. நான் சம்பாதித்தது இன்னும் மூன்று தலைமுறைக்குத் தாங்கும். அதனால் அதைக் காரணமாகச் சொல்லாதேம்மா, நிஜமான காரணம் என்னன்னு சொல்லு....?''

''நிஜமான காரணமே அதாம்ப்பா— இன்னும் ஒரு மாதத்திலோ, இரண்டு மாதத்திலோ நான் இந்த நிலைமையில்தானே இருக்கப் போகிறேன். அதை இப்போதிலிருந்தே பழகிக் கொண்டால் சுலபமாக இருக்கும் இல்லையா....?''

''சொல்றதைக் கொஞ்சம் விளக்கமா சொல்லேம்மா— ஒண்ணுமே புரியலை....''

''எம்ப்பா, நீங்க பாஸ்கரைப் பற்றி என்ன நினைக்க றீங்க...''

''எம்மா புதுசா கேட்கறே...? திடீர்னு அவனைப் பற்றி என்ன நினைக்கப் போறேன்...?''

''இல்லேப்பா, அவரைப்பற்றின உங்க அபிப்பிராயம் என்னன்னு தெரிஞ்சுக்கலாம்னுதான் கேட்டேன்...''

''நல்ல பையன்தான், எதுக்கும்மா கேட்கறே....''

''வெறுமனே நல்ல பையன்னு சொல்லி முடிச்சுடா தீங்க. முழுசான உங்க அபிப்பிராயத்தைத் தெரிஞ்சுக் கணும்னுதான் கேட்கறேன்...''

உடனே பதில் சொல்லவில்லை சூரியநாராயணன். எத்தனையோ சிக்கலான கணக்குகளைச் சுலபமாகப் புரிந்து கொள்பவருக்கு மகளின் கணக்கு புரிந்தது. திடீரென்று பாஸ்கரைப் பற்றிக்கேட்ட காரணம், நோக்கம் எல்லாம் தெரிய மெல்ல தலைநிமிர்ந்து பார்த்தார் அவர். பின் மெதுவாக,

''எம்மா... நீ அவனை.... அவனை....'' என்று முடிக் காமல் நிறுத்தினார்.

அவள் மெதுவாகத் தலைகுனிந்து 'ஆமாம்' என்று தலையசைத்து,

''அவரைக் கல்யாணம் பண்ணிக்கிறதாக முடிவு பண்ணிட்டேம்ப்பா....''

'முடிவு பண்ணிட்டேம்ப்பா' என்ற வார்த்தை நெஞ்சைச்சுட அவர் கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டே கேட்டார்.

''எம்மா. முடிவே பண்ணிட்டியா....?''

''ஆமா—இல்லைப்பா, உங்க சம்மதத்தோட, நீங்க சரின்னு சொல்லி ஏற்பாடு பண்ணி....''



''எம்மா.... பாஸ்கர்கிட்ட இதைப் பத்திப் பேசி னியா....?''

''ம்....பேசிட்டேம்ப்பா, உங்களுக்கும் இதில் திருப்தி தானே?''

''திருப்திதாம்மா.... ரொம்ப திருப்தி. பாஸ்கர் நல்ல பிள்ளை மட்டுமில்லேம்மா. புத்திசாலிப் பையனுங்கூட. பார்க்கவும் லட்சணமா இருக்கான். இப்பவே ஜூனியர்னு பிரபலமாயிட்டான். இன்னும் மாப்பிள்ளையாகி நமம வீட்டுக்கும் வந்துட்டால் நம்மை யாரும் அசைக்க முடியாதும்மா....''

''என்னப்பா சொன்னீங்க....?''

''பாஸ்கர் மாப்பிள்ளையாகி நம்ம வீட்டுக்கு வந்துட் டுட்டால் நம்மை யாரும் அசைக்க முடியாதுன்னு சொன் னேன்....''

''அவர் அப்படி வரணும்னு எதிர்பார்க்கறீங் களாப்பா....''

''வேற எப்படிம்மா எதிர்பார்க்க முடியும்....? எனக்கு இருக்கிறது நீ ஒரே பொண்ணு. உன்னைக் கல்யாணம் பண்ணி வீட்டோட வச்சுக்கணும்கிறது உங்கம்மா போனதுக்கப்புறம் எனக்குள் ஏற்பட்ட ஆசை. உன்னை மாப்பிள்ளை வீட்டுக்கு அனுப்பிவிட்டு நான் மட்டும் இங்கே தனியாக இருப்பேன்னா நினைக்கறே....? தெய்வம். அதனால்தான் கடவுளாகப் பார்த்து பாஸ்கரை இங்கே கொண்டு வந்து சேர்த்திருக்கார்னு தோன்றதும்மா....''

அவரின் பேச்சு அவளை நெகிழச் செய்தது. தன் மீது அவருக்கு இருக்கிற அன்பும், பாசமும் புரிந்தது. அவர் எதிர்பார்ப்பது எல்லா விதத்திலும் நியாயம்தான் என்று தோன்றியது. பாஸ்கரின் மறுப்பைத் தெரியப்படுத்தினால் இவர் நிச்சயம் அதிர்ந்துதான் போவார். இவரால் அதைத்

தாங்கிக் கொள்வது சிரமம்தான். ஆனாலும் வேறு வழி இல்லை. மெதுவாகச் சொல்லித்தான் ஆகவேண்டும். அதை இவரின் மனம் புண்படாத வகையில் ஏற்றுக் கொள்கிற விதத்தில் தெரியப்படுத்த வேண்டும்.

யோசித்து மெல்ல ஆரம்பித்தாள். ''எம்ப்பா, பாஸ்கர் நம் வீட்டோடு மாப்பிள்ளையாக இருக்கச் சம்மதிப்பார் என்றா நினைக்கிறீர்கள்?''

''ஏம்மா சம்மதிக்க மாட்டான்? அவன் அப்படி ஒன்றும் வசதி படைத்தவன் இல்லைம்மா...?''

''வசதி படைத்தவர் இல்லை என்கிற காரணத்தால் நம்முடன் வந்து விடுவாராப்பா...?''

''நான் சொன்னால் வருவான்மா....''

''ஒருவேளை அவரின் சுயகௌரவமும் சுயமரியாதையும் தடுத்தால்...?''

சந்தேகப் பார்வையுடன் நிமிர்ந்தார் அவர். எதுவோ பிடிபட்ட உணர்வுடன்,

''எம்மா, வரமாட்டேன்னு உன்கிட்ட சொன்னானா...?''

''இல்லைப்பா... முறையாக எல்லாம் நடக்கணும்னு அவர் நினைக்கலாம் இல்லையா...?''

''முறைன்னு நீ எதைச் சொல்கிறாய் புவனா...?''

''பொதுவாகக் கல்யாணமாகி எல்லாப் பெண்களும் மாப்பிள்ளை வீட்டிற்குத்தானே போவார்கள்...''

''அப்படின்னா நீ அவன் வீட்டிற்குப் போகப் போறேன்னு சொல்றியா....''

''போகப் போறேன்னு சொல்லலைப்பா...ஆனால் போறதில் தப்பு ஒண்ணும் இல்லைன்னுதான் சொல்ல வந்தேன்...''



''நீ பொய் சொல்றேம்மா. எதையோ மறைக்கிறே... அல்லது சுற்றி வளைத்துச் சொல்ல முயற்சிக்கிறே...ப்ளீஸ் ப்ளெயின் வித்மீ...பாஸ்கர் இங்கே வர மறுத்திருக்கிறான். கல்யாணத்திற்குப் பின் உன்னை அங்கே வரச் சொல்லியிருக்கிறான். அதனால்தான் திடீரென்று நீ காரில் போகாமல் பஸ் பஸ்சில் போகிறாய். நீ நடந்து மார்க்கெட்டிற்குப் போய் காய் வாங்குகிறாய், கேட்டால் திடீரென்று பொருளாதார நிலையில் தாழ்ந்து போனால் என்ன செய்வது என்று பதில் சொல்கிறாய். 2+2=4 என்பது எனக்குப் புரியாவிட்டால் என்னால் இவ்வளவு பெரிய ஆடிட்டராக இருக்க முடியாதும்மா.''

தலை குனிந்து அவள் மௌனித்திருக்க,அவர் மெல்ல குரல் கரகரக்கக் கேட்டார்.

''எம்மா, பாஸ்கர் வீட்டோடு மாப்பிள்ளையாக இருக்கச் சம்மதிக்க மாட்டேன்னு சொல்லிட்டானா...?''

அவள் 'ஆமாம' என்று தலையாட்ட அவர் மேலும் கேட்கத் துவங்கினார்.

''உன்னை அவன் வீட்டிற்கு வரவேண்டும் என்று சொல்லியிருக்கிறான...?''

அதற்கும் 'ஆமாம்' என்று தலை ஆடியது.

''நீ சம்மதித்து விட்டாயாம்மா...?''

''வேறு வழி எதுவும் எனக்குத் தெரியவில்லையேப்பா...''

''முடியாது என்று சொல்லவில்லையாம்மா..''

''முடியாது என்றால் கல்யாணமே வேண்டாம் என்கிறாரே....''

''வேண்டாம் என்றால் போகட்டும்மா...அப்படி எதில் அவன் சிறந்தவன்? இவனைவிட ஆயிரம் மடங்கு சிறந்த

மாப்பிள்ளையாகத் தேடி உன் முன்னால் கொண்டு வந்து நிறுத்துகிறேன் பாரும்மா..."

"இருக்கலாம்ப்பா, ஆனால் இவரைத்தானே நான் நேசிக்கிறேன்"

"என்ன...? என்ன...?" என்று அதிர்ந்து போனார். பெற்று இத்தனை நாட்களாக எந்தக் கஷ்டமும் தெரியாமல் வளர்த்த தன்னைவிட அந்த பாஸ்கர் நெருங்கினவனாகப் போய்விட்டது நெஞ்சை நெருடியது. உள்ளுக்குள் முள்ளாகக் குத்திக் கொண்டு நின்றது. அந்த வலியிலும் வேதனையிலும் ஒன்றும் பேசாமல் இருக்க கடைசியில் புவனாவே சொன்னாள்.

"எனக்குக் கல்யாணம்னு ஒண்ணு நடந்தால் அது பாஸ்கரோடு மட்டும்தான் நடக்க முடியும்ப்பா. மனசில் ஒருத்தரை வச்சுண்டு இன்னொருத்தருக்குத் தாலி கட்டிக் கொள்கிற ஜாதியில் நான் இல்லை. அப்படி பாஸ்கர் வேணாம்னு நீங்க தீர்மானிக்கிற பட்சத்தில் அதையும் சந்தோஷமாக ஏற்றுக் கொள்ள நான் தயாராக இருக்கிறேன். அதனால் நீங்களே முடிவு செய்யுங்கள் அப்பா. நீங்கள் எடுக்கிற எந்த முடிவிற்கும் நான் கட்டுபட்டு நடப்பேன் என்ற உறுதியை என்னால் உங்களுக்குக் கொடுக்க முடியும் அப்பா..."

பொறுப்பைத் தன் மீதே சுமத்துகிற மகளின் சாமர்த்தியத்தை நினைத்துச் சிரித்துக் கொண்டார். தான் எண்ணியிருந்த மாதிரி புவனா குழந்தை இல்லை. வளர்ந்த பெண். சுயவிருப்பு,வெறுப்புள்ள பிடிவாதக்காரப் பெண்...

"உன்னிடம் பேசின மாதிரி நான் பாஸ்கர் கிட்டேயும் பேசிவிட்டு அப்புறமா என் முடிவைச் சொல்கிறேனம்மா." என்று எழுந்து கீழே போனபோது ஒரு புது சூரிய நாராயணனாகத் தெரிந்தார். அந்த நடையில் ஒரு தளர்ச்சியும் அயர்வும் வந்து சேர்ந்து அவரைத் திடீரென்று அதிகம் வயதானவராகக் காட்டிற்று...

# 6

வருமான வரி அலுவலகத்திலிருந்து களைத்துப் போய்த் திரும்பிய பாஸ்கரைத் தன் அறைக்குக் கூப்பிட்டு அனுப்பினார் சூரியநாராயணன். உட்காரச் சொல்லி இரண்டு காபி வரவழைத்துப் பருகிக் கொண்டே மெல்லப் பேச்சை ஆரம்பித்தார். புவனா சொன்னதை ஒன்று விடாமற் சொல்லி.

"நீங்க ரெண்டு பேரும் கல்யாணம் பண்ணிக்கிறதுலேயும் பண்ணிவைக்கறதுலேயும் எனக்கு ரொம்ப சந்தோஷம் பாஸ்கர். கூடிய சீக்கிரம் ஒரு நல்ல நாளாகப் பார்த்து நடத்திடலாம்னு இருக்கேன். அடுத்த மாசத்திலேயே முகூர்த்தத்தைக் குறிக்கச் சொல்லி சாஸ்திரிகளை வரவழைச்சு சொல்லியனுப்பிட்டேன். கிரமப்படி நாளைக்கே உங்கம்மாவைப் பார்க்க நான் உன் வீட்டுக்கு வரேன். அவங்களும் வந்து பெண்ணைப் பார்த்து விட்டுப் போகட்டும். பின் எல்லாவற்றையும் மடமடன்னு ஏற்பாடு பண்ணிடலாம். என்ன சொல்றே...?"

என்ன பதில் சொல்வதென்று தெரியாதவனாக பாஸ்கர் மௌனித்திருக்க அவர் தொடர்ந்தார்.

"இதெல்லாம் சரிதான். ஆனால் கல்யாணத்திற்கப்புறம் புவனாவை உன் வீட்டிற்குத்தான் வரவேண்டும் என்று சொல்லி விட்டாயாமே— அது எப்படிப்பா முடியும்? நீயே யோசித்துப் பார். சந்தோஷத்திற்காகவும், சௌகரியத்திற்காகவும்தான் வாழ்க்கையே தவிர வருத்தப் படுத்தி, கஷ்டப்படுவதற்காக இல்லை—"

"ஐயாம் சாரி சார்..." என்று தைரியமாகக் குறுக்கிட்டான் பாஸ்கர். அவர் விளையாடுகிற செஸ்

விளையாட்டில் தான் மேட் ஆகிப்போன ராஜாவாகிவிடக் கூடாது என்பதனால் அவசரப்பட்டு சொன்னான்.

"எப்படியும் வாழ வேண்டும் என்று நினைக்காமல் இப்படித்தான் நடக்கவேண்டும் என்று ஒரு கொள்கையை நான் வைத்துக் கொண்டிருக்கிறேன், சார்... அதனால் இந்த ஒரு விஷயத்தில் மட்டும் நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும்..."

அவனது பிடிவாதமும் படபடப்பும் சூரிய நாராயணனை அசர வைத்தன. இதுவரை பாஸ்கரை அவர் இப்படிப் பார்த்ததில்லை. இவ்வளவு பயமற்றுப் பேசி அறிந்ததில்லை. தான் சொல்கிற பேச்சிற்கு மறு வார்த்தை பேசி அறிந்திராதவர். அப்படிப்பட்டவருக்கு எதிரில் நின்ற பாஸ்கர் புதியவனாய், வித்தியாசமானவனாய், பிடிவாதமும், கோபமும் நிறைந்தவனாய்த் தெரிந்தான். அவனுடைய கோபம், பிடிவாதமெல்லாம் அவருக்குள் ஒரு எரிச்சலை ஏற்படுத்திற்று ஆனால் அதை வெளிக்காட்டாமல் நிதானமாகவே கேட்டார்.

"உன் கொள்கையும், இப்படித்தான் வாழவேண்டுமென்று நீ வகுத்துக் கொண்டிருக்கிற வழியும் எது என்று நான் தெரிந்து கொள்ளலாமா..."

"தாராளமாக சார். ஒட்டுவாரொட்டிச் செடி மாதிரி வளர்வதை நான் விரும்பவில்லை சார். சுயமாய்ச் சம்பாதித்துச் சுயமாய் உழைத்துச் சுயமாய்ப் பணக்காரனாக விரும்புகிறேனே தவிர பணக்கார நிழலில் ஒதுங்கி அவர்களை உறிஞ்சி வாழ நினைக்கவில்லை. நினைக்காதது மட்டுமின்றி அந்த எண்ணத்தையே அடியோடு வெறுக்கிறேன்..."

"முட்டாள்தனமாகப் பேசாதே பாஸ்கர்..." என்று சீறினார் அவர். தன் கோபத்தை அடக்கிக் கொள்ள சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டே,



"சுயமாய் உழைத்துச் சம்பாதித்து எவனும் கோடீஸ்வரன் ஆனதில்லை என்பதை நீ புரிஞ்சுக்கணும். சுயமாய் உழைத்துச் சம்பாதிக்க நினைத்தால் காலம் முழுதும் வெறும் வயிற்றுப்பாட்டிற்கும், அத்தியாவசியத் தேவைகளுக்கும் மட்டுமே சம்பாதித்துக் கொண்டிருக்க வேண்டியதுதான்..."

"ஆனால் அதுவே போதும் என்கிற திருப்தி எனக்கு இருக்கிறது. அதிலேயே என்னால் சந்தோஷமாக வாழ முடியும் என்கிற நம்பிக்கை இருக்கிறது. இதைவிட வேறு என்ன வேண்டும் சொல்லுங்கள்..."

"அது சரி. நீ மட்டும் சம்பந்தப்பட்ட விஷயமானால் என் குணம் உன்னுடன் சேர்ந்து சந்தோஷிக்க முடியும். லட்சியவாதி என்று பாராட்ட முடியும். பொதுக் கூட்டத்தில் மைக்கைப் பிடித்துக் கொண்டு, 'இன்றைய இளைஞர்கள் பாஸ்கரைப் பார்த்துக் கற்றுக் கொள்ளவேண்டும். வரதட்சணை வாங்காமல் கல்யாணம் பண்ணிக் கொள்ள முன்வர வேண்டும். இளைஞர் சமுதாயத்திற்கே பாஸ்கர் முன்னோடியாகத் திகழ்கிறான்' என்று பிரசங்கம் பண்ண முடியும். ஆனால் அப்படியெல்லாம் சந்தோஷிக்க முடியாமல், பாராட்ட முடியாமல் என் பெண் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறாள். ஒரே பெண், செல்லமாய் ஆசையாய் வளர்த்த பெண். நடந்தால் நோகுமென்று சீராட்டி வளர்த்த பெண். அவள் கஷ்டப்பட என்னால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. இந்த வீடு, கார், சுகமான வாழ்க்கை எல்லாவற்றையும் விட்டு ஏதோ ஒரு அவுட்ஹவுசின் ஓட்டு வீட்டில் ஒண்டிக் கொள்வதை அனுமதிக்க முடியாது..."

ஆக்ரோஷமும், கோபமுமாக அவர் சொன்னதை நிதானமாகக் கேட்டுக் கொண்டிருந்தான் பாஸ்கர். அவரின் துடிப்பு புரிந்த காரணத்தினால் அவன் கோபப்படவில்லை. மாறாக அமைதியும், நிதானமும், அவர் மீது ஏற்பட்ட பரிதாப உணர்ச்சியுமாக மெல்லப் பேச ஆரம்பித்தான்.

''சார், உங்களின் கோபம், ஆத்திரம், ஏமாற்ற உணர்ச்சி எல்லாமே எனக்குப் புரிகின்றன. நியாயமானதாகவும் தெரிகிறது. ஆனால் இதில் என் தப்பு ஒன்றுமில்லை என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். நானாக வலியப் போய் உங்கள் பெண்ணைக் காதலிப்பதாகச் சொல்லவில்லை. இன்ஃபாக்ட் இது சரிப்படாது என்கிற காரணத்தினால், நம் அந்தஸ்திலுள்ள இமாலய வித்தியாசத்தினாலும் நான் விலகத்தான் போனேன். அவ்வளவு ஜாக்கிரதையாக ஒதுங்கிப் போனவனைக் கூப்பிட்டு வைத்துப் பேசினது உங்கள் பெண்தானே தவிர நானில்லை. அதனால் இப்போதும் ஒன்றும் குடிமுழுகிப் போய்விடவில்லை. நான் எதற்கும் தடையாக இருக்க மாட்டேன். உங்களுக்குப் பிடித்த வசதியான இடத்தில் நீங்கள் அவளை—ஐயாம் ஸாரி—அவர்களைக் கல்யாணம் பண்ணிக் கொடுப்பதில் எனக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. அவர்கள் சந்தோஷமாக இருந்தால் அதுவே சந்தோஷம். அதனால்—''

''அது சரிப்பா, அவள் வேறு இடத்தில் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன் என்கிறாளே? கல்யாணம் என்று நடந்தால் அது பாஸ்கரோடுதானே தவிர வேறு யாரோடும் இந்த ஜன்மத்தில் இல்லை என்கிறாளே...''

''அதற்கு நான் என்ன சார் செய்ய முடியும்...?''

''எனக்காக—என் பொருட்டாவது—நீ கொஞ்சம் விட்டுக் கொடுக்கக் கூடாதாப்பா...?'' தன் கோபத்தை விட்டு இப்போது இறங்கி வந்து கெஞ்ச ஆரம்பித்தார் சூரியநாராயணன். ''ஸாரி சார். யாருக்காவும் நான் என் முடிவிலிருந்து மாறுவதாக இல்லை...'' நாற்காலியிலிருந்து பாஸ்கர் எழுந்து கொள்ள அவர் அவசரமாகக் கேட்டார்; ''அப்படியானால் புவனா உன்னோடு உன் வீட்டில் வந்து கஷ்டப்படுவதைத் தவிர வேறு வழி இல்லை என்கிறாயா...?''



''அதை நீங்கள்தான் கஷ்டம் என்கிறீர்கள், புவனாவிற்கு கஷ்டமாகத் தெரியவில்லையே...?''

''இந்த வீடு, வாசல், வரிசையாக நிற்கிற கார்கள், சொத்து, சுகமெல்லாம் என்ன செய்ய...?''

''மனசிருந்தால் அனாதை ஆஸ்ரமம் எதற்காவது எழுதி வைத்து விடுங்கள்...''

'பாவி' என்று உள்ளுக்குள் சபித்துக்கொண்டே கால்கள் துவள எழுந்து நின்றவர், ''நாளைக்கு உன் வீட்டுக்கு வரேன். உங்கம்மாகிட்டே சொல்லு... இந்த மாசமே கல்யாணத்தை வச்சுக்கலாம்...'' என்றவர் தன் கம்பீரம், நிமிர்ந்த நடை எல்லாம் இழந்து தலை குனிந்து உள்ளே போக பாஸ்கர் வெளியில் வந்தான்...

# 7

கல்யாணத்தைக்கூட ஆர்ப்பாட்டமாக நடத்தவிடவில்லை அவன். சூரியநாராயணனின் ஆசைகள், எண்ணங்கள் எல்லாவற்றையும் சிதற அடித்து மிகச் சிக்கனமாகவும் சாதாரணமாகவும் நடத்த வைத்தான்.

''என்னடா சூரி, இது...? கிளியை வளர்த்து பூனையின் கையில் கொடுத்த மாதிரி செய்துட்டே...?'' என்றவர்களுக்கு சூரியநாராயணன் பதிலே பேசவில்லை. பேச முடியவில்லை. மொத்தமாக ஒடுங்கிப் போயிருந்தார் அவர். கல்யாணமான மறுநாள் புவனா பாஸ்கரோடு கிளம்பின போது அதற்குமேல் தாங்க இயலாதவராகக் கண்ணீர் வடித்தார்.

''புவன்! உன்னை ஹனிமூனுக்கு ஸ்விட்ஸர்லாண்ட் அனுப்பணும், ஸ்டேட்ஸ் அனுப்பணும் என்றெல்லாம் கனவு கண்டேனம்மா நான். கடைசியில் கொடைக்கான

லுக்குக்கூட அனுப்பி வைக்க முடியலை. அதற்குக்கூட உன் வீட்டுக்காரன் தடை சொல்றான். உனக்காகப் பண்ணின நகைகள், பார்த்துப் பார்த்து வாங்கின சாமான்கள், வீடு, வாசல், இந்தக் கிழவன் எல்லாத்தையும் விட்டுட்டு இப்படி ஒரு 'சூட்கேஸ்', புடவையும், நாலைந்து எவர்சில்வர் பாத்திரங்களும், போட்டுக் கொண்டிருக்கிற இந்த நகைகளுடன் கிளம்ப உனக்கு எப்படித்தான் மனசு துணிஞ்சதோ தெரியலை. அடிக்கடி வந்து இந்தக் கிழவனைப் பார்த்துட்டாவது போம்மா...''

அழுகையை அடக்க இயலாதவளாக புவனா ஓடிப் போய்க் காரில் ஏறிக் கொண்டதும் பாஸ்கரின் தோளில் கை போட்டு சகஜமாக அணைத்துக் கொண்டு சொன்னார்:

''கடைசியில் நீதான் ஜெயிச்சே பாஸ்கர். புவனாவை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கோ. அவ எப்படி வளர்ந்தாள் என்பதை ஞாபகம் வச்சுண்டு நடந்துக்கோப்பா எது தேவையானாலும் தாராளமாக என்னிடம் கேள். செய்யக் காத்துக் கொண்டிருக்கிறேன் என்பதை மறக்காதே...நீ ஆபீசுக்கு வரும்போது அவளையும் அழைச்சுண்டு வந்து காமிப்பா... அவளை விட்டால் எனக்கு யாருமில்லை என்பதை ஞாபகம் வச்சுக்கோப்பா...''

''மறக்கமாட்டேன் சார்.. அவசியம் அழைச்சுண்டு வரேன். நீங்களும் வாங்க சார். வந்து என்னைப் பெருமைப் படுத்தணும்...''

''ஆகட்டும்பா...''

''வரட்டுமா சார்...''

''சரி...''

கார் கிளம்பி காம்பௌண்டை விட்டு மறைய சூரிய நாராயணன் தன் அறைக்குப் போய்க் கதவை சாத்திக் கொண்டார்...

ஃ ஃ ஃ



அந்தச் சின்னப் படுக்கை அறை ஆடம்பரமற்று அலங்கரிக்கப்பட்டிருந்தது. தானே அலங்காரம் பண்ணி புவனாவை வரவேற்றாள் சுந்தரவல்லியம்மாள். வலது கால் வைத்து புவனா பாஸ்கருடன் உள்ளே நுழைந்த போது அந்த அம்மாளின் கண்கள் கலங்கின. தன் மகனுக்காக எல்லாவற்றையும் உதறிவிட்டு சீதை காட்டுக்குப் புறப்பட்ட மாதிரி வந்து விட்டிருக்கிறதே இந்தப் பெண். இதை பாஸ்கர் சந்தோஷமாக வைத்துக் கொள்ள வேண்டுமே என்ற கவலை ஏற்பட்டது. ஆனாலும் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் அவர்களை உள்ளே அனுப்பி விட்டு வழக்கமாகத் தான் படுக்கிற சமையலறை வாசலில் பாயை உதறிப்போட்டுக் கொண்டு படுத்தாள். எல்லா விதத்திலும் தன்னால் முடிந்தவரை புவனாவிற்கு உதவியாகவும், அநுசரணையாகவும் இருக்க வேண்டும் என்கிற தீர்மானமான முடிவுடன் கண்கள் லேசாய் இழுக்கத் தூங்கிப் போனாள்..

மறுநாள் காலையில் வழக்கம்போல் ஐந்து மணிக்கு எழுந்துவிட்ட சுந்தரவல்லியம்மாள் குளித்து, ஸ்வாமி மாடத்தில் விளக்கேற்றி வைத்தபின் சமையல் வேலைகளைத் தொடங்கினாள். பில்டரில் பொடி போட்டு காபி டிகாக்ஷன் இறக்க, வாசல் கதவை வெளிப்பக்கம் பூட்டிக் கொண்டு போய் இரண்டே வீடுகள் தள்ளியிருந்த பால் பூத்திலிருந்து பால் கவர்கள் வாங்கிக் கொண்டு திரும்பினாள். தினமும் காலையில் ஒரு கவரும், மாலையில் ஒரு கவரும்தான் வாங்குகிற வழக்கம். புவனாவுக்காக இரண்டிரண்டு கவர்களாக வாங்க முடிவு செய்தாள். இதுவே நூறு ரூபாய் அதிகமாகும். இப்படி இன்னும் நிறையச் செலவுகள் ஏறும். காய்கறி, அரிசி இதெல்லாம்கூடப் பிடிக்கும். பருப்பு வகைகளை சமாளித்துக் கொள்ளலாம். எப்படியும் இருநூறு ரூபாய்களாவது அதிகம் செலவழிக்க தேரும்.

பாஸ்கர் என்ன செய்வானோ என்கிற பயத்தினூடே, 'பாவம் அந்தப் பெண். வகை வகையாகச் சாப்பிட்டுப் பழகியிருக்கும், நாம் வகை வகையாகச் செய்யாது போனாலும் வாய்க்கு ருசியாகச் செய்து தரவேண்டும்' என்று நினைத்துக் கொண்டாள். செலவு ஏறினால் கத்தத்தான் செய்வான். அவன் முரடன். வெறுமனே கோபபடத்தான் தெரியும். வேறு எதுவும் தெரியாது. அதனால் அந்தப் பெண்ணை நாம்தான் அனுசரிக்க வேண்டும்.

''என்னம்மா செய்யறீங்க...?''

அறை வாசலில் குரல் கேட்க சுந்தரவல்லியம்மாள் நிமிர்ந்து பார்த்தாள். தூக்கம் கலைந்த முகத்துடன் புவனா நின்று கொண்டிருந்தாள். ''குளிச்சுட்டியாம்மா...?'' என்று கேட்க வாயெடுத்த சுந்தரவல்லியம்மாள் சட்டென்று நிறுத்திக் கொண்டாள். 'பணக்கார வீட்டுப் பெண். இவ்வளவு சீக்கிரம் எழுந்ததே அதிசயம். ஒருவேளை இங்கு வந்த பின்புதான் சூரிய உதயத்தையே பார்க்கிறாளோ என்னவோ...? அவளைப்போய்க் குளித்து விட்டாயா என்று கேட்பது எவ்வளவு முட்டாள்தனம்... அதுவும் பச்சைத் தண்ணீரில் குளித்துப் பழக்கம் இல்லாதிருக்கலாம். இவளுக்காக வெந்நீர் போட்டுத்தர வேண்டும். தினமும் காஸ் அடுப்பில் வெந்நீர் காய வைக்க முடியாது. பாய்லர் ஒன்று வாங்கினால் வசதியாக இருக்கும்.

மனதிற்குள் யோசித்துக் கொண்டே கேட்டாள் சுந்தரவல்லியம்மாள்:

''பல் தேய்ச்சுட்டியாமா...?''

''ஆச்சும்மா...''

''காபி சாப்பிடற பழக்கம் உண்டு இல்லையா...?''

''காபிதாம்மா சாப்பிடறது...''



''கலக்கட்டுமா...? பாஸ்கர் எழுந்துட்டானா...?''

''எழுந்துட்டார்; பல் தேய்க்கப் போயிருக்கார்...''

''சரி. நீ காபி எடுத்துக்கோ. அவன் வரட்டும் கலந்து தரேன்...''

அவள் சமையலறை சுவரில் சரிந்து காபியை ஆற்றிக் குடிக்கும்முன் ''உங்களுக்கும்மா...?'' என்று கேட்டாள். ''நான் இப்போ சாப்பிட மாட்டேன். பூஜை முழுசையும் முடிச்சுட்டுதான் சாப்பிடறது...'

''அப்போ நீங்க போய் பூஜை பண்ணுங்க. நான் சமைக்கிறேன்'' என்று சொல்லி மீண்டும் காபி சாப்பிட ஆரம்பித்தபோது பல் தேய்த்துக் குளித்துவிட்டு ஈரத் துண்டோடு வந்த பாஸ்கர் அவள் குளிக்காமல் சமையல் அறைக்குள் உட்கார்ந்திருப்பதைப் பார்த்துச் சட்டென்று முகம் சிவந்தான். 'சாதாரணமாகவே குளிக்காமல் சமையலறைக்குள் நுழைந்தால் அம்மாவிற்குப்பிடிக்காது. அதுவும் நேற்றிரவு என்னுடன் இருந்துவிட்டு இவள் தலைக்குக் குளிக்காமல் உள்ளே வந்துவிட்டாளே...? இதற்கு அம்மா ஏன் பேசாமல் இருக்கிறாள்? எப்படிச் சகித்துக் கொள்கிறாள்...? காரணம்...? அவள் பணக்கார வீட்டிலிருந்து வந்திருக்கிறாள் என்ற எண்ணம். நாம் ஏழை என்கிற தாழ்வு மனப்பான்மையில் ஏற்பட்டிருக்கும் பயம்... இதற்கு நான் பேசாமல் இருந்தால் அம்மா தப்பாக நினைத்துக் கொள்வாள். பெண்டாட்டி வந்தவுடன் மாறிப்போய் விட்டதாக எண்ணுவாள். ஒருபோதும் அந்த எண்ணத்திற்கு இடம் கொடுக்கக் கூடாது... நானும் மாறக்கூடாது...'

அந்த முடிவில் புவனாவைக் கோபமாகப் பார்த்தவன், ''புவனா, உன்னை யார் சமையல் அறைக்குள் போகச் சொன்னது...?'' என்று கத்த,

பயந்து போன புவனா காபித் தம்ளரைக் கீழே வைத்துவிட்டு எழுந்து நின்று ''ஏங்க...?'' என்று மெதுவாகக் கேட்டாள்.

"புவனா. உனக்கு மூளை இருக்கா...? காலையில் எழுந்ததும் குளிக்காமல் சமையலறைக்குள் வந்து விட்டாயே...? இது சரியா? ஏம்மா. அவளுக்குத்தான் மூளை இல்லை, நீயாவது சொல்லக் கூடாதா...? சாமி படத்தின்கீழ் உட்கார வைத்து காபி தருகிறாயே..."

"போனால் போகட்டும்டா. வசதியான இடத்திலிருந்து வந்திருக்கிற பொண்ணு. காலையில் எழுந்ததும் குளிச்சுப் பழக்கமிருக்காது..."

"அதானே கேட்டேன்... பணக்காரப் பெண், பணம் உன் வாயையும் அடைச்சிருக்கும். இதோ பாரும்மா 'பணம்', பங்களா, கார் இத்தியாதியெல்லாம் அவள் வீட்டோட; இங்கே வந்தப்புறம் நாம் எப்படி இருக்கோமோ அதே மாதிரித்தான் அவளும் இருக்கணும். நாம் பட்டினி கிடந்தால் அவளும் கிடக்கணும் நாம் கிழிந்த துணி கட்டினால் அவளும் கிழிந்த துணிதான் கட்டிக்கணும், அதுக்குச் சம்மதிச்சுத்தான் என்னைக் கல்யாணம் பண்ணிண்டிருக்கா. இங்கே வந்திருக்கா. அதனால் அவ பணக்காரி நாம் ஏழை என்கிற தாழ்வு மனப்பான்மையை இதோடு நீ விட்டுவிட வேண்டும். ஒரு சாதாரண குடும்பத்துப் பெண் மருமகளா வந்திருந்தால் இப்படி குளிக்காமல் சமையல் அறைக்குள் வரவிட்டிருப்பாயா? நீயே உன் கையால் காபி கலந்து கொடுத்திருப்பாயா...? எது உன்னை இவ்வளவும் செய்ய வைத்ததும்மா? அவள் பணக்காரி என்ற எண்ணந்தானே...? இதோ பாரும்மா—அவள் பணம் அவள் வீட்டு வரையில்தான். இங்கே அவள் உன் மருமகள். என் பெண்டாட்டி. அவ்வளவுதானே தவிர கோடீஸ்வர சூரிய நாராயணனின் பெண் இல்லை. அவளுக்கோ உனக்கோ அந்த நினைப்பு இனி வரவே கூடாது. என்ன...?"

அந்தம்மாள் 'சரி' என்று மௌனமாய் தலையசைக்க புவனா நிதானமாக நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.



தனக்கோ, இல்லை சுந்தரவல்லியம்மாளுக்கோ கோடீஸ்வரர் சூரியநாராயணனின் பெண் என்பது மறந்து போனாலும் இவர் மறக்கமாட்டார் என்று தோன்றிற்று. எவ்வளவுதான் இறங்கி வந்தாலும் பாஸ்கருக்குள் தான் பணக்காரி என்பதும், அவனுக்காக அவ்வளவு பணத்தையும் துச்சமாக உதறிவிட்டு வந்ததும் ஒரு ஆழமான புண்ணாக, மாறாத வடுவாகப் பதிந்து போயிருப்பதும் புரிந்தது. 'அடிக்கடி' அந்தப் புண்ணின் வலியும், வடுவின் அரிப்பும் தோன்ற அதைத் தணித்துக் கொள்ள இப்படி சிடுசிடுக்க நேரிடலாம். கோபமாகப் பேசலாம். எரிந்து விழலாம். அம்மாவிற்குத் தாழ்வு மனப்பான்மை என்கிறானே. நிஜமாகத் தாழ்வு மனப்பான்மை இவனுக்குத்தான். புற்று நோயாக அது வெளியில் தெரியாமல் இவனை உள்ளுக்குள்ளேயே அரிக்கிறது. கொஞ்சம் கொஞ்சமாகச் சாமர்த்தியமாகப் பொறுமையாக நடந்து அந்த அரிப்பைத் தடுத்து நிறுத்த வேண்டும். இதமாக மென்மையாகப் பேசி, தழைந்து போய் வெற்றி கொள்ள வேண்டும். அதற்கு முன் இவன் எத்தனை தாக்கினாலும் சமாளித்துக் கொள்ளத்தான் வேண்டும்...'

"என்ன பார்க்கிறாய்...? மகாபலிபுரத்திலேயே நான் சொல்லவில்லை...? காலையில் எழுந்து குளித்து, காபி போட்டு, குக்கர் வைத்து விட்டு கறிகாய் கடைக்குப்போய் கத்தரிக்காய் பேரம் பேசி வாங்குகிற பெண்ணால்தான் என்னோடு ஒத்துப் போக முடியுமென்று...? காலையில் எழுந்து அம்மாவே பால் வாங்கிக் காய்ச்சி உனக்கும் காபி கலந்து தருகிறாள். நீ குளிக்காமல் கூட சாமி மாடத்தின் அடியிலேயே உட்கார்ந்து குடிக்கிறாய்? வெட்கமாக இல்லை இப்படிச் செய்ய...?பெட் காபி குடித்து உன் வீட்டில் பழக்கமா இருக்கலாம். இங்கே வந்தபின் எங்களை மாதிரித்தான் நடந்து கொள்ள வேண்டும். புரிகிறதா—?"

வார்த்தைகளா அவைகள்...? விஷம் தோய்ந்த அம்புகள். எல்லா சுகங்களையும் விட்டு விட்டு அவனுக்காகவே வந்திருக்கிறவளிடம் முதல் நாளே பேசுகிற பேச்சு இப்படி நெருப்புத் துண்டமாகவா வீச வேண்டும்...? கீழ் உதட்டைக் கடித்துத் தன்னை அடக்கிக் கொண்டு ''ஐயாம் ஸாரி...'' என்றாள் புவனா. இதோ ஒரே நிமிடத்தில் குளித்துவிட்டு வந்து சமையலைக் கவனிக்கிறேன். தெரியாமல் உள்ளே வந்து விட்டேன். இனிமேல் இப்படிப்பட்ட தப்பு நேரிடாது...'' என்றவள் அவசரமாகச் சமையலறையை விட்டு வெளியேறினதும் சுந்தரவல்லியம்மாள் மகனைக் கடிந்து கொண்டாள்.

''முதல் நாளே அந்தப் பொண்ணுகிட்டே இப்படியா கத்தறது...? அது பாவம் மருண்டு போயிட்டது...?''

''நீ சும்மா இரும்மா. முதல் நாளே அடக்கலேன்னால் அப்புறமா பிடிக்க முடியாது. அதுவும் இது சாதாரண குதிரை இல்லை? ஜாதிக் குதிரை. இதைக் கொஞ்சம் ஓட விட்டால் அப்புறம் நம்மைக் கீழே தள்ளி மிதித்து விடும்... தெரிஞ்சுக்கோ...''

சமையலறையின் அடுத்து இருந்த குளியலறைக்குள் வந்து அவன் சொன்ன வார்த்தைகள் காதில் விழ தலைக்குக் கொட்டிக் கொண்ட தண்ணீரோடு கன்னத்தில் வழிந்த கண்ணீரும் ஒன்றாகக் கலக்க அவசர அவசரமாகக் குளித்து விட்டு வந்தாள் புவனா...

# 8

தயங்கித் தயங்கி சுந்தரவல்லியம்மாள் பேப்பர் படித்துக் கொண்டிருந்த மகனின் எதிரில் போய் நின்றாள். இப்போதெல்லாம் அவனிடம் எது பேசவும் பயமாக இருந்தது. புவனாவைக் கல்யாணம் பண்ணி அழைத்துக் கொண்டு வந்ததிலிருந்து எதற்கெடுத்தாலும் எரிந்து விழுந்தான். சின்னச் சின்ன விஷயத்திற்கெல்லாம் கோபப்பட்டான். தன் இயலாமை முழுவதையும் ஆத்திரமாக வெளிப்படுத்தினான்.

புவனாவை அழைத்துக் கொண்டு வந்து கஷ்டப் படுத்துகிறோமா என்ற எண்ணம் அவனை வாட்டுவதை அந்த அம்மாளால் புரிந்து கொள்ள முடிந்தது. அவளுக்கேற்ற வசதிகளைச் செய்து கொடுத்து சௌகரியமாக வைத்துக் கொள்ள பொருளாதார நிலைமை இடம் கொடுக்காத காரணத்தினால் உள்ளுக்குள்ளேயே அவன் உருகுவதும் தெரிந்தது. நடக்கிற இடமெல்லாம் மென்மையாக இருக்க வேண்டுமென்று வீடு முழுவதும் சூரியநாராயணன் அவளுக்கென்று தனியாய் நெய்த காஷ்மீர ரத்தினக் கம்பளங்களை விரித்ததை அவன் பார்த்திருக்கிறான். அப்படிப்பட்டவளுக்குக் குளிக்க ஷவர் இல்லை. கெய்சர் இல்லை. படுத்துக்கொண்டே குளிக்கிற பாத்டப் இல்லை. புடவைகளை ஹாங்கரில் தொங்க விட்டு வரிசையாக மாட்டுவதற்கு வார்ட்ரோப் இல்லை, அத்தனை புடவைகளும் இல்லை. பெரியதாய் அவளின் முழு உருவையும் காட்டும் டிரஸ்ஸிங் டேபிள், ஏர் கண்டிஷன் பண்ணப்பட்ட அறை, படுத்தால் உள்ளே

புதைகிற குஷன் மெத்தை. இதமாய் தாழுகிற ஸ்பிரிங் கட்டில்...

இவைகள்தான் இல்லை என்றால் அவன் வேறு அவளை பால் வாங்கவும், மளிகை சாமானுக்கும், காய் கறி மார்க்கெட்டுக்கும் விரட்டுகிறான். சில நாட்கள் பஸ் ஸிற்குக் காசு கொடுக்காமல் நடந்தே போகச் சொல்கி றான். வீட்டிற்கு வந்த இந்தச் சில மாதங்களில் இப்படி கடைக்கு ஓடியே அந்தப் பெண் இளைத்து விட்டது. கறுத்துக்கூடப் போய் விட்டது. முகத்தின் பளபளப்பு, மினுமினுப்பு எல்லாம் போய் மெலிதாக ஒரு அயர்ச்சி திரையிட்டிருக்கிறது. இத்தனைக்கும் புவனா ஒரு வார்த்தை வாயைத் திறப்பதில்லை. முகம் சிணுங்குவ தில்லை. பிறந்த வீட்டைப்பற்றி ஒரு வார்த்தை பேசுவ தில்லை. மனசுக்குள் என்ன நினைக்கிறாளோ வெளியில் புன் சிரிப்பு தவிர எதுவும் தெரிவதில்லை; வாயைத் திறந்து அவள் ஏதாவது சொல்லி விட்டால்கூட தேவலாம் போல இருந்தது. சுந்தரவல்லியம்மாளுக்கு வாட்டிற்று...

அவள்தான் ஒன்றும் சொல்லவில்லையே தவிர இரண்டு மூன்று முறை சூரியநாராயணன் பாஸ்கரனுக் குத் தெரியாமல் வந்து போய் விட்டார். அவர் வந்த போதெல்லாம் புவனா வீட்டில் இல்லை. நிலைப்படி அரு கிலேயே நின்று "புவனா எங்கேம்மா...?" என்று கேட்ட போது ரேஷனுக்கும், பால் கார்டிற்கும் மாவு மிஷினிற் கும் போயிருக்கிறாள் என்று சொல்ல வெட்கமும், சங்க டமும், வருத்தமும் பட்டுக் கொண்டு அந்த அம்மாள் பேசாதிருக்க,

அவர் கண்கலங்க பேசிவிட்டுப் போனார்.

"ஒரே பொண்ணு. லட்ச லட்சமா சொத்து. இப்படி வெய்யலில் நடந்து போறதைக் கேள்விப்படுகிற போது அப்படியே உயிர்போயிடக் கூடாதான்னு வேண்டிக் கிறேன்மா. அவள் நடந்து போறதை இங்கே பார்த்



தேன், 'எம்பா உன் பொண்ணு, கையில் கூடையைத் தூக்கிட்டுப் போறாளே' என்று காரில் போகும் போது அவளைப் பார்த்துவிட்டு வந்து நண்பர்கள் சொல்லுகிற போது, பெற்றமனது எப்படி இருக்கும்? என்ன பாடுபடும் என்று நான் உங்களுக்குச் சொல்ல வேணாம்மா. ப்ளீஸ் உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கறேன். வீட்டுக்குள் அவ என்ன வேலை வேணும்னாலும் செய்யட்டும். இப்படி வெய்யிலில் வெளி வேலைக்கு அனுப்பாதீர்களம்மா. உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கறேம்மா..."

அவர் கண்கலங்கக் கைகூப்பிவிட்டுப் போனது சுந்தர வல்லியம்மாளையும் கலங்க வைத்தது. அன்றிரவு அவள் மகனிடம் சொன்னாள்.

"இனிமேல் புவனா கடைகண்ணிக்கெல்லாம் போக வேண்டாம். வீட்டுக்குள்ளிருந்து என்ன வேலை வேணும் னாலும் பார்க்கட்டும். வயசுக்குவந்த பொண்ணு. பார்க்க லட்சணமாகவும் இருக்கா. விடலைப் பசங்க சும்மா விடாதுங்க..."

"அதெல்லாம் உன் மருமகளை யாரும் ஒண்ணும் சொல்ல முடியாது. வயசான காலத்துல நீ எங்கேயும் போக வேண்டாம். உனக்கு உதவியாக இருக்கணும்னு கல்யாணம் பண்ணிண்டது. மருமகள்ன்றத்துக்கு அர்த்தம் மரு — மகள் — இன்னொரு மகன்னுதான் அர்த்தம். சொந்தப் பெண்ணாக இருந்தால் உன்னை வெளி வேலைக்கு அனுப்பிவிட்டு அவள் வீட்டில்உட்கார்ந்திருக்க மாட்டாள். அதனால் புவனாவே போகட்டும்."

அதற்குமேல் பேச இயலாமல் சுந்தரவல்லியம்மாள் மௌனமாகி விடுவாள்.

அன்றொரு நாள் அதே மாதிரித்தான் சூரிய நாராயணன் புவனாவைப் பார்க்க ராத்திரி எட்டு மணிக்கு மேல் வந்திருந்தார். கூடை நிறைய ஆப்பிள்களும், இன்னொரு கூடையில் காபூல் திராட்சையுமாகக்கொண்டு

வந்து வைத்ததும் நிர்தாட்சண்யமாக அவற்றைத் திருப்பி அனுப்பினான் பாஸ்கர்.

''சார், நீங்க வர்றதே எங்களுக்கு ரொப்ப சந்தோஷம் ஆனால் நீங்க மட்டும் வந்தீங்கன்னா இன்னமும் சந்தோஷமா இருக்கும். இல்லே, ஏழைக்கு எற்றதா ஒரு டஜன் வாழைப்பழம் வாங்கிண்டு வந்தாலே அதிகம். கூடை கூடையாக திராட்சையும், ஆப்பிளும் எதுக்கு சார். தயவு செய்து நான் சொல்றதைத் தப்பாக நினைச்சுக்கக் கூடாது. இன்னிக்கு இந்தப் பழங்களைச் சாப்பிட்டால் நாளைக்கும் நாக்கு இதே ருசிக்கு எங்கும். தினமும் இவைகளை வாங்கற நிலைமையில நாங்க இல்லை. அதனால் இந்தக்கூடைகளை அப்படியே திருப்பி எடுத்துக் கிட்டுப் போயிடுங்க, ப்ளீஸ்...''

''சரி பாஸ்கர்! உனக்கு வேணாம்னால் நீ சாப்பிடாதே... இந்தக் காபூல் திராட்சையும், காஷ்மீர் ஆப்பிளும் புவனாவுக்கு ரொம்பப் பிடிக்கும். அவள் சாப்பிட்டுமே...''

''ஓ... தாராளமாக. அவளுக்குப் பிடித்து அவள் உள்ளே எடுத்துக் கொண்டு போய் வைத்துக் கொள்வாள் என்றால் எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை...''

ஆனால் புவனா புத்திசாலி. புரிந்து கொண்டு விட்டாள்.

''இல்லைப்பா. எனக்கு இப்போதெல்லாம் இதெல்லாம் பிடிக்கிறதில்லை. எது சாப்பிட்டாலும் வாந்தியாகிறது. வேணாம்ப்பா...''

''வாந்தியாகிறதா? ஏம்மா... எதாவது விசேஷமா...?''

புவனா பதில் சொல்லாமல் தலைகுனிந்து நிற்க, அவர் சுந்தரவல்லியம்மாளைப் பார்த்தார். அந்த அம்மாள் புன்சிரிப்பாகச் சொன்னாள்.



''ஆமாம் சம்பந்தி. ஒரு பேரனோ, பேத்தியோ பிறக்கப் போறது...''

''ஹே...கன்கிராட்ஸ் பாஸ்கர். கன்கிராட்ஸ் புவனாம்மா...ஆமாம் இது எத்தனை மாசம்...?''

அதற்கும் சுந்தரவல்லியே பதில் சொன்னாள்.

''மூணு மாசம்னு நினைக்கிறேன்...''

''அப்படின்னா குழந்தையைக் கொஞ்சநாள் என்கூட அனுப்பி வை பாஸ்கர்...''

''குழந்தை பிறக்கட்டும் சார். அனுப்பி வைக்கிறேன்...'' என்று பாஸ்கர் புன்சிரிப்போடு அவரைப் பார்க்க, அவர்,

''குழந்தைன்னு நான் புவனாவைத்தாம்பா சொன்னேன்'' என்றார்.

''அவளுக்கே குழந்தை பிறக்கப் போறது—அவளைப் போய் குழந்தைன்னு சொல்றீங்களே சார்...''

''எத்தனை வயசானாலும் பெற்றவங்களுக்குப் பிள்ளைகள் குழந்தைகள்தான். ஆமாம், எப்போ புவனாவை வீட்டுக்கு அனுப்பறே...?''

''ஆகட்டும் சார்; அனுப்பறேன்...''

''என்னப்பா இப்படி விட்டேத்தியாகப் பதில் சொல்றே...?''

''அனுப்பறேன்னுதான் சார் சொல்றேன்—இப்பத்தானே மூணுமாசமாறது; ஏழாம் மாசம் அனுப்பறேன்...''

''என்னப்பா. குழந்தைக்கு வளைகாப்பு பண்ணணும்? ஏழாம் மாசம் அனுப்பறேன்னு சொல்றியே...?''

''ஏன் சார் ஏழாம் மாசம் பண்ணக் கூடாதா என்ன...?''

''கல்யாணமாகி கிட்டத்தட்ட ஆறேழு மாதமாகிறது. இன்னும் ஒருநாள்கூட புவனா வந்து தங்கலை, இப்போ வந்தால் ஆசைப்படறதா வாய்க்கு ருசியா கிட்டா சமைத்துப் போடுவான்...''

''என் சார், இப்போ நாங்க சமைத்துப் போடாமலா இருக்கோம்...?''

''நீங்க போடலைன்னு சொல்லலைப்பா, இங்கே அவளே தானே சமைக்கிறாள், அங்கே வந்தால்—''

சட்டென்று நடுவில் அவரைப் பேசவிடாமல் கையமர்த்தினான் பாஸ்கரன்.

''அவள் சமைக்காமல் வேறு யார் சமைக்க முடியும்? என் தகுதிக்கு சமையற்காரன் போட முடியுமா...?''

''சமையற்காரன் போட வேணாம், கடை, ரேஷனுக்குப் போக வீட்டைப் பெருக்கித் துடைக்க ஒரு ஆள் போட்டுக்கக் கூடாதா...? அதையும் என் பெண்ணேதான் செய்யணுமா?''

''உங்க பெண் செய்யலை சார்; என் மனைவிதான் செய்யறாள்...''

''உன் மனசுல நீ என்னதான் நினைச்சுக்கிட்டிருக்கே...?'' என்று முகம் சிவக்க சூரியநாராயணன் கத்த ஆரம்பித்ததும், ''அப்பா....'' என்று குறுக்கிட்டுத் தடுக்க வந்த புவனாவை, ''நீ சும்மா இரும்மா...'' என்று நிறுத்தினார் அவர்.

''என்ன நினைச்சு நீ இப்படியெல்லால் செய்துட்டிருக்கேன்னு எனக்கு இன்னிக்குத் தெரிஞ்சாகணும். அவ எப்படி வளர்ந்தவன்னு உனக்குத் தெரியும், எத்தனை லட்சங்களுக்கு அதிபதின்னும் தெரியும், கண்ணை இமை காப்பாத்தற மாதிரி காப்பாற்றினேன்னும் தெரியும். அப்படிப்பட்டவள் உன் வீட்டுக்கு



ரேஷன் வாங்கிப் போடத்தான் வந்தாளா...? மளிகைக் கடைக்கும் மார்க்கெட்டுக்கும் ஓடத்தான் வந்தாளா....? அவ படிச்ச லிட்ரிச்சர் படிப்பு இதுக்குத்தான் பயன்படுதா...? வேலைக்கு ஒரு ஆள் அமர்த்த முடியலைன்னு பதில் சொல்ல உனக்கு வெட்கமாக இல்லை...? இந்த ஆறு மாசத்துல உனக்கு எவ்வளவு சம்பள உயர்வு தரலை ? எல்லாம் எதுக்குன்னு நினைக்கிறே? உன் வேலைக்காக மட்டுமா...? இல்லை என் பெண் ஓரளவாவது சௌகர்யமா இருக்கணும்னுதான். ஆனால் நீ 'வேலைக்கு ஆள் வைக்க முடியலை' 'எனக்குத் தகுதி இல்லை'ன்னு பொய் சொல்றே. நிஜமான காரணம் உனக்குத் தகுதி இல்லாதது இல்லை. பணத்தட்டுப்பாடு இல்லை. உன் உள் மனசில் இருக்கிற தாழ்வு மனப்பான்மை இன்ஃபீரியாரிட்டி காம்ப்ளெக்ஸ். அவள் பணக்காரி; நீ ஏழை என்கிற உணர்வு உள்ளுக்குள் அழுத்தி உன்னை இப்படியெல்லாம் ஆட்டிப்படைக்கிறது. ஒரு பெரிய ஸாடிஸ்டாக மாற்றியிருக்கிறது. அவளைக் கஷ்டப்படுத்தி அதைப் பார்த்து நீ சந்தோஷப்பட நினைக்கிறே... இன் பாக்ட் அவளை நீ கல்யாணம் பண்ணிண்டதே அவள் மேல் இருந்த காதலினால் இல்லை. பணக்காரர்களின் மீது இந்த வழியில் வஞ்சம் தீர்த்துண்டு இருக்கே. அவளை நீ மனைவியா ஏற்றுக்கலை, அவளை ஒரு வேலைக்காரியாத்தான் ஏற்றுக்கிட்டிருக்கே... ஒரு தகப்பன் ஸ்தானத்துல நின்னு சொல்றேன். இத்தனை நாள் நான் பொறுமையாக இருந்துட்டேன். இனிமேல் இருக்க முடியாது... இன்னிக்கு இதுக்கு ஒரு முடிவு பண்ணிட்டுத்தான் போகப் போறேன்...''

தன் உள் மனதை அம்மாவின் எதிரிலும், புவனாவின் எதிரிலும் இப்படி நிர்தாட்சண்யமாய்க் குத்திக் கிளறி குரூரப்படுத்திய அவரை மிக நிதானமாக நிமிர்ந்து பார்த்தான்.

''சரி. நீங்கள் சொன்னதெல்லாம் நிஜம். நான் பழி வாங்கத்தான் இப்படிச் செய்கிறேன். பணக்கார வர்க்கத்தின் மீது எனக்குள்ள வெறுப்பை புவனா மூலமாகத் தீர்த்துக் கொள்கிறேன். அதற்கு நீங்கள் இப்போது என்ன செய்யப் போகிறீர்கள்...?

''அவளை நான் என்னுடன் அழைத்துக்கொண்டு போகப் போகிறேன். இனி இந்த வீட்டுப் படியை மிதிக்க விட மாட்டேன். நாளைக்கே லாயரைப் பார்த்து டிவோர்ஸுக்கு அப்ளை பண்ணப்போகிறேன்...''

''ஓ. எஸ். தாராளமாகப் பண்ணலாம். இந்த நிமிஷமே புவனாவை அழைத்துக் கொண்டு நீங்கள் போகலாம்...''

''என்னடா பாஸ்கர் இது...?'' சுந்தரவல்லியம்மாள் பதற—

''நீ சும்மா இரும்மா. இதுல நீ தலையிடாதே...'' என்கிற அதட்டலில் அந்தம்மாள் ஒடுங்கிப் போய் நிற்க பாஸ்கர் புவனாவைப் பார்த்தான்.

''புவனா, இது உனக்கு நான் தருகிற கடைசி சந்தர்ப்பம். நீ உன் அப்பாவோடு போவதானால், கிளம்பிப் போகலாம். அதை நான் தடுக்கமாட்டேன். டிவோர்ஸிற்கு அப்ளை பண்ணுவதிலும் எனக்கு எந்த விதமான ஆட்சேபணையும் இல்லை. நான் எதிலும் கையெழுத்துப் போடத் தயாராக இருக்கிறேன். அப்படியில்லாமல் இங்கே என்னுடன் வாழ நினைத்தால்— இப்படித்தான் வாழ முடியும். ஒரு சாதாரண குடும்பப் பெண்ணாக எனக்குக் கட்டுப்பட்டுத்தான் வாழ்க்கை நடத்த இயலும். நான் சொல்கிறபடிதான் நடக்க வேண்டும். எது தேவை என்று நீயே முடிவு செய்து கொள். எந்த முடிவிற்கு நீ வந்தாலும் அதை நான் ஏற்றுக் கொள்கிறேன்...''



புவனா பேசாமல் கண்கலங்கி மௌனமாய் நிற்க—

அவனே மறுபடியும் சொன்னான். ''ம்...சீக்கிரமாக ஒரு பதிலைச் சொல்லு. உன் அப்பா—கோடீஸ்வர அப்பா காத்துக் கொண்டிருக்கிறார் பார்...''

அவள் நிதானமாக அப்பாவைப் பார்த்தாள். அவர் மனசெல்லாம் பற்றி எரிய குமுறலோடு பேசினார் :

''இதோ பாரும்மா புவனா. இந்த மாதிரி ஒரு அடிமை வாழ்க்கை வாழறதைவிட சாகலாம்மா...இதற்கா நான் உன்னை வளர்த்தேன். உங்கம்மா செத்துப் போன குறையே தெரியாமல் ஏன் எந்தக் குறையுமே அறியாமல் வளர்த்தேன். ஒரு நிமிஷம் யோசிச்சுப் பாரும்மா. உன்னை இந்த நிலைமையில் பார்க்கிறப்போ என் மனசு எவ்வளவு சங்கடப்படும்னு நினைச்சுப் பாரு. இப்போ தெரியாது அவனுக்கு. தன் வயிற்றில் பிறந்த குழந்தை கஷ்டப்படும் போதுதான் பெற்ற வயிறு எப்படி எரியும்னு புரியும். ஒரு தரம் தப்பு பண்ணிட்டே. அதுக்குண்டான தண்டனையையும் அனுபவிச்சுட்டே. இது கடவுளாகப் பார்த்து உனக்குத் தருகிற இன்னொரு சந்தர்ப்பம். இதையும் தவறவிட்டால் இதே மாதிரி இங்கே உழைத்துக் கொண்டே கிடக்க வேண்டியதுதான். இப்போ நீ வேணாம்னு என்னை உதறினால் இனி நான் திரும்பிப் பார்க்க மாட்டேன். இந்த வாசல் படியை மிதிக்க மாட்டேன். உனக்கும் எனக்கும் உள்ள பந்தம் உன் பதிலோடு முடிவடையும்—இல்லை, தொடரும். நம் பந்தம் தொடரணுமா இல்லை முடியணுமான்றதை நீயே முடிவு பண்ணிச் சொல்லும்மா!''

''அப்பா...'' என்ற உதடுகள் துடிக்க அவரைப் பார்த்தவள்,

''நான் இங்க...இங்கேயே இருக்கேம்பா'' என்றாள்.

அந்த பதிலிலும், அவளது உறுதியான தீர்மானத்திலும் அயர்ந்து போன சூரிய நாராயணன்,

''அம்மா...நல்லா யோசிச்சுதான் சொல்றியாம்மா...?'' என்று தான் தோற்றுப் போய் விட்ட சங்கடத்திலும், மகளின் தலைவிதி இப்படி ஆகிவிட்டதே என்கிற வருத்தத்திலும் கேட்க,

''யோசிச்சுத்தாப்பா சொல்றேன்...'' என்கிற மகளின் கடைசி பதிலுடன் எழுந்து கொண்டார்.

''சரி! நான் வரேம்மா. பகவான் உன்னைக் காப்பாற்றட்டும்.''

கண்ணாடியைக் கழற்றிக் கண்களைத் துடைத்துக் கொண்டு கதவுவரை போனவரை பாஸ்கரின் குரல் நிறுத்தியது.

''மிஸ்டர் சூரியநாராயணன். அவளை மட்டுமில்லை, என்னை நீங்க பார்க்கிறதும்கூட இதே கடைசித் தரமாக இருக்கட்டும். இனி நான் உங்களிடம் வேலை செய்வதாக இல்லை. நாளை தபாலில் என் ராஜினாமாக் கடிதம் வரும். ஸோ—லெட் மீ ஸே குட்பை...''

ஒன்றும் சொல்லாமல் அவர் நகர்ந்து போக புவனாவிடமிருந்து ஆழமாய் ஒரு விம்மல் தெரித்தது...

## 9

அது நடந்து முடிந்து கிட்டத்தட்ட ஆறு மாதங்களாகி விட்டன. அதற்குப் பின்னர் சூரியநாராயணன் அந்த வீட்டுப் பக்கம் திரும்பவே இல்லை. இந்த ஆறு மாதங்களில் இரண்டு இடங்களில் பாஸ்கர் வேலை செய்து



நிறுத்தி இப்போது மூன்றாவது வேறு இடத்தில் சேர்ந்திருந்தான். அதில் அவ்வளவு சம்பளமில்லை. கைக்கு வந்தது சாப்பாட்டிற்கும், வாடகைக்கும், வட்டி செலுத்தவும் சரியாய்ப் போக முதலில் தனியாய் கிளினிக் வைத்திருந்த லேடி டாக்டரிடம் மாதம் தவறாமல் பரிசோதித்துக் கொண்டிருந்த புவனா டாக்டருக்கு தனியாக இருபத்தைந்து ரூபாய் பீஸ் கொடுத்து டானிக்குகளும் மருந்தும் வாங்க இயலாத நிலைமையில் இரண்டு மாதங்களாக கஸ்தூரிபா ஆஸ்பத்திரியில் இலவசப் பரிசோதனைக்குப் போய்க் கொண்டிருந்தாள். மன வேதனையும் சத்தான ஆகாரமில்லாத காரணத்தினாலும் மிகவும் இளைத்து வலுவற்றுப் போக டாக்டரே பயந்து கொண்டிருந்தார்.

''ரொம்ப வீக் ஆக இருக்கீங்கம்மா.''

''கொஞ்சம் பெட்ரெஸ்டில் இருங்க.''

''நல்ல ஆகாரமாக சாப்பிடுங்க...''

என்று திரும்பத் திரும்பச் சொல்ல புவனாவின் முகத்தில் சோகமான புன்னகை ஒன்று மட்டுமே பதிலாக அரும்பும்.

வீட்டிற்கு வந்ததும், ''என்ன புவனா, டாக்டர் என்ன சொன்னார்...?'' என்று சுந்தரவல்லியம்மாள் கேட்கும் போதெல்லாம் ''ஒண்ணும் பயமில்லேன்னுதாம்மா சொல்றார்...நார்மல் டெலிவரியாகத்தான் இருக்கும் என்கிறார்.'' வேண்டுமென்றே உண்மையை மறைத்துச் சொல்லி விடுவாள்.

பிரசவ நேரம் நெருங்க அந்த அம்மாள் பயந்து கொண்டேதான் இருந்தாள். அன்றுகூட ஏதாவது நல்ல ஆஸ்பத்திரியில் புவனாவை அட்மிட் பண்ணலாமே என்று கேட்கத்தான் தயங்கித் தயங்கி மகனை நெருங்கினாள். அம்மா நிற்பதை உணர்ந்து பேப்பரைத் தாழ்த்தி அதே சிடு சிடுத்த முகத்துடன் பாஸ்கர் ''என்ன...?'' என்று ஒரு

பார்வை பார்க்க அந்தம்மாளுக்கு சொல்ல வந்த விஷயமே மறந்து போயிற்று.

''ஒண்ணுமில்லேப்பா... புவனாவிற்கு இன்றோ, நாளையோ வலி எடுத்துவிடும் போல இருக்கு...''

''வலி எடுத்தால் ஆஸ்பத்திரியில் கொண்டு சேர்த்து விட்டு எனக்கு டெலிபோன் பண்ணேம்மா, வரேன்...''

''இல்லேப்பா, அவளைப் பார்த்தால் எனக்கென் னவோ பயமா இருக்கு. ரொம்ப வீக்கா இருக்கா. வேற நல்ல பெரிய ஆஸ்பத்திரியா சேர்க்கலாம்னு—''

''எம்மா, உனக்கு மூளை இருக்கா?பெரிய ஆஸ்பத்திரி யில் சேர்க்கப் பணத்துக்கு எங்கே போறது? சாதாரண பிரசவ கேஸுக்கு ஆயிரம் ரூபாய் சார்ஜ் பண்ணிடுவாங்க. எல்லாம் இந்த ஆஸ்பத்திரியில் காட்டினால் போதும். பிறக்கிற குழந்தை எங்கேயும் ஒன்றாகத்தான் பிறக்கும்...''

''மூரட்டு ஜென்மம்...'' என்று முணுமுணுத்துக் கொண்டே போனாள் அந்த அம்மாள்.

அன்று பிற்பகல் மூன்று மணி இருக்கும். புவனாவிற்கு வலி தொடங்க சுந்தரவல்லியம்மாள் சைக்கிள் ரிக்ஷா ஒன்றை அழைத்து வந்தாள். மடமடவென்று பிளாஸ்டிக் கூடையில் தேவையான சாமான்களை எடுத்து வைத்துக் கொண்டு புவனாவை ஏறச் சொல்லி பின் தானும் ஏறி புவனாவின் தலையைத் தோளில் சரித்துக் கொண்டாள்.

''கவலைப்படாதம்மா. எல்லாம் நல்லபடியாக இருக்கும். பிள்ளையாரை வேண்டிக்கோ, அம்பாளை வேண்டிக்கோம்மா, என்று தைரியம் சொல்லி கோஷா ஆஸ்பத்திரியில் சேர்த்து விட்டாள். அதுவரை புவனா வைப் பரிசோதித்த அதே டாக்டர் வந்து பரிசோதித்து விட்டு,



''ஸிஸ்டர்! உடனடியா இந்தக் கேசை ரெடி பண்ணி லேபர் வார்டிற்குக் கொண்டு வந்துடுங்க...'' என்று கட் டளை யிட்டு சுந்தரவல்லியம்மாளைப் பார்த்துக் கேட் டாள்.

''எம்மா, நீங்க யாரு அம்மாவா...?''

''ம்...ஆ...இல்லை, நான் மாமியார்...''

''மாமியாரா...? என் அவங்களுக்கு அம்மா, கூடப் பிறந்தவங்க யாரும் வரலையா...? தலைப்பிரசவம் போல இருக்கு...''

''யாரும் இல்லை அவளுக்கு...''

''ஓஹோ! அதான் கவலைப்படாம விட்டுட்டீங்க. எத்தனை தரம் சொல்லியனுப்பினேன். பெட்ரெஸ்டில் இருக்கணும். நல்ல சாப்பாடு சாப்பிடணும்...அப்போ யாரும் காதுல போட்டுக்கலை. இப்போ இந்தப் பொண்ணு தாங்குமான்னே சந்தேகமா இருக்கு...அத் தனை பலவீனமாக இருக்கு...''

அதைக் கேட்டு பயத்தால் பதறிப் போனாள் அந்த அம்மாள். டாக்டரிடம் என்ன சொல்லுவது என்று தெரி யாமல் தடுமாறி நிற்க, 'நீ சொல்வதைக் கேட்க எனக்கு நேரமில்லை....' என்கிறாற்போல அந்த டாக்டர் உள்ளே போய் விட்டாள். பின்னாலேயே ஓடின சுந்தரவல்லி யம்மாள் லேபர் வார்டின் அருகில் நெஞ்சு பதைக்க நின்ற சிறிது நேரத்திற்கெல்லாம் அதே டாக்டர் வெளியில் வந்து

''எம்மா! அந்தப் பெண்ணோட வீட்டுக்காரர் வரலை...'' என்று கேட்ட பின்புதான் பாஸ்கருக்குப் போன் பண்ண வேண்டும் என்பதே நினைவிற்கு வந்தது.

''அவன் ஆபீசுக்குப் போயிருக்காம்மா. இதோ போன் பண்ணி வரச் சொல்றேன்...''

''சீக்கிரம் வரச் சொல்லுங்க. சில பேப்பர்ல கையெழுத்துப் போடணும். அனேகமாக ஸிஸேரியன் பண்ணித்தான் குழந்தையை எடுக்கணும்னு தோன்றது...''

சுந்தரவல்லியம்மாள் டெலிபோன் இருக்குமிடத்தை விசாரித்துக் கொண்டு, பாஸ்கரைக் கூப்பிட்டு அழுது கொண்டே விஷயத்தைச் சொன்னாள்.

''எனக்குப் பயமா இருக்குடா பாஸ்கர்; சீக்கிரம் வாடா...'' என்று கெஞ்சினாள்.

''இதோ வரேம்மா, பயப்படாதே. இன்னும் பத்தே நிமிஷத்தில் அங்கே இருப்பேன்...''

பாஸ்கரும் துடித்துக் கொண்டு ஆட்டோ பிடித்து ஓடி வந்தான். டாக்டரைப் பார்த்துப் பேசி விவரம் தெரிந்து கொண்டபோது இன்னும் நேரமாகி விட்டது.

''நீங்க இந்தப் பேப்பர்ல கையெழுத்து போட்டுடுங்க. இன்னும் கால்மணி நேரம் பார்த்துட்டு பின் நான் ஒபன் பண்ண ஏற்பாடு பண்ணிடறேன்...''

டாக்டர் காட்டின காகிதங்களில் கையெழுத்துப் போட்டு நெஞ்சு பதற முகம் மாற நின்றபோது மெதுவாகக் கேட்டாள் சுந்தரவல்லியம்மாள்:

''எப்பா, புவனாவோட அப்பாவிற்குப் போன் பண்ணியாவது தெரிவிச்சுடேன்...''

''இரும்மா, குழந்தை பிறக்கட்டும், தெரியப்படுத்தறேன்...''

''வேணாம்ப்பா; எனக்கென்னவோ பயமா இருக்கு. பாவம் அந்தப் பொண்ணு...அம்மாதான் இல்லை. அப்பாவாவது கூட இருக்கட்டும். உன் முரட்டுப் பிடிவாதத்தை விட்டுவிட்டு இப்போவாவது போய் போன் பண்ணு... போ... நான் சொல்றதைக் கேளு...''



அந்தம்மாள் கெஞ்சிக் கொண்டிருந்த போதே புவனா ஸ்ட்ரெச்சரில் வைத்து ஆபரேஷன் அறைக்குத் தூக்கிக் கொண்டு போகப்பட...

ஒரு வினாடி அவர்கள் அருகில் தயங்கி ஏதோ சொல்லத் தவித்து பின் ஒன்றும் சொல்லாமலே தியேட்டருக்குக் கொண்டு போகப் பட்டாள். அதற்கு மேலும் தாமதிக்காமல் பாஸ்கர் ஓடிப் போய் சூரியநாராயணனை டெலிபோனில் அழைத்துச் சொன்னான்.

''சார், புவனாவை கோஷா ஆஸ்பத்திரியில் அட்மிட் பண்ணியிருக்கு. பிரசவம் ரொம்ப கஷ்டமா இருக்கும்னு தோன்றது. ஸிஸேரியனுக்காக ஆபரேஷன் தியேட்டருக்கு அழைச்சுட்டுப் போயிருக்காங்க. பயமா இருக்கு சார்! நீங்க உடனே கிளம்பி வாங்க சார்...''

நெஞ்சமும் உடம்பும் பதைக்க அடுத்த பததாவது நிமிடம் ஆஸ்பத்திரியில் இருந்தார் சூரியநாராயணன். தியேட்டர் வாசலில் கையைக் கட்டிக் கொண்டு குறுக்கும் நெடுக்குமாக நடந்தார். இதே போல் புவனாவை ஸிஸேரியனில் பெற்றுக் கொடுத்து விட்டு மறைந்து போன மனைவியின் ஞாபகம் வந்து இன்னமும் தவித்துப் போனார்.

'கடவுளே...என் புவனாவைக் காப்பாற்று. அவளுக்கும் அதே கதியை ஏற்படுத்தி விடாதே...!' என்று கெஞ்சி, சத்தப்படுத்தாமல், ஓசை வராமல் அழுது கொண்டிருந்த போது,

நர்ஸ் பின் தொடர வெளியில் வந்த டாக்டர் முதலில் சூரிய நாராயணனைத்தான் பார்த்தாள்.

''டாக்டர் என் புவனா எப்படி இருக்கா...?'' என்ற அவரின் கேள்விக்கு ஒரு வினாடி தயங்கி பின்,

"ஐயம் ஸாரி, அவங்களை என்னால் காப்பாற்ற முடியலை ஆனால் குழந்தையைக் காப்பாற்றி விட்டேன்..." என்று மீண்டும் இன்னொரு சின்ன புவனாவை அவர் கையில் கொடுத்த போது அவர் உதட்டை இறுகக் கடித்துக் கொண்டார். ஒரு வினாடி கண்மூடி நின்றவர், பின் பாஸ்கரின் அருகில் போய்,

"இந்தாப்பா...இதோ மலர்ந்திருக்கிறது இன்னொரு பூ...இது உன்னை மாதிரி எந்தக் குரங்கின் கைபட்டு நசுங்கப் போறதோ தெரியலை...

மலர்கிற பூவெல்லாம் ரசிக்கப்படுவதற்காக இல்லை. கசங்கப் படுவதற்காகன்றது இப்போதுதான் எனக்குப் புரிகிறது...ஆனால் நல்ல வேளையா இது பணக்கார வீட்டுல மலரலை. ஒரு ஏழை வீட்டுல மலர்ந்த பூ. பிடிச்சுக்கோப்பா; நான் போய் கசங்கிக் காய்ந்து, கருகி உதிர்ந்து போய்க் கிடக்கிற என் வயிற்றுப் பூவைப் பார்த்துட்டு வரேன்..."

சொல்லிவிட்டு அவர் குலுங்க, அந்த முகத்தை எதிட்டுப் பார்க்கச் சக்தியற்று கதறிக்கொண்டிருந்தான் பாஸ்கரன்....

முற்றும்

17660